ஸ்ரீ



ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி மணவாள
மாமுனிகளீறாகவுள்ள ஸகல பூர்வாசார்யர்களினுடையவும்
வைபவங்களை விளக்குவதான

பூர்வாசார்ய வைபவம்

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய
ஸ்வாமியால் தொகுத்தெழுதப்பட்டது.



ஸ்ரீஸ்வாமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தியினை மாஸமாக அச்சிட்டு
வெளியிடப்பட்டுவரும் நூல்களுள் முதன்மையானது.



சென்னை அட்வொகேட் K. திருவேங்கடாசாரியரால்

சென்னை கினைக அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

கிடைக்குமிடம்: க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம்.

இதன் விலை 1—8—0

1950

முகவுரை

அடியேன் செய்யும் விண்ணப்பம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தர்கள் எல்லா நூல்களுக்குள்ளும் முதன்மையாகவும் மிக முக்கியமாகவும் நித்யப்படியாகவும் அநுபவிக்கத்தக்க நூல் இது. இந்நூல் சென்னை ஸத்க்ரந்தப்ரகாசக ஸபையின் முதல் வெளியீடாக 1947 ஆம் வருஷத்தில் (சிறிய ஸைஸில்) பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இரண்டு வருஷங்களுக்கு முன்னமே காபிகளெல்லாம் செலவாகி புத்தகம் துர்லபமானபடியால் மறுபதிப்பாக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த ஸபை மூலமாகவே இதை மறுபதிப்புச்செய்ய ஸௌகரியமில்லாமலிருந்தபடியால் ஸ்ரீமத் R.B. [illegible] [illegible] பூர்த்தி கிரந்தமாலா [illegible] ஸீரிஸில் இது அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. இக் கிரந்தமாலையில், திருவாய்மொழி 8, 9, 10 பத்துகள் [illegible] [illegible] திருப்புகழுரையும், ஸ்ரீவைகுண்டஸ்தவ வியாக்யானமும் [illegible] [illegible] பதவுரையும் ஆறுமாதங்களுக்குமுன் அச்சிட ஆரம்பிக்கப்பட்டு விரைவாகவே அச்சு நடந்து வருகிறது. அவை தனித்தனி புத்தகங்களாக விரைவில் வெளிவரும். அவற்றுள் இது முதற்புத்தகமாக வெளியிடப்படுகின்றது இப்போது.

10—8—50
மதராஸ்

இங்ஙனம்:
ஸ்ரீ வைஷ்ணவதாஸன்,
K. திருவேங்கடாசாரி, B.A., B.L.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

பூர்வாசார்ய வைபவம்.

(ஸ்ரீ காஞ்சி. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் தொகுத்தெழுதியது)

ஸ்ரீ நாதயாமுநயதீச்வரகூரநாத
பட்டார்யமுக்யகுருவர்ய சரித்ரஸாரம்,
பூர்வார்யஸூக்திமவலம்ப்ய விகாஸி தாவத்
ஸம்க்ஷேபதஸ் ஸுலலிதம் விதநோம் கியோகாந்.

ஆழ்வார்களின் வைபவத்தை முன்னமே விளக்கியுள்ளோம். அந்த ஆழ்வார்களின் திவ்யஸூக்திகளைப் பல துறைகளில் வளர்த்தருளி நம் ஸ்ரீ வைஷ்ணவ தர்சனத்தை [illegible] நிர்வஹித்த ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமான பூருவாசாரியர்களின் வைபவத்தை எளிய நடையில் விளக்குவோமாக.

ஆசார்ய கோஷ்டியில் முதல்வர் ஸ்ரீமந் நாதமுனிகள். ஆழ்வார்களின் காலத்திற்குப் பிறகு நெடுநாள் வரையில் தர்சன நிர்வாஹகர்களான ஆசார்யர்கள் ஒருவருமில்லாமல் இவ்வுலகம் இருள் மூடிக் கிடந்ததனால் பேரருட்கடலான எம்பெருமான் இவ்விருளை நீக்கி ஞான வொளியை வளர்க்கத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீமந் நாதமுனிகள் முதலான ஸதாசார்யர்களைத் திருவவதரிப்பித்தருளி அவர்களின் உபதேசங்களாலும் ஸ்ரீஸூக்திகளான திவ்யக்ரந்தங்களாலும் அநுஷ்டானங்களாலும் அநுஷ்டாபனங்களாலும் ஜகத்தை வாழ்வித்தருளினான். அவர்களுடைய ப்ரபாவம் நமக்கு நித்யாநுஸந்தேயமாகக் கடவது.

ஸ்ரீமந் நாதமுனிகள் வைபவம்

* நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்........நர்கைம் ந: * என்று வேதாந்த தேசிகனும் * அருள்பெற்ற நாதமுனி முதலாம் நம்தேசிகரையல்லால் பேதை மனமே யுண்டோ பேசு * என்று மணவாள மாமுனிகளும் அருளிச்செய்தபடியே நம்முடைய தர்சனம் ஸ்ரீமந் நாதமுனிகளையே தலைவராகக்கொண்டது. இவர், வீரநாராயணபுரமென்கிற காட்டுமன்னார் ஸந்நிதியில் ஆனிமாதம் அநுராதா நக்ஷத்திரத்தில் ஈச்வரமுனிகளுக்குத் திருக்குமாரராய்த் திருவவதரித்து காலங்களில் சௌளம் உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களைப் பெற்று வேத வேதாங்கங்களையும் ஸாமாந்ய சாஸ்த்ர அத்யாத்ம சாஸ்த்ரங்களையும் அதிகரித்து மஹாவித்வானாக வாழ்ந்திருந்தார். இவருடைய திருக்குமாரர் ஈச்வரபட்டாழ்வார். அவருடைய திருக்குமாரரே ஆளவந்தார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் தம் இருப்பிடத்தன்னில் மன்னனாரென்கிற எம்பெருமானுக்கு ஸகல விதமான கைங்கர்யங்களையும் செய்துகொண்டு வாழ்ந்தருளுங்காலத்தில் வடநாட்டு திருப்பதிகளை ஸேவிக்க ஆவல்கொண்டு மன்னனார் திருவடிகளிலே விடைபெற்று பரிவாரராய்ப் புறப்பட்டு வடக்கே ஸஞ்சரித்துக்கொண்டிருக்கையில் தம் இருப்பிடத்திற்கு மீண்டெழுந்தருளும்படி எம்பெருமான் நியமித்தருளினபடியாலே திரும்பி எழுந்தருளி

தென்திசைத்திருப்பதிகளையும் மங்களாசாஸநம் செய்தருளி மன்னனூர் ஸந்நிதியிலே வந்து சேர்ந்து பகவத் பாகவத கைங்கர்ய நிர்வாஹத்தோடு அத்யாத்மசாஸ்த்ர ப்ரவசனங்களும் செய்துகொண்டிருந்தார்.

இப்படியிருக்கையில் அவ்விடத்திற்குத் திருநாராயணபுர ப்ராந்தத்தில் நின்றும் சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்து மன்னனூர் ஸந்நிதியில் தங்களுக்குத் தெரிந்த ஸ்தோத்ரங்களை யெல்லாம் அநுஸந்தித்துக்கொண்டிருக்கையில், நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழியில் "ஆராவமுதே அடியேனுடலம்" என்கிற பதிகத்தையும் செவிக்கினிய இசையுடனே அநுஸந்தித்தார்கள். அதில் முடிவு பாசுரத்தில் "குழலின் மலியச்சொன்ன ஓராயிரத்துளிப் பத்தும்" என்று அவர்கள் அநுஸந்தித்ததைக் கேட்ட நாதமுனிகள், இப்படி ஆயிரம் பாசுரங்கள் அவதரித்திருப்பதாகத் தெரிந்ததனால் அந்த ஸ்ரீ வைஷ்ணவர்களை நோக்கி "ஸ்வாமிகாள்! உங்களுக்கு ஆயிரம் பாசுரமும் முகபாடமாக வருமோ?" என்று கேட்டார். அவர்கள் "இப் பத்துப்பாசுரந்தவிர வேறொரு பாசுரமும் அறியோம்" என்றார்கள்.

அதற்குமேல் "உங்கள் நாட்டில் இந்த ஸ்ரீ கோசமாவது உண்டோ? ஆயிரமும் அறிந்திருப்பார் அவ்விடத்தில் ஆரேனுமுண்டோ?" என்று நாதமுனிகள் கேட்க, அப்படியொன்று மில்லையென்று அவர்கள் விடை கூறிவிட்டு எம்பெருமானுடைய தீர்த்த ப்ரஸாதங்களை ஸ்வீகரித்துக்கொண்டு வழியடைவே சென்றார்கள்.

அதுமுதலாக நாதமுனிகளுக்கு இரவும் பகலும் இதுவே சிந்தையாயிற்று. "குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆயிரம்" என்று சொல்லப்பட்டபடியாலே அந்த சடகோபர் [நம்மாழ்வார்] திருவவதரித்த குருகூரிலே சென்று விசாரித்தோமாகில் அங்கே கிடைக்கக் கூடுமென்று கருதி எம்பெருமானிடம் விடை பெற்று ஆழ்வார்திருநகரிக்கு எழுந்தருளினார்.

அங்கே பொலிந்து நின்ற பிரானையும் நம்மாழ்வாரையும் ஸேவித்து நிற்கையில், ஸ்ரீமதுர கவிகளின் சிஷ்ய பரம்பரையிலே ஒருவரான ஸ்ரீ பராங்குச தாஸரென்பவர் நேர்பட, அவரைத் தெண்டனிட்டுத் தாம் எழுந்தருளின கார்யத்தை விண்ணப்பஞ்செய்து "இவ்விடத்தில் ஆயிரமும் தெரிந்தவர்களுண்டோ? ஸ்ரீ கோசமாவது உண்டோ?" என்று கேட்க, அதற்கு அவர் சொன்னதாவது;—"திருவாய்மொழியும் மற்றுமுண்டான திவ்யப்ரபந்தங்களும் பிரசாரம் மறைந்து நெடுநாளாய்விட்டது; ஆனாலும் எங்கள் குலக்கொழுந்தான ஸ்ரீ மதுரகவிகள் அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் ப்ரபந்தமுண்டு; அதனை ஆழ்வார் திருமுன்பே ஆழ்வார் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு நியமத்துடனே பன்னீராயிரம் விசை ஜபித்தால் ஆழ்வார் ப்ரஸந்நராகி அருள்புரியக்கூடுமென்று கேட்டிருந்ததுண்டு" என்றார்.

அது கேட்ட நாதமுனிகள் திருவுள்ளம்பூரித்து ஆனந்தக்கடலில் மூழ்கினமனத்தராய் அவரைத் திருவடி தொழுது "ஸ்வாமின்! அந்தக் கண்ணிநுண் சிறுத்தாம்பு ப்ரபந்தத்தை அடியேனுக்கு அநுக்ரஹித்தருள வேணும்" என்று விநயமுடன் வேண்ட, அவரும் திருவுள்ளமுவந்து இவருக்கு அந்தப்ப்ரபந்தத்தைப் பாடம் செய்வித்தார். இவரும் அதிகரித்துத் திருப்புளியாழ்வாரடியில் நியமமுடன் பன்னீராயிரம் முறை அந்தப் ப்ரபந்தத்தை யநுஸந்தித்துத் [illegible] இவரது ஆர்த்திக்கு இரங்கின நம்மாழ்வார் பெரிய பிராட்டியாருடைய [illegible] ஸந்நிதிபண்ணி அசரீரிவாணி சொல்லுவது போல "உமது [illegible] தெரிவிக்கவேணும்" என்று சொல்ல, நாத முனிகள் ஆனந்தக்கண்ணீர் பெருக்கி கூப்பிய கையராய் "ஸ்வாமின். திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களை அடியேனுக்குப்ப்ரஸாதித்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் ப்ரஸந்நராய் அவர்க்கு திவ்யமான ஞானக்கண்ணைக்கொடுத்து ரஹஸ்யத்ரயத்தையும் நாலாயிர திவ்

வ்யப் பிரபந்தங்களையும் தாளத்தின் ஆழ்பொருள்களையும் அஷ்டாங்க யோக ரஹஸ்யத்தையும் யோக தசையிலே ப்ரஸாதித்தருளி அந்தர்த்தாநமாயினர்.

ஸ்ரீ வேதாந்த தேசிகன் பணித்த ஸம்ப்ரதாய பரிசுத்தி யென்னும் ரஹஸ்யத்திலே— "வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்த ப்ரகாரத்திலே நாதமுனிகளுக்குப் பின்பு நம் பூர்வாசார்யர்களானார்" என்றும், "இப்பரம்பரையாலும் ப்ரபத்யுபாய விசேஷத்துக்கு நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் ஆசார்யரானார்" என்றும், மேலே குருபரம்பரா ஸாரத்திலே— "இவ்வாசார்யர்களில்...... நாதமுனிகளுக்கு ஸ்ரீ மதுரகவிகள் முகமாக அஷ்டாங்க யோகமும் நம் பரமாசார்யரான திருவாய்மொழி முகத்தாலும் யோகதசையிலே ஸாக்ஷாத்கரித்தும் நம்மாழ்வார் ஆசார்யரானார்" என்றும் அருளிச்செய்துள்ளமை காண்க.

"ஸ்யோகத: பதாத்தாத் ஸவிதம் ஸமேத்ய லக்ஷ்ம்யா நியோகாத் குருகாதிராஜ:
ஸமந்த்ரரத்நத்வயமாஜு யஸ்மை நாதாய தஸ்மை முநயே நமோஸ்து."

என்கிற தனியனும் இங்கே அநுஸந்தேயம். இப்படி நம்மாழ்வார் பக்கலிலே ஸகலத்தையும் பெற்ற நாதமுனிகள் சிலகாலம் திருநகரியிலேயே வஸித்திருந்து ஆழ்வாருக்கு அருளிச் செயல்களை ப்ரவசனம் செய்தருளி, பிறகு ஸ்வதேசத்திற்கு மீண்டெழுந்தருளி வழியிலுள்ள திருப்பதிகளையெல்லாம் மங்களாசாஸனம் செய்து கொண்டும் ஆங்காங்கு அருளிச்செயல்களின் பெருமையை வர்ணித்துக்கொண்டும் மன்னனார் ஸந்நிதியிலே வந்து சேர்ந்து அந்த திவ்யப்ரபந்தங்களைப் பலருமறியப் ப்ரசாரஞ்செய்ய பகவதாஜ்ஞையைப் பெற்று, தம்முடைய மருமக்களான மேலையகத் தாழ்வாரையும் கீழையகத் தாழ்வாரையும் அழைத்து "ஆழ்வார் அருளிச்செயல்களை இசைகூட்டிப் பண்ணிலே ப்ரவர்த்திக்க இந்த திவ்யப்ரபந்தங்களை இயலும் இசையுமாக்கவேணும்; திவ்யகானத்திலேவிட்டுப் பாடவேணும்" என்று நியமித்து அப்படியே பரிசயம் செய்வித்து இத்தை லோகப்ரஸித்தமாக்கியருளினர்.

வடமொழி வேதத்திற்கு வேதவ்யாஸ பகவான் போலே தமிழ் மறைக்கு ஸ்ரீமந் நாதமுனிகள்—என்று ப்ரஸித்தமாயிற்று.

நாதமுனிகள் தேவகானத்திலே ஒப்புயர்வற்ற பாண்டித்யம் பெற்றிருந்தபடியைக் கங்கை கொண்ட சோழபுரத்தரசன் முதலான மஹாப்ரபுக்கள் பரீக்ஷித்தறிந்து இவரை ஸத்கரிக்க விரும்பின வளவிலே இவர் அந்த ஸத்காரத்திலே ஆசையற்றவராய் மன்னனார் திருவடிகளிலே நித்யகைங்கர்யமே நிதியாகக்கொண்டு பரமைகாந்தியாய்வாழ்ந்திருந்தார்.

இவருடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர்கள் எண்மர்: அவர்களின் திருநாமங்களாவன—1. உய்யக்கொண்டார், 2. குருகைகாவலப்பன், 3. நம்பிகருணாகரதாஸர், 4. ஏறு திருவுடையார், 5. திருக்கண்ணமங்கையாண்டான், 6. வானமாமலை தெய்வவாரியாண்டான், 7. உருப்புட்டூரச்சான் பிள்ளை, 8. சோகத்தூராழ்வான்.

இந்த சிஷ்யர்களுக்கு ஸகல திவ்யப்பிரபந்தங்களையும் ஒதுவித்து வேத சாஸ்த்ரங்களையும் அதிகரிப்பித்து வாழ்வித்தருளினர். ந்யாயதத்வம் என்கிற க்ரந்தம் இவரருளிச் செய்ததாகச் சொல்லுவர்கள்; அது இப்போது லோபமடைந்துள்ளது. அந்த க்ரந்தத்தின் மங்கள ச்லோகமொன்று தெரிய வருகின்றது; "யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாயதத்வம் ப்ரசக்ஷ்மஹே" என்பதாம். வேதாந்த தேசிகர்காலம் வரையில் இக்க்ரந்தம் ப்ரசாரத்திலிருந்து வந்ததாக ந்யாயஸித்தாஞ்ஜநம் முதலிய க்ரந்தங்களிலும் உணரலாகும்.

"* லோகேவதீர்ண பரமார்த்தஸமக்ர பக்தி யோகாய நாதமுநயே யமிநாம்வராய *" என்று ஆளவந்தார் அருளிச்செய்தபடியே இவர் யோகத்திலே நெடுங்காலம் எழுந்தருளியிருந்தார். குருகைகாவலப்பனென்கிற சிஷ்யர்க்கு யோகரஹஸ்யத்தை அப்யஸிக்கும்படி நியமனம் தந்து அஷ்டாங்க யோகக்ரமத்தை அவர்க்கு அருளிச்செய்தருளினார். தம்முடைய திருக்குமாரரான ஈச்வர பட்டாழ்வாரைப் பார்த்து "உமக்கு ஒரு குமாரர் தோன்றுவர், அவர்க்கு யமுனைத்துறைவர் என்று திருநாமம்சாத்த வேணும்" என்று நியமித்து, உய்யக்கொண்டாரை நோக்கி அந்தத்திருப்பேரனார்க்கு தர்சனார்த்தங்களை உபதேசிக்கும்படிக்கும் நியமித்தருளி முன்போல் யோகத்தில் அமர்ந்தார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் சோழராஜன் ஸபரிவாரனாய் வேட்டையாடவந்து திரும்பிப்போகையில், இவருடைய பெண்பிள்ளைகள் வந்து "ஐயா! நம் அகத்திலே ஒரு குரங்கும் இரண்டு வில்லிகளும் ஒரு பெண்பிள்ளையுமாக வந்து நாதமுனிகள் எங்கே யென்று தேடிப் போனார்கள்" என்றுசொல்ல, அதுகேட்ட நாதமுனிகள் "அக்ரத: ப்ரயயௌ ராம: ஸீதா மத்யே ஸுமத்யமா, ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணிர் லக்ஷ்மணோ அநுஜகாம ஹ" என்றுசொல்லப்பட்ட பெருமாளும் பிராட்டியும் இளையபெருமாளும் திருவடியுமாக இந்நால்வர் வந்திருக்கக்கூடுமென்று எண்ணி அவர்களைப் பின்தொடர்ந்து செல்லதாகப் புறப்பட்டு, வழியில் எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் 'இவ்வழியே போகிறவர்களைக் கண்டீர்களோ?' என்றுகேட்க, அவர்களும் 'போகிறார்கள், போகிறார்கள்' என்றே சொல்ல, விரைந்து வெகுதூரமெழுந்தருளிக் கங்கை கொண்ட சோழபுரத்தின் கீழ்வாசல் வரையில் எழுந்தருளி, அங்குள்ளவர்களை நோக்கி விசாரிக்கையில், அவர்கள் 'நாங்கள் பார்க்கவில்லையே' என்று சொல்ல, போகிற வில்லிகளும் காணக்காண மறைந்தவாறே இவரும் ஏங்கிமூர்ந்து மோஹித்து அதுவே ஹேதுவாக அவ்விடத்திலேயே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

இந்தச் செய்தியை சிஷ்யவர்க்கங்கள் கேட்டு வியாகுலப்பட்டு அங்கே சென்று அந்த விமல சரம விக்ரஹத்தை ஸேவித்துச் சேவித்து, க்ரமத்திலே தளிப்புப்பெற்று சரமகைங்கரியங்களைக் குறைவற நிறைவேற்றினார்கள்.

குருகைகாவலப்பன் என்கிற சிஷ்யரொருவர் ஸ்ரீமந் நாதமுனிகள் எப்போதும் யோகத்திலெழுந்தருளி யிருக்குமிடத்துக்கு ஸமீபத்திலே யோக நிஷ்டராய் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் வைபவம் முற்றிற்று.

உய்யக்கொண்டார் மணக்கால்நம்பிகளின் வைபவம்.

ஸ்ரீமந் நாதமுனிகளின் திருவடிகளில் ஆச்ரயித்திருந்த முதலிகளுள் தலைவரான உய்யக்கொண்டார் சித்திரையில் கார்த்திகை நன்னாளில் திருவவதரித்தவர். நாதமுனிகள் ஸ்ரீபாதத்திலே ஸகலார்த்தங்களையும் பெற்று க்ருதார்த்தராய் அருளிச்செயல்களை ப்ரவசனஞ் செய்துகொண்டு தர்சனப்ரவர்த்தகராயெழுந்தருளியிருந்தார்.

இவருடைய சிஷ்யர்களில் மணக்கால் நம்பியென்பவர் தலைவராயிருந்தார். அவர் உய்யக்கொண்டார் திருவடிகளிலே பன்னிரண்டு ஸம்வத்ஸரகாலம் இடைவிடின்றி அத்தாணிச் சேவகராய் [illegible] அடிமைகள் பலவுஞ்செய்து கொண்டிருந்தாரென்று ப்ரஸித்தி. உய்யக்கொண்டாருடைய தேவிகளான ஆண்டாள் ஆசார்யனுடைய திருவடிச் சார்ந்தவளவிலே திருமடைப்பள்ளி கைங்கர்ய நிர்வாஹங்களை யெல்லாம் இவர் தாமே தம்மதாக்கிக்கொண்டு நடத்திவருகையில், உய்யக்கொண்டாருடைய பெண்பிள்ளைகளிருவரையும் நீராட்டியழைத்துக் கொண்டு வருகிற வழியிலே வாய்க்கால் சேறாயிருக்க, அதில் நடந்து வரமாட்டாமல் தகைத்து நின்ற அப்பெண்பிள்ளைகளை நம்பி தாம் படியாகக்கிடந்து தம் முதுகிலே அடியிட்டுச் செல்லும்படி

செய்துவர, இச்செய்தியை உய்யக்கொண்டார் கேட்டு மிகவு[illegible]வுகப்பின் மிகுதியாலே தம் திருவடிகளை அவருடைய சென்னிக்கு மலர்ந்த பூவாக்கி அவரை மகிழ்வித்தருளினர்.

காலடைவிலே உய்யக்கொண்டார் திருநாட்டுக் கெழுந்தருள இருக்கையில் மணக்கால் நம்பியை அருகேயழைத்து 'வாரீர்! இக்குள்ள முதலிகளைக் கூட்டிக்கொண்டு நீர் தர்சநம் நிர்வஹிக்கக்கடவீர்; நம் நாதமுனிகளுக்கு ஒரு திருப்பேரனார் அவதரிப்பர்; அவர்க்கு யமுனைத்துறைவரென்று திருநாமம் சாத்தும்படிக்கும் ஸகலதர்சநார்த்தங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் உபதேசிக்கும்படிக்கும் நாதமுனிகள் தமது சரமதசையிலே நமக்கு நியமனம் தந்தருளினர்; அக்கட்டளையை நிறைவேற்றும் பாக்யம் நான் பெற்றிலேன். இந்தப்பாக்யம் உமக்காகக்கடவது; நீர் அவரை ஆதரித்திருந்தாகிலும் ரஹஸ்யார்த்தங்களை உபதேசிக்க வேணும்' என்று நியமித்தருளி ஸ்ரீமந் நாதமுனிகளின் திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டே திருநாட்டுக் கெழுந்தருளினர்.

இங்ஙனம் பெருமக்கள்பட்டர் நம்பி முதலானோர் திருவடிகள் மிகவும் சோகித்து மீண்டு சரமகைங்கர்யங்களைக் குறைவற நடத்திப் போந்தார்கள். மணக்கால்நம்பியும் ஆசார்ய நியமனத்தை நிறைவேற்றுவதற்காக நாதமுனிகளின் திருப்பேரனாருடைய திருவவதாரத்தை ப்ரதீக்ஷித்துக் கொண்டிருந்தனர்.

யமுனைத்துறைவர் வைபவம்

மணக்கால்நம்பி தர்சநப்ரவர்த்தகராக எழுந்தருளியிருந்த காலத்திலே, ஸ்ரீமந் நாதமுனிகளின் திருக்குமாரரான ஈச்வர பட்டாழ்வார்க்கு ஆடிமாதத்து உத்தராடத்திலே ஒரு திருக்குமாரர் தோன்ற அது கேட்டு உள்ளம் பூரித்த நம்பிகள் அங்கே எழுந்தருளி அக்குழந்தைக்கு ஜாதகர்மத்தைச் செய்வித்து, பத்து நாளுங் கடந்த பன்னிரண்டாம் நாளில் நாதமுனிகளின் நியமனப்படியே யமுனைத்துறைவரென்று நாமகரணமுஞ் செய்வித்தனர்.

பிறகு அத்தெய்வக் குழவி சுக்லபக்ஷ சந்திரனைப்போலே நாடோறும் மிக விளங்கி வளர்ந்து வருகையில் அக்ஷராப்யாஸம் சௌளம் உபநயநம் முதலியவை உரிய காலங்களிலே நடைபெற்று அதிமேதாவியாய் வேதமோதுகையிலேயிழிந்து இரண்டாஞ் சந்தை சொல்ல வேண்டாதே ஒருகாலிலேயே அதிகரிக்கலாயிற்று.

இங்ஙனே அக்ஷராப்யாஸங்களையும் அதிகரித்துக்கொண்டிருக்கையில் திருத்தகப்பனார் திருநாட்டுக் கெழுந்தருள, அவருடைய சரமகைங்கர்யங்களையும் குறையற நிறைவேற்றி, ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களை அதிகரிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வந்தார் யமுனைத்துறைவர். அக்காலத்தில் மஹாபாஷ்ய பட்டர் என்னுமாசிரியர் சாஸ்த்ரப்ரவசன ப்ரவீணராயிருக்கையாலே அவரிடத்தில் இவர் சாஸ்த்ரங்கள் வாசித்து வந்தார். சோழராஜனது ஆஸ்தானத்தில் மஹா வித்வானாயிருக்கும் ஆக்கியாழ்வானென்னும் பண்டிதன் அந்நாட்டிலுள்ள வித்வான்களை வென்று அவர்களெல்லாரும் தனக்குக் கப்பம் கட்டும்படி செய்து கொண்டிருந்ததனால், ஒரு நாள் யமுனைத்துறைவருடைய ஆசிரியரான மஹாபாஷ்ய பட்டரிடத்திலே கப்பம் வாங்குவதற்குச் சேவகன் வந்து நிற்க, அவ்வாசிரியரும் கையில் காசில்லாமையாலே ஒன்றும் தோன்றாது மனம் நொந்திருக்க, யமுனைத்துறைவர் விஷயமறிந்துகொண்டு அந்தச் சேவகன் கொணர்ந்த பத்திரிகையைக் கிழித்தெறிந்து விட, அவன் ஆக்கியாழ்வானிடஞ் சென்று செய்தியறிவிக்க, அவன் "அந்த வித்யார்த்தி வெறுங்கையரா? சாஸ்த்ரம் வல்லவனா? இதைக் கண்டு தெரிந்து கொண்டுவா" என்றுசொல்லி அந்தச் சேவகனைத் திருப்பியனுப்ப, அவன் திரும்பி வந்து விசாரிக்கையில், யமுனைத்துறைவர் "ந வயம் கவயஸ்து கேவலம் ந வயம் கேவலதந்த்ரபாரகா:, அபி து ப்ரதிவாதிவாரணப்ரகடாடோபவிபாடநக்ஷமா:" என்ற

இந்த ஸ்லோகத்தை ஏட்டிலே யெழுதிப் போக்கிவிட்டார். [இதன் பொருள் : நாம் வெறும் கவியுமல்லோம் வெறும் சாஸ்த்ரஜ்ஞருமல்லோம்; ப்ரதிபக்ஷிகளாகிற மதயானைகளின் செருக்கையடக்க வல்லோமென்று சொன்னதாக ஏற்படும்].

இதை வாசித்துப்பார்த்த ஆக்கியாழ்வான் இப்படியும் ஒரு வித்வானுண்டோ! என்று வியப்புக்கொண்டு இவ்விஷயத்தை அரசனுக்கு அறிவிக்க, அரசனும் அந்த யமுனைத்துறைவர் விரைவாகத் தம்மிடம் வருகவென்று கட்டளை தெரிவித்து, எழுந்தருள்வதற்காகப் பல்லக்கும் அனுப்ப, ஸ்வாமி அதிலேயெழுந்தருளி ராஜத்வாரத்திலே வந்து சேர்ந்து,

ஆசைலாத் அத்ரிகந்யாசரணகிஸலயந்யாஸதந்யோபகண்டாத்
ஆரக்ஷோநீதஸீதாமுக கமலஸமுல்லாஸஹேதோச்ச ஸேதோ:!
ஆ ச ப்ராச்யப்ரதீச்யக்ஷிதிதரயுகளாத் சந்த்ர ஸூர்யாவதம்ஸாத்
மீமாம்ஸாசாஸ்த்ரயுக்மச்ரம விமலமநா: ம்ருக்யதாம் மாத்ருசோந்ய :!!

[இதன் கருத்து—இமயமலை தொடங்கி சேதுவரை வடக்குந்தெற்குந்திசைகளிலும் கிழக்கு மேற்குத்திசைகளிலும், உபய மீமாம்ஸைகளிலும் பரிச்ரமப்பட்டுத் தேர்ச்சி பெற்ற என்னைப்போன்ற வேறொரு வித்வானைத் தேடிப்பிடியுங்கள், பார்ப்போம் என்பது.] இங்ஙனே இந்தச்லோகத்தை யெழுதி யனுப்ப, இதை ஆக்கியாழ்வான் கண்டு மிகவும் கோபாவேசம் கொண்டு வீண் டம்பமாக இப்படி யெழுதியனுப்புகிற பண்டிதரை நான் வாதப்போரில்வென்று செருக்கடக்கியே தீர்ப்பேன்' என்று அரசனிடம் கூற, அரசனும் யமுனைத்துறைவரை அருகில் வரவழைத்து 'ஆஸ்தான வித்வானோடு நீர் தர்க்கம் செய்யவேண்டும்; உடன்படுகிறீரா?' என்று கேட்க; 'அதற்காகவே நான் வந்திருக்கிறேன்; [illegible] ? எப்பேர்ப்பட்டவர்க்கும் வாதப்போர் செய்யவேண்டியது அவச்யமே; ஆனால் எங்களுடைய வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பதற்கு மத்யஸ்த பண்டிதர்கள் வேணுமே; இல்லையேல் இந்த வாதத்திற்கு முடிவு ஏது? ஆகவே, மத்யஸ்த வித்வான்களைத் திரட்டிக்காவீர்' என்று ஸ்வாமி அரசனிடம் அறைந்தார்.

அரசனும் அப்படியே மத்யஸ்த வித்வான்களை யழைப்பித்து வித்வான்ஸ்தான மண்டபத்திலே அனைவரையும் வீற்றிருக்கச்செய்து தானும் தன் மஹிஷியுமாய் அங்குச்சென்று சிறிய சிங்காசனத்தில் அமர்ந்து இனி வாதப்போர் தொடங்கலாமென்று சாற்றினான். அப்போது ராஜாவுக்கும் ராஜமஹிஷிக்கும் பரஸ்பரம் ஒரு ஸம்பாஷணம் நடந்தது. "ரூபமேவாஸ்ய ஏதந்மஹிமாநம் வ்யாசஷ்டே" என்னும்படியான முகவொளியை யமுனைத்துறைவரிடத்திலே கண்ட ராஜமஹிஷியானவள் 'இவர் தோல்வியடையார்' என்றனள். தன்னுடைய ஆஸ்தான வித்வானிடத்தில் பக்ஷபாதங்கொண்ட அரசன் 'நமது வித்வான் ஒருநாளும் தோலார்' என்றனன். முடிவாக, வெற்றிபெறும் வித்வானுக்குப் பாதி ராஜ்யம் தருவேனென்றும் கூறினன்.

இவ்வளவிலே, ஆக்கியாழ்வான் யமுனைத்துறைவரை நோக்கி, 'நாம் சாஸ்த்ரார்த்தங்களிலே வாதாடுவதற்கு முன்னே லௌகிகத்திலும் சிறிது வாதாடக்கடவோம். நீர் அன்றென்பதை நான் ஆமென்னக்கடவேன். நீர் ஆமென்பதை நான் அன்றென்னக்கடவேன், வென்றவன் தோற்றவன் தலையிலே தாடனம் பண்ணுவது' என்றொரு சிறுவார்த்தை கூற, அதுகேட்ட ஸ்வாமி, உடனே 1. த்வந்மாதா ந வந்த்யா 2. ராஜா ஸார்வபௌம: 3. ராஜபத்நீ பதிவ்ரதா என்று லௌகிக வார்த்தைகள் மூன்று அருளிச்செய்தார். உன்னுடைய தாயார் மலடியல்லள் என்பது முதல் வாக்கியம். இதை அவன் மறுக்கவேணுமானால் 'என் தாய் மலடியே' என்ன வேணும். இவ்வரசன் பூமண்டலம் முழுவதையும் ஆள்பவன் என்பது இரண்டாம் வாக்கியம். இதை மறுத்தால் அரசனுடைய சீற்றத்திற்கு இலக்காகவேணும். இவ்வரசி கற்புடையவள் என்பது மூன்றாம் வாக்கியம். இதை மறுத்தால் அவனுடைய சிரச்சேதத்திற்குப் பாத்திர

மாக வேண்டிவரும். ஆகவே ஒன்றுக்கும் மறுவாய் திறக்கமாட்டாமல் தலைகுனிந்து நின்றான் ஆக்கியாழ்வான்.

பிறகு சாஸ்த்ரார்த்தங்களிலும் வாதப்போர் நடக்க, அதிலும் அவன் விரைவாகவே தோற்றனனாக, அப்போது ஸ்வாமி "அடா அல்பஜ்ஞனே! வென்றவன் தோற்றவன் தலையிலே தாண்டவம் பண்ணக்கடவதென்று ஸபாபந்தம் செய்தாய், நீ ராஜபுரோஹிதனை வயதில் முதிர்ந்தவனுமிருந்ததனால் நான் அது செய்யவல்லேனல்லேன்" என்றருளிச்செய்ய, இதைக் கேட்டவித்வான்களனைவரும் உகந்து இவரை ப்ரஹ்ம ரதத்திலேற்றி உத்ஸவம் நடப்பிக்க, அப்போது ராஜமஹிஷி "என்னை ஆளவந்தீரோ?" என்று ஸ்வாமியை எடுத்தணைத்துக்கொண்டு தன் பெருமையுடன் மணிமாடமாளிகைக்குள்ளே புகுந்தாள். அன்று தொடங்கி இவர் ஆளவந்தார் என்ற திருநாமம் பெற்றார். அரசனும் ஏற்கெனவே வாக்களித்திருந்தபடி இவர்க்குப் பாதிராஜ்யம் கொடுத்து ஆதரிக்க, ஆளவந்தார் ஸதுர்மசரிஸைமக்கிதராய் ராஜபோகத்திலே லோலமாக எழுந்தருளியிருந்தார்.

இவ்விஷயங்களை யெல்லாம் கேட்டுணர்ந்த மணக்கால்நம்பி பரமானந்தப்பட்டு ஆளவந்தாரைக் காணவேணுமென்று ஆசைகொண்டு அங்கே யெழுந்தருள, அங்கு ஸாம்ராஜ்யத்துக்குத் தக்கபடி கட்டுக்காவலுமாயிருந்ததனால் உள்ளே புகப்பெறாமல் ஆளவந்தாரைக் காணமுடியாமல் சிலகாலம் வருந்தியிருந்து உபாயமொன்றைப் பண்ணுகையில், திருமடைப்பள்ளியில் ஸ்வாமிக்குத் திருப்போனகம் சமைக்கிற ஸ்ரீவைஷ்ணவர் மூலமாக 'ஆளவந்தார் விரும்பியமுது செய்யும் கறியமுது தூதுவளை' என்றறிந்து, நம்பியும் அன்று முதல் ஆறுமாஸகாலம் தூதுவளைக்கீரையிட்டுவந்தார். இப்படி நடந்தவிடத்திலும் ஒரு விசாரமும் காணாமையாலே திருவுள்ளம் வருந்திச் சிலகாலம் தவிர்த்திருந்து பார்ப்போமென்று தூதுவளை யிடாமல் வாளாவிருந்தார். அப்போது ஆளவந்தார் அமுது செய்கையில் 'தூதுவளை யில்லாமற் போனதேன்?' என்று தளிகை செய்பவரைக் கேட்க, 'ஒருகிழவர் ஆறுமாதமாக நாடோறும் கொணர்ந்து கொடுத்துவந்தவர் இப்போது தவிர்ந்தார்' என்று தளிகைக்காரர் கூற, ஆளவந்தார் அதுகேட்டு விஸ்மயப்பட்டு 'அப்படியா! இனியொருகால் அவர் வந்தாராகில் நமக்குத் தெரிவிப்பது' என்றருளிச் செய்து வைத்தார்.

மணக்கால்நம்பி மறுபடியும் ஆசைகொண்டு 'இன்னமுஞ் சிலகாலம் பச்சையிட்டுப் பார்ப்போம்' என்று தூதுவளைகொண்டு ஸமர்ப்பிக்க எழுந்தருள, தளிகைக்காரர் ஆளவந்தார்க்குச் செய்தியறிவித்தவாறே அவரை உள்ளேபுக விடவேணும் என்று நியமனமாக, நம்பியும் உள்ளே சென்று நின்றார். ஆளவந்தார் நம்பியின் வித்வத்தேஜஸ்ஸைக் கண்டவாறே பரவசராய்த் தெண்டனிட்டு ஆஸனமளித்து 'தேவரீர் இத்தனைகாலமாக நமக்குப் பச்சையிடுகிறது என்ன அபேக்ஷைகொண்டு? அபேக்ஷிதமானதை யருளிச்செய்தால் யதாசக்தி ஸமர்ப்பித்துக்கொள்வேன்' என்றருளிச்செய்ய, நம்பியும் 'நமக்கு ஒன்றும் வேண்டா; நாம் உமக்குக் கொடுக்க வந்தோமேயன்றி உம்மிடத்துக் கொள்ள வந்தோமல்லோம்; உமது பூர்வர்கள் தேடிவைத்த அர்த்தமிருக்கின்றது; அந்த நிதி இருக்கிறவிடமும் நானறிவேன்; அதனை நீர் கைக்கொண்டருளுமளவும் நித்யமாக நான் இங்கே நடைபோந்து மீண்டு வந்துபோம்படி அப்பணியிட்டேணும்' என்ன; ஆளவந்தாரும் அப்படியே வாசல்காப்பாரைக் கட்டளையிட, நம்பியும் அன்றுமுதல் கீதையின் செம்மைப்பொருள் தெரியும்படி பதினெட்டு அத்யாயமும் எடுத்துரைக்க, ஆளவந்தாரும் ஆரணஸாரமான கீதையின் உட்பொருள் கேட்டருளி நாளுக்குநாள் ஆர்த்தி அதிகரிக்கப்பெற்று 'அப்பரம்பொருளை ஸாக்ஷாத்கரிக்கும் உபாயமில்லையோ?' என்று நம்பியைக்கேட்க, நம்பியும் 'ஸாக்ஷாத்கரிக்கலாமுபாயமுண்டு' என்று ஏகாந்தத்திலே சில ரஹஸ்யார்த்த விசேஷங்களை ப்ரஸாதித்தருள, அதுகேட்ட ஆளவந்தார்க்கு, கெல்நாக்குப் பால் கட்டக்கட்டத் தலைவணங்கு

யாரைப்போலே சாஸ்த்ரத்தின் கரை கண்டிலே பட்டபட்ட ப்ரமாத்மனி ஆதாரகரும் இக்கொடிய ஸம்ஸாரத்தில் விரக்தரும் பிறந்ததாக, அந்தப்பரிபக்குவ நிலைமைக்குத் திருவுள்ளமுவந்த நம்பி இதிலே பயமின்றிக்கொண்டு அவரைத் திருவரங்கம் பெரியகோயிலிலே அழைத்துக் கொண்டு சென்று பெரிய பெருமாளை ஸேவிக்கப்பண்ணி, 'உமது பூர்வர்கள் தேடிவைத்த மஹாநிதி இது காணும்' என்று காட்ட, ஆளவந்தாரும் ஸேவித்து உள்ளம்பூரித்து, பழுதே பல பகலும் போயினவே! என்று இழந்த நாளைக்கு அநுதபித்துக் கண்ணுங்கண்ணீருமாய் அரங்கத்தம்மானை அநுபவித்து "யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" என்றதைப்படி உடனே ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்தருளி "அண்டர்கோனணியரங்கனென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றுகொண்டு தென் திருவரங்கமே பதியாக வாழ்ந்து போந்தார்.

அப்போது, பெரியநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, பெரிய திருமலைநம்பி, திருமாலையாண்டான், திருக்கச்சிநம்பி, வானமாமலையாண்டான், தெய்வவாரியாண்டான் முதலான இருபது முதலிகள் ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்து வாழ்ந்தார்கள்.

இவர்களெல்லாரும் சிஷ்யர்களுமாய் தர்சனப்ரவர்த்தகருமாயிருக்கிற காலத்திலே மணக்கால்நம்பி ஆளவந்தாரை நோக்கி 'வாரீர்! இன்னமொரு ரஹஸ்ய விசேஷம் குருகை காவலப்பனிடத்திலே உண்டு; அதையும் கேட்கவேணும்' என்றருளிச்செய்ய, அதற்கு ஆளவந்தார் 'அந்த ரஹஸ்யவிசேஷம் தேவரீருக்கு இல்லாதே போனதென்?' என்ன, நம்பியும் 'யோகரஹஸ்யமதை ஸ்ரீமந்நாதமுனிகள் அந்த விசேஷத்தை அப்பன் பக்கலிலேயே வைத்துப்போனார்' என்ன; ஆகில் அங்கே கேட்போமென்று ஸமய ப்ரதீக்ஷராயிருந்து கோயிலிலேயே தர்சனம் நிர்வஹித்து வந்தாராயினர்.

மணக்கால்நம்பி திருவடிகளிலே ஆச்ரயித்த முதலிகள்—ஆளவந்தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், வங்கிபுரத்தாச்சி முதலானோர். நம்பி இவர்களுக்கு அருளிச்செயல்களையும் மற்றுமுள்ள விசேஷார்த்தங்களையும் ப்ரசாதித்தருளி தலைமையில்லாதார் கடபெரும்பாலர் அறிந்தானவரே ! ஆளவந்தாரை நோக்கிப் பலநாளிருந்து 'உம்மைப்போலே ஒரு தர்சனப்ரவர்த்தகரை உண்டாக்கிக் கோயிலே விடாதேயிரும்' என்று நியமித்து உய்யக்கொண்டார் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

இவருடைய திருநக்ஷத்திரம் மாசியில் மகம். இவரது தனியன். "அயத்நதோ யாமுநமாத்மதாஸம் அலர்க்கபத்ரார்ப்பண நிஷ்க்ரயேண, ய: க்ரீதவாநாஸ்தித யௌவராஜ்யம் நமாமி தம் ராமமமேயஸத்வம்"

'குருகைகாவலப்பனிடத்திலே யோகரஹஸ்யம் பெறக்கடவீர்' என்று மணக்கால் நம்பி முன்பு விதித்திருந்ததை நினைந்து ஆளவந்தார், அப்பன் யோகத்திலே எழுந்தருளியிருக்கும்படியான கங்கைகொண்ட சோழபுரத்தேற எழுந்தருள, அப்பனும் அங்கே ஒரு குட்டிச் சுவரிலே யோகநிஷ்டராய் எழுந்தருளியிருக்க, அப்போது அவர்க்கு யோகபங்கம் பண்ணவொண்ணாதென்று பின்னின்ற ஆளவந்தார் அந்தச் சுவர்க்கு இப்பால் நிற்க, யோகநிஷ்டரான அப்பனும் திரும்பிப் பார்த்து 'இங்குச் சொட்டைக்குலத்தார் ஆரேனும் வந்தாருண்டோ?' என்று கேட்க, உடனே ஆளவந்தார், அடியேன்! என்று எதிரே சென்று தெண்டன் ஸமர்ப்பித்து 'அடியேன் இங்கு நின்றது தேவரீருக்குத் தெரியாதபடி பின்னே நிற்க, தேவரீர் அறிந்தது எங்ஙனே?' என்று கேட்க, அதற்குக் குருகைகாவலப்பனருளிச்செய்த வார்த்தை— எம்பெருமானும் காமமாக அநுபவித்துக்கொண்டிருக்கும் பெரிய பிராட்டியார் திருமுலைத்

நடத்தையிலே நெருக்கியபோதாகிலும் அவனது முகத்தையும் பாராத ஸர்வேச்வரன் என் கழுத் தையமுக்கி ஏதோ மூலமுகமாம் நின்றிருந்த பக்கமாக எட்டிப்பார்த்தான். அப்படி அவன் பார்க் கும்போது சொட்டைக் குலத்தார் ஆரேனும் வந்திருக்கிறோமோ என்றிருந்தேன் நானும் என்றார். [ஸ்ரீமந் நாதமுனிகளின் குலம் சொட்டைக்குலமெனப்படும். ஆழ்வார்களின் எம்பெருமான் பண்ணியிருந்த விசேஷ கடாக்ஷம் அவர்க்குப்பிறகு ஸ்ரீமந் நாதமுனிகள் திரு வம்சத்தில் பெருகத் தொடங்கிற்றென்பது இங்கு அறியத்தக்கது.]

அதைக்கேட்டு ஆளவந்தார் மிகவுகந்து 'அடியேனுக்கு இந்த போகஸாம்ராஜ்யத்தை அருளிச் செய்யவேணும்' என்று அப்பன் ஸ்ரீ பாதத்திலே விழுந்து கிடக்க, அவரும் அப்படியே செய்கி றோமென்று முடிபிடித்தெடுத்து "நம்முடைய சரீராவஸாநத்திலே சொல்லுகிறோம், வருகிற தைப் பூசத்தின்று அபிஜித்முஹூர்த்தத்திலே நமக்கு சரீராவஸாநமாம், அதற்கு முன்னமே எழுந்தருளவேணும்' என்று திருமுகமெழுதிக் கொடுத்தருள, ஆளவந்தாரும் அதனைப் பெற் றுக்கொண்டு கோயிலேற எழுந்தருளினார். அங்கு நம்பெருமாள் திருவத்யயனத் திரு நாளிலே அரையர் சேவையில் "கெடுமிடராயவெல்லாம்" என்கிற திருவாய்மொழியை அரை யர் சேவித்துக்கொண்டிருக்கையில் அந்த கோஷ்டியில் ஆளவந்தாரும் எழுந்தருளியிருக்க, "நடமினோ நமர்களுள்ளீர்" என்கிற பாட்டளவிலே 'வாழ்வலியனந்தபுரம் கடமுடையவரின் பண்ணிபறிந்தமக் கடமினோ நமர்களுள்ளீர் நாமுமக்கறியச் சொன்னோம்" என் பதை அரையர் ஆளவந்தார் திருமுக மண்டலத்தைப் பார்த்துப் பாடினாரும் அதைக்கேட் டபடி, ஆளவந்தாரும் இப்படிப் பாடுவதால் 'ஆழ்வாருடைய நியமனமிதுவானால் ஆசார்யர்களின் நெல் திருவனந்தபுரஞ்சென்று சேவித்து வர ப்ராப்தம்' என்று சொல்லிக்கொண்டே அப் பொழுதே கோஷ்டியினின்று எழுந்து பெரிய பெருமாள் பக்கலிலே விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுப் போகத்திலே திருவனந்தபுரத்தில் எழுந்தருளி அனந்தபத்மநாபனை மங்களா சாஸனம் செய்து அங்கே வாழ்ந்துபோருகையில், முன்பு குருகைக் காவலப்பன் யோக ரஹஸ்யோபதேசத்திற்காக காலமிட்டுக்கொடுத்திருந்த திருமுகத்தைப் பார்த்தருளி எடுத்துப் பார்த்தளவில், அதுவே நாளாக இருந்ததையறிந்து அப்பனுக்கு 'ஒரு புஷ்பக விமானம் பெற்றிலேனே' என்று சோகித்தெழுந்தருளியிருந்தார். பிறகு சில நாள் கழித் துத் திருவரங்கப் பெருநகரிலே சென்று சேர்ந்து, இனிமேல் நம்முடைய தர்சனத்திற்கு ப்ரவர்த் தகராவார் ஆர்கொல்? என்று சிந்தை குடிகொண்ட சிந்தையராக எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ ராமாநுஜர் வைபவம்.

ஆதிசேஷன் ஸ்ரீ ராமாநுஜாசார்யராக அவதரித்தல்

ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகளில் பெரிய திருமலைநம்பி யென்னும் மஹநீயர் திருமலை திருப்பதியிலே திருவேங்கடமுடையானுக்குக் கைங்கர்யஞ் செய்து கொண்டு வாழ்ந்து வருகின்றார். அவருடன் பிறந்த பெண்பிள்ளைகள் இருவர். அவர்களுள் ஸ்ரீ பூமிப்பிராட்டியாரென்கிற மூத்தவள் ஸ்ரீபெரும்பூதூரில் ஆஸுரி கேசவப்பெருமாளுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். பெரிய பிராட்டியாரென்கிற இளையவள் மழலைமங்கலத்தில் கமல நயன பட்டரைத் திருமணம் புணர்ந்தாள். இவ்விருவரும் தம்தம் புக்ககங்களிலே வாழ்ந்துவரு கையில் ஆதிசேஷன் இவ்வுலகத்தைத் தருமமார்க்கத்தில் நடத்தும் உத்தாரகராக இக் கலியுகத்திலே அவதரிக்கவெண்ணி ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்ரீ பூமிப் பிராட்டியாருடைய திருமஹ

கருவிலே புகுந்து* கலியுங்கெடுங் கண்டு கொண்மின் என்ற ஆழ்வார் பாசுரத்தை ஸார்த்தகமாக்குவான் சித்திரையில் செய்ய திருவாதிரை நன்னாளில் திருவவதரித்தனன். * அறுசமயச் செடியதனை யடியறுக்கவும், அடர்ந்தவரும் குதிட்டிகளை அறத்துறக்கவும், செறுகலியைச் சிறிதுமேறத் தீர்த்துவிடவும், தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைக்கவும், மறையதனில் பொருளனைத்தும் வாய் மொழியவும், மாறனுரைசெய்த தமிழ் மறை வளர்க்கவும் அழகாரு மனந்தாழ்வான் அறமிகுநற் பெரும்பூதூரில் இங்ஙனே எம்பாருமுய்ய வுதித்தருளின நன்னாளானது ஆழ்வார்கள் தாங்களவதரித்த நாட்களிலும் வாழ்வானநாள் நமக்கென்று நாற்றிசையும் கொண்டாடுகின்றது. இத்திரு நன்னாளின் சிறப்பை மணவாள மாமுனிகள் ஒரு சிறிய செய்யுளினால் வெளியிட்டருளியுள்ளார் ; அதாவது:—

"சங்கர பாஸ்கர யாதவ பாட்ட ப்ரபாகரர் தங்கள் மதம்
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வெங்கலியிங்கினி வீறுநமக்கிலை யென்று மிகத் தளர்நாள்
மேதினி நஞ்சுமையாறு மெனத்துயர் விட்டு விளங்கிய நாள்
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடுநாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடுநாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் சூழுஞ்சிறந்த பெரும்பூதூர்ச்
சீமானிளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே." என்பதாம்.

அவதாரரஹஸ்ய சிந்தனம்.

இங்ஙனம் தோன்றிய பேராசிரியர் ஆதிசேஷனுடைய அபராவதாரமென்றும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவமென்றும் விஷ்வக்ஸேனருடைய தோற்றமென்றும் இப்படி பலவாறாகப் பெரியோர் பணிப்பர். நூற்றந்தாதியில் "அடையார் கமலத்தலர் மகள் கேள்வன் கையாழி யென்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும் ஒண் சார்ங்க வில்லும் புடையார் புரிசங்குமிந்தப் பூதலம் காப்பதற் கென்றிடையே இராமானுச முனியாயின இந்நிலத்தே" என்னும் பாசுரத்திலும், "ப்ரதயம் விமதேஷு ...... வஸுதே பஞ்சபிராயுதைர் முராரே:" என்ற யதிராஜஸப்ததி ஸூக்தியிலும் ஸ்வாமி பஞ்சாயுதாழ்வார்களின் திருவவதாரமென்னும் விஷயம் காட்டப்பட்டுள்ளது. "விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத்" என்கிற யதிராஜ ஸப்ததி ஸூக்தியொன்றில் விஷ்வக்ஸேநாவதாரமென்னும் விஷயம் கூறப்பட்டுள்ளது. திருவனந்தாழ்வானுடைய திருவவதார மென்னும் விஷயத்தைப் பற்பல ஆசிரியர்கள் பேசியுள்ளார்கள். ஸ்வாமியின் அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவரான திருமலை அனந்தாழ்வான் தாமருளிய 'வேங்கடாசல இதிஹாஸமாலா' என்னும் திவ்யக்ரந்தத்தில் திருவனந்தாழ்வானே ஸ்ரீராமாநுஜராகத் திருவவதரித்தானென்பதை மிக விரிவாக அருளியுள்ளார். "ஸ்ரீமத்யாம் பூதபுர்யாம் அதிதரணிதலம் சேஷ ஆவிர்பபூவ" இத்யாதிகள் காண்க. எம்பெருமான் தனது அத்தாணிச் சேவகனும் படுக்கையுமான திருவனந்தாழ்வானை 'நீ இவ்வுலகத்திற்சென்று பிறந்து எவ்வுயிரையும் ஸம்ரக்ஷிக்கக் கடவை' என்று நியமித்தருள, அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்ட ஆதிசேஷன் சித்திரைமாதத் திருவாதிரையன்று ஸ்ரீகேசவஸோமயாஜிகளுக்குப் புதல்வராகப் பிறந்தானென்பது அவ்விடத்து ஸ்ரீஸூக்திகளின் பொருள். இப்படியே மற்றொரு சிஷ்யரான வடுக நம்பியருளிச்செய்த ச்லோகரூபமான யதிராஜவைபவ க்ரந்தத்தில் "சேஷாம்சக: கேசவ யஜ்வதேஹ்யாம்" என்றுள்ளது. வேதாந்த தத்துவப்பொருள்களை நிலைநாட்டுதற்காகவும் தர்மங்களைத் தொகுப்பதற்காகவும் திருவனந்தாழ்வானுடைய அம்சபூதராய்த் தேஜோராசியான ஒரு மஹான் கேசவ ஸோமயாஜிகளின் தேவியாரிடத்தில் அவதரித்தார் என்பது இந்த ச்லோகத்தின் பொருள். இவ்வடுகநம்பிகள் தாமே அருளிச்செய்த ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்

சத்தில் * பௌத்தத்[illegible]ஸஹஸ்ராம்ச: சேஷரூபப்ரதர்ச[illegible]பது இருபத்துமூன்றாம் ச்லோகம். எம்பெருமானுடைய பூர்ணகடாக்ஷ பாத்ர பூதராய் அவர் திறத்துத் தேவரைத் தியாகே விட்டிருந்த பரமைகாந்திகளான கருடவாஹன பண்டிதர் பணித்த திவ்யஸூரிசரித மென்னும் மஹா காவ்யத்தில் பதினெட்டாவது ஸர்க்கத்தில் ஸ்ரீராமாநுஜரையும் சொல்லு மிடத்து* பௌஞ்சம் ஸுரபுஞ்ஜாய சேஷபோகி யத்ரூபம் த்ரிபுவனவந்திதம் ஜகாம* [திருவனந் தாழ்வான் தனது ரூபத்துடனே விட்டொழிந்து இராமாநுச முனியாகத் திருவுருவத்தை யடைந்தான்] என்றும். மேலே யாதவப்ரகாசனை சொல்லி ப்ரஹ்மராக்ஷஸ்ஸு கூறினதைக் கூறுமிடத்து "உமது பக்கத்திலிருப்பவரும் லோக ஸம்ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ் வானுடைய அம்சமாக வந்து திருவவதரித்தவருமான [ராமாநுஜனென்கிற] இந்த மஹானி டத்தில் நான் அஞ்சுகின்றேன்' என்றும் சொல்லப்பட்டது. தேசிகருடைய திருவடியான ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி பணித்த கிம்யமரி ஸ்தோத்ரத்தில் *சைத்ரார்த்ரா ஸம்பவம் விஷ்ணோ: தர்சனஸ்தாபநோத்ஸுகம், துண்டீரமண்டலே சேஷமூர்த்திம் ராமாநுஜம் பஜே* [எம்பெரு மானுடைய தர்சனத்தை ஸ்தாபித்தருளச் சித்திரை மாதத் திருவாதிரையில் தொண்டை நாட்டில் அவதரித்த ஆதிசேஷமூர்த்தியாகிய ஸ்ரீராமாநுஜரைத் தொழுகின்றேன்] என்று சொல்லிற்று. இராமாநுச நூற்றந்தாதியில் * கல்லார் பரவுமிராமாநுசன்* என்ற பாசுரத்தின் வியாக்யானத்தில் * அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத:பரம், பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ ராமாநுஜ: ஸ்ம்ருத: * என்கிற ஆப்தவசனம் உதாஹ்ருதமாகக் காண்கிறது.

இங்ஙனே பல ஆசிரியர்கள் ஸ்வாமியை ஆதிசேஷாவதாரமாக அருளிச்செய்திருக்க, நூற்றந்தாதியிலும் யதிராஜஸப்ததியிலும் பஞ்சமவதாரம் விஷ்வக்ஸேனாவதாரம் என்றிப் படி அருளிச்செய்தது ஏன் ? என்று சங்கை தோன்றும். இதற்குப் பெரியோர் பணிக் கமாதானமாவது—சரித்திர நூல் என்பது வேறு, ஸ்தோத்ர நூல் என்பது வேறு, சரித்திர நூல்களில் ஆதாரங்களெல்லாம் உள்ளது உள்ளபடி உரைக்கப்படும். ஸ்தோத்ர நூல்களிலோ வென்னில் கவிகளின் புத்திசாதுர்யத்திற்குத் தக்கபடியும் ஆசிரியரின் ப்ரபாவ விசேஷங் களுக்கு ஏற்றபடியும் பலவகையான வர்ணனைகள் இருக்கக்கூடும். சரித்திர நூல்களால் அறுதியிடப்படுகிற அவதார ரஹஸ்யதத்துவங்களை ஸ்தோத்ர நூல்களிலுள்ள உக்திகள் உபமர்த்திக்கமாட்டாவென்று.

நாமகரணமும் சாஸ்த்ராப்யாஸமும் க்ருஹஸ்தாச்ரமப்ரவேசமும்

ஆஸுரி கேசவப்பெருமாள் இங்ஙனே தமக்குத் தோன்றிய திருக்குமாரர்க்கு யதாவிதி ஜாதகர்மம் செய்தருளினார். இச்செய்தியைப் பெரியதிருமலைநம்பி கேட்டருளிப் பரமஸந்தோஷத்துடனே திருமலையில் நின்றும் ஸ்ரீ பெரும்பூதூரேற எழுந்தருளி ஸர்வ லக்ஷணஸம்பந்நமான திவ்யசிசுவின் முகவொளியைக் கண்டு வியந்து உள்ளம் பூரித்துப் பன்னிரண்டாம்நாளில் ' ஸ்ரீ ராமாநுஜன்—இளையாழ்வான் ' என்று நாமகரணம் செய் தருளினர். மற்றும் அன்னப்ராசனம் சௌளோபநயநாதி ஸம்ஸ்காரங்களுமெல்லாம் கால காலங்களிலே நடைபெற்று "சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லை யில்லா அறநெறியாவும்தெரிந்தவன்' என்று அமுதனார் நூற்றந்தாதியிலருளிச் செய்திறபடியே ஸாங்கோபாங்க ஸகல வித்யாபாரங்கதராய்ப் ப்ராப்த காலத்திலே க்ருஹஸ்தாச்ரமத்தையும் ஸ்வீகரித்து பெருமாள்கோயிலுக்கருகான திருப்புட்குழியிலே யாதவப்ரகாச னென்பானொரு வனண்டை ஸம்ப்ரதாயபூர்வமாக வேதாந்த க்ரந்த ப்ரவசனம் செய்துபோருகின்றானென்று கேட்டு இளையாழ்வார் தாமும் அங்கே யெழுந்தருளி அவன்பக்கல் சிஷ்யராய் அங்கேயிருந்தார்.

கோவிந்தபட்டருடைய வரலாறு

ஸ்வாமி யாதவப்ரகாசரிடத்தில் வேதாந்தச்ரவணம் செய்துகொண்டிருக்கையில், மதுரமங்கலத்திலிருந்து ஸ்ரீகோவிந்தபட்டரென்கிற ஆசிரியரும் ஸஹாத்யாயியாக ஸ்வாமியோடே வந்து சேர்ந்தார். இவரே எம்பார் என்று ப்ரஸித்திபெற்றவர். ஸ்வாமியின் மாதுலரான திருமலைநம்பிக்கு இரண்டு ஸஹோதரிகளென்றும் ஒரு ஸஹோதரி மதுரமங்கலமென்னும் அக்ரஹாரத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தாளென்றும் கீழேசொன்னோம். தை மாதத்துப் புனர்வஸு நக்ஷத்திரத்தில் இப்பெண்பிள்ளை பெற்ற புதல்வரே எம்பாரென்கிற கோவிந்தபட்டர்—இவர் ப்ராப்தகாலங்களிலே உபநயநாதி ஸம்ஸ்காரங்கள் பெற்று வேதவேதாந்தங்களை பரிசீலித்து மஹாவித்வானுமிருந்தார். ஸ்வாமிக்குச் சிறியதாயார் திருக்குமாரரானவிவர், திருப்புட்குழியில் தமையனார் யாதவப்ரகாசரிடத்தில் வேதாந்தமதிகரிக்கிறாரென்று கேட்டுத் தாமும்கூட அதிகரிக்க விரும்பி அவ்விடம் வந்து சேர்ந்தாராயிற்று.

யாதவப்ரகாசர் அபார்த்தங்கள் கூறுதல்

யாதவப்ரகாசர் மாயாவாதிமதஸ்தராகையாலே வேதாந்த வாக்கியங்களுக்குப் பல விடங்களில் பொருந்தாத பொருள்களை ப்ரவசனம் செய்துகொண்டிருந்தார். அவற்றைக் கேட்கும்போது ஸ்வாமிக்குப் பரிதாபம் பொறுக்க முடியாததாயிருக்கும். 'பொருந்தும் பொருள் இதுவன்றோ' என்று நாம் எடுத்துரைப்பதுண்டு. அப்போது ஹுங்காரம் பண்ணிநிற்பர் யாதவர். இப்படியிருக்கையில் ஒருநாள் "கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிற ச்ருதிவாக்யத்திற்குப் பொருள்கூறுகின்ற யாதவர் "குரங்கின் ப்ருஷ்டம்போல் சிவந்த கண்களை" என்று இகழ்வான பொருளைச் சொல்ல, அது கேட்டுச் சிறிதும் பொறுக்க இல்லாத ஸ்வாமி மிக உஷ்ணமான கண்ணீர் பெருகநின்று '"கப்யாஸ"மென்பதற்கு இப்படியோ பொருள் சொல்லுவது? கம்பீராம்பஸ்ஸமுத்பூத-ஸம்ருஷ்டநாள-ரவிகர விகஸித மானதோர் செந்தாமரைப் பூப்போன்ற திருக்கண்கள் படைத்தவன் என்றன்றோ பொருள்' என்று வ்யுத்பத்திகளை விசதமாகக்கூறி உபபாதிக்க, அதுகேட்ட யாதவர் மிகச்சினந்து 'நாம் சொன்னபடியே கேட்டுக்கொண்டிருக்க முடியுமானால் வாசித்திரும்; இல்லையாகில் விட்டுப்போம்' என்ன, ஸ்வாமியும் சிந்தை கலங்கி விலகியிருந்தார்.

ஸ்வாமியை மாய்க்கும் விரகுபார்த்தல்

இப்படியிருக்கையில் அந்த யாதவப்ரகாசருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அதாவது—இந்த ராமாநுஜன் விலக்ஷணமான மேதையும் அஸாதாரணமான ப்ரதிபையும் பொலிய நின்றான்; இவனால் அத்வைத தர்சனம் குன்றும்போலும்; ஆகவே இவன் முடியும் விரகு செய்வது நன்று—என்று. இதைப்பற்றிப் பலவாறு ஆலோசிக்கையில், இவ்விளையாழ்வாரைக் கங்கையில் மணிகர்ணிகையிலே தள்ளி ம்ருத்யுவசமாக்குவதே பாதகமற்ற பணியென்று அறுதியிட்டு, ஒருநாள் ராமாநுஜரை வரவழைத்து 'நீர் இல்லாமல் எங்களுக்கு ஆற்றவொண்ணாதாயிருக்கிறது; முன்போல வந்திருந்து பாடமோத்து வாசித்து ஸித்தாந்தத்தை அவிச்சின்னமாக நடத்திப்போரும்' என்று ஸஹுமானமாகச் சொல்லி ஸ்வகோஷ்டியிலே சேர்த்துக்கொண்டு பாடப்ரவசனம் நடத்திவந்தார் யாதவர். ஏற்கெனவே தாம் எண்ணியிருந்தபடி நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக ஒருநாள் கோஷ்டியிலே கங்காயாத்திரைப் புறப்பாட்டை ப்ரஸ்தாபித்து ஸ்வாமியுட்பட எல்லாருமிசைந்தவாறே ஸபரிவாரராய்ப் புறப்பட்டார் யாதவர். இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் கூடவே செல்லாநின்றார்கள். வழியிலே யாத்திரை நடக்கையில் விந்த்ய ப்ரதேசத்திலே போம்போது சில இங்கிதங்களாலே இந்த யாத்திரையின் நிமித்தம் இன்னதென்றுணர்ந்த கோவிந்தபட்டர் ஓரிடத்திலே இளையாழ்வாரும் தாமுமாய்ப் பின்தங்கி

நின்று செய்தியை ரஹஸ்யமாக ஸ்வாமிக்குத் தெரிவித்து [redacted] போம்படி ஸூசிப்பிக்க, ஸ்வாமியும் அன்று நின்றும் அப்போதே தனியே மீண்டெழுந்தருளினர். [யாதவப்ரகாசர் செய்தியைப் பிறகு சொல்வோம்.]

ஸ்வாமி ஓரிரவிலே கச்சிப்பதி சேர்தல்

நிர்ஜனமும் நிர்ஜலமுமான நீள் காட்டிலே பிரிந்து திரும்பின ஸ்வாமி அவ்வழியை விட்டுக் குறுக்கே வெகுதூரஞ்சென்று ஒரு மரத்தடியிலே நின்று பார்க்க, கண்ணுக் கெட்டினவளவு *அங்கோர் நிழலில்லை நீருமில்லை* என்னும்படியான நிலைமையாய் ஒருவரும் துணையின்றிக்கே* ஆவாரார் துணையென்று அலைநீர்க்கடலு ளழுந்தும் நாவாய்போல் துளங்கி நின்று வழி திகைத்து நிற்கையிலே, எம்பெருமான் இப்படிப்பட்ட பரமஸாத்விகர்களை விட்டுக் கொடுக்க மாட்டாதானொருவனாகையாலே இவர்க்குத்துணைசெய்ய விரும்பி ஒரு வில்லியின் வேடம்பூண்டு வாளும் வில்லுங்கொண்டு மனைவியுடனே முன்னே வந்து தோன்ற, ஸ்வாமியும் அந்த தம்பதிகளைக்கண்டு களைத்தீர்ந்து உள்ளம் தேறி நின்று 'நீங்கள் எங்கு நின்றும் வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் விடை கூறினர்—நாங்கள் உத்தரதேசத்து ஸித்தாச்ரமத்தில் நின்றும் வருகிறோம்: ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தை நோக்கிச் செல்கின்றோம்—என்று. அது கேட்டு மகிழ்ந்த ஸ்வாமி 'நானும் உங்களுடனே அவ்விடத்திற்கு வர நினைக்கிறேன்; எனக்குத் துணையாயிருக்கமுடியுமோ?' என்று கேட்க, நல்லது, அப்படியேயாகலாம் என்று அவர்கள் சொல்லி முன்னடியிட ஸ்வாமியும் அவர்களைப் பின் செல்ல விந்த்யாடவி நீங்கி மாலைப்பொழுதாயிற்று. அப்போது அவ்விடத்திலே தங்கி அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வெகுதூரம் நடந்து சென்று பின்பு கன்னிருளாயிருந்ததனால் மேலே வழி நடந்து செல்ல மாட்டாமல் அங்கே அவர்களோடு கூடவே ஸுகவாஸமாகத் தங்கியிருந்தார் ஓர் மரத்தடியின் கீழ்.

அப்போது வில்லியின் மனைவி தாஹம் மேலிட்டுத் தண்ணீர் தண்ணீரென்று கணவனிடம் கூற, அவனும் "இப்போது தண்ணீர் கிடைக்கவில்லையே; விடிந்த போது அருகிலுள்ள கிணற்றிலே நல்ல மதுரமான தீர்த்தம் கிடைக்கும்" என்று சொல்லித் தேற்றினான். அப்போது ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் வருத்தமுற்றது. ஆஹா! நமக்கு மஹோபகாரகரான இவர்களுக்கு தாகம் விடாய் தீர்க்கும்படியான தேசமாக இல்லையே! என்கிற சிந்தையோடே விடிந்த போது தீர்த்தம் வார்த்திருக்கிறார். பின்பு கனவிருளகன்று கீழ்வானம் வெளுத்தென்று காலைப்பொழுதானவாறே மூவருமெழுந்து வழி நடக்கத்தொடங்க, அந்தத் தம்பதிகளிருவரும் அருகிலே ஒரு கிணற்றங்கரையிலே அழைத்துக்கொண்டு போய்விட்டு இவரைப் பார்த்து 'அந்தணர் முனிவரே! மிகவும் விடாய்த்திருக்கின்றோம்: இக்கிணற்றிலே இறங்கி ஒருகை அள்ளித் தீர்த்தம் தருவீராக' என்ன, அவரும் உடனே கிணற்றிலிறங்கி இரண்டு திருக்கைகளாலும் தீர்த்தம் வாரியெடுத்து மூன்றுதரம் கொடுக்க, அவர்களும் வாங்கி விடாய்தீரப் பருகி உருக்காட்டாதேயொளிக்க, இவரும் கரையேறி வந்து பார்த்தவாறே எங்குந்தேடியும் அவர்களைக் காணாமல் சுற்றிலுங் கூப்பிட்டுத் திசைகளையுற்றுப் பார்க்கையில் மாடமாளிகைகளும் கோபுரங்களும் விசேஷஜன ஸஞ்சாரங்களும் காணப்பட, முன்னே தோற்றின சிலரை நோக்கி இவ்விடமெவ்வூரென்று கேட்க, 'புண்யகோடி விமானம் முன்னே தோற்றுகிற தென்னூரென்று கேட்பதென்கொல்? இது சாலைக்கிணறன்றோ, கச்சிப்பதியன்றோ' என்று அவர்கள் சொல்ல, ஸ்வாமி மிகவுமாச்சரியப்பட்டு வழித்துணையான வில்லிகளைப் பெருமாளும் பிராட்டியுமாக ப்ரதிபத்திபண்ணி என்கொலம்மான் திருவருள்கள்! என்று தமே யிற்று 'உருக்காட்டாதே யொளிப்பாயோ? என்று பலவாறு கூறிப் புலம்பி ஒருவாறு

4

உள்ளங்கேற்றியெழுந்து சென்று தென்னத்தியூர்க் கழலிணைக்கீழ் ஸேவித்து அப்பெருமானுடைய திருவுள்ளத்திற்குப் பாங்காக நித்தியமும் சாலைக்கிணற்றில் நின்றும் திருவாராதனத்திற்குத் தீர்த்தங்கொணர்ந்து ஸமர்ப்பித்து வாரா நின்றார்.

யாதவப்ரகாசரது மேற் செய்தி

இளையாழ்வார்செய்தி இங்ஙனேயிருக்க இனி யாதவப்ரகாசருடைய செய்தி கேண்மின்; நடுவழியிற் பிரிந்துபோன இளையாழ்வாரும் கோவிந்த பட்டரும் வரக்காணோமேயென்று யாதவர் சிஷ்யருடனே ஓரிடத்திலே தங்கி யெதிர் பார்த்திருக்க, சிறிதுபோது கழித்து கோவிந்த பட்டர் வந்துசேர, 'வந்தீரோ? இளையாழ்வார் எங்கே?' என்று அவரைக்கேட்க 'அவரை நான் காணவில்லையே' என்று கூற, யாதவர் சிஷ்யர்களை இங்கு மங்கும் போகவிட்டுத் தேடிப் பார்க்கச்சொல்ல, அவர்களும் தேடிப்பார்த்துக் காணாமல், ஐயோ! காட்டிலே என்ன நிகழ்ந்ததோவென்று அனைவரும் வியாகுலராய், பகவத் ஸங்கல்பப்படி யாகிறதென்று சொல்லிக் கொண்டே மேலே நடந்து சென்று வழிநடையிலே கங்கைக்கரை சேர்ந்தார்கள்.

கோவிந்தபட்டர் லிங்கங்கொணர்தல்

ஒருநாள் கோவிந்த பட்டர் கங்கையில் நீராடுகையில், அவரது கையிலே ஒரு லிங்கம் வந்து சேர, வியப்படைந்து இஃது என்னென்று யாதவர்க்குக் காட்ட, அதற்கு அவர் பரம ஸந்தோஷத்துடனே 'நீர் தவஞ்ஞானமையாலே கங்காஸ்நானபலன் கைசேர்ந்தாற்போலே கங்காதரக் கடவுளே கைபுகுந்தபடி காணும்' என்று சொல்லி இவரிடத்திலே விசேஷ ப்ரதிபத்தியுடனிருந்தார். அன்று முதல் எல்லாரும் கோவிந்தப்பட்டரை உள்ளங்கை கொணர்ந்த நாயனார் என்று பேரிட்டழைக்கத் தொடங்கினார்கள். [உள்ளங்கை குளிர்ந்த நாயனார் என்பாருமுளர்.]

யாதவரும் கங்காஸ்நாநம் பண்ணி யாத்திரையை முடித்து மீண்டு ஸ்ரீ ஜகந்நாதம் அஹோபிலம்வழியாக வர, கோவிந்தர் இந்த லிங்கத்தை ஒரு உசித ஸ்தலத்திலே ப்ரதிஷ்டை செய்வித்து வருகிறேன் என்ன, அவரும் அப்படியே செய்யுமென்று விடை கொடுத்தனுப்பி விட்டுத் தாம் பரிவாரங்களுடனே பெருமாள் கோயிலை வந்து சேர்ந்தார். கோவிந்தரும் தம்முடைய ஜன்மபூமியான மதுரமங்கலஞ்சென்று சேர்ந்து அந்த லிங்கத்தை அங்கே ப்ரதிஷ்டிப்பித்து, பிறகு காளஹஸ்தியென்கிற சிவஸ்தலத்திலே சென்று அவ்விடத்திலே சிவபிரானுடையவும் சைவர்களுடையவும் பஹுமானங்களைப் பெற்று அங்கே ஆலய வழிபாடு செய்பவர்களுள் தலைவராய் நின்றார்.

யாதவப்ரகாசரும் ராமாநுஜரும்

ஸ்ரீ காஞ்சீபுரியிலே யாதவர் இளையாழ்வாரைக்கண்டு வியந்து மகிழ்ந்து 'வாரீர்! விந்த்யாடவியிலே உம்மைக் காணாமையாலே பலவாறு அதிசங்கித்துக் கனக்க க்லேசித்திருந்தோம்; அப்படியே சுகமாக வந்து சேர்ந்தீரே! இவ்வளவு காணப்பெற்றோமே!' என்று குரல் தழுதழுக்கக் கூற இவரும் வந்து சேர்ந்த வரலாற்றை [வில்லிகளின் செய்தியை] உள்ளபடியே யுரைக்க, யாதவருங்கேட்டு இவருடையபடி லோக விலக்ஷணமாயிருந்ததென்று உகந்து அவ்விராமாநுஜனை மீண்டும் ஸ்வகோஷ்டியிலே கூட்டிக்கொண்டு க்ரந்த ப்ரவசநம் நடத்தி வாரா நின்றார்.

ஆளவந்தார் கச்சிக் கெழுந்தருளி மீளுதல்

யாத்திரை யடைவாகக் காஞ்சீபுரியில் நின்றும் நம்பெருமாள் ஸந்நிதிக்கு இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் சென்று பெருமாளைத் தொழுது ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவித்து நிற்க, அவரும் வார்த்தா ப்ரஸங்கத்திலே பெருமாள் கோயிலில் விசேஷங்கள் என்னென்று கேட்க, அவர்களும் இளையாழ்வாருடைய ஞானப்பெருமை முதலிய வைபவங்களையும்

"கப்யாஸம் ச்ருதி முதலானவைகளிலே யாதவப்ரகாசரை மேலிட்டுப் பொருள் பணித்த வகைகளையும் அறிந்தவரைக் [illegible] கேள்விப்பட்டிருந்த, [illegible]லே நம்மை [illegible] பேரிலே திருவிருள் தருமானுகத்திலும் இப்படி பெருமையாளனவர் தோன்றப் பெறுவதே! என்று வியந்து அப்பொழுதே அவரைக் காணவேணுமென்றும் ஆவலுடனே திவ்ய தேசங்களை மங்களாசாஸனஞ் செய்துகொண்டு கச்சிப் பேரருளாளன் ஸன்னிதிக்கெழுந்தருளித் திருமுன்பிலே மங்களாசாஸனஞ் செய்து பின்பு திருப்புற்றினருகே திருவனந்தாழ்வானையும் பரியமாணிக்கப் பெருமாளையும் ஸேவியா நிற்க, அங்கே யாதவப்ரகாசர் தம் சிஷ்யருடனே பெருமாளை ஸேவித்து அவ்விடத்தே ப்ரதக்ஷிணமாக வாரா நிற்க, ஆளவந்தார் தம் அருகேயிருந்த திருக்கச்சி நம்பியை நோக்கி 'இத்திரளிலே இளையாழ்வார் யாவர்?' என்று கேட்க, அவரும் 'அதோ சிவந்துநெடுகி அழகாக வருகிறவர்' என்று காட்ட, ஆளவந்தாரும் திருவுள்ளம் பூரிக்கக் குளிர நோக்கியருளி "ஆம் முதல்வனிவன்" என்று விசேஷ கடாக்ஷம் செய்தருளி, பேரருளாளப் பெருமாளை நோக்கி "யஸ்ய ப்ரஸாதகலயா" என்கிற ச்லோகத்தால் இளையாழ்வார் ஸம்ப்ரதாயப்ரவர்த்தகராம்படி அருள் புரிகைக்காக மங்களாசாஸனஞ் செய்து அப்போது இளையாழ்வார்க்கு ஒரு ஸம்வாதத்தை சொல்ல அவகாசம் கிடையாமையாலே மீண்டும் முதலிகளும் தாமுமாகக் கோயிலேற வெழுந்தருளினர்.

ப்ரஹ்மராக்ஷஸ்ஸை ஓட்டின ராமாநுஜர் பெருமை.

அக்காலத்தில் கச்சி நகர்மன்னனுடைய பெண்பிள்ளையை ப்ரஹ்மராக்ஷஸ்ஸு பிடிக்க அதற்கு ஒருபடியாலும் பரிஹாரம் காணாமல் யாதவப்ரகாசர் சிறந்த மந்த்ரவாதி யென்று கேட்டு ராஜபுருஷர்கள் இவரிடம் வந்து செய்தி கூற, இவரும் அந்த ப்ரஹ்மராக்ஷஸ்ஸை நான் போகச் சொன்னதாகச் சொல்லுங்கோளென்று நியமிக்க அவர்களுஞ் சென்று அப்படியே சொல்ல, நான்தான் அவரைப் போகச்சொன்னதாகச் சொல்லுங்கோளென்று ப்ரஹ்மராக்ஷஸ்ஸு திரஸ்காரமாகச் சொல்லிவிட அதுகேட்ட யாதவர் சிஷ்யர்களொடு தம்மிருடனே அரசன் மனையிலே வந்து மஹாமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு ப்ரஹ்மராக்ஷஸ்ஸருகில் நின்று முடிபிடிக்க, ப்ரஹ்மராக்ஷஸ்ஸும் முடக்கினகாலை நீட்டி, 'அடா யாதவா! நீ ஜபிக்கிற மந்த்ரம் காணதியேனோ?' என்று அந்த மந்திரத்தையுஞ்சொல்லி 'அப்பா உன் பிறப்பு வரலாறு நான் சொல்லுகிறேன் கேளாய்; நீ மதுராந்தகத்து ஏரிக்கரையிலே இருப்பதொரு புற்றிலே ஓர் உடும்பாயிருந்தாய்; கோயில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலைக்கெழுந்தருளும்போது அங்கே ததியாராதனம் செய்கிறவிடத்திலே சிந்தின ப்ரஸாதத்தையும் தீர்த்தத்தையும் நீ உட்கொள்ளப் பெற்றாய்; அதனால் வித்வானான ஜன்மம் பெற்றனை. நானோ முற்பிறப்பில் அந்தணனாயிருந்து அரிய பெரிய வேள்வி செய்தவன்; உன் மந்திரத்திற்கா நான் போவேன்? உன் பக்கலில் வீற்றிருக்கின்ற ஆதிசேஷாம்சமான இளையாழ்வார்போகச் சொன்னால் போவேனத்தனை' என்று சொல்லிற்று. அதுகேட்ட யாதவர் முகத்தில் தேசுகுன்றி இளையாழ்வாரை நோக்கி நீர்தாம் போகச்சொல்லும் என்றுகூற, அப்படியே ஸ்வாமி நியமிக்க, 'உமது திருவடித் தாமரைகளை என் தலைமீது வைத்தாலொழியப் போவேனல்லேன்' என்று சொல்லி அப்படியே ஸ்வாமி திருவடிகளைச் சிரமேற்கொண்டு மகிழ்ச்சியெய்தி தெண்டனிட்டு இதோ போகிறேனென்று சொல்லிக்கொண்டே, போனமைக்கு அடையாளங்காட்டிப் போயிற்று. யாதவரும் இளையாழ்வாரை மிகவும் புகழ்ந்து கொண்டாடிக்கொண்டே மடம் சென்று சேர்ந்தார்.

ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தாருடைய சிந்தனை.

நம்பெருமாள் ஸன்னிதியில் ஆளவந்தார் திருவாய்மொழி காலக்ஷேபம் நிர்வஹித்தருளா நிற்கையில் "ஒன்றுந்தேவிலே" "இலிங்கத்திட்ட புராணத்தீரும்" என்கிற ப்ரகரணம் நடவா நிற்க, 'நமக்குப் பின்பு இத்தர்சனம் நிர்வஹிப்பாரொருவரையும் காணப்பெற்றிலோமே!' என்கிற

விசாரமுடையவராய் அதிகமாக்கி இளையாழ்வார் விஷயத்திலே திருவுள்ளஞ்சென்று 'இவரை யாதவ ப்ரகாசனிடம் பிரித்து நம்மோடே சேர்க்கும் உபாயமொன்றில்லையே!' என்று கோஷ்டியிலே ஸ்ரீவைஷ்ணவர்களோடே அருளிச் செய்து பின்னையும் பேரருளாளனைக் குறித்து இங்கு நோக்கி அனுக்ரஹஞ்செய்து "நீ நமக்கே அடியேன் பண்ணின ப்ரபத்தியை ஸபலமாக்கியருளவேணும்'' என்று மிகவும் வேண்டினார்.

ராமாநுஜர் யாதவரை விட்டு விலகித் திருக்கச்சிநம்பிக்கு அணுக்கராயிருத்தல்.

ஆளவந்தாருடைய அந்தரங்க ப்ரபத்தி விரைவில் பலிக்க வேண்டிய காலம் வந்து விட்டபடியால் ஒருநாள் யாதவப்ரகாசருக்கும் இளையாழ்வார்க்கும் உபநிஷதர்த்த விசாரத்தில் போராட்டம் வலுத்தது. அன்று விசிஷ்டாத்வைத ஸித்தாந்தக் கோட்பாட்டை ஸ்வாமி வெகு அற்புதமாக எடுத்து உபந்யஸிக்க வாய்த்தது. அப்போது யாதவர் ப்ரத்யாக்யானமொன்றும் பண்ண முடியாத தன்மையினால் அளவிறந்த சீற்றங்கொண்டு 'இன்று தொடங்கி நீர் என்னிடம் வாஸிக்க வேண்டா; உம்முடைய புத்திக்குத் தகுதியான விடத்திற்சென்று வாஸிக்கக் கொள்ளும்' என்று மறுத்து விடவே, இதையே சுபநிமித்தமாகத் திருவுள்ளம் பற்றி உகந்தவுள்ளத்தரான இளையாழ்வார் தமது திருத்தாயார் பக்கலிலே இச் செய்தியைத் தெரிவிக்க, அவளும் நெஞ்சு கனிந்து 'பிள்ளாய்! இதுகாறும் வாஸித்தது போதும்; திருக்கச்சி நம்பிகள் பேரருளாளப் பெருமாளுக்கு அணுக்கராயிரா நின்றார்; அவரை யநுவர்த்தித்துக் கொண்டு அவர் சொல் வழுவாது ஒழுகுவது பாங்கு' என்று நியமிக்க, ஸ்வாமியும் அப்படியே நம்பிகளை யடி பணிந்து அவருடைய நியமனத்தினால் பண்டுபோல சாலக் கிணற்றில் நின்றும் நாடோறும் ஒரு குடம் திருமஞ்சனம் கொணர்ந்து தேவப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து வருபவராயிருந்தார்.

ராமாநுஜரை ஸ்ரீரங்கத்திற்கழைத்துச்செல்லப் பெரியநம்பி வருதல்.

கோயிலில் ஆளவந்தார் திருமேனி நோவு சாத்தி "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனியுன்றன் பாயலின்னடிசில் வைப்பாரை நாடாயே' என்னவேண்டும்படியான நிலைமை யெய்தியிருந்தார். அப்போது ஸ்ரீ காஞ்சீபுரியில் நின்றும் யாத்திரை யடைவிலே அவ்விடத்திற்கு வந்த இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களை நோக்கி இளையாழ்வாருடைய செய்தி என்னவென்று விசாரிக்க, ஸ்ரீ ராமாநுஜர் சில நாளாக யாதவப்ரகாசரை வெறுத்து விட்டிட்டுத் திருக்கச்சி நம்பி பக்கலிலே ப்ரவணராய்த் தேவப்பெருமாளுடைய கைங்கரியத்திலே ஊன்றி யிருக்கிறாரென்று அவர்கள் சொல்லக்கேட்டு ஆளவந்தார் மிகவும் திருவுள்ளமுகந்து தம்முடைய அந்தரங்கப்ரபத்தியைப் பேரருளாளன் விரைவிலேயே ஸபலமாக்கியருளின படிக்கு உகந்து தமது அந்தரங்க சிஷ்யரான பெரிய நம்பியையழைத்து இச்செய்தியைச் சொல்லி 'நீர் சடக்கெனத் தென்னத்தியூரர் கழலிணைக் கீழே சென்று எப்படியாவது இளையாழ்வாரையிங்கே யழைத்து வரவேணும்' என்று நியமித்து, ஸ்தோத்ர ரத்நத்தின் அநுஸந்தானத்தைத் துணை கொள்ளும்படிக்கும் ஸம்பிப்பித்துப் பெருமாள் கோயிலுக்குப் போகவிட்டார். பெரிய நம்பியும் ஸ்வாசார்ய நியமனத்தைச் சிரஸாவஹித்து உடனே புறப்பட்டுக் காஞ்சீபுரி வந்து சேர்ந்தார்.

பெரிய நம்பியும் ராமாநுஜரும்.

தமக்கு ஸப்ரஹ்மசாரியான திருக்கச்சி நம்பி அவ்விடத்திலெழுந்தருளியிருக்கின்றமை யறிந்து அவர்பக்கலிலே சென்று சேர்ந்து தாம் வந்த காரணத்தைத் தெரிவித்து அவரை முன்னிட்டுக்கொண்டு பேரருளாளன் ஸந்நிதிக்குச்சென்று மங்களாசாஸனம் செய்து, அப்போது இளையாழ்வார் சாலக்கிணற்றுக்குச் சென்றிருப்பதாகவும் தீர்த்த கும்பத்துடனே திரும்பி வரு

இச் ஸமயமாகத் தெரிந்துகொண்டு அதிவேகமாக எழுந்தருளி அவர் வரும் வழியிலே ஓரிடத்திலிருந்துகொண்டு செவிக்கினிய கம்பீர மதுர ஸ்வரத்துடனே ஸ்தோத்ரரத்னத்தை அநுஸந்தித்துக் கொண்டிருக்கையில், இளையாழ்வாரும் திருமுடிமேல் திருநீர்க்குடத்துடன் வருபவராய் அப்போது பெரியநம்பியின் அநுஸந்தானத்திலிருந்த "ப்ரஹ்மா சிவச் சதமக: பரமஸ்வராடிதி ஏதேபி யஸ்ய மஹிமார்ணவ விப்ருஷஸ்தே" என்கிற ச்லோகத்தைத் திருச்செவிசாத்தி 'இது யாருடைய திவ்யஸூக்தி?' என்று நம்பியை நோக்கிக் கேட்க, அவரும் 'இது ஆளவந்தாருடைய திவ்யஸூக்தி' யென்றுரைக்க, 'ஆகில் அவரை அடியேன் ஸேவிக்கவேணுமே' என்று இளையாழ்வார் கூற, 'ஆகலாம்; நம்மோடே வந்து ஸேவிக்கலாம்' என்று பெரிய நம்பி பணிக்க, இருவரும் தொல்லையின்பத்திறுதி கண்டவர்களாய் வார்த்தையாடிக் கொண்டே ஸந்நிதிக்குச் சென்று சேர்ந்தார்கள். இளையாழ்வார் திருமஞ்சனத்தைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துவிட்டு நியமனமும் பெற்றுக்கொண்டு திருக்கச்சிநம்பியின் அநுமதியையும் பெற்றுப் பெரிய நம்பியுடனே புறப்பட்டுத் திருவரங்கம் பெரிய கோயிலை நோக்கிச் செல்லாநின்றார்.

ஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளுதல்

பெரிய நம்பியைப் பெருமாள் கோயிலுக்குப் போகவிட்ட பிறகு சில நாளையிலே ஆளவந்தார் திருமேனியிலே அநாரோக்யம் மிகுதியாகித் திருநாட்டுக் கெழுந்தருளும் ஸந்தி வேளையாயிற்று. மிக்க தார்மியோடே ஸந்நிதிக் கெழுந்தருளி அமலனாதிபிரானை அநுஸந்தானத்துடனே பெரிய பெருமாளைத் திருவடிதொழுது வரிசைகளும் பெற்று நலமந்தமில்லதோர் நாடுபுக போவீரும் போற்று மடமேற எழுந்தருளி உபநிஷத்துக்களையும் அருளிச் செயல்களையும் முதலிகள் ஸேவிக்கத் திருச்செவி சாத்திக்கொண்டேயிருந்து *அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்து களிக்கவேண்டி மணக்கால்நம்பிகளின் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே ப்ரஹ்மரந்த்ரத்தாலே திருநாட்டுக்கெழுந்தருளினார். திருவரங்கப் பெருமாளரையர் முதலாக எல்லாரும் வேரற்ற மரம்போலே விழுந்து அழுக, அன்றுள்ளார் இவர்களைத் தேற்றி ஆளவந்தார் குமாரரான பிள்ளைக்கரசுநம்பியை நோக்கி மேல் நடைபெறவேண்டிய கைங்கர்யங்களுக்கு உத்யோகிப்பிக்க, ஆளவந்தார்படி யென்று இன்றளவும் வழங்கி வருகிற விலக்ஷண ப்ரக்ரியையிலே சடங்குகளையெல்லாம் நடத்தி, திருக்கரம்பன் துறையிலே திருப்பள்ளி படுத்துவதாக திவ்ய மங்கள விக்ரஹத்தைப் ப்ரஹ்மரதத்திலே யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தாயிற்று. பெரியநம்பி இளையாழ்வாருடனே திருக்காவிரியின் வழியாக எழுந்தருளுகிற ஸமயமும் மேலே குறித்த ஸமயமும் ஒத்திருந்தது.

ராமாநுஜர் ஆளவந்தாருடைய சரமத் திருமேனியை ஸேவித்தல்

பெரியநம்பி திருக்கரம்பன் துறையிலே பெரிய திரளைக்கண்டு எதிரே வருகிறவர்களை நோக்கி என்ன விசேஷமென்று கேட்க, அவர்களும் ஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளினாரென்ன, அதைக்கேட்ட இருவரும் மூர்ச்சித்து க்லேசித்து, விமலசரம விக்ரஹத்தையாகிலும் ஸேவிக்கப் பெற்றோமேயென்று தேறியெழுந்து அருகே வந்து சேர்ந்து தண்டனிட்டு நின்று ஸேவிக்கையில், இளையாழ்வார் அந்த சரமத் திருமேனியை ஆபாத சூடமாக ஸேவித்து வருபவர், திருக்கையில் மூன்று திருவிரல்கள் முடக்கியிருக்கக் கண்டு 'முன்னமும் இப்படியுண்டோ? இப்போதானதோ?' என்று முதலிகளைக் கேட்க, அவர்களும் 'முன்

யில்லை: இப்போது கண்டதித்தனை' என்ன; இளையாழ்வாரும் இவர் திருவுள்ளத்திலே ஏதேனும் குறையுண்டாயிருக்கவேணுமென்று கருதி, முதலிகளைப் பார்த்து முன் [illegible] அடியார்களிலே அபிமத ஸல்லாபங்களைக் கேட்டிருப்பீர்களே; திருவுள்ளத்திலோடியிருப்பன சில அறியப்பெற்றதுண்டோ? என்று கேட்க: அவர்களும் மூன்று விஷயங்களைத் தெரிவித்தார்கள் - 1. ப்ரஹ்மஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைதமதாநுஸாரியான பாஷ்யம் அவதரிக்கவேணுமென்கிற விருப்பமும் 2. நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கொரு வியாக்யான மவதரிக்க வேணுமென்கிற விருப்பமும் 3. வ்யாஸபராசரர்களிடத்திலே க்ருதஜ்ஞதாநுஸந்தானம் செய்யும்படியான காரியமொன்று நடைபெற வேணுமென்கிற விருப்பமும் ஆக இம்மூன்று வாஞ்சைகளே திருவுள்ளத்தில் குடிகொண்டிருந்தனவாக அறிவோம்; வேறொன்றுமறியோம் என்றார்கள்:

ராமாநுஜர் காஞ்சீபுரம் சேர்ந்து வாழ்தல்

ஸ்வாமி இதைக் கேட்டதும் தெண்டனிட்டுக் கைகூப்பி நின்று 'இவ்வுடல் திடமாய் ஆசார்யக்ருபையும் அடியேனிடத்தில் பரிபூர்ணமாயிருந்து ஸர்வேச்வரன் அடியேன் நினைத்தபடி நடத்துவானாகில் இம்மூன்றையும் நிறைவேற்றக்கடவேன்' என்ன; முடங்கியிருந்த மூன்று திருவிரல்களும் உடனே நிமிர. இதனை அனைவருங்கண்டு ஆச்சரியப்பட்டு 'இளையாழ்வீர்! இவ்வாசார்ய க்ருபையும் உம்மிடத்திலே கூடும்; நீரே இந்த தர்சனத்திற்கு நிர்வாஹகராவீர்" என்று மங்களாசாசனம் செய்து கூறினார்கள். ஸ்வாமியும் அந்த திவ்ய மங்கள விக்ரஹத்தைக் கண்ணினும் நெஞ்சினும் தேக்கிக்கொண்டு திருவடிகளை ஸேவிக்கப் பெற்றமையாலே ஸகலார்த்தங்களும் தமக்குச் சேம நிதியாக வைத்தனவாகக் கொண்டு ஆகிலும் இரண்டொரு காலாவது கூடவிருந்து' திவ்ய ஸூக்திகளைச் செவியாரப் பருகப் பெற்றிலேமேயென்கிற க்லேசம் மேலிட்டு "பணவாளரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள் மணவாளர் நம்மையளிக்க பரிந்து காண்மின்" என்று கூறிக் கொண்டே அவப்ருதஸ்நாநம் செய்தருளிப் பெரிய நம்பியிடம் விடைபெற்றுக் கொண்டு பெருமாளையும் திருவடி தொழாதே அவரை வெறுத்து மீண்டும் பெருமாள்கோயிலேற வெழுந்தருளினார். 'ஆளவந்தாரோடே நான் கூடியிருந்து குளிரப்பெற்றிருப்பேனாகில் பரமபதத்திற்குப் படி கட்டியிருப்பேனே" என்று அப்போது பலகாலும் இளையாழ்வார் பணித்தபடி.

பிறகு ஆளவந்தாருடைய சரம கைங்கர்யங்கள் குறைவற நடந்தேறின. இளையாழ்வாரும் பெருமாள் கோயில் சேர்ந்து திருக்கச்சி நம்பிக்குச் செய்தியறிவிக்க, அவரும் க்லேசித்து ஸ்ரீகார்ய பரிபாலனத்தின் நடத்தினார். ஸ்வாமி முன்பு போலவே பேரருளாளனுடைய திருமஞ்சன கைங்கர்யத்தில் நிரதராயிராநின்றார்.

திருக்கச்சிநம்பியிடம் ராமாநுஜருடைய ப்ரதிபத்திவிசேஷம்

திருக்கச்சி நம்பிகளிடத்திலே மிகவும் பக்திகொண்டு அவர் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேணுமென்று கருதி அக்கருத்தை அவரிடத்தே விண்ணப்பிக்க, 'இது வர்ணாச்ரமத்துக்கடுத்த வைதிக மர்யாதைக்குப் போராது' என்று அவர் மறுத்திட்டார். ஆச்ரயிக்கும் பாக்யந்தான் இல்லையாகிலும் *போனகஞ்செய்த சேடமாவது பெற்றுப் புனிதராவோமென்றெண்ணி ஒருநாள் நம்பியிடம் சென்று, 'இன்று அடியேனது குடிசையிலே அமுது செய்ய எழுந்தருளவேணும்' என்று வேண்ட அவரும் இசைந்தருள, ஸ்வாமி மிக்க

மகிழ்ச்சிகொண்டு தம் திருமாளிகைக் கெழுந்தருளி இச் செய்தியைத் தேவியாரிடம் தெரிவித்து அதுகவையாடியிருப்ப அதிமதுர பக்ஷ்யவர்க்கங்களும் செய்யும்படி நியமித்து, தமது நித்யகைங்கர்யமான திருவாலவட்டத் திருப்பணியையும் விரைவாகத் தலைக்கட்டித் திருமாளிகையிற் போந்து திருவாராதனமும் கண்டருளப்பண்ணி, அவ்வளவிலும் திருக்கச்சிநம்பி யெழுந்தருளக் காணாமையாலே அவரை யழைத்து வருவதற்குத் தெற்குத் திருவீதியாலே மேற்கே யெழுந்தருளினார். அந்தருணத்திலேயே நம்பிகள் வடக்குத் திருவீதியாலே ஸ்வாமி திருமாளிகைக்கெழுந்தருளி, திருவாலவட்டத்திருப்பணிக்காக விரைந்து செல்லவேண்டியிருப்பதை யறிவித்து நின்றவளவிலே ஸ்வாமிதேவிகள் இவரை ஒரு மூலையிலே உட்காரவைத்து அமுதுசெய்யப் பண்ணுவித்து அனுப்பிவிட்டு அமுது செய்த இடத்தைக் கோமயத்தாலே சுத்திபண்ணித் தெளித்துத் தாமும் நீர்த்தமாடி நிற்கிறவளவிலே நம்பியை யழைத்துவரச் சென்றிருந்த இளையாழ்வார் அவர் இங்கே போந்தமையறிந்து மீண்டுவந்து நம்பியைக் காணாமல், மனைவி நீராடியிருந்தபடியைக் கண்டு இதுவென்? என்று கேட்க; அந்த ஸ்ரீ வைஷ்ணவர் வந்து கைங்கர்யத்திற்கு விரைந்து செல்லவேண்டியிருப்பதைத் தெரிவித்தார்; உடனே அவரை அமுதுசெய்யப் பண்ணுவித்தனுப்பினேன்; அவர் சூத்ர வர்ணஸ்தரானமையாலே இலையைக் கோலாலே தள்ளிக் கோமயத்தாலே மெழுகினேன். அதனால் ஸ்நானம் பண்ணவேண்டிற்று' என்றாள். அதுகேட்டு ஸ்வாமி மிகவும் வெறுத்து வருந்தி எம்பெருமான் திருவுள்ளமிருந்தபடிக்கு என்செய்வதென்று மனம் நொந்திருந்தார்.

திருக்கச்சிநம்பி யாறுவார்த்தை

மறுநாள் திருக்கச்சிநம்பிபக்கலிற் சென்று 'அடியேன் சில நினைவுகள் நினைத்திருந்தேன்; அவை விஷயமான நிர்ணயத்தை தேவரீர் பேரருளாளன்பக்கலிலே தெரிந்துகொண்டு அடியேனுக்கு நியமித்தருளவேணும்' என்று ஸ்வாமி ப்ரார்த்திக்க, நம்பியும் அப்படியே யாகுக வென்றிசைந்து அன்றிரவு பெருமாளிடத்திலே விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் பெற்று மறுநாள் இளையாழ்வார்க்கு அறிவித்த ஆறுவார்த்தைகள்,—1. பரதத்வம் நாமே. 2. ஜீவபரேஸ்வரபேதமே தர்சனம். 3. ப்ரபத்தியே தஞ்சம். 4. அந்திம ஸ்ம்ருதி வேண்டா. 5. சரீராவஸானத்திலே மோக்ஷம். 6. பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது—என்பன. இங்ஙனே ஆறு வார்த்தைகளை அருளிச்செய்யக்கேட்ட இளையாழ்வார் இவ்விஷயமான நிர்ணயமே தாம் அறிய விரும்பியிருந்தமையால் இவற்றைத் தெளியவறியப்பெற்றதற்கு உவந்து, பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயித்து உஜ்ஜீவிப்பதாக அறுதியிட்டுத் திருவரங்கம் பெரிய கோயிலுக்குப் புறப்பட்டருளினார்.

ராமாநுஜர் மதுராந்தகத்தில் பெரிய நம்பிகளை யாச்ரயித்தல்

அக்காலத்திலே கோயிலில் தர்சன நிர்வாஹத்திற்காக இளையாழ்வாரை அங்கே வரவழைத்து நிலைநிறுத்தவேணுமென்று ஆவல்கொண்ட முதலிகள் பெரியநம்பியை நோக்கி இது உம்மாலாகக்கூடிய காரியமாதலால் நீரே காஞ்சிபுரிக்குச்சென்று காரியம் பார்க்கவேணுமென்று நியமிக்க, அவரும் அப்போதே ஸகுடும்பமாகப் புறப்பட்டு நம்பெருமாளிடம் விடைபெற்றுக்கொண்டு தேவப்பெருமாள் ஸந்நிதியை நோக்கி எழுந்தருளா நிற்கையில் இடையில் மதுராந்தக க்ஷேத்ரத்திலே ஏரிகாத்தராமன் ஸந்நிதியிற் சேர்ந்து நின்றார். இளையாழ்வாரும் (திருக்கச்சிநம்பிகளின் திருவாக்குப்படியே பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பதாகப் புறப்பட்டுத்) திருவரங்கம் பெரியகோயிலை நோக்கிச

செல்லாநின்று [illegible] ஸ்ரீரங்கத்திலே சேர்ந்தவாறே, அங்கும் பெரியநம்பியை யாத்ருச்சிகமாக ஸேவிக்க [illegible] என்னுடைய [illegible] எதிரே வந்து வாய்த்தது போல இப்படி எம்பெருமானே [illegible] பரிபக்குவமாவதே! [illegible] இனி காலவிளம்பம் பொறுக்காதென்று [illegible] திருவுள்ளம் [illegible] நம்மையடைவிக்கும்படி வேண்டிக்கொண்டு அவரும் இவருடைய ஆர்த்தியின் கனத்தைக்கண்டு [illegible] அவ்விடத்திலேயே பஞ்சஸம்ஸ்காரங்களை [illegible] ஆளவந்தார் [illegible] தஞ்சமென்று கொண்டிருக்கும்படி [illegible] ஆங்கு நின்றும் [illegible] பெருமாள் கோயிலிலே வந்து சேர்ந்தார்கள். இளையாழ்வார் தம்முடைய திருமாளிகையிலேயே மேல்மாடியிலே பெரியநம்பி [illegible] வஸிக்க இடமளித்துத் தளிகைக்கு வேண்டும் பதார்த்தங்களும் ஸமர்ப்பித்து ஆதரித்துக் கொண்டு அவர் ஸந்நிதியிலே அருளிச் செயல்களைக் கற்பதும் தர்சன ரஹஸ்யார்த்த விசேஷங்களைக் கேட்பதுமாயிருந்து வந்தார்.

பெரியநம்பி கோயிலுக்கெழுந்தருளல்

இங்ஙனமிருக்கிற வளவில் பெரியநம்பி தேவிகளுக்கும் இளையாழ்வாருடைய தேவிகளுக்கும் மனப்பொருத்தமில்லாமையால் வைரஸ்யமுண்டாகத் தொடங்கிற்று. இருவர்க்கும் கிணற்றின் கரையிலே தாம்புளியமான விவாதமுண்டாகி வார்த்தைகளும் விஞ்சின; இதைப் பெரியநம்பி யுணர்ந்து தமது தேவிகளைக் கோபித்து, இனி நாம் இங்கு வாழ்வது தகுதியற்றதென்றெண்ணி உடனே கோயிலுக்குப் புறப்படத் திருவுள்ளமாய் இளையாழ்வார் பக்கலிலும் அறிவியாமல் அவர் அநுஷ்டானத்திற்குச் சென்றிருந்த ஸமயம் பார்த்து குடும்பமாக மீண்டு கோயிலுக்கெழுந்தருளினர். ஸ்வாமி அநுஷ்டானம் பண்ணி யெழுந்தருளிப் பெரியநம்பியை ஸேவிக்கப்பெறாமல் விசாரித்துச் செய்தியறிந்து திருவுள்ளம் மிகவும் உடைந்துபட்டு நின்றார்!

ஸ்வாமி ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளுதல்

நம்மாழ்வார் ஒரு திருவாய்மொழிக்குப் பலச்ருதியருளிச் செய்யாநின்றவர் * நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே * என்று க்ருஹஸ்தாச்ரம வாழ்ச்சியையும் பலனாக அருளிச்செய்தார். ஸர்வோபகாரக்ஷமமான இந்த ஆச்ரமவாழ்க்கை நன்றேயாயினும் * நல்ல பதத்தால் மனைவாழ்வர் * என்றபடிக்குப் பாங்காக இராவிடில் பரித்யாஜ்யமேயாதலால் ஸஹதர்மசாரிணியான தேவியாருடைய மனம் அநுகூலமாயிராதபோது இல்லாச்ரம வாழ்க்கையில் ஜிஹாஸையுண்டாக ப்ராப்தம். ஸ்வாமி தமது தேவியாரிடத்தில் மூன்று அபசாரங்கள் கண்டார். 1. திருக்கச்சிநம்பி பக்கலிலே தமது திருவுள்ளத்திற்கு மாறாக நடந்து கொண்டது. 2. ஒருநாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவருக்கு ப்ரஸாதமிடும்படி நியமிக்க, உள்ளே ப்ரஸாதமிருந்தும் இல்லையென்று சொல்லி மறுத்தொழித்தது. 3. ஆசார்ய தேவிகளோடே ஸ்பர்த்தித்து அபசாரப்பட்டது. ஆக இம்மூன்று செய்கைகளும் அஸஹ்யாபசாரமாக ஸ்வாமிக்குத் தோன்றினபடியால் உடனே ஸந்ந்யாஸாச்ரமம் ஸ்வீகரிக்கத் திருவுள்ளமாய் அன்றே தேவிகளைப் பிறந்தகத்துக்குப் போக விட்டுப் பேரருளாளன் திருமுன்பே திருவனந்தஸரஸ்தீரத்தில் தண்ட காஷாயங்களைப் பரிக்ரஹித்து ராமாநுஜமுனியென்றும் யதிராஜரென்றும் உலகமெலாம் போற்ற நின்று உலகேத்துமாழியானத்தியூரானுடைய அந்தரங்க வுகப்புக்குக் கொள்கலமாய் மடர்ந்தே வாழ்ந்துகொண்டு அத்தாணிச் சேவகம் புரிந்துவந்தார்.

ஆழ்வானும் ஆண்டானும் வந்து பணிதல்

ஸ்வாமி இங்ஙனே ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளினபடியை முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் கேள்விப்பட்டு ஸ்வாமி திருவடிகளிலே வந்து ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரங்களும் பெற்று மீமாம்ஸா சாஸ்த்ரயுக்மச்ரவணம் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார்கள். இந்த கோஷ்டியிலே அந்வயித்து வாழவேண்டிய கோவிந்தப்பட்டர் காளஹஸ்தியிலே விபரீத ருத்ரபரராயிருக்கிறாரே யென்று திருவுள்ளம் நொந்து இக்குறையைத் திருமலை நம்பி பக்கலிலே தெரிவித்து அவரைத் திருத்திப் பணிகொள்ளவேண்டியது உம்முடைய பாரமென்று விண்ணப்பித்திருந்தார் ஸ்வாமி.

யாதவப்ரகாசன் ஸ்வாமியை யாச்ரயித்து வாழ்தல்

ஸ்வாமியினுடைய ப்ரபாவம் நாள்தோறும் வளர்ந்து செல்லாநின்றது. அதனைக் கண்டு யாதவப்ரகாசனது தாயார் 'நம்முடைய குமாரனும் இவரை யடிபணிந்து வாழ வேணுமே' என்று சிந்தித்து இந்த மனோரதத்தை மகனிடம் பலகாலும் தெரிவித்துவந்தாள். அவன் தானுமே ஸ்வாமியின் விலக்ஷணமான பெருமைகளையெல்லாம் கண்டவனுமாய் [illegible] வைபவத்தை விரோதித்து [illegible] தன் மனத்திலே மிகவும் அருசி தோன்றி நின்றதனாலும் [illegible] ஸம்ப்ரதாயத்தில் அன்பு தோன்றி அப்படியே யென்றிசைந்து, இதுவரையில் ஏகதண்டிஸந்யாஸம் பண்ணியிருந்த பாபத்திற்கு ப்ராயச்சித்தமாக பூப்ரதக்ஷிணம் பண்ணவேண்டியிருந்ததனால் வயது முதிர்ச்சி காரணமாக அது செய்ய முடியாமைக்கு வருந்தியிருக்கையிலே தேவப்பெருமாள் கனவில் காட்சி தந்து 'ஸம்ப்ரதாயமுள்ள ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணுவது பூப்ரதக்ஷிணத்திலும் மேம்பட்டது. ஆகவே அது செய்து உன் [illegible]' என்று நியமிக்க, திருக்கச்சிநம்பி மூலமாகவும் இந்த நியமனத்தைத் திடமாக விச்வஸித்து ஸ்வாமி திருவடிகளிலே வந்து வேரற்ற மரம் போலே விழுந்து கண்ணும் கண்ணீருமாய் நின்று "பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சி [illegible]" இனியாகிலும் இவ்வாத்மா உஜ்ஜீவிக்கும் நல்வழி பார்த்தருள வேணுமென்று வணங்கி ப்ரார்த்தித்து ஸ்வாமியின் திருவருளுக்கிலக்காகி ஸ்ரீவைஷ்ணவ யதிவேஷம் பூண்டு [illegible] வாழ்ந்துபோனான். இவ்விஷயத்தை வேதாந்த தேசிகனும் யதிராஜ ஸப்ததியில் * ஸ்வயமாத் உத்தருதயாதவப்ரவர * என்றருளினார்.

திருவரங்கப்பெருமாளரையரும் தேவப்பெருமாளும்

ஸ்வாமி காஞ்சீபுரியிலே ஆழ்வான் ஆண்டான் முதலான சிஷ்யவர்க்கங்களுக்கு உபய வேதாந்த ப்ரவசனம் செய்து போரா நிற்கையில், நம்பெருமாள் ஸந்நிதியில் தர்சனப்ரவர்த்தகர் ஒருவருமில்லாத குறைதீர இவரை அங்கிட்டுத்திக் கெழுந்தருளச் செய்ய வேணுமென்று பாரிப்புக்கொண்ட கோயில் முதலிகள் ஓர் உபாயம் கண்டனர்; பேரருளாளப் பெருமாள் ஆழ்வாருளிச் செயல்களிலே போரவும் பித்தராயிருப்பாரானபடியாலே நம் அரையரைக் கொண்டு பாட்டுக் கேட்பித்து உகப்பித்து வரப்ரஸாதமாக ஸ்ரீராமாநுஜரைப் பெற்று இங்கே யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரலாமென்று.

அக்காலத்து, இசைபாடி விண்ணப்பஞ் செய்வதில் மிகவல்லவராயிருந்த ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரைப் பேரருளாளப் பெருமாள் ஸந்நிதிக்கு விடைகொண்டு இக்காரியத்தைச் செய்யவே தலைக்கட்டிக் கொண்டு வரும்படி பெரியபெருமாள் நியமித்தருள, அந்த நியமனத்தை சிரஸாவஹித்த அரையர் பேருளாளன் ஸந்நிதிக்கு வந்து

சேர்ந்து அரையரை வரதப்பெருமாளரையரையும் திருக்கச்சி நம்பியையும் முன்னிட்டுக் கொண்டு தேவப்பெருமாளைத் திருவடி தொழுது *அத்தியூரான் புள்ளையூர்வான் *என் னெஞ்சமேயான் *இனியினியுனக்குச் சொல்லுவன் *ஊர்க்குமெல்லணைப் பள்ளி கொண்டான் முதலான பாசுரங்களைத் தேய காணத்திலேயிட்டுத் தேவப்பெருமாள் திருவுள்ளம் நீர்ப்பண்டமாயுருகும்படி செவிக்கினிதாகப் பாடிக்கொண்டிருக்கையில் தேவப்பெருமாளும் திருவுள்ளம் பூரித்து, 'வாரீர் அரையரே! உம்முடைய பாட்டுக்குப் போரவுகந்தோம்; நீர் எது கேட்டாலும் தரக்கடவோம்' என்று ஒருகாலைக்கொருகால் உகந்தருளிச் செய்ய, அரையரும் அருகேயிருந்த இளையாழ்வாரைக் காட்டி 'நம் இராமாநுசனை நம்பெருமாளுக்குத் தந்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, அதுகேட்டுத் தேவப்பெருமாள், திடுக்கிட்டு ஒன்றும் தோன்றாமே நிற்க, சொன்னசொல் தவறாதே தந்தருளவேணுமென்று அரையர் வேண்ட, "நம்மிராமாநுசனைத் தவிர மற்றவைதக் கேளுமென்று நாம் முதலிலேயே சொல்லத் தவறினோம்; சொற்படியே இராமாநுசனைப் போகவிட வேண்டியதே" என்று தனித்து, "அரையரே! நம்மை இங்ஙனே வஞ்சித்து ஸர்வஸ்வமும் கொள்ளைகொள்ள வந்தீர் போலும்; நாமும் உமது வஞ்சனையிலே அகப்பட்டோம்; இனி என் செய்வது? விரும்பினபடியே கொண்டுபோகக் கடவீர்" என்று தேவப்பெருமாள் விடை கொடுத்தருள அன்றே அப்போதே ஸ்வாமி ஆழ்வானாண்டான் முதலான சிஷ்ய வர்க்கங்களுடனே புறப்பட்டு அரையரை முன்னிட்டுக் கொண்டு நம்பெருமாள் ஸந்நிதிக்கு வந்து சேர்ந்து *தெண்ணீர்ப் பொன்னியிலே நீராடி ஆழ்வார்களைத் தொழுதுகொண்டு அரவணை மேல் பள்ளிகொண்ட முகில்வண்ணனைக் கண்ணாரக்கண்டு '*அடியேன் பீது இப்படியும் அருள்வெள்ளம் பெருகுமதே!' என்று ஈடுபட்டு நிற்கையில், பெரியபெருமாள் தமது திருப்பொலிந்த சேவடியை இவரது சென்னிமேல் பொறித்து "இளையாழ்வீர்! *பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மென்கிற உபயவிபூதி செல்வத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம். இனி நம்முடைய கோயிலைத் திருத்திப் பணிகொள்ளக் கடவீர்" என்று நியமித்தருளியாயிற்று. அன்று முதலாக ஸ்வாமிக்கு உடையவர் என்கிற திருநாமம் வழங்கி வந்தது. [உடையவர்—உபய விபூதியையும் தம் கையிலேயுடையவர் என்றபடி.] இங்ஙனே பெரியபெருமாளுடைய பேரருளைப் பெற்றதும் அருகேயிருந்த பெரிய நம்பியை நோக்கி *பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறாத பயன்பெறுமாறு வரிவாள்வாயர வணைமேல் நம்பெருமாள் காட்டினரேயென்று பாசுரஞ்சொல்லி, தேவரீருடைய திருவடி ஸம்பந்தம் பெற்ற கோயின்மையாலே பெரியபெருமாள் அடியேனை யிப்படி விஷயீகரித் தருளினர் என்று ஆனந்தக்கண்ணீர் பெருகநின்று விண்ணப்பஞ்செய்ய, பெரியநம்பியும் "*கலியுங் கெடுங் கண்டு கொண்மினென்று அன்று ஆழ்வாரருளிச் செய்த எதிர்காலச் செய்தி இன்று பலிக்கக் கண்டோம்; நல்லது; இனி பெருமாள் நியமனப்படியே இவ்விடத்துப் பணிகளெல்லாம் பாங்காகப் பார்த்தருளீர்" என்றருளிச் செய்ய, அன்று முதலாகவே "தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே" என்கிற வாழ்த்து அன்வர்த்தமாம்படி அனைத்தும் ஆராய்ந்தருளி நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்களெல்லாம் குறையற நடைபெறுமாறு சேமஞ் செய்தருளி வந்தார். அப்போது அகளங்க நாட்டாழ்வானும் ஸ்வாமிக்கு அணுக்கனான அடியவனாகிக் கைங்கரியங்களுக்குத் துணைபுரிந்து வந்தான்.

திருவரங்கத்தமுதனாரைத் திருத்திப் பணிகொள்ளுதல்

திருவரங்கத்தமுதனாரென்பவர் கோயில் கொத்திலுள்ளவர்கட்குத் தலைவரா யிருந்தவர். அவர் ஒரு நாள் உடையவரை வந்து பணிந்து 'பாவங்கள் கூடுபூரித்துக்கிடக்கிற

அடியேனைத் திருத்தியிவ்வஸ்மிக்கு சேஷமாக்கும்படி தேவரீர் திருவடிவாரத்திலுள்ளாரில் ஒருவர்க்கு நியமித்தருளவேணும்' என்று விண்ணப்பம் செய்ய, உடனே ஸ்வாமி ஆழ்வானையழைத்து அமுதனாரைக் காட்டி 'இவர் நம்முடைய வாழ்முதலான நம்பெருமாளுடைய ஸ்ரீ கார்யத்துக்குப் பரிவராயிருப்பவர்; இவரது தாழ்வுகளைப் பாராமல் இவரை அநுவர்த்தித்து அநுகூலராக்கி நம்பக்கலிலே கொண்டுவந்து சேரும்' என்று நியமித்தருள, ஆழ்வானும் ஆஜ்ஞாமாத்ரம் அவரை அநுவர்த்தித்துப் பரிபக்குவராக்கி உடையவர் திருவடிகளிலே கொண்டுவந்து காட்டிக்கொடுக்க உடையவரும் அவ்வமுதனாரை ஆழ்வான் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினர்.

அமுதனார் க்ருஹத்திலே ஏகாஹமமுதுசெய்ய ஆழ்வானைப் போகவிடுதல்

இப்படி அமுதனார் ஆழ்வான் திருவடிகளில் அந்தரங்கராய்க் கைங்கர்யஞ் செய்து வருகிறகாலத்திலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடியடைந்தாள். தசாஹமும் கடந்த பின்பு 'ஏகாஹத்துக்கு நியமித்தான ஸ்வாமியாக ஒருவரை நியமித்தருள வேணும்' என்று உடையவர் பக்கலிலே வந்து விண்ணப்பஞ் செய்தாரமுதனார். அப்போது உடையவர் ஆழ்வானை நோக்கி 'நீர் போய்வாரும்' என்ன, ஆழ்வானும் சிறிதும் முகம் கன்றாமல் ஸ்வாமியின் அந்தரங்கக் கருத்தை க்ரஹித்துக்கொண்டு எழுந்தருளி ஏகாஹத்திலே ஸ்தானம் வஹித்து அமுது செய்தருளினர். முடிவில் 'ஸகலம் ஸம்பூர்ணம்' என்று சொல்லவேண்டிய தருணத்தில் அமுதனாருடைய ஆதீனத்திலிருந்த நம்பெருமாள் ஸந்நிதித் திறவுகோலைப் பெற்றுக்கொண்டு பிறகு புக்திருப்தி சொல்லி ச்ராத்த பூர்த்திசெய்து, அந்தத் திறவுகோலை ஸ்வாமி திருவடிகளிலே கொணர்ந்து ஸமர்ப்பித்தார். அன்றுமுதல் * ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் * என்று கடல் சூழ்ந்த மண்ணுலகம் முற்றும் போற்றும்படி எம்பெருமானார் நம்பெருமாள் ஸந்நிதியின் கைங்கர்யங்களைப் பரிஷ்கரித்தருளினர் என்பர்கள்.

எம்பார் திருந்தின செய்தி கேட்டு மகிழ்தல்

முன்பே யாதவப்ரகாசருடைய கங்கா யாத்திரையிலே கோவிந்தபட்டர் [எம்பார்] விலகிப் போந்து சிவபக்தராகி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தையிழந்து காளஹஸ்தியிலே சிவபூஜாதுரந்தரராயிருக்கிறாரென்று சொன்னோம். அவரைத் திருத்திப் பணிகொள்ளும்படி ஸ்வாமி தம் மாதுலரான திருமலை நம்பியை வேண்டிக் கொண்டிருந்தார் முன்னமே. அவரும் திருமலையில் நின்றும் காளஹஸ்திக் கெழுந்தருளி கோவிந்தரைத் திருத்தப் பார்த்தவளவிலே இரண்டு பர்யாயங்களில் அபீஷ்டஸித்தியாகாமல் மூன்றாவது பர்யாயத்தில் மனோரதம் நிறைவேறி மகிழப் பெற்றபடியை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து ஸ்வாமி திருவடிகளிலே விண்ணப்பம் செய்ய, அதுகேட்டு ஸ்வாமி மிகவுகந்தருளினர். அந்தச் செய்தி வருமாறு:—

திருமலைநம்பி சில சிஷ்யர்களுடனே காளஹஸ்திக் கெழுந்தருளி, நாடோறும் கோவிந்தபட்டர் சிவபிரானுக்குப் பூப்பறிக்க வருமிடத்திற்கு அருகேயிருந்து, திருவாய்மொழியில் * திருமால்பரத்துவத்தை நன்குரைத்த * இன்னவிடு பதிகத்தைத் தொடங்கி வியாக்யானித்தருளாநின்றார்; கோவிந்தர் அங்கு ஒரு பாதிரி மரத்தின்மீதேறிப் பூப்பறியாநின்றவர், மூன்றாம்பாட்டளவும் பூப்பறிக்கை தவிர்ந்து கேட்டுக்கொண்டிருந்து நாலாம்பாட்டிலே * தேவனெம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே * என்றவிடத்திற்கு கங்கா ப்ரவாஹ நிர்விசேஷமாகவருளிச் செய்த வியாக்யானம் செவிபுகுந்தவாறே கோவிந்

நர் அந்த ப்ரஸுதியினின்றும் இடுக்கெனக் குதித்துக் கையிலிருந்த பூக்குடலையைச் சுழற்றி யெறிந்து, கழுத்திலிருந்த ருத்ராக்ஷத்தையும் கழற்றியெறிந்து, "பூவும் பூசனையும் தகுமே" என்ற சந்தைக்குச் சேர 'தகாது தகாது தகாது' என்று சொல்லிக்கொண்டே நம்பி திருவடிகளிலே வேரற்ற மரம் போலே விழுந்து,

'உபயவிபூதிநாதனிருக்க விரிதலையானை விரும்பினேனே!
புதுக்கணிப்புடைய புண்டரீகாக்ஷனிருக்கப் பொதிபறக்குங்கண்ணனைப் பூசித்தேனே!
கடல்மண்ணுண்ட கண்டனிருக்கக் கறைகொண்ட கண்டனைக் காமித்தேனே!
கல்லெடுத்துக் கன்மாரிகாத்த கற்பகமிருக்கக் கையார் கபாலியைக் காதலித்தேனே!
திருவிருந்த மார்பன் ஸ்ரீதரனிருக்கத் திருவில்லாத்தேவனைத் தொழுதுநின்றேனே!
பீதகவாடைப்பிரானிருக்கப் புலியுரியானைப் பின்தொடர்ந்தேனே!
சதிரானகங்கையடியானிருக்கச் சடைகாடுகொண்டவனைச் சுற்றி வலம் வந்தேனே!
பெருந்தழாய் வனமிருக்கப் பெருங்கையாற் பேய்க் கரைக்கு வார்த்தேனே!'

என்றிவை பலவும் சொல்லிப் புலம்பி 'இனி யாதிலும் இவ்வாத்மாவை உஜ்ஜீவிக்கவேணும்' என்று தெண்டனிட்டு எழுந்திராமலிருக்க, நம்பியும் முடியைத் தொடுத்து உடம்பைத் தடவிக்கொடுத்துக் குளிரப்பேசி எழுந்தருளாநிற்கையில் இச்செய்தியை அங்குள்ள சைவபக்தர்கள் கேள்விப்பட்டு வந்து இப்படிச் செய்யத் தகுமோவென்று நம்பியோடே போராடிப் பிறகு ஸமாதானமடைந்து திரும்பிப்போக, கோவிந்தபட்டரும் தம் வசத்திலிருந்த கருவூலத் திறவுகோல் இலச்சினை மோதிரம் முதலானவற்றைப் போகட்டு 'இனி உங்களுக்கும் நமக்கும் பணியில்லை' என்று விட்டுத்தொண்டு நம்பியோடே திருப்பதிக்கு வந்து சேர்ந்து ப்ராயச்சித்த பூர்வகமாக ஸம்ஸ்காரங்களைப் பெற்று திவ்யப்ரபந்தங்களையொழி அர்த்த பஞ்சக ஜ்ஞானத்தையும் பெற்றுத் தேவுமற்றறியாதே அவர் திருவடிகளே தஞ்சமென்றிருந்து போருகின்றார்—என்னுமிச் செய்தியை அந்த ஸ்ரீவைஷ்ணவர் விண்ணப்பஞ்செய்யக்கேட்டுப் பேரின்பவெள்ளத்தே மூழ்கி நின்றானுடையவர்.

உடையவருடைய பஞ்சாசார்ய பதாச்ரிதத்வம்

ஸ்வாமி ஐந்து ஆசாரியர்களை யடிபணிந்து அர்த்தவிசேஷங்களைக் கேட்டவராதலால் பஞ்சாசார்ய பதாச்ரிதரென்று ப்ரஸித்தராயிருப்பர். பெரிய நம்பி திருக்கோட்டியூர் நம்பி திருமாலையாண்டான் திருமலைநம்பி ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் ஆக இவ்வைவர் அவ்வாசிரியர்களாவர். பெரியநம்பி பஞ்சஸம்ஸ்காரமிட்டருளினவராதலால் ஸமாச்ரயணாசிரியர். திருக்கோட்டியூர் நம்பி ரஹஸ்யார்த்தங்கள் உபதேசித்துக் கொடுத்தவர். திருமாலையாண்டான் திருவாய்மொழிப் பொருள் உபதேசித்தவர். திருமலைநம்பி ஸ்ரீராமாயணார்த்தங்கள் ஸாதித்தவர். ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் திவ்யப்ரபந்தங்கள் ஸ்தோத்ரங்கள் சரமார்த்தங்கள் அளித்தவர். ஜீயர் பணித்த குருபரம்பரா ஸாரத்தில்,

"எம்பெருமானார் திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே ரஹஸ்யார்த்தங்கள் கேட்டருளினார்; திருமாலையாண்டான் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டருளினார். ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழி ஒழிந்த ப்ரபந்தங்களும் ஸ்தோத்ரங்களும் அருளிச்செயலும் சரமார்த்தங்களும் கேட்டருளினார். திருமலைநம்பி ஸ்ரீ பாதத்திலே ஸ்ரீமத்ராமாயணம் கேட்டருளினார்."

என்றுள்ளது இங்கே அநுஸந்திக்கத்தக்கது. ஆளவந்தார் ஸம்பந்தம் பெற்றவர் ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர்.

ஸ்வாமியும் திருக்கோட்டியூர் நம்பியும்

பெரியநம்பி பாஷ்யாதிகளோடே உடையவர்க்கு ரஹஸ்யார்த்தங்களை யருளிச் செய்து போருகையில், "திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே சில அர்த்த விசேஷங்களுண்டு; ஆளவந்தாருடைய விசேஷ கடாக்ஷத்திற்கு அவர் இலக்காயிருந்தபடியாலே அவரிடத்திலே விதிபோல நின்று இருக்கும்படியான விசேஷங்களையும் கேட்டு உய்யக் கடவீர்" என்று அருளிச் செய்ய, ஸ்வாமி அதுகேட்ட மாத்ரமுடையராய்த் திருக்கோட்டியூர்க்கெழுந்தருளி அவ்வூரார்களை நோக்கி 'நம்பி திருமாளிகை எங்கே?' என்ன; அவர்களும் 'அதோ காண்கிற வனம்' என்று காட்ட அவ்விடம் தொடங்கி நம்பி திருமாளிகையளவும் தெண்டன் ஸமர்ப்பித்துக் கொண்டே எழுந்தருளி நம்பி திருமாளிகை சேர்ந்தார்; அவ்வூரிலுள்ளார்க்கு அப்போது தான் நம்பியின் ப்ரபாவம் தெரியவந்தது. பிறகு ஸ்வாமி நம்பி திருவடிகளிலே தெண்டனிட்டு 'தேவரீர் அடியேனுக்கு ரஹஸ்யார்த்த விசேஷங்களை ப்ரஸாதித்தருள வேணும்' என்று கூப்பிய கையராய்ப் ப்ரார்த்திக்க, அவரும் இவருடைய அத்யவஸாய விசேஷமறியாமல் உபேக்ஷிக்கவாக நெஞ்செண்ணி வாளாவிருக்க, ஸ்வாமி சில நாள் காத்திருந்தும் மனோரதம் நிறைவேறப் பெறாதே மீண்டு கோயிலுக்கெழுந்தருளினார். இங்ஙனே பதினெட்டு பர்யாயம் கோயிலில் நின்றும் திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளியும் ப்ரார்த்தித்தும் பலம் கைகூடவில்லையாக, பிறகு ஸ்வாமியின் அளவு கடந்த ஆர்த்தியையும் அதிலோக நிச்சயத்தையும் தெரிந்து கொண்ட திருக்கோட்டியூர் நம்பிகள் எம்பெருமானுடைய நியமனத்தாலும் பெற்று இவர் அளவுக்கு ஸாதிக்கவேணுமென்று நெஞ்சில் கொண்டு ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் மூலமாகக் கோயிலுக்குச் சொல்லிவிட்டார்; 'தண்டும் பவித்ரமுமாகத் தாம் ஒருவருமே வந்து கேட்டுப் போகக்கடவர்' என்று சொல்லியனுப்பினார். அவரும் வந்து அப்படியே சொல்ல ஸ்வாமி முதலியாண்டானையும் கூரத்தாழ்வானையும் கூட்டிக்கொண்டு ஏக விசேஷமாக திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளி நம்பி திருவடிகளிலே தெண்டனிட்டு நிற்க, 'தனித்தன்றோ உம்மை நாம் வரச் சொன்னோம்; இவர்களைக் கூட்டி வந்தது என்?' என்று நம்பி கேட்க, 'தண்டும் பவித்ரமுமாக தேவரீர் வரச்சொல்லி யருளிற்று; இவர்களைத் தண்டு பவித்ரமென்றே கூட்டி வந்தேன்' என்று சொல்லி ஆண்டானைத் தண்டாகவும் ஆழ்வானைப் பவித்ரமாகவும் காட்டி நிற்க 'ஆகில் இவ்வர்த்தம் உம்மளவிலே நிற்கக் கடவது, மற்றொருவர்க்கும் சொல்லாதே கொள்ளும்' என்று நம்பிகள் நியமித்தருளி அங்ஙனே ரஹஸ்யமும் பெற்று சரமச்லோகத்தின் பரமரஹஸ்யார்த்த விசேஷங்களைப் பேரருள் கொண்டு உபதேசித்தருளினார்.

[இங்கே ஒரு ஆச்சர்யம். உடையவர்க்குத் திருக்கோட்டியூர் நம்பி உபதேசித்தது திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தின் பொருளென்று ஆறாயிரப்படி குரு பரம்பரா ப்ரபாவத்தில் காண்கிறது. மணவாள மாமுனிகள் முமுக்ஷுப்படி வியாக்யானத்தில் சரமச்லோக ப்ரகரணத்தின் அவதாரிகையில்—"இதினர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் எழுந்தருளிற்று. நம்பி தாமும் இதின் அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரிகளில்லாமையையும் பார்த்திறே இவருடைய ஆர்த்தியாதிசயத்தாலும் பலகால் நடந்த தளர்ப்பண்ணிச் சூளுறவு கொண்டு பரிவோபாயமங்கொண்டு அருமைப்படுத்தி அருளிச் செய்தருளிற்று......அதி

காரி துர்லபத்வத்தாலும் அர்த்தகௌரவத்தாலும் இத்தை வெளியிடாதே மறைத்துக் கொண்டு போந்தார்கள் எம்பெருமானார்க்கு முன்புள்ளார். ஸம்ஸாரிகளின் துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாதபடி க்ருபை கரை புரண்டிருக்கையாலே அர்த்தத்தின் சீர்மை பாராதே அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினார் எம்பெருமானார்" என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் ப்ரஸித்தம். ஆகவே சரமச்லோகார்த்தம் கேட்டருளிரென் பதே யுக்தமாயிருக்க வடுப்பது. முதலில் திருமந்த்ரார்த்தத்தை யருளிச்செய்து "மற் றொருகால் சரமச்லோகார்த்தத்தையுமருளிச் செய்ததாக குருபரம்பரா ப்ரபாவத்தில் காண்கையாலே அப்படியே சொல்லலாகாதோ வென்னில், மேலே எடுத்துக்காட்டியுள்ள மணவாள மாமுனிகளின் ஸ்ரீ ஸூக்திகளின் ஸ்வாரஸ்யத்தை நோக்குமளவில் சரமச்லோ கார்த்தம் கேட்கைக்காகவே ஸ்வாமி பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர்க்கு நடந்த தாகவும்; கேட்ட அர்த்தத்தை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு வெளியிட்டதாகவும் ஸ்பஷ்ட மாக விளங்குகையாலே மற்றைப்படி சொல்லுகை பொருத்தமாகத் தோன்றவில்லை ஸம்ப்ரதாயம் வல்ல பெரியார் நன்கு ஆராய்ந்து தெளிவது.]

திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்த விசேஷங்கள் கேட்டருளி ஸ்வாமி க்ருதார்த்தராய் அப்போதே மறுநாளில் அவ்வூர்ப் பெருமாள் ஸந்நிதியில் சாத் தாநுக்களான பல ஸ்ரீ வைஷ்ணவர்களை இலக்காக திருத்தி அப்பரமரஹஸ்யார்த் தத்தை உபதேசித்தருளினார்.

ஸ்வாமி எம்பெருமானார் என்கிற விருது பெறுதல்

திருக்கோட்டியூர் நம்பி, தம்மிடத்திலே சபதம் செய்ததைக் கடந்து ஸ்வாமி இங் ஙனே ஸந்நிதியில் அர்த்தங்களை வர்ஷித்து விட்டாரென்று உடனே கேள்விப் பட்டு அவரை யழைத்து 'இப்படியும் செய்யத் தகுமோ? எதற்காக இப்படி நியமோல்லங் கனம் செய்தீர்? இதன் பலன் என்னாகுமென்று அறிவீரோ?' என்று கேட்க, உடைய வரும் 'ஆசார்ய நியமனத்தை அதிலங்கனம் செய்த பாவியேனுக்கு நரகமேயாயிற்று பலன்; இங்ஙனமிருந்தும் அடியேன் அர்த்தங்களை வெளியிட்டது அடியேனொருவன் நரகம் புகுந் தாலும் இவ்வாத்ம கோடிகளெல்லாம் தேவரீர் திருவருளாலே உஜ்ஜீவித்துப் போவர்க ளென்கிற கருத்தினால்' என்று விண்ணப்பஞ் செய்ய, நம்பியும் இதைக்கேட்டு 'இப்படி பரமைகாந்தியே பேறான இது நமக்குக் கூடிற்றில்லையே! இவர்க்கு இது கூடினபடி என்னே! என்று மிக வியந்து உவந்து அவ்வுகப்பின் பரீவாஹரூபமாக எம்பெருமானார் என்று அவர்க்கு விருது சாத்தினார். எம்பெருமான் கருணைக்கடலென்று கேட்டிருந்தோ மத்தனை; அதை இவர் பக்கலிலே இன்று ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றோமாதலால் இவர்க்கு இந்த விருது ஏற்கும் என்று திருவோலக்கத்திலே விளம்பரமும் செய்தருளினார்.

'எமக்கெல்லார்க்கும் தலைவர்' என்கிற பொருளையுடைய எம்பெருமானா ரென்கிற சொல் ஸ்வாமிக்கே ஏற்குமது. பரம கருணை பொருந்தியவரே தலைவராயிருக்கத் தகுமா தலாலும் அந்தப் பரம கருணை இராமாநுசர் திறத்திலேயே ஸகலருமறிய ஸாக்ஷாத்க்ருத மாதலாலும்.

ஆழ்வானையும் ஆண்டானையும் பற்றின இதிஹாஸம்

[ஸ்வாமி திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளிலே சரம ச்லோகார்த்தம் கேட்ட போது ஆழ்வானுமாண்டானும் தண்டும் பவித்ரமுமாக உடனிருந்து கேட்டதாகவே சித்

அறிவிக்கப்பட்டது. இதனால் இவ்விடத்து வரவை ஸ்ரமப்பட்டு ப்ரயாஸத்தோடு பெற்று மாறுபடுதலால் அதில் ஏற்றமுடைமையாகவும் இங்கு வழங்கப்படுகிறது. ஸ்வாமி நன்றும் பவித்ரமுமான இவ்விருவகையும் மேலிருந்து நம்பிபக்கலிலே கேட்டது திருமந்த்ரப்பொருள் என்று வைத்துக்கொள்வது. பிறகு அவர்க்கு சரமச்லோகார்த்தத்தையும் உபதேசித்தருள வுந் திருவுள்ளங்கொண்ட நம்பிகள் 'எம்பெருமானாரே! உமக்கு இன்னமுமொரு சரம ரஹஸ்யார்த்தவிசேஷம் சொல்லுவதாக எண்ணியிருக்கிறோம்: இப்போது கோயிலுக்குச் சென்று பின்பு ஏகாக்ரமாக நீர் ஒருவருமே வாரும்' என்றருளிச்செய்ய, அப்படியே ஸ்வாமி அப்போது கோயிலேற வெழுந்தருளி மீண்டுமொருநாள் தனித்து நம்பிகளின் ஸ்ரீ பாதத்திலே சென்று தெண்டனிட்டு நிற்க, நம்பி இவர் கையைப் பிடித்துக்கொண்டுபோய் ஏகாந்தமாக மேல்தளத்திலேயேறிப் படிக்கதவை மூடி யெழுந்தருளியிருந்து ஒருவர்க்குஞ் சொல்லாதபடி தம் திருவடிகளைத் தொடுவித்துக் குருநவு கொண்டு நிர்ஹேதுக க்ருபையாலே பரம ரஹஸ்யமான சரமச்லோகப் பொருளை யருளிச் செய்து, இதை அநதிகாரிகளுக்கு இடாதபடி பேணிக்கொண்டு போரும் என்று நியமித்தருள, எம்பெருமானார், அடியேன் அப்படிப்பட்டவர்களுக்குச் சொல்லேன்; கூரத்தாழ்வானொருவர்க்குச் சொல்லாதிருக்க வொண்ணாதேயென்ன, 'அவர் ஒரு ஸம்வத்ஸர சுச்ரூஷை கொண்டு சொல்லும்' என்று நியமித்தருள, ஸ்வாமியும் விடைபெற்றுக் கோயிலேறவெழுந்தருளினார். அப்போது ஆழ்வான் அவர் திருவடிகளிலே தெண்டனிட்டு நிற்க, உடையவரும் வாராய் ஆழ்வான்! சரமச்லோக பரம ரஹஸ்யார்த்தமதை நம்பிகள் எனக்கு உபதேசித்தருளி இவ்வர்த்தவிசேஷத்தை ஒருவர்க்கும் வெளியிடாதபடி பேணிக் கொண்டிருக்குமாறு நியமித்தருளிய போது ஆழ்வானொருவர்க்கு மாத்திரம் அடியேன் இதனை வெளியிடாதிருக்க முடியாதேயென்று நான் விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வானுக்கு இவ்வர்த்தம் கேட்க அதிகார முண்டேயாகிலும் பல்லவையானும் அவருடைய அத்யவஸாயத்தைப் பரீக்ஷித்தறிந்து ஒரு ஸம்வத்ஸரம் சுச்ரூஷை கொண்டு சொல்லும் என்று நியமித்தருளினார் என்று ஆழ்வானை நோக்கி யருளிச் செய்ய, அதுகேட்ட ஆழ்வானும் "மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்" என்ற பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி ஒரு ஸம்வத்ஸரம் இவ்வுடலுக்கு நிலையுண்டோ இல்லையோவென்று வியாகுலப்பட்டு ஆலோசித்து இவ்வர்த்த விசேஷத்தைப் பெறுதலவது தரித்திருக்க முடியாத தன்மையாலே ஆசார்யனது திருமாளிகை வாசலிலே ஒருமாஸம் பட்டினி கிடக்கை ஸம்வத்ஸர சுச்ரூஷையோடொக்குமென்று சாஸ்த்ரமுண்டென்றறிந்து அங்ஙனமே மாஸோபவாஸம் கிடந்து அவ்வர்த்த விசேஷத்தைப் பெற்றார்.

பிறகு முதலியாண்டானும் வந்து தொழுது ப்ரார்த்திக்க, நான் ஆழ்வானொருவர்க்கே சொல்ல நியமனம் பெற்று வந்தேன். நீர் நம்பிபக்கலில் சென்று கேளுமென்று விடை கொடுத்தருள, அவரும் திருக்கோட்டியூரேறச் சென்று ஆறு மாஸம் காத்திருந்தும் அருள் பெறுமலிருந்து ஒரு நாள் கனக்க ப்ரார்த்திக்கையில் 'முக்குறும்பும் போனால் எம்பெருமானார் தாமே ப்ரஸாதிப்பர், போய்க்கேளும்' என்று விடை தந்தனுப்பிவிட, ஆண்டானும் கனத்த ஆர்த்தியோடே உடையவர் திருவடிகளிலே வந்து விழ, மிகவும் உகப்போடே ஆண்டானுக்கும் அர்த்தமுபதேசித்தருளினார்.

திருமாலையாண்டானிடத்துத் திருவாய்மொழி கேட்டல்

இவைகளுக்குப் பின்பு திருக்கோட்டியூர் நம்பி கோயிலுக்கெழுந்தருளித் தம்முடைய ஸப்ரஹ்மசாரியான திருமாலையாண்டானை எம்பெருமானாரிடத்தே கொண்டு நிறுத்தி இவர்

பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேளுமென்று ஸ்வாமிக்கு நியமித்துத் தாம் புறப்பட்டெழுந்தருளினார். அன்று தொடங்கித் திருவாய்மொழி காலக்ஷேபம் நடந்துவாரா நின்றது. ஆண்டான் ஆளவந்தார் திருவடிகளிலே கேட்ட அர்த்தங்களை யருளிச்செய்து வருகையில் எம்பெருமானார் ஆங்காங்குச் சில அர்த்தவிசேஷங்களையும் யோஜநா விசேஷங்களையும் பணித்துவர, இவர் விச்வாமித்ர ஸ்ருஷ்டியாக ஸ்வதந்த்ரமாய் ஏதோ சொல்லி வருகின்றாரென்று திருவுள்ளம் புண்பட்ட ஆண்டான் இடையிலே காலக்ஷேபத்தை நிறுத்திவிட, இதையறிந்த திருக்கோட்டியூர் நம்பி கோயிலேற வந்து ஆண்டானை விசாரிக்கையில் உடையவர் சொன்ன சில பாசுர பொருள்களை யெடுத்துரைத்து மனஸ்தாபஹேதுவை விளக்க, அப்போது நம்பி அருளிச்செய்தபடி—'இவ்வர்த்தங்களும் ஆளவந்தாரருளிச்செய்ய நாம் கேட்டிருக்கிறோம்; ஸாந்தீபனி பக்கலிலே க்ருஷ்ணன் வேதமோதினாப்போலே காணும் உம்மிடத்திலே உடையவர் திருவாய்மொழி கேட்கிறதும்; ஆளவந்தார் திருவுள்ளத்திலுள்ள அர்த்தமொழிய இவர்க்கு வேறொன்றும் தோன்றாது காணும். இவர்க்கு நீர் அஜ்ஞாத ஜ்ஞாபநம் பண்ணுவதாக நினையாதேயிருக்க ப்ராப்தம்' என்று.

பிறகு நம்பி அவ்வாண்டானையும் பெரிய நம்பியையும் கூட்டிக்கொண்டு உடையவர் மடத்தேற வெழுந்தருள, ஸ்வாமியும் உள்ளம் பூரித்துத் தொழுதெழ, பெரிய நம்பியும் திருக்கோட்டியூர் நம்பியும் திருமாலையாண்டானை நோக்கி 'திருவாய்மொழி விட்டவிடம் தொடங்கி நீரே பலகால் ஆவர்த்தித்தாகிலும் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டும்' என்று நியமித்தருள, அன்று தொடங்கி அப்படியே நடந்து போந்தது. "ஆளவந்தார்க்கு நான் ஏகலவ்யன் காணும்" என்று இடையிடையே ஆண்டானை நோக்கி உடையவர் அருளிச்செய்யும்படியாயிருந்தது. ஆளவந்தார் பக்கலில் கேளாத அர்த்தங்களும் இங்கே கேட்கப் பெற்றோமென்று ஆண்டானும் போர உகக்கும்படியாயிற்று.

ஸ்வாமி மாதுகரத்தை நிறுத்திக் கிடாம்பியாச்சானைப் பணிகொள்ளுதல்

"தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே" என்கிறபடியே ஸ்ரீரங்கநாத திவ்யாலய ஸாம்ராஜ்ய நிர்வாஹதுரந்தரராய் ஸ்வாமி வாழ்ந்தருளுங் காலத்திலே கோயில் கைங்கர்யபரர்கள் ஸதாசாரமில்லாமலிருக்கக்கண்டு அவர்களைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றி நெருக்கிக் கொண்டு போராநிற்கையில், அவர்களிலே சிலர் 'இவர் கோற்கீழே நம்மால் குடிவாழ முடியாது; இவரை மாய்ப்பதே நலம்' என்று கொண்டு ஸ்வாமி மாதுகரத்திற்கு எழுந்தருளுமிடத்து விஷங்கலந்த ப்ரஸாதமிடும்படி ப்ரபல நிர்ப்பந்தத்தாலே செய்விக்க, அப்படியே ஒருநாள் கிடைத்த ப்ரஸாதத்தின் நிலைமையறிந்து அதனைத் திருக்காவேரியிலே கரைத்துவிட்டு அன்று தொடங்கிச் சிலநாள் வரையில் உபவாஸமாகவே யெழுந்தருளியிருக்க, இதைத் திருக்கோட்டியூர் நம்பி கேட்டருளி அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளி, ஸ்வாமியினுடைய சிஷ்யவர்க்கங்களிலே கிடாம்பியாச்சானொருவரே திருமேனிக்கு மிகவும் பரிவரான சிறந்தவர் என்றறிந்து அவரைத் திருமடைப்பள்ளிக் கைங்கர்யத்திலே நியமித்து, ஸ்வாமியும் அன்று முதல் மடத்திலேயே ப்ரஸாத ஸ்வீகாரம் கொண்டருளும்படி நியமித்து மீண்டெழுந்தருளினார். அன்று முதலாக ஆச்சானே ஸ்வாமி திருவுள்ளத்திற்குப் பாங்கான பரிசாரகராய் இருந்துவந்தார். வேதாந்த தேசிகர் "எதிராசர் மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே" என்ற பாசுரத்திலும் "இதி யதி[illegible] பரிமள [illegible]" என்ற ச்லோகத்திலும் இவ்வர்த்தத்தை ஸூசிப்பிக்கருளினார்.

யஜ்ஞமூர்த்தியைத் திருத்தி அருளாளப்பெருமாளெம்பெருமானாராக ஆட்கொள்ளுதல்

யஜ்ஞமூர்த்தி யென்றுமொரு மாயாவாதி ஸந்யாஸி எம்பெருமானாருடைய வைபவங்களைக்கேட்டு அவரோடே தர்க்கித்து வெற்றிபெறவேணுமென்று விரும்பிக் கோயிலிலே ஸ்வாமி மடத்திலே வந்து வாதித்து 'நான் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் நீர் விடை கூறவேணும்; தப்புதலாக விடைபெற்றேனாகில் உமக்கு சிஷ்யனாகக்கடவேன்' என்று சொல்ல, ஸ்வாமியும் இசைந்தருள, பதினேழு நாள் வரையில் வெற்றி தோல்வி யின்றியே விவாதம் நடைபெற்றிருக்க, முடிவில் உத்தரமருளிச் செய்யவேண்டிய பொழுது ஸ்வாமிபக்கலிலே கொஞ்சம் விஷயம் தோன்றாமலிருக்கையில் 'நாளைக்கு ஆகட்டும்' என்று சொல்லி மடாலயத்துக்கு மீண்டருளினார். பிறகு ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் விசாருலப்பட்டு, தம் திருவாராதனமான பேரருளாளனைத் திருவடி விளக்கி அமுது செய்யப்பண்ணி 'அடியேன் தொடக்கி ஆசார்யர்களுடைய இத்தனை காலம் ஒரு குறையுமின்றியே விளங்கிவந்த இந்த தர்சனம் இன்று அடியேனால் பங்கமடையக்கடவதோ? இப்படியும் ஒரு லீலை கொண்டாடத் திருவுள்ளமாயிற்றோ?' என்று விண்ணப்பஞ்செய்து தாம் அமுது செய்யாமலே கண்வளர்ந்தருள, அன்றிரவு பெருமாள் கனவிலே எழுந்தருளிக் காட்டி யஜ்ஞமூர்த்தியின் வாதத்துக்குப் பரிஹாரமான சில அர்த்த விசேஷங்களை ஸ்புரிக்கச்செய்து மறைய, ஸ்வாமியும் நித்திரைதெளிந்தெழுந்து பரமானந்தத்துடனே நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ப்ரஸன்னவதனராய் விவாதகோஷ்டிக்கு எழுந்தருள, அவ்வளவிலேயே யஜ்ஞமூர்த்தி இன்று நமக்குத் தோல்வியே நிச்சயமென்று நிச்சயித்து அப்பொழுதே ஓடிவந்து ஸ்வாமி திருவடிகளிலே ஸாஷ்டாங்க ப்ரணாமம் பண்ணி நின்று 'அடியேனை அங்கீகரித்தருளவேணும்' என்று கைகூப்பிப் ப்ரார்த்திக்க, 'மேலே விவாத விசாரம் நடைபெறவேண்டியிருக்க இதுவென்?' என்று ஸ்வாமி கேட்க; அதற்கு யஜ்ஞமூர்த்தி 'ஸ்வாமிக்கு நேற்று பெரிய பெருமாள் ப்ரத்யக்ஷமானபின்பு தேவரீரென்ன பெருமானினின்றும் வாசியுண்டோ? இனி அடியேன் தேவரீர் ஸந்நிதியில் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்லப் ப்ரஸக்தியில்லை; இந்த ஆத்மா இதுவரையில் அர்த்தமற்றதாயிருந்தது; இனிமேல் அர்த்தமுடையதாகச் செய்தருளவேணும்" என்று வணங்க ப்ரார்த்தித்து ஸ்வாமியின் இசைவுபெற்று அப்பொழுதே ஏகதண்டத்தை முறித்தெறிந்து ப்ராயச்சித்தம் பூர்வமாய் த்ரிதண்டத்தையும் பஞ்சஸம்ஸ்காரங்களையும் பெற்று முன்போல் பெரிய முனிவராய் ஸந்யாஸாச்ரமத்தோடே ஆசார்யனுடைய ஸம்பந்தத்தை யேற்க விரும்பி ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் பேரருளாளனுடைய ஸந்நிதியாகவே இவர் ஆட்பட்டாரென்கிற படியால் உகப்பாலித்தபடி அருளாளப் பெருமாளெம்பெருமானார் என்று திருநாமம் சாத்தியருளினார். அவரும் ஆசார நியமத்துடன் அனுஷ்டித்துக்கொண்டு பெரிய பெருமாளை ஸேவித்து ஸம்ப்ரதாயத்தைக் காப்பாற்றி வந்தார்; அன்று முதலாக திருமலையப்பன் தொடங்கி ஞானஸாரம் ப்ரமேயஸாரம் முதலிய க்ரந்தங்களையும் செய்தருளினார்.

அக் காலத்திலே, அனந்தாழ்வான், எச்சான், தொண்டனூர்நம்பி, மருதூர் நம்பி என்னுமிவர்கள் எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேணுமென்று வர, ஸ்வாமி அவர்களை அருளாளப் பெருமாளெம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினார். அப்போது அவர் அந்த ஸமயத்தில் அவ்வடியார்களை நோக்கி "ஆசார்யரின் பெருநிலை யறியாமல் கட்டுண்டார் போலே ஸ்வாமி செய்தருளினாரென்றும், நீங்கள் ஸ்வாமி திருவடிகளை சரணமென்றிருங்கள்" என்று நியமித்தருளினார்.

அனந்தாழ்வான் திருமலையில் வழுவிலாவடிமைக்கு நியமனம் பெறுதல்.

எம்பெருமானார் பகவத் விஷய காலக்ஷேபம் நடத்தி வருகையில் * ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி யென்கிற திருவாய்மொழி நடவா நிற்க, கோஷ்டியில் திருமுன்பேயிருந்த சிஷ்யர்களை நோக்கி 'ஆழ்வார் * திருவேங்கடத் தெழில்கொள் சோதி யெந்தை தந்தை தந்தைக்கு ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம் * என்று பாரித்த குறைதீரத் திருவேங்கடமுடையான் பரிஸரத்திலே யிருந்து நித்ய கைங்கர்யம் பண்ண விருப்பமுடையார் ஆரேனுமுளரோ?' என்று வினவியருள, * குளிரருவி வேங்கடமாகையாலே எல்லாரும் குளிர்க்கு அஞ்சி விடை கூறாதிருக்க, அனந்தாழ்வான் எழுந்து 'அடியேனுக்கு நியமித்தருளவேணும்' என்றார். அது கேட்டு உகந்த எம்பெருமானார் 'நீரொருவரே ஆண் பிள்ளை' என்று பேரவும் கொண்டாடித் தழுவியருளி விடை கொடுத்தருளினார். அது முதலாக அனந்தாண் பிள்ளை என்று அவர்க்கு ப்ரஸித்தியாயிற்று. அன்றே அவர் திருமலைக்கு விடைகொண்டு திருவேங்கடமுடையானைத் திருவடி தொழுது திருநந்தவனஞ் செய்து அதற்கு இராமாநுசன் என்று திருநாமஞ் சாத்தி அனேக விலக்ஷண கைங்கர்யங்களை அத்புதமாக நடத்திக் கொண்டிருக்கையில் அதைக் கேள்வி கண்டு மலையேறவேணு மென்கிற திருவுள்ளம் எம்பெருமானார்க் குண்டாகப் பகவத் விஷய காலக்ஷேபத்தை விரைவாக நடத்திச் சாத்தியருளினார்.

உடையவர் திருமலையாத்திரையும் திருமலைநம்பியிடம் ஸ்ரீராமாயணங் கேட்டலும்

பெருமாள்கோயிலில் திருமலை முதலான சில திருப்பதிகளை ஸேவிக்கவரப் பெரிய பெருமாளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சிஷ்யவர்க்கங்களுடனே புறப்பட்ட எம்பெருமானார் வழியிடையே திருப்பதிகளையெல்லாம் தொழுதுகொண்டு திருமலையடிவாரத்தே திருப்பதியிற் சேர்ந்து, திருமலையை மிதித்தேறத் திருவுள்ளம் பற்றாமல் கீழேயிருந்து விடுவதாகத் திருவுள்ளம்பற்றி யிருக்கையில் அனந்தாழ்வான் முதலானோர் இதையறிந்து வந்து 'இப்படியும் திருவுள்ளம் பற்றலாமோ? நாங்களும் இனித் திருமலையைவிட்டு இங்கேதான் படுகாடு கிடக்கவேண்டும் போலும்' என்ன; அதுவே திருமலையப்பனுடைய நியமனமாகக்கொண்டு புறப்பட்டுத் திருமலையேறியருளிச் சந்நிதியிலே நேராக அப்பனைக் கண்களாரளவும் நின்று ஸேவித்து அனந்தாழ்வானுடைய திருப்பணிகளையும் கடாக்ஷித்து உள்ளம்பூரித்து "ஸத்புத்ரனால் பயன்பெற்றேன் வருகவென்று அவரை மிக வுகந்து மூன்று நாள் அவ்விடத்தில் அமுது செய்யாமலே எழுந்தருளியிருந்து விடைபெற்றுக்கொண்டு கீழேயிறங்கி மாதுலரான திருமலை நம்பி திருமாளிகையிலே ஒரு ஸம்வத்ஸரமிருந்து இதிஹாஸச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தின் விசேஷார்த்தங்களை அதிகரித்தார்.

உடையவர் எம்பாரைப் பெற்றுக்கொண்டு காஞ்சிபுரி வருதல்

உடையவர் ஸ்ரீராமாயண காலக்ஷேபம் முடித்துப் புறப்படுகையில் மாதுலரான திருமலை நம்பி உவப்பின் மிகுதியினால் இவர்க்கு ஏதாவது கொடுக்க வேணுமென்கிற பாரிப்புத்தோற்ற இருக்கையில் அதனை யறிந்த வுடையவர் 'ஸ்வாமிக்கு அடியேன் ஸமர்ப்பிக்க வேண்டியது போக, அடியேனுக்கு ஸ்வாமி கொடுப்பதென்று ஒன்றுண்டோ? அப்படி ஒன்று கொடுக்கத் திருவுள்ளமாகில் நம் கோவிந்தப் பெருமாளைத் தந்தருள வேணும்" என்று விண்ணப்பஞ் செய்ய; நம்பியும் அதற்கிசைந்து உடனே கோவிந்தப் பெருமாளை [எம்பாரை] அழைத்து 'கோவிந்தா! இனி நம்முடையவரை ஆதரித்துத்

திருப்பாவாக' என்று சொல்லி உதக தாரா பூர்வமாகக் கொடுத்தருளினர். பெரு உவகையுடன் உடையவர் அவரைக் கூட்டிக்கொண்டு திருக்கடிகை முதலான திவ்ய தேசங்களை ஸேவித்துக் கொண்டு கச்சிப் பேரருளாளன் திருவடிவாரத்தில் வந்து சேர்ந்தார்.

எம்பார் திரும்பவும் திருப்பதிக்குச் சென்று மீளுதல்

கோவிந்தப் பெருமாளுடன் கச்சியில் வாழ்ந்திருக்கையில், ஸ்வாசார்யரான நம்பியைப் பிரிந்த விலேசத்தினால் உடம்பு வெளுத்து முகம் உருவிழந்திருந்தார் கோவிந்தர். அது கண்ட உடையவர் அவருடைய கருத்தை யறிந்து 'கோவிந்தரே! திருப்பதிக்குச் சென்று நம்பியைச் சேவித்து வாரும்' என்று இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களைக் கூட்டி யனுப்பிவிட்டுத் தாம் திருக்கச்சி நம்பியுடனே பேரருளாளனை ஸேவித்துக் கொண்டிருந்தார். திருப்பதிக்குச் சென்ற எம்பார் அங்கும் திருமலை நம்பி திருமாளிகை வாசலிலே தெண்டன் ஸமர்ப்பித்து நிற்க, அங்குள்ளார் அவரைக் கண்டு உள்ளே சென்று நம்பிக்கு அறிவிக்க, அவரும் திருவுள்ளம் கலங்கி 'பித்தனைப் போகச் சொல்லுங்கோள்' என்ன; 'இத்தனை தூரம் சிரமப்பட்டு வந்தவரை யழைத்து ஸேவையும் ஸ்ரீபாத தீர்த்தமும் தளிகை ப்ரஸாதமும் தந்தருள வேண்டாவோ?' என்று தேவிகள் சொல்லவும் 'விற்ற பசுவுக்குப் புல்லிடுவாருண்டோ?' என்று சொல்லி விமுகராயேயிருந்து விட்டார் நம்பிகள். இப்படியாகவே கோவிந்தப் பெருமாள் அங்கு வாசலிலே தெண்டனிட்டு அந்த ஸ்ரீவைஷ்ணவர்களிருவரோடு கூடப் பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருந்த உடையவர் ஸந்நிதியில் எல்லாருமாய்த் தெண்டனிட்டுச் சென்று சேர்ந்தனர். கோவிந்தப் பெருமாள் வைராக்யம் முற்றி ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து ஆசார்யருடைய நாமதேயமாக எம்பார் என்று திருநாமம் பெற்று ஸதா வேதாந்த சிந்தன பரிச்ரமத்திலே நிலை நின்று வாழா நின்றார்.

ஸ்ரீ பாஷ்ய மருளிச்செய்ய முயலுதல்

எம்பெருமானார் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் செய்தருளி ஆளவந்தார் திருவுள்ளக் குறையை நீக்கக் கருதி அதற்காக பகவத் போதாயன மஹர்ஷியின் வ்ருத்தி க்ரந்தத்தைக் கடாக்ஷிக்கத் திருவுள்ளம்பற்றி அந்த ஸ்ரீ கோசம் காச்மீர மண்டலத்தில் சாரதாபீடத்திலுள்ளது தெரிந்து கொண்டு ஆழ்வான் முதலானோரையும் கூட்டிக்கொண்டு யாத்திரை யடைவிலே அவ்விடம் எழுந்தருளித் தம்முடைய வைபவங்களைக் காட்டி வசீகரிக்கப்பட்ட ஸரஸ்வதி பண்டாரத் தலைவரிடத்தினின்றும் அந்த போதாயன வ்ருத்திக் க்ரந்தத்தை வாங்கி அங்கேயே யிருந்து கடாக்ஷித்துக்கொண்டிருந்தார். மஹாமேதாவியான ஆழ்வானும் தாம் ஒரு பக்கத்தில் வீற்றிருந்து இரண்டாவது அத்யாயம் முதலாக மேலுள்ள பகுதியை யெல்லாம் கடாக்ஷித்து நெஞ்சில் தேக்கிக் கொண்டார். உடையவர் முதலத்யாயம் கடாக்ஷித்துத் தலைக்கட்டினவுடனே அங்குள்ள புறமதத்து வித்வான்களின் துர்ப்போதனையினாலே மனம் மாறின ஸரஸ்வதீ பண்டாரத் தலைவர் அந்த ஸ்ரீ கோசத்தை திரும்பப் பிடுங்கி வாங்கி உள்ளே வைத்திட, 'குறையும் காணப் பெற்றிலோமே!' என்று உடையவர் சிந்தித்திருக்க, அது கண்ட ஆழ்வான் மேற்பகுதிகளைத் தாம் பார்த்துத் தரித்துக் கொண்டிருக்கிறபடியை விஜ்ஞாபித்து ஸ்வாமியைத் தேற்றினார். பிறகு பயணகதியிலே தென்னரங்கத்திருப்பதி சேர்ந்து ஆழ்வானை உசாத் துணையாகக் கொண்டு ஸ்ரீ பாஷ்யமிட்டருளித் தலைக்கட்டினார். இதற்கு ஸங்க்ரஹமாக வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம் என்னுமிரண்டு க்ரந்தங்களையுமருளிச் செய்தார்.

சோழராஜனுடைய உபப்லவத்திற்கு அஞ்சி ஸ்வாமி மேல்நாட்டுக்கெழுந்தருளல்

ஆழ்வான் உடையவர்க்கு உசாத் துணையாயிருந்து தர்சந நிர்வாஹம் பண்ணி வருகிற காலத்திலே, ராஜேந்த்ர சோழ புரத்தில் அரசாண்டு வந்த க்ருமிகண்ட சோழ ராஜன் துஷ்ட சைவனாகையாலே கள்ளப் பொய்ந் நூல்களை மெய்ந் நூலாகக் கொண்டு நாலூரான் தன் புரோஹிதனுமாக நாட்டிலுள்ள வித்வான்களை யெல்லாம் திரட்டி "சிவாத் பரதரம் நாஸ்தி" என்று எழுதிடச் சொல்லி நிர்ப்பந்திக்க, சிலர் அறிவின்மையால் அஞ்சியும் சிலர் பொருட்டும் பூமிக்குமாசைப்பட்டும் அப்படியே யெழுதிட்டார்கள். அப்போது அவ்வரசனிடத்துச் சிறிது மேன்மை பெற்றிருந்த நாலூரான் என்னுமொரு வைஷ்ணவன் அவ்வரசனை நோக்கி "எம்பெருமானுசன் எழுதிட்டாலன்றோ எழுதிட்டதாகும்; மற்றவர்கள் இட்டாலென்ன? இடாவிடிலென்ன?" என்று கூற, அது கேட்ட அரசனும் அப்போதே இராமானுசனை யழைத்து வரும்படி ஆள்களை யனுப்ப, அவர்களும் உடையவர் மடத்துக்குச் சென்ற வளவிலே இந்தச் செய்தியை யுணர்ந்து ஆழ்வான் 'ஸ்வாமி ராஜ ஸபைக்கு எழுந்தருள்வாராகில் அவர்க்கு அங்கு ஏதாவது அபாயம் விளையக்கூடும்; உலகுக்கெல்லாம் உயிரான அவரைக் காட்டிக் கொடுக்கத் தகாது: நாமே அவருடைய கோலம் பூண்டு ஸபைக்குச் செல்வோம்; இதில் ஏதாவது நேர்ந்தாலும் நம்மோடே போகட்டும்' என்று கருதி, அப்போது எம்பெருமானார் நீராட்டத்திற்கெழுந்தருளியிருப்பதறிந்து அவருடைய காஷாயத்தையும் த்ரிதண்டத்தையும் தரித்துக்கொண்டு அந்த ராஜ புருஷர்களுடனே போகப் புறப்படும்போது பெரிய நம்பியும் சில முதலிகளும் தாமுங் கூட வருவதாகப் புறப்பட, அவர்களுடன் ஆழ்வான் ராஜ ஸபைக்கெழுந்தருளினர். பிறகு உடையவர் நீராட்டஞ் செய்தெழுந்தருளி த்ரிதண்ட காஷாயாதிகளைத் தேடின வளவிலே 'கூரத்தாழ்வான் தரித்துக் கொண்டு ராஜ புருஷர்களுடனே யெழுந்தருளினார்' என்று முதலியாண்டான் விண்ணப்பஞ் செய்ய, ஆகில் அவருடைய வெள்ளையைத் தாரும்கள் என்று ஆழ்வானுடைய திருப்பரிவட்டத்தை வாங்கித் தாம் சாத்திக் கொண்டு ஆழ்வானுக்கும் பெரிய நம்பிக்கும் என்ன நேருமோவென்று சிந்தித்துக் கவன்றிருக்க, இனி ஸ்வாமி இவ்விடத்திலெழுந்தருளியிருக்கை உசிதமன்று என்று அனைவரும் விஜ்ஞாபிக்க, உடையவரும் உடனே புறப்பட்டெழுந்தருளித் திருநாராயணபுரம் சேர்ந்தார்.

[எம்பெருமானார் காலத்திலேயே யெழுந்தருளியிருந்த ப்ராமாணிக பண்டித சிகாமணியான கருடவாஹந பண்டிதர் செய்தருளின திவ்யஸூரி சரிதத்தில் பதினெட்டாம் ஸர்க்கத்திலும், எம்பெருமானார்க்கு அந்தரங்க சேவகராயிருந்த வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவத்தின் நாற்பத்தைந்தாம் ச்லோகத்திலும், இக்கதை விளக்கமாக வுரைக்கப்பட்டிருந்தாலும் இதில் யாதொரு விப்ரதிபத்தியுண்டாகக் காரணமில்லை. உடையவர்க்குத் தெரியாமலே ஆழ்வான் ஸ்வபுத்தியாலே த்ரிதண்ட காஷாயங்களைத் தரித்து ஸபைக்கெழுந்தருளினதாகவும், சோழ ராஜனிடத்தில் நின்றும் ஆட்கள் வந்தவுடனே எம்பெருமானார் ஆழ்வான் ஆண்டான் முதலானோர் பலரும் கூடிக் கலந்து பேசி உடையவர் வெள்ளை சாத்திக்கொண்டு வெளிப்போக வேண்டியதென்றும் ஆழ்வான் யதிராஜ வேஷம்பூண்டு ஸபைக்கெழுந்தருள வேண்டியதென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டு அப்படி நடந்ததாகவும்—இங்ஙனே இரண்டு வகையாக நூல்களிற் காணப்படுவதுண்டு. இவ்விரண்டு வகையும் ஸம்பாவிதமே யாகையால் இவற்றில் விப்ரதிபத்தி கொள்ளலாகாது.]

ராஜ ஸபையில் நடந்த செய்திகளும் பின்னடந்த செய்திகளும்

ஆழ்வானும் பெரியநம்பியும் சோழராஜன் ஸதஸ்ஸிலே யெழுந்தருளின பிறகு அங்கு விசேஷமாக சாஸ்த்ர விசாரங்கள் நடைபெற்று 'சிவாத்பரதரம் நாஸ்தி' என்ற ராஜ வாக்யத்தின்மீது இகழ்ந்துரைக்கப்பட, சோழன் கடுஞ்சினத்தனாய் 'இவ்விருவருடைய கண்களையும் தோண்டி விடுங்கள்' என்று சேவகர்கட்குக் கட்டளையிட, ஆழ்வான் சோழனைக் குறித்து 'மஹாபாதகியாகையால் உன்னைப் பார்த்த கண்கள் எனக்கு ஆகாது' என்று சொல்லித் தாமே தமது திருவுகிர்களாலே பிதுக்கிக் கண்ணை வாங்கியெறிய, பின்பு ராஜ சேவகர்கள் பெரியநம்பியைப் பிடித்துக் கொண்டுபோய்ச் சோழன் சொற்படி செய்து ராஜ்யத்தில் நின்றும் புறப்படவிட, ஆழ்வான் 'தர்சநத்துக்காக தர்சனம் கொடுக்கப்பெற்றோமே' என்று மகிழ்ந்திருக்க, பெரியநம்பி விருத்தராகையாலே அவ்வேதனை பொறுக்கமாட்டாமல் அங்கேயொரு கொல்லைத் தலைமாட்டிலே 'ஆழ்வான் மடியிலே திருமுடியும் தம் திருமகளான அத்துழாய் மடியிலே திருவடிகளுமாய் இருந்து கண்வளர்ந்தருளி ஆளவந்தார் திருவடிகளை த்யானித்துக் கொண்டு அங்கே திருநாட்டுக்கெழுந்தருளினார். பின்பு ஸ்ரீ பராங்குசபுரமென்னும் அக்ரஹாரத்தில் நின்றும் வந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரியநம்பியை அங்கே ஸம்ஸ்கரித்துத் திருப்பள்ளிப்படுத்தி ஆழ்வானை யெழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோய்த் தங்கள் சாரிகை விருத்தித் திருக்கண் வேதனை தீருமாறு சில காலம் உபசரித்துப் பிறகு திருவரங்கம் பெரிய கோயிலிலே கொண்டு சேர்த்தார்கள். தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்த எம்பெருமானாரைப் பிரிந்து அங்கே வாழ இல்லாமல் கோயில் வாஸத்தை விட்டுவிட்டுத் திருமாலிருஞ்சோலையில் வாஸத்தை விரும்பி பயணமாகப் புறப்பட்டெழுந்தருளினார். வழியிடையே யெழுந்தருளும்போது தம்முடைய மனத்துயரங்கள் நினைவுக்கு வாராதிருக்கும்படி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை நினைந்து நெஞ்சு களித்திருக்கக் கருதி ஸ்ரீவைகுண்டஸ்தவம் அதிமாநுஷஸ்தவம் என்ற அற்புதமான இரண்டு ஸ்தோத்ரங்களை யருளிச் செய்துகொண்டே திருமாலிருஞ்சோலைக் கெழுந்தருளி அங்கே பல வாண்டுகளெழுந்தருளியிருந்து ஸுந்தரபாஹு ஸ்தவத்தையும் அருளிச்செய்தார். அவ்வளவிலே அந்த மஹாபாதகியான சோழன் கழுத்திலே புண்ணாகிப் புழுத்து மாண்டானென்ற செய்தி கேள்விப்பட்டு ஆழ்வான் அழகர் ஸந்நிதியிலே விடைபெற்று மீண்டும் கோயிலே யெழுந்தருளினார்.

எம்பெருமானார் மேல்நாட்டில் நின்று கோயிலுக்கெழுந்தருளி ஆழ்வானை உசாவுதல்

சோழனுடைய உபத்ரவங்களுக்கு அஞ்சி மேல்நாட்டுக் கெழுந்தருளியிருந்த எம்பெருமானார், கோயிலில் நின்றும் அங்கு வந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவராலே சோழராஜ ஸதஸ்ஸில் ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் நேர்ந்த ஆபத்தைக் கேள்விப்பட்டுச் சாலவும் திருவுள்ளம் நொந்து 'ஆழ்வானுமினும் உயிர்வாழ்ந்திருக்கப் பெற்றோமே' என்று திருவுள்ளம் தேறி, அப்போது தம்மிடத்தில் கைங்கரியம் செய்துகொண்டிருந்த மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டானை 'மிகவும் விரைவாகக் கோயிலுக்குச் சென்று ஆழ்வானையும் ஆராய்ந்து அங்குள்ள விசேஷங்களையும் அறிந்து வாரும்' என்று நியமித்தருள, அவரும் மிக விரைந்து கோயிலுக்கு வந்து சோழன் புழுத்து மாண்ட செய்தியுட்பட எல்லாவற்றையும் ஆழ்வான் ஸந்நிதியிலே அறிந்து கொண்டு மீண்டு திருநாராயணபுரம் போய் எம்பெருமானார் திருவடிகளிலே இவற்றை விண்ணப்பஞ் செய்ய, அதுகேட்டு அவர் பெருமகிழ்ச்சி கொண்டு உடனே அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக் கெழுந்தருளி

முதலிகளுடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருள, ஆழ்வானும் எதிரே யெழுந்தருளி உடையவர் திருவடிவாரத்திலே வேரற்ற மரம்போலே விழுந்து ஸேவித்துத் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானை யெடுத்தணைத்துக் கொண்டு சோக வேகத்தாலே ஒரு வார்த்தையும் அருளிச் செய்யமாட்டாமல் உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து 'வாரீர் ஆழ்வான்! இத்தர்சனத்துக்கு த்ருஷ்டிபூதரான உமக்கு இப்படி கண்போவதே! இது என்னுடைய தீவினையின் பயனன்றோ?' என்றிப்படி பலவாறாக அருளிச்செய்து ஆழ்வானைத் தேற்றி, பண்டுபோலே திருவரங்கச்செல்வத்தை வளர்த்துக் கொண்டு வந்தார்.

திருமலையப்பனுக்குத் திருவாழி திருச்சங்கு அளித்தது.

பண்டொரு காலத்தில் திருவேங்கடமுடையான் தன் பக்கல் பரமபக்த சிரோமணியாயிருந்த தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ஒரு க்ஷணார்த்தமாகத் தன் திருவாழி திருச்சங்குகளைத் தந்தருளி, இப்படி ஆச்ரித பக்ஷபாதத்தாலே தனது திவ்யாயுதங்களையும் தந்து உபகரிக்கும் ஔதார்யகுணம் உலகில் பரவுவதற்காகச் சிறிதுகாலம் ஸர்வாயுத சூன்யனாகவே இருந்திட்டான். அக்காலம் கலியின் கொடுமையால் வர்ணாச்ரம தர்மங்கள் குலைந்து தேவாலயங்களும் சீர்கெட்டுப் பாஷண்டிகள் தலையெடுக்கும் காலமாயிருந்தது. திருமலையில் அர்ச்சகர்களாயிருந்த வைகாநஸர்கள் எம்பெருமானுக்கு முறைப்படி உபசாரங்கள் பண்ணாமல் அச்ரத்தை காட்டியிருந்த காரணத்தினால் தேசாதிபதியான யாதவராஜனால் அடிக்கடி தண்டிக்கப்பட்டு அங்கு வாழ்வில்லாமல் வெளிநாடு சென்றனர்; வ்ருத்தர்களாயிருந்த அர்ச்சகர்கள் இங்ஙனம் ஒருவரொருவராக வெளியேற, ப்ரபலர்களான ஸ்ரீவைஷ்ணவர்களும் இங்கு இலராக, விரல் நுழைக்க இடம் தேடிக்கொண்டிருந்த சைவர்கள் சிலர் இதுவே நல்ல சமயமென்று கொண்டு அந்த யாதவமன்னன் பக்கல்சென்று அவனுடைய ப்ரீதியைச் சிறிது சிறிதாக ஸம்பாதித்து ஒருநாள் அவனிடம் சொன்னார்கள். திருமலையில் ஸ்வாமிபுஷ்கரிணியின் தென்கரையில் திகழும் தேவன் முருகக் கடவுள்தான்; அவர்க்குக் குமாரஸ்வாமியென்னும் பெயர் வழங்குவதுண்டாகையால் அந்த நாமைக தேசத்தைவிட்டு ஸ்வாமி புஷ்கரிணியென்று அத்தடாகம் வழங்கப்பெற்றது, ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் கூறவந்த வாமந புராணப் பகுதியில் இரண்டாவது அத்யாயத்தில் ஸுப்ரஹ்மண்யன் வேங்கடமலையில் ஒரு குளத்தின் கரையில் தவம் புரிந்து கொண்டிருந்தானென்று சொல்லப்பட்டிருத்தலாலும் அப்பெருமான் முருகக்கடவுளே. அவர்க்கு அஸாதாரண ஆயுதங்களான பாசமும் அங்குசமும் தவசிக்கு உரியவை யல்லாமையால் தரிக்கப்படவில்லை. இன்னும் பல ஹேதுக்களாலும் அம்மலை சைவக்ஷேத்ரமேயாம். இப்போது தான் சிறிது காலமாகச் சில வைஷ்ணவர்கள் கூடிப் புராணார்த்தங்களை மனம் போனபடி சொல்லி அப்பெருமான் விஷ்ணுவேயென்றுரைத்து சாதனை ஏற்படுத்திக்கொண்டு சில வைஷ்ணவ விக்ரஹங்களையும் கோவிலில் ஸ்தாபித்து உத்ஸவங்களை நடத்தத் தொடங்கினார்கள். உண்மையில் இது சைவக்ஷேத்ரமாகையால் சைவ விதிப்படி இனி இக்கோயிற் காரியங்கள் நடைபெறுமாறு மஹாராஜர் செங்கோல் செலுத்தவேணும்—என்றார்கள்.

இதைக்கேட்ட அவ்வரசன் இந்த சைவர்கள் சொல்லுவதெல்லாம் அநுபவ விருத்தமாயிருக்கின்றதே; ஆராயாமல் நாம் எதையும் ஸாஹஸமாகச் செய்துவிடக்கூடாது; தக்கபடி ஆராய்ச்சி செய்யவேணும் என்றெண்ணியிருந்தான். அக்காலத்தில் அங்கு விபுணர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாருமில்லாமையால் ஸாமாந்யராயிருந்த சிலர் திருவரங்கம் பெரிய கோயிலில் மிக்க சிஷ்யஸம்பத்துடனே யெழுந்தருளியிருந்த எம்பெருமானாருக்கு

இச்செய்தியை அறிவித்தனர். இச்செய்தியையறிந்த உடையவர் கடுகடையாகத் திருப்பதிக்கெழுந்தருளி ஸம்ப்ரதாயக்ரமத்துடனிருந்த அரசனை நோக்கி, "சைவர்களால் உனது நெஞ்சில் உண்டாக்கப்பட்ட சங்காகலங்கத்தை நீக்கி உன்னைத் தெளிவிப்பதற்காகவே வெகு தூரத்தில் நின்றும் இங்கே வந்தோம்; உனக்குப் பரிபூர்ண த்ருப்தி உண்டாகும்படி நாம் தெளிவாகச் சொல்லவல்லோம்; கேளாய் கொற்றவனே!" என்று தொடங்கினவாறே அவ்வரசன், முன்பு கொக்கரித்த சைவர்களையும் வரவழைத்துப் பெரிய ஸபையாக்கி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு வாதயுத்தம் நடக்குமாறு நியமித்துத் தான் நடுஸ்தனாயிருக்க, வெகு காலம்வரை வாதப்போர் நடக்கையில் சைவர்களுடைய துர்வாதங்களை யெல்லாம் எம்பெருமானார் ப்ராமாணிகமாகக் கண்டித்து வெற்றிபெற்று விளங்கினார். [இந்த வாதப்ரதிவாதங்களின் விவரணம் திருமலையாழ்வார் பணித்த ஸ்ரீ வேங்கடாசல இதிஹாஸ மாலையில் அறுபத்தாறாம் பக்கம் முதலாகப் பெரிய வாக்யார்த்த ஸரணியில் குறிப்பிடப்பட்டுள்ளன; அங்கே கண்டு கொள்வது.) எம்பெருமானாருடைய அற்புதமான உபபாதநங்களைக் கேட்ட மன்னவன் கலக்கம் நீங்கி மிக்க தெளிவுபெற்று, திருவேங்கடமலை நின்றுறையுந்தெய்வமென்றும் அங்குள்ள பெருமான் திருமாலே யென்றும் அறுதியிட்டு "இந்த ஸ்ரீராமாநுஜர் ஸாமாந்ய புருஷரல்லர்; அவதார புருஷரேயாவர்; இவர் மனம் வைத்தால் அதிமாநுஷமான காரியங்களையும் செய்து ஸர்வஜனங்களுக்கும் திண்ணிய நம்பிக்கை உண்டாகும்படி செய்யவும் வல்லர்; அங்ஙன் செய்ய இவரை வேண்டிக் கொள்வோம்" என்றெண்ணி, "ஸ்வாமின்! யதிசேகரரே!! தேவரீர் நிரூபித்துக்காட்டின சாஸ்த்ரார்த்தங்களைக் கேட்டுப் பரமஸந்தோஷமடைந்தேன்; திருமாலே திருமலைக்கு இறைவர் என்று நன்கு துணிந்தேன்; ஸம்சயமேதுமில்லாமல் மிக்கத் தெளிவுபெற்றேன்; ஆயினும், மஹாபுருஷராயும் அதிமாநுஷசேஷ்டிதராயுமிருக்கின்ற தேவரீர், பண்டிதரோடு பாமரரோடு வாசியற எல்லாரும் தெளியுமாறு அமோகமோருபாயம் ஏதாவது செய்தருளக்கூடுமேல் நன்று" என்று கைகூப்பி விண்ணப்பஞ் செய்ய, அதனைக்கேட்ட எம்பெருமானார் புராணப் பொருள்களைப் பலவாறுக எடுத்து உபந்யஸித்துக் காட்டினவளவிலும் இவ்வரசனுடைய மனம் பரிபூர்ண த்ருப்தியை அடையவில்லை போலும்; அதிமாநுஷமானதொரு கார்யஞ்செய்து காட்டவேணுமென்கிறான்; ஆகுக; இங்ஙனே செய்வோம்;—ப்ரஹ்மாண்ட புராணத்தில் பதினேழாவது அத்யாயத்தில் எம்பெருமான்தானே சேஷிவாய் திறந்து ப்ரதிஜ்ஞை செய்தருளியிருக்கிறபடியே கலியுகத்தில் ஸ்வாமி ஸந்நிதியிலேப்போல் சங்கு சக்கரங்களையும் பக்தர்கள் செய்து ஸமர்ப்பித்தால் ஸ்வீகரித்தே திருவுள்ளமானால், நாம் சேர்த்து ஸமர்ப்பிக்கும் திவ்யாயுதங்களையும் எம்பெருமான் ஸ்வீகரிக்கக்கூடுமே; ப்ரார்த்தித்தாலும் ஸ்வீகரிக்கச் செய்திடுவோம்; இல்லையேல் மஹத்தான அனர்த்தம் நேரிடும் போலிருக்கிறதே! இவ்வழியே செயலானால்தான் அனைவரும் விச்வஸிக்கவேணும் என்று திருவுள்ளத்திற் சிந்தித்து, அப்படியே செய்திடுவதென்று அறுதியிட்டு, மன்னவனை நோக்கி, "நான் எம்பெருமானுக்கு அஸாதாரண சிஹ்னங்களான திருவாழி திருச் சங்குகளைச் செய்வித்துக் கொணர்ந்து பகவத் ஸந்நிதியிலே வைத்திடுகிறேன்; இந்த சைவர்கள் தாமும் தங்கள் தெய்வத்துக்குரிய பாசம் அங்குசம் முதலிய ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து வைத்திடுக; எந்த ஆயுதங்களை எம்பெருமான் எடுத்து அணிந்து கொள்கிறானோ பார்ப்போம்" என்றருளிச் செய்தார்.

இதைக்கேட்ட அரசன் ஸம்ப்ரீதிகொண்டு 'இப்படியாகில் இது சிறந்த உபாயமே; பிறகு ஒருவர்க்கும் ஆக்ஷேபம் இருக்கப் ப்ரஸக்தியில்லையன்றோ; நல்லது; அப்படியே இருவரும்பினரும் செய்யக்கடவது' என்று சொல்ல; உடையவர் முதலானாரும் தங்கள் தங்கள் தெய்வத்தின் அஸாதாரண ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து ஒருநாள் அவ்வ

னுடனே திருமலைக்குவந்து இரவில் திருவேங்கடமுடையானுடைய ஸந்நிதி கர்ப்பக்ருஹத்தினுள்ளே அவற்றை வைத்துவிட்டுக் கதவுகளைப் பூட்டி மன்னவன் கையால் அரக்கிலச்சினை செய்வித்துக் காவலரும் கோயிலைச் சுற்றிக் காவலிருந்துகொண்டு தங்களுக்கே வெற்றியுண்டாகும்படி தங்கள் தங்கள் தெய்வத்தைச் சிந்தைசெய்து கொண்டிருந்தனர்.

எம்பெருமானார் தமது யோகமஹிமையினால் உள்ளேபுக்கு எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து "பரமபுருஷ! முன்பு நீ ஸ்வயமோலைசெய்து கொடுத்த ப்ரதிஜ்ஞையின் படியே உன்னுடைய அஸாதாரணவிக்ரஹங்களைப் பேணி அணிந்துகொண்டு அடியார்களைக் காத்தருளவேணும்" என்று ப்ரார்த்தித்து அப்படியே திருவாழி திருச்சங்குகளை அணிந்து தோன்றுவித்து க்ருதக்ருத்யராயினர். பிறகு பொழுது விடிந்தவாறே யாதவ மன்னவன் க்ர்யாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு உபயவாதிகளுடனும் ஸந்நிதிக்குச் சென்று திருக்காப்பு நீக்குவித்துப் பெருமானை ஸேவிக்குமளவில் பாச அங்குசாதி ஆயுதங்களை அப்பால் தள்ளிவிட்டுத் திருவாழி திருச்சங்குகளை யணிந்துகொண்டு பரமபோக்யமாக ஸேவை ஸாதிக்கக்கண்டு மிகவும் ஆச்சர்யப்பட்டு எம்பெருமானார் பக்கல் அளவுகடந்த ப்ரதிபத்தியை வஹித்து அவரையே சரணமடைந்து க்ருதார்த்தனாகி, குத்ஸிதவாதம் பண்ணிக் கோசரித்துக் கிடந்த சைவர்களையும் நிராகரித்து ராஜ்யத்தில் நின்றும் துரத்திவிட்டு இனிது வாழ்ந்தான்.

எம்பெருமானாரும் சிறப்புடனே சிஷ்ய வர்க்கங்களுடன் தென்னரங்கம் சென்று சேர்ந்து ஐஸ்வர்யம் மன்னி வீற்றிருந்து "விண்ணுமாள்வர் மண்ணூடே" என்றபடியே நித்ய விபூதிச் செல்வத்தையும் இங்கிருந்தே ஆண்டுகொண்டு "தமிழ் மறையாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்" என்றபடியே அருளிச் செயல்களைப் பல வகைகளாலும் வளர்த்துக் கொண்டு வாழ்ந்தருளாநின்றார்.

ஸ்ரீகமனம்

எம்பெருமான் வைபவம் போலே எம்பெருமானார் வைபவமும் பேசியும் எழுதியும் தலைக்கட்ட வொண்ணாதது, அன்பர்கள் அநுதினமும் அநுஸந்திக்கப் பாங்காக இது சுருக்கமாக வரைந்தபடி. ஸ்வாமியருளிச் செய்த திவ்ய க்ரந்தங்கள் நவநிதிகள் போலவும் நவரத்னங்கள் போலவும் ஒன்பதாம்; ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், வேதார்த்த ஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்ககத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம்—என்பவை.

ஸ்வாமியின் பெருமைகளில் ஸாரமானவற்றை யெடுத்துரைத்துத் திருவரங்கத்தமுதனார் பணித்த இராமாநுச நூற்றந்தாதி ப்ரபந்ந காயத்ரீ யென்று அன்று தொட்டே ப்ரஸித்தி பெற்றிருப்பதனால் அதை நாடோறும் அநுஸந்திப்பதே நமக்குற்ற பெருஞ் செல்வம்.

கூரத்தாழ்வான் வைபவம்.

புருஷ குணங்களெல்லாம் வாய்ந்திருந்து சிறந்த ஜ்ஞானானுஷ்டானம், ஆசார்ய பக்தி, பகவத் பக்தி, வைராக்யம், பாண்டித்யம், ஸாத்விகதாஸ்யம் முதலிய எண்ணிறந்த நற்குணங்கட்குப் பிறப்பிடமென்ன வமைந்த ஆழ்வானுடைய திவ்ய சரித்ரமானது அநவரதமும் ஸ்ரீவைஷ்ணவர்கட்கு அவச்ய கர்த்தவ்யங்களில் முக்கியமானதொன்றென்பதைப் பூர்வாசார்யர்கள் ஒரு மிடறாக விரும்பியிருந்தனர். கடல் போன்ற அவரது திருக்கல்யாண குணங்களில் சிறுதிவலையென்னலாம்படியான சில குணங்களைச் சுருக்கப்பேசி வதரிப்போம்.

ஆழ்வான் திருவவதாரம்.

பெருமாள்கோயிலென்னும் திருக்கச்சிமாநகரத்திற்கு வடமேற்றிசையிலுள்ள கூரமாநகரில், கலி நாலாயிரத்து நூற்றெழுபதாமாண்டாகிய ஸௌம்ய வருஷத்தில் தை மாதம் ஹஸ்த நக்ஷத்திரத்தில் இந்த மஹான் திருவவதரித்தார். இவர்க்குத் தமிழில் "திருமறு மார்பன்" என்றும் ஸம்ஸ்க்ருதத்தில் "ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர்" என்றும் திருநாமம் வழங்கப்பெற்று வந்தது. இந்த எம்பெருமானுடைய திருநாமம்.

ஆழ்வான் என்ற திருநாமம்.

இவர்க்கு ஆழ்வான் என்ற திருநாமம் நிகழ்ந்தமைக்கு அடியாக ஒரு இதிஹாஸம் பெரியோர் சொல்லிப் போருவதுண்டு;—இவர் பகவத்விஷயத்திலே மிக்க ஈடுபாடுடையரா யிருந்தமையாலே எம்பெருமானார் இவர் பக்கலிலே திருவாய்மொழி கேட்க விரும்பினார்; இவர் தாம் சேஷத்வத்தின் எல்லையில் நிற்பவராகையாலே, ஜகதாசார்யரான எம்பெருமானார்க்குத் தாம் ஆசிரியர்போன்று எங்ஙனே பொருளுரைக்க இசைகிறேன்? ; இசைய மாட்டாதொழியவே, முதலியாண்டான் முதலானோர்க்கு இவர் திருவாய்மொழிப் பொருள் சொல்லக்கடவதாகவும், அப்படியே அவர்கள் கேட்டு வந்து எம்பெருமானார் ஸந்நிதியிலே விண்ணப்பஞ் செய்யக்கடவதாகவும் ஒரு நியதி ஏற்பட்டு, முதலிகளனைவரும் இவர் பக்கலிலே கோஷ்டியாகவிருந்து "உயர்வறவுயர்நல முடையவன்" என்று திருவாய்மொழி தொடங்கின வாறே மதிமெல்லாமுள்கலங்கி மயங்கித் தரைப்பட்டசரிவர்; பரமபுருஷனை "பரம்பதத்திற்குக் குணமென்பதே கிடையாது; அது நிர்க்குணம்" என்று பிதற்றுகின்றார்களே, அவர்களுடைய மிடற்றைப் பிடித்தாற்போலே ஆழ்வார் முதலடியிலே "உயர்வற வுயர்நல முடையவன்" என்றபடி என்னே! என்று சொல்லிக்கொண்டே மோஹித்தவரே முதலிகளெல்லாரும் கடுகவெழுந்து எம்பெருமானாரிடம் ஓடிச்சென்று 'தேவரீர்! தேவரீர்!!' என்றழைக்க, அவரும் ஓடிவந்து, "அன்று 'எத்திறமுரலினொடு இணைந்திருந் தேங்கிய எளிவே'! என்று ஆறுமாஸம் மோஹித்துக் கிடந்த ஆழ்வாரை ஸேவிக்கப்பெறாத குறையும் இன்று கண்ணாரக் காணப்பெற்றோமே!" என்று உள்ளுருகிக் குதூஹலித்துப்பேசித் தெண்டனிட்டு நெடும்போது பார்த்திருந்தும் உணர்ச்சியற்றமையாலே அருகே எழுந்தருளி "ஆழ்வான்! ஆழ்வான்!! ஆழ்வான்!!!" என்று கூவித் திருமுதுகைத் தட்டியுணர்த்த, "தொடங்கும்போதே உயர்வற வுயர்நல முடையவனென்பதே!" என்று சொல்லிக்கொண்டே அநுக்கென்றெழுந்தார்;—உருக்கத்திலே ஆழ்வாரைப் போன்றமையாலே எம்பெருமானார் 'ஆழ்வான்!' என்று சொல்லித் தட்டியுணர்த்தினரென்பது பற்றி அன்று முதலாக இவர்க்கு ஆழ்வானென்று திருநாமம் வழங்கலாயிற்று.

ஆழ்வானது தேவியார் சிறப்பு.

ஆழ்வான் வைபவத்திற்கொட்டினதாம் அவரது தேவியாரான ஆண்டாளின் வைபவம் அமைந்திருக்கும். சாஸ்த்ரார்த்தங்களில் தமக்கு ஏதாவது ஸந்தேஹம் தோன்றினால் தேவியாரைக் கேட்டுத் தெளிந்துகொள்வது வழக்கமென்று பெரியோர் பகர்வர்.

ஆழ்வான் செல்வங்களைத் துறந்து இராமாநுசனடிக்கீழ்ப் புகுதல்.

கூரநகரில் இவருடைய திருமாளிகை தேவேந்திரபவனம் குபேரபவனம் முதலியவற்றையும் அதிசயித்துச் செல்வம் மிகுந்திருந்தது. திருமாளிகை வாசற்கதவுகளிற் கிண்கிணிகளின் ஓசை யோஜனை தூரத்துக்கு அப்பால் ஒலிக்குமென்றால், இவரது ஐச்வரியத்தின் சிறப்பு எத்தகையதென்னலாம்!; அச்சிறந்த செல்வத்திலும் பல ஏழைகளையும் வைஷ்ணவர்களையும் மற்றும் பலரையும் பாலனஞ்செய்து போஷித்துக்கொண்டு மஹா தர்மிஷ்டராய் பெருந்தருமியிருந்தார்.

நாள்தோறும் பெருமாள்கோயிலில் * ஸ்ரீஹஸ்திகிரிசேகரோஜ்வல பாரிஜாதமான பேரருளாளனது ஸந்நிதியில் இராத்திருவாராதனம் முற்றும் முடிந்து தீர்த்தவிநியோகமும் அமுதுசெய்து பெரிய திருவாசற் கதவுகள் மூடப்பட்டபிறகே இவருடைய திருமாளிகை வாசற்கதவு மூடப்படுவது வழக்கம். ஒருநாள், பேரருளாளன் ஸந்நிதியில் ஒரு மஹோத்ஸவச் சிறப்பினால் இராத்திருவாராதனம் முடிவுபெறத் தாமதித்ததனால் நியதமான காலத்தில் திருவாசற்கதவு சாத்தப்படாமலிருக்கச் செய்தேயும் இவரது திருமாளிகைக்காவலர் அதனை யறியாதாராய் நித்திய வழக்கப்படி நியதமான காலத்தில் திருமாளிகை வாசற்கதவுகளைச் சாத்தினர். அவற்றிற் கிண்கிணிகளின் ஓசை ஒரு யோஜனைதூரத்துக்கு அப்பால் ஒலிக்குமென்று முன்னமே கூறப்பட்டதே; அவ்வோசை பேரருளாளனது திருச்செவிக்கு இலக்காயிற்று.

அதனைத் திருச்செவி சாத்திய பேரருளாளன், தனக்கு அந்தரங்கமாகத் திருவாலவட்டம் வீசிக்கொண்டு தன்னோடு ஒருகோலாகக் கலந்து, தான் அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து சோதிவாய் திறந்து வார்த்தைகள் அருளிச்செய்யும்படி பாக்கியம் பெற்றிருந்த திருக்கச்சிநம்பியை நோக்கி, 'நம்பி! இதுவென்? நம்முடைய இராத் திருவாராதனம் முடிவு பெறுவதற்கு முன்னமே நமது கோயிற்கதவு சாத்தப்படுகின்றதேன்?' என வினவியருள, 'இவ்வோசை இங்குத்ததன்று; வெகுதூரத்தினின்றும் கேட்கப்படுகின்றது; கூரத்தாழ்வானுடைய திருமாளிகைச் செல்வத்தின் சிறப்பாம் இது' என்று திருக்கச்சிநம்பி விண்ணப்பஞ் செய்ய, அதுகேட்ட தேவபிரான் புன்முறுவல் செய்து 'ஆழ்வானது ஐச்வரியமோ நம்மை இங்ஙனே பயக்கிறது!' என வுரைத்தருளி வேறுவிஷயங்களைப் ப்ரஸ்தாபிக்கலாயினன். இங்ஙனமாகத் திருக்கச்சிநம்பிக்கும் பேரருளாளனுக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பின்பு கூரத்தாழ்வான் கேட்டருளிப் பரமவிரக்தராகித் தமது ஸகலமான ஐச்வர்யங்களையும் ஸத்பாத்திரங்களில் விநியோகித்துவிட்டு, தமக்கு தேஹயாத்ரா சேஷமாகச் சிறிது சேமித்து வைத்துவிட்டு, இனி ஒரு ஸதாசாரியரை அடிபணிந்து உய்வுபெறவேணுமென்று முயன்றவளவிலே—" விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகாசார்யரான உடையவர் தென்னத்தியூர்க்கழ

பிணைக்கீழ் ஸங்க்ரஹித்த இராமாநுஜ முனியாயினர்" என்று கேட்டுப் பெருமகிழ்ச்சியோடே பெருமாள்கோயிலுக் கெழுந்தருளி அவ்வெம் பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரம் முதலியவற்றைப் ப்ரஸாதிக்குமாறு ப்ரார்த்தித்துப் பெற்று அவர் திருவடிகளின்கீழ் நிழலும் $ அடிதாறும் போலே ஒருகாலும் பிரியாமல் அந்தரங்க சேவகராய் ஸாமாந்ய சாஸ்த்ரங்களையும் அத்யாத்ம சாஸ்த்ர ஸம்ப்ரதாயங்களையும் ஓதி யுசாவித்துக்கொண்டு இதுவே போதுபோக்காக எழுந்தருளியிருந்தார்.

திருவரங்கமாநகர் சேர்தல்.

இப்படியிருக்குங் காலத்திலே, தென்திருவரங்கம் கோயில்கொண்ட நம்பெருமாளுடைய நியமனத்தாலே திருவரங்கப் பெருமாளரையர் கச்சிக்கு எழுந்தருளிப் பேரருளாளனை அருளிச்செயல் இசையாலே போர உகப்பித்தபோது 'நீர் வேண்டும் வரத்தைத் தரக்கடவோம்' என்று பேரருளாளன் சோதிவாய் திறந்தருளிச்செய்ய, அரையரும் 'நம் இராமாநுஜனை நம் பெருமாள் ஸந்நிதிக்குத் தந்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, இராமாநுஜனை விட்டுக் கொடுக்கப் பேரருளாளனுக்குத் திருவுள்ளம் இல்லையாகிலும் சொல்லிற்றுத் தவறலாகாமையாலே 'அந்தோ! அரையராலே வஞ்சிக்கப்பட்டோம்; சிறந்த ரத்னத்தை இழந்தோம்' என்று திருவுள்ளம் நொந்துகொண்டே இராமாநுஜனைப் போகவிட, அவரை விட்டகன்று உயிராற்றகில்லாத ஆழ்வான் தாமும் அவருடன் கூடவே புறப்பட்டுத் திருவரங்கமாநகர் சென்று சேர்ந்து அவர் திருவடிக்கீழ்ப் ப்ரதான சிஷ்யராய், ஸகல சாஸ்த்ர நிபுணரென்று அனைவராலும் போற்றப்பெற்றவராய் வாழ்ந்துவந்தார்.

பொன்வட்டில்தனையெறிந்த புகழுடைமை.

இப்படித் தேவுமற்றறியாதே எம்பெருமானார் திருவடிகளிலே பரம பக்தராயிராநின்ற ஆழ்வான், தம்முடைய ஜந்மபூமியிலே தமக்கு தேஹயாத்ரா சேஷமாக முன்பு சில பொருள்கள் சேமித்து வைத்ததும் ஸ்வரூபவிருத்தமாகையாலே அவை நிச்சேஷமாகப் பரித்யஜிக்கத் தக்கவை யென்று திருவுள்ளம்பற்றி ஆசார்யன் ஸந்நிதியிலே விடைபெற்றுக் கூரத்துக்கு எழுந்தருளி அப்பொருள்களைப் பரமபாகவதர்கட்கு விநியோகித்துவிட்டுத் தமது தேவியாரான ஆண்டாளையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டுப் பெருமாள்கோயிலிலே பேரருளாளனை மங்களாசாஸனம் செய்தருளி நம்பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளா நிற்கச்செய்தே ஸ்ரீமதுராந்தக ஸமீபத்தில் காட்டிடையே எழுந்தருளும்போது தேவியார் "பயமாயிருக்கிறதே" என்றுசொல்ல; ஆழ்வான், "மடியில் கனமிருந்தாலன்றோ வழியில் பயமுண்டாவது: அப்படி உன்னிடத்தில் ஏதாகிலுமுண்டோ?" என்று கேட்டருள, "ஸ்வர்ண பாத்திரத்தில் அமுது செய்துகொண்டிருந்த தேவரீர்க்கு இலையில் அமுதுசெய்வது வருத்தமாயிருக்குமே யென்றெண்ணி ஒரு பொன்வட்டிலை மாத்திரம் முன்பு மிகுத்திவைத்தேன், அது மடியில் இராநின்றது" என்று திருச்செவியிலே ஏகாந்தமாக விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வானும் "பொன் வட்டில் தனையெறிந்த புகழுடையோன் வாழியே" என்னும்படி அப்பொன்வட்டிலைத் தேவியார் கையில் நின்றும் வாங்கிக் காட்டில் தூற்றிலே எறிந்துவிட்டு, உடையவர்க்கு அபயப்ரதானம் பண்ணின ஸ்ரீமதுராந்தகத்திலே யெழுந்தருளி ஏரிகாத்த பெருமாளைத் திருவடிதொழுது அங்கே திருமகிழடியிலேயெழுந்தருளி 'த்வயம் விளைந்த இடம்' என்று அவ்விடத்தை ஸேவித்து மனமகிழ்ந்து, மற்றைநாள் தொடங்கிப் பயணகதியிலே வழியிலுள்ள திருப்பதிகளை ஸேவித்துக்கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலெழுந்தருளி முன்புபோலே உடையவர் ஸ்ரீபாதத்தில் அந்தரங்கச் சேவகராய் எழுந்தருளியிருந்தார்.

$ அடிதாறு—பாதரேகை.

திருவரங்கத்தமுதனாரைத் திருத்திப் பணிகொள்ளுதல்.

அக்காலத்திலே, கோயில் கொத்திலுள்ளவர்களுக்கு நிர்வாஹகராயிருந்த திருவரங்கத்தமுதனாரென்பவர் ஒருநாள் உடையவர் திருமுன்பே வந்து ஸேவித்து, 'பாவங்கள் கூடு பூரித்துக் கிடக்கிற அடியேனைத் திருத்தி ஸ்வாமிக்கு சேஷமாக்கும்படி ஒரு ஸாத்விகர்க்கு நியமித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் ஆழ்வானை அழைத்தருளி அமுதனாரைக் காட்டி, 'இவர் நம்முடைய வாழ்முதலான நம்பெருமாள் ஸ்ரீகார்யத்துக்குப் பரிவராயிருப்பவர்; இவரது தாழ்வுகளைப் பாராமல் இவரை அநுவர்த்தித்து அநுகூலராக்கி நம்பக்கலிலே கொண்டுவந்து சேரும்' என்று நியமித்தருள, ஆழ்வானும் ஆறுமாஸம் அவரை அநுவர்த்தித்துப் பரிபக்வராக்கி உடையவர் திருவடிகளிலே கொண்டுவந்து காட்டிக்கொடுக்க, உடையவரும் அவ்வமுதனாரை ஆழ்வான் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினர். (1) "மொழியைக் கடக்கும் பெரும் புகழான் வஞ்சமுக் குறும்பாங்குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்" என்றாரிறே அமுதனாரும்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகனருளிச்செய்த குருபரம்பராஸாரத்திலே—"பெரிய நம்பி ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் அநேகர்" என்றருளிச்செய்து, "அவர்களாவார்" என்று தொடங்கிச் செய்தருளின விவரணத்தில் அணியரங்கத்தமுதனார் என்ற திருநாமம் குறிக்கப் பட்டிருப்பதைக் காண்பவர்கள் அணியரங்கத்தமுதனாரென்பவர் இத்திருவரங்கத்தமுதனாரிற் காட்டில் வேறு பட்டவரென்று உண்மையுணராது இவரே அவரென்று சிலர் ப்ரமித்து இவ்வமுதனாரைப் பெரிய நம்பிகளின் சிஷ்யராகக் கருதுவர்களாயினும் இராமாநுச நூற்றந்தாதி அருளிச்செய்த அமுதனார் எம்பெருமானாருடைய நியமனத்தினால் ஆழ்வானை அடிபணிந்து திருந்தினவரென்பதை ஸத்ஸம்ப்ரதாய முணர்ந்தவர் மறவார்கள்.

ஆழ்வான் அமுதனார்க்ருஹத்தில் ஏகாஹ மமுதுசெய்தல்.

அமுதனார் ஆழ்வான் திருவடிகளில் அந்தரங்கராய்க் காலக்ஷேபம் செய்துவருகிற காலத்திலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடியடைய, தசாஹம் கடந்தபின்பு "ஏகாஹத்துக்கு நிமந்த்ரணஸ்வாமியாக ஒருவரை நியமித்தருளவேணும்" என்று உடையவர் ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் ஆழ்வானை நோக்கி 'நீர் போம்' என்ன; ஆழ்வானும் சிறிதும் முகம் கன்றாமல் அப்படியே எழுந்தருள, அமுதனாரும் 'ஆசார்யர் இங்ஙனே எழுந்தருளப் பெறுவதே!' என்று தாழ்ந்து தரைப்பட்டு ஸேவித்து ஏகாஹ சிராத்தத்திலே அமுது செய்தருளப் பண்ணுவித்து, ஏற்கெனவே தாமும் தமதுமெல்லாம் அத்தலையிலதாகவே அறுதியிட்டிருக்குமவராகையாலே அபரிமிதமான பொருளை ஸமர்ப்பித்து 'இவற்றைத் திருவுள்ளம்பற்றி யருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, ஆழ்வானும் அவருடைய ப்ரார்த்தனையின்படி அவற்றை அங்கீகரித்துக் கனகவர்ஷமாகத் தெருவிலே வாரியிறைத்துக் கொண்டு எல்லாவற்றையும் இறைத்து விட்டுத் திருக்காவேரியிலே நீராடித் திருமண்காப்பு சாத்திக்கொண்டு உடையவர் ஸ்ரீபாதத்திலே சென்று ஸேவித்து நிற்க, உடையவரும் ஆழ்வானை நோக்கி 'உமக்குக் கிடைத்த அர்த்தம் எங்கே?' என்று கேட்க, ஆழ்வானும் 'அவை அநர்த்தமாகையாலே அப்போதே கைகழிந்துபோயின' என்று நடந்த செய்தியை விஜ்ஞாபிக்க 'இதொரு விலக்ஷணபக்தி இருந்தபடி என்!' என்று திருவுள்ளம் உகந்தருளினர்.

---

1. இராமாநுச நூற்றந்தாதி—7.

வகோஷம் பெறுவிக்கைய ஆழ்வானையனுப்பினதற்குக் காரணம்

நம்பெருமாள் ஸந்நிதித் திருவுகோல் அமுதனாருடைய ஆதீனத்திலிருந்தபடியால் அதை உடையவர் உபாயமாகக் கைப்பற்ற விரும்பி ஆழ்வானை யழைத்து "நீர் போய் அமுதனார்க்குப் புரிந்து முடிவில் ஸந்நிதித் திருவுகோலைப் பெற்றுவந்து 'ஸகலம் ஸம்பூர்ணம்' சொல்லவேண்டும்" என்று நியமித்தருளப், ஆழ்வானும் அப்படியே திருவுகோலைப்பெற்று ஸமர்ப்பிக்க; பின்பு "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்" என்று கடல் சூழ்ந்த மண்ணுலகமுற்றும் போற்றும்படி எம்பெருமானார் நம்பெருமாள் ஸந்நிதிக் கைங்கர்யங்களைப் பரிஷ்கரித்தருளினார் என்பது ப்ரஸித்தம்.

ஆழ்வான் வ்ருத்திக்ராந்தத்தைக் கடாக்ஷித்துத் தரித்துக்கொள்ளுதல்.

உடையவர் ஸ்ரீபாஷ்யமுரைக்க ஆழ்வான் உசாத்துணை யிருத்தல் :—

இவை எம்பெருமானார் வைபவத்தில் காண்க.

திருக்கோட்டியூர் நம்பி பக்கல் ஸந்தேஹம் தெளிந்து வருதல்

பிறகு எம்பெருமானார் கோஷ்டியிலே உபய வேதாந்தங்களுக்கு காலக்ஷேபம் நடவாநிற்க, "ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களும் சேஷத்வமும் நிரூபகமாகச் சொல்லப்படாநின்றது; இவற்றினுள் அந்தரங்க நிரூபகம் எது?" என்று திருவோலக்கத்திலே ப்ரஸ்தாவம் பிறக்க, எம்பெருமானார் ஸர்வஜ்ஞராய் எழுந்தருளியிருக்கச் செய்தேயும் இதனை ஆசார்யமுகேந வெளியிடவேணுமென்று திருவுள்ளம்பற்றி ஆழ்வானை நோக்கி 'வாரீர் ஆழ்வான்! திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளி நம்பியை ஸேவித்து இதனை அறிந்துவாரும்' என்று நியமிக்க, ஆழ்வானும் நம்பியைக்குறித் தெழுந்தருளி தண்டன் ஸமர்ப்பித்துச் செய்தியை விண்ணப்பஞ்செய்து ஆறுமாஸம் ஸேவித்திருந்தும் அவர் இரங்கக்காணாமையாலே, 'எம்பெருமானார் ஸந்நிதியிலேபோய் ஸேவித்து வருகிறேன்' என்று சொல்லிப் புறப்படப்புக, நம்பி அவரை அழைத்து "மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார் 'அடியேனுள்ளா' னென்றருளிச் செய்தபடி கண்டாயே" என்று மொழிந்தருள, ஆழ்வானும் 'நம்பிரானே ஸ்வாமி' என்றெழுந்தருளினார்.

இதன் கருத்து யாதெனில்:—திருக்கோட்டியூர் நம்பி எடுத்துக் காட்டிய 'அடியேனுள்ளா' னென்ற பாசுரம் திருவாய்மொழி எட்டாம் பத்தில் "கண்கள் சிவந்து" என்கிற திருவாய்மொழியில் இரண்டாம்பாட்டு; "கண்கள் சிவந்து" என்கிற பாட்டும் 'அடியேனுள்ளான்' என்கிற இப்பாட்டும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தைப் ப்ரதிபாதிக்குமவை. இவற்றுள் 'அடியேனுள்ளா' னென்ற பாட்டில் முதல் விசேஷணத்தினால் 'எம்பெருமான் ஜீவாத்மாவை அநுப்ரவேசித்திருக்குமவன்' என்றருளிச்செய்யக் கருதிய ஆழ்வார் 'ஆத்மாவினுள்ளான்' என்று சொல்லியிருக்கவேண்டும்; 'என்னுள்ளான்' என்றாவது சொல்லியிருக்கவேண்டும்; இப்படிச் சொல்லாமல் அடியேனுள்ளானென்று அடிமையையிட்டு ஆத்மாவை நிரூபித்தமை தோற்ற அருளிச்செய்கையாலே, ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களிற் காட்டிலும் சேஷத்வமே ப்ரதாந நிரூபகமென்றதாயிற்று.

ஆழ்வான் பௌராணிககைங்கரியம் பெறுதல்

ஒருநாள் நடுப்பகலில் உச்சிவெய்யிலிலே எம்பெருமானார் தாமொருவராகத் திருவரங்கத்தமுதனார் க்ருஹத்துக்கெழுந்தருள, அமுதனாரும் 'இதுவென் இப்போது!' என்று

விஸ்மயத்துடனே ஸேவித்துக் கேட்க, உடையவரும் "உம்முடைய †பௌரோஹித்யத்தை நமக்குத் தரவேணும்" என்ன, அமுதனார் மஹாப்ரஸாதமென்று உகந்து ஹிரண்யோதகதாரா பூர்வகமாக ஆழ்வானை உத்தேசித்து ஸமர்ப்பித்தார். அன்று தொடங்கி ஆழ்வானைப் பௌரோஹித்யத்துக்குக் கட்டளையிட்டு நித்தியம் நம்பெருமாள் ஸந்நிதியிலே புராணம் விண்ணப்பம் செய்யும்படியாக நியமித்தருளினார். இக்கைங்கரியம் இவரது திருக்குமாரரான பட்டர் பரம்பரையாக இன்றளவும் ஸந்ததியார்க்குப் ப்ராப்தமாயிரா நின்றது. [பட்டருடைய தனியனில் "ஸ்ரீரங்கேச புரோஹித:" என்றதும் காண்க.]

ஓர் ஊமை பெற்ற பாக்கியத்தைக்கண்டு ஆழ்வான் வருந்தினது.

உடையவர் ஒருநாள் ஓர் ஊமையை மறைத்து மடத்துக்குள்ளே அழைத்துத் திருவாசற்கதவுகளை யடைத்து ஸம்ஜ்ஞையாலே தமது திருவடிகளைக் காட்டிக்கொடுக்க, அந்த ஊமையும் பாக்யவசத்தாலே 'இத்திருவடிகளே நமக்குத் தஞ்சம்' என்றறிந்து அத்திருவடிகளைத் தன்னுடைய தலைமேலணிந்து கிடக்க, ஆழ்வான் இதைக் கதவின் புரையாலே கண்டு "ஐயோ! ஆழ்வானாகப் பிறந்து சாஸ்திரங்களைக் கற்றுக் கெட்டேனே! ஊமையாகப் பிறவா தொழிந்தேனே!" என்று முடிமேல் மோதிக்கொண்டு கதறினாரென்று ப்ரஸித்தம்.

ஆழ்வானுடைய ஜீவகாருண்யம்.

ஆழ்வான் ஒருநாள் ஓரிடத்தே வழிபோகாநிற்க, ஒரு ஸர்ப்பத்தால் பிடிக்கப்பட்ட தவளை கூக்குரலிடக்கேட்டு 'இது ஆர்த்தியக் கூப்பிடுகிறதே!' என்று மோஹித்து விழுந்தருளினார்.

மற்றொருநாள் கார்யார்த்தமாக ஒருதோட்டத்துக்கு எழுந்தருள, அங்கே அப்போது தான் ஒருவன் ஒருவாழைக்குருத்தை அறுத்துக்கொண்டுபோக, அதில் நின்றும் பால்பெருகா நிற்கக் கண்டு மூர்ச்சித்து விழுந்தார்.

பின்னுமொருநாள் திருக்காவேரியில் தண்ணீர்க்குடத்தை இடுப்பிலே எடுத்துவைப்பாரில்லாமல் வருந்துகின்ற ஒரு பெண்ணுக்குத் தண்ணீர்க்குடமெடுத்துவைத்து ஏற்றியருளினார். இவைபோல்வன மற்றும்பல இதிஹாஸங்களும் ப்ரஸித்தம்.

ஆழ்வானுடைய ஆத்மகுண பரிபூர்த்தி.

அக்காலத்திலே அரசாண்டுவந்த சோழராஜன் வைஷ்ணவத்வேஷியாகையாலே ஆங்காங்குள்ள விஷ்ணு ப்ரதிமைகளை யெடுத்து எறிந்துவிடவேணுமென்று முயன்றபோது அவனுக்கு இஷ்டரானவர்கள் "மந்த்ரபூர்வகமாகப் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட விஷ்ணு பிம்பங்களை அழியச்செய்தால் உனக்குப் பெருத்த தீங்கு விளையும்" என்று சொல்ல, அது கேட்ட சோழன் 'அந்தப் ப்ரதிமைகளில் தெய்வ சக்தியை உத்வாஸநம் பண்ணி அழியச் செய்வோம்' என்று நிச்சயித்து ஒரு பார்ப்பானுக்குப் பணங்கள் கொடுத்து 'நீ §அத்ருச்யாஞ்ஜநமிட்டுக் கொண்டு உத்வாஸநம் பண்ணு' என்று ஆஜ்ஞாபிக்க, அவனும் திவ்ய தேசங்களிலே சென்று அங்ஙனமே அத்ருச்யாஞ்ஜநமிட்டுக்கொண்டு உத்வாஸநம் பண்ணி பலவும் விக்ரஹங்களைக் கடலிலே எடுத்தெறிகிற செய்தியை எம்பெருமானார் திருச்செவிசாத்தி 'நாம் கெடுமாறாக இக்

---

† பௌரோஹித்யமாவது—நம்பெருமாள் ஸந்நிதியில் புராணம் வாசித்தலாகிற கைங்கர்யம்; வேதவிண்ணப்பம், திருமஞ்சனக் கட்டியம் ஸேவித்தல் முதலியவைகளும் இதில் அடக்கம்.

§ அத்ருச்யாஞ்ஜநமாவது—தான் ஒருவர் கண்ணிலும் தென்படாதபடி தன்னை மறைக்கவல்லதொரு அஞ்சனம்.

திருவரங்கப் பெரிய கோயிலே ப்ரதக்ஷிணம் செய்துகொண்டு போந்தபோதும்: இவ்விடத்திற்குச் அறிவு வரும்படி ஆளவந்தார்க்கு வேண்டுகின்றது; இனிமேல் செய்யவேண்டுவதென்ன?' என்று விசாரிக்கப்பட்டுப் பெரியநம்பியோடே விண்ணப்பித்திருக்க, 'நம் பெருமாளுடைய திருவெள்ளறையிலே ஒரு ப்ரதக்ஷிணம் வரும்படியாக நம்முடையவர்களில் ஒருவரை என்பின்னே அனுப்பவேணும்; என்பின்னே வாரா நின்றால் 'ஒருவன் பின்னே போகிறோம்' என்று தம் நெஞ்சில் படாதே நிழல்போலே என்னைப் பின் செல்பவராக இருக்கவேணும்; அப்படிப்பட்ட ஒரு சிஷ்யனைப் பார்த்தனுப்பும்' என்று பெரிய நம்பி திருவாய்மலர்ந்தருள, இப்படிப்பட்ட ஆத்மகுண பரிபூர்ணரான சிஷ்யர் ஆழ்வானொருவரே என்பது உடையவர்க்கு நன்கு தெரிந்திருந்தும் இதனைப் பெரியநம்பி திருவாக்கினால் வெளியிடவேணுமென்றெண்ணிக் கொண்டு நம்பியை நோக்கி 'இப்படிப்பட்ட சிஷ்யர் இவ்விடத்தில் இருப்பதாகத் தெரியவில்லையே!" என்று சொல்லி நிற்க, 'நம் கூரத்தாழ்வானை அனுப்பலாகாதோ?' என்று நம்பி கூறியருள, அருகிலிருந்த ஆழ்வான் இதைக்கேட்டு "நம்பிகள் நம்மையும் ஒருபொருளாக இங்ஙனே மதித்து பல சிஷ்யர்களின் முன்னே இப்படி அருளிச்செய்யும்படியான பாக்கியம் பெற்றேனே' என்று பெருமகிழ்ச்சி யடைந்து, நம்பிகளின் திருவுள்ளப்படியே ப்ரதக்ஷிணத்திற்குப் பின் சென்றார். [இந்த இதிஹாஸம் திருவாய்மொழி ஏழாம் பத்தில் பத்தாந்திருவாய்மொழியில் ஐந்தாம் பாட்டில் "பலரடியார் முன்பருளிய" என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரத்தில் காணத்தக்கது.] இப்படிப்பட்ட ஆத்மகுண பரிபூர்த்தி ஆழ்வானொருவர்க்கே அஸாதாரணமென்பது நிர்விவாதம்.

ஆழ்வானுக்குத் திருக்குமாரர்கள் திருவவதரித்தல்.

ஆழ்வான் தமது செல்வத்தை முற்றும் துறந்து எம்பெருமானார் திருவடிகளை ஆச்ரயித்தது முதல் ஸர்வோபாய உபாதானவ்ருத்தியிலே திருவரங்கத்தில் சில திருமாளிகைகளில் உஞ்சவ்ருத்தி செய்து அதுகொண்டு குடும்பகாரியத்தை நிர்வஹித்துக் கொண்டு ஒவ்வொருநாளும் கிடைக்கிற உணவுப்பொருள்களில் மறுநாளைக்கென்று சிறிதும் சேமப்படுத்தி வைத்துக்கொள்ளாமல் அந்நாளைக்கு வேண்டியதை மாத்திரம் நடத்திவருகையில் ஒரு நாள் விடாப்பெருமழை பொழிந்ததனால் வெளியேபோய் உபாதானம் செய்து வரக்கூடாமல் போக, அதனால் அன்றைக்கு வெறும் நீர்மாத்திரத்தைக் கொண்டு "கன்று நாகு முதலைப் படைத்தோனே [illegible] கண்ணுறங்காது [illegible] நெஞ்சே [illegible] உபாதாம் [illegible] பட்டினி கவே" என்கிறபடியே பட்டினி பாராட்டாமல் "மண்ணுலகோடு [illegible] வேறு [illegible] நம்மையெம்பெருமான்" என்றாப்போல அருளிச்செய்தாற்போலே தாமுமாகக்கொண்டு வெறு உணவின்றியே இருந்திட, அன்றிரவு பெரியபெருமாள் அமுது செய்கிறபோது மணி திருச்சின்னவொலி கேட்டவளவில் இவரது தேவியாரான ஆண்டாள் பெருமாளை நோக்கி 'உம்முடைய அடியவர் பட்டினியிருக்க, நீர் குமாரி குமாரி அமுதுசெய்கின்றீரோ?' என்று நினைத்தவளவிலே ஸர்வஜ்ஞனான அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்ளம்பற்றி உடனே தேவஸ்தான கார்ய நிர்வாஹகரான உத்தமநம்பிக்கு அர்ச்சகமுகேன கட்டளையிட்டு அப்பொழுது தாம் அமுது செய்த அக்காரவடிசிலை மிகுதி பரிவாரங்களுடன் அவரைக்கொண்டு ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பியருள இவரும் இதனை மதித்து பரிவுற்று ஏற்றுக்கொண்டு யாம் பெறு ஸம்மானமென்று அதில் தமக்கும் தேவிக்குமாக இரண்டு திரளை மாத்திரம் எடுத்துக்கொண்டு உத்தமநம்பியை அனுப்பிவிட்டு பக்கத்தில

ஞான பகவானுடைய வரம்புகடந்த கருணைத் திறத்தை வியந்து அந்த அடிசிலில் ஒரு பகுதியைத் தாம் அமுது செய்து மற்றதைத் தேவியாருக்குக் கொடுத்தருள, முன்பு தசரத சக்ரவர்த்திக்குப் புத்ரகாமேஷ்டியிற் கிடைத்த பாயஸத்தின் கூறுகளே ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் திருவவதாரத்துக்குக் காரணமானது போல இப்பொழுது இவர்க்கும் "ஸ்ரீபராசர பட்டர், ஸ்ரீவேதவ்யாஸ பட்டர்" என்ற இரண்டு திருக்குமாரர்கள் திருவவதரிப்பதற்கு இத்திருவுக்களிரண்டுமே ஹேதுவாயின.

ஆழ்வான் ராஜஸபைக்கு எழுந்தருளினது முதலான வரலாறுகள் ஸ்ரீராமாநுஜர் வைபவத்தில் காணத்தக்கன.

திருமாலிருஞ்சோலை யாத்திரை புறப்படுதல்.

ராஜஸபையில் நேர்ந்த கஷ்டங்களுக்குப் பிறகு நம்பெருமாள் ஸந்நிதிக்கு விடைகொண்ட ஆழ்வான் பெரிய ஸ்ரீபலிபீடத்தருகே தண்டன் ஸமர்ப்பித்துத் தம்முடைய அளவற்ற ஆர்த்தியை ஆவிஷ்கரித்து, 'பெரிய நம்பியை அங்கீகரித்தாப்போலே அடியேனையும் அங்கீகரித்தருளலாகாதா?' என்று திருவுள்ளம் நொந்து விண்ணப்பஞ்செய்து கோயிலுக்குள்ளே புகுந்து ஸேவிப்பதாக எழுந்தருள, 'ராமாநுஜ ஸம்பந்தமுடையவரொருவரும் உள்ளே புகுந்து ஸேவிக்கவொண்ணாது' என்று பேசாமுன் கட்டளையிட்டு வைத்தபடி அங்கிருந்த சேவகர்கள் ஸந்நிதி வாசலிலே நின்று ஆழ்வானை உள்ளே புகவொட்டாமல் தகைய, அவர்களுக்குள்ளாரில் சிலர் 'இந்த முதலியார் மற்றவர்களைப் போலல்லர்; இவர் ஆத்மகுணங்கள் நிரம்பியவர்; இவரைப் புகுரவிடுங்கள்' என்று சொல்ல; இவற்றைக் கேட்ட ஆழ்வான் திடுக்கிட்டு நடுங்கி நாலடி பின் வாங்கி "ஐயோ! எல்லார்க்குமுண்டான ஆத்மகுணம் ஆசார்ய ஸம்பந்தத்துக்கு ஹேதுவாயிருந்தது; அடியேனுக்குண்டான ஆத்மகுணம் ஆசார்ய ஸம்பந்தத்தை அறுத்துக் கொள்ளுகைக்கு ஹேதுவாய் விட்டதோ" § என வெறுத்துக்கொண்டு புறப்பட்டு "என்பேற்றுக்கு எம்பெருமானார் திருவடி ஸம்பந்தமே அமையும்; அந்த ஸம்பந்தத்தை யொழித்துப் பெருமாளை ஸேவிக்கவேண்டுவதில்லை" என்று உறுதிகொண்டு அன்றே கோயில் வாஸத்தை விட்டிட்டுத் திருமாலிருஞ்சோலையில் வாஸத்தை விரும்பிப் பயணகதியாகப் புறப்பட்டெழுந்தருளினார்.

ஸ்தவங்கள் அருளிச்செய்தல்.

வழியிடையே எழுந்தருளும்போது தம்முடைய மனத்துயரங்கள் நினைவுக்கு வாராதிருக்கும்படி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை நினைந்து நெஞ்சு களித்திருக்கக் கருதி ஸ்ரீவைகுண்டஸ்தவம் அதிமாநுஷஸ்தவம் என்ற அற்புதமான இரண்டு ஸ்தோத்திரங்களை அருளிச்செய்துகொண்டே திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளினார். இவற்றுள், ஸ்ரீவைகுண்டஸ்தவம் நூறு ச்லோகங்கள் கொண்டது. ஆழ்வானருளிச்செய்த பஞ்சஸ்தவங்களில் இந்த ஸ்தவமே முதலதாம். இதனால் பரவாஸுதேவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை விசதமாக அநுஸந்தித்து அநுபவித்து இங்ஙனே விபவாவதாரங்களையும் பேசி அநுபவிக்கத் திருவுள்ளம்பற்றி இரண்டாவதாக அதிமாநுஷஸ்தவமருளிச்செய்தார். இதில் நரஸிம்ஹாதி அவதாரங்கள் சிலவற்றைச் சுருக்கமாகவும் ஸ்ரீராம க்ருஷ்ணாவதாரங்களைப் பெருக்கமாகவும் பேசி அநுபவித்தார். இதுவரையிலும் உலகத்தில் வெளிவந்துள்ள ஸம்ஸ்க்ருதவாங்மயங்க

---

§ ராமாநுஜ ஸம்பந்திகளை உள்ளே புகவிடக்கூடாதென்கிற கட்டளையின்படி ஆழ்வானையும் விலக்க வேண்டியிருக்க, ராமாநுஜ ஸம்பந்தத்தை உபயோகமற்றதாக்கி இவருடைய ஆத்மகுண பூர்த்தியையே அவர்கள் மதித்தபடியால் அது இவர்க்கு அஸஹ்யமாயித்து.

ளில் இவ்விரண்டு [illegible] சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்கும் நடைநோக்கும் அமைந்த வேறொரு காவ்யம் கண்டதில்லையென்று வித்வத்ப்ரவரர் [illegible] ஒருமிடறாக விளம்புவர்.

அழகர் ஸந்நிதியிலே தம் குறையை விண்ணப்பஞ் செய்தல்.

இங்ஙனே பரம போக்யமான இரண்டு ஸ்தவங்களை அருளிச்செய்து, அநந்தரம் திருமாலிருஞ்சோலையை அடைந்து அவ்விடத்திலே * "அடியாரந்தன்னிலழகர் வடிவழகைப்பற்றி, முடியுமடியும் படிகலனும் முற்றவனுபவித்தான் முன்" என்கிறபடியே சுந்தரத்தோளுடையானை ஆழ்வார் அனுபவித்தாற்போலே தாமும் அநுபவித்து அவ்வெம்பெருமான் விஷயமாக அமுதக்கடலென்னலாம் படியாய் நூற்றுமுப்பத்திரண்டு ஸ்லோகங்கள் கொண்ட ஸுந்தரபாஹுஸ்தவம் அருளிச்செய்து, அதன் முடிவிலே—

> [illegible]
> [illegible]
> [illegible]
> [illegible] !!

என்பது முதலான ஸ்லோகங்களினால் திருவரங்கநகர் [illegible] மொழிந்து நிஷ்கண்டகமாக [illegible] எம்பெருமானார் திருவடிகளில் [illegible] வாழப் பெறவேணுமென்னும் ஆர்த்தராய்ப் ப்ரார்த்தித்துக்கொண்டு பலகாலம் அங்கே எழுந்தருளியிருந்தார்.

மீண்டும் திருவரங்கம் சேர்தல்.

அவ்வளவிலே, அந்த மஹாபாதகியான சோழன் கழுத்திலே புண்ணுகிப் புழுத்து மாண்டானென்ற செய்தி கேள்விப்பட்டு ஆழ்வான் அழகர் ஸந்நிதியிலே விடைபெற்று மீண்டும் கோயிலேற எழுந்தருளினார்.

மேனாட்டில் நின்றும் எம்பெருமானார் கோயிலுக்கெழுந்தருளி ஆழ்வானை உசாவுதல்.

சோழனுடைய உபத்ரவங்களுக்கு அஞ்சித் திருநாராயணபுரத்திலெழுந்தருளியிருந்த எம்பெருமானார், கோயிலில் நின்றும் அங்குவந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவராலே—சோழராஜ[illegible]யில் ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் நேர்ந்த ஆபத்தைக்கேள்விப்பட்டுச் சாலவும் திருவுள்ளம் நொந்து 'ஆழ்வானுமினும் உயிர்வாழ்ந்திருக்கப்பெற்றோமே!' என்று திருவுள்ளம் தேறி, அப்போது தம்மிடத்தில் கைங்கர்யம் செய்துகொண்டிருந்த மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டானை 'மிகவும் விரைவாகக் கோயிலுக்குச் சென்று ஆழ்வானையும் ஆராய்ந்து அங்குள்ள விசேஷங்களையும் அறிந்துவாரும்' என்று நியமித்தருள, அவரும் மிக விரைந்து கோயிலுக்கு வந்து சோழன் புழுத்துமாண்ட வ்ருத்தாந்தமுட்பட எல்லாவற்றையும் ஆழ்வான் ஸந்நிதியிலே அறிந்துகொண்டு மீண்டு திருநாராயணபுரம்போய் எம்பெருமானார் திருவடிகளிலே இவற்றை விண்ணப்பஞ் செய்ய, அது கேட்டு அவர் பெருமகிழ்ச்சி கொண்டு உடனே அங்கு நின்றும் புறப்பட்டு மிக விரைந்து கோயிலுக்கெழுந்தருளி முதலிகளும் தாமுமாக ஆழ்வான் திருமாளிகை யேற எழுந்தருள ஆழ்வானும் எதிரே யெழுந்தருளி உடையவர் திருவடிவாரத்

* திருவாய்மொழி நூற்றந்தாதி 21.

றிலே வேரற்ற மரம்போல விழுந்து ஸேவித்துத் திருவடிகளைச் சிக்கெனப்பிடித்துக்கொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானை வாரியெடுத்தணைத்துக் கொண்டு சோகவேகத்தாலே ஒரு வார்த்தையும் அருளிச்செய்யமாட்டாமல் உள்ளுருகிக் கண்ணாறழுந்து விம்மல் பொருமலாய் "வாரீர் ஆழ்வான்! இந்த தரிசநத்துக்கு த்ருஷ்டி பூதமான உமக்கு இப்படி கண்போவதே, இது என்னுடைய துஷ்கர்ம பலமன்றோ?" என்றிப்படி பலவாறாக அருளிச்செய்து ஆழ்வானைத் தேற்றியருளி அவரையுங்கூட அழைத்துக்கொண்டு மடமேயெழுந்தருளினர்.

ஆழ்வான் வரதராஜஸ்தவமருளிச் செய்தல்.

மற்றைநாள் உடையவர், ஆழ்வான் திருமாலிருஞ்சோலை யாத்திரையிலே அருளிச்செய்த மூன்று ஸ்தவங்களையும் கேட்டருளி மிகவும் திருவுள்ளமுவந்து ஆழ்வானை நோக்கி 'உம்முடைய இவ்வருளிச் செயல்களாலேயன்றோ நம்முடைய திருவரங்கச் செல்வம் களையற்று நாமும் இன்று வாழ்ந்திருக்கப்பெற்றோம்; இனி, பெருமாள்கோயிலில் பேரருளாளப்பெருமாள் வேண்டுவதெல்லாந்தரும் கொடைவள்ளலாக விளங்குகின்றார்; நீர் அவர் விஷயமாக 'அடியேனுக்குக் கண் தந்தருளவேணும்' என்று ஒரு ஸ்தோத்திரம் விண்ணப்பஞ்செய்யும்' என்றருளிச் செய்ய; ஆழ்வானும் 'அடியேனுக்கு இக்கண்வேண்டா' என்ன; எம்பெருமானாரும் அப்படியன்று: பேரருளாளன் விஷயமாக ஒரு ஸ்தோத்திரம் சொல்லியே யாக வேணும் என்று பலகாலும் வற்புறுத்தியருளிச்செய்ய ஆழ்வானும் ஆசார்ய நியமனத்தைச் சிரமேற்கொண்டு வரதராஜஸ்தவ மருளிச்செய்யத் தொடங்கி "நீலமேக நிபம் அஞ்ஜநபுஞ்ஜச்யாமகுந்தலம் அநந்தசயம் த்வாம் அப்ஜபாணி பதம் அம்புஜநேத்ரம் நேத்ரஸாத் குரு கரீச வரத மே" (28) என்கிற ச்லோகத்தளவு மருளிச்செய்து "எப்போதும் உன்னை ஸேவித்துக் களிப்பதற்குறுப்பான அப்ராக்ருத திவ்ய நேத்திரம் அடியேனுக்குத் தந்தருளவேணும்" என்று விஜ்ஞாபிக்க, அன்றிரவே ஆழ்வானுக்குப் பேரருளாளர் கனவிலே காட்சி தந்து 'நீர் வேண்டியபடியே தந்தோம்' என்றருளிச்செய்ய, ஆழ்வானும் உடனே மகிழ்ந்து எழுந்து நித்யகர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றி, தொடங்கின வரதராஜஸ்தவத்தையும் பூர்த்தியாகத் தலைக்கட்டி உடையவர் ஸந்நிதியிலே முழுதும் விண்ணப்பஞ் செய்து காட்டி வருகையில் மேற்குறித்த "நீலமேகநிபம்" என்கிற ச்லோகத்தை வாசிக்கக் கேட்டருளும்போது, 'வாரீர் ஆழ்வான்!' * இந்த ச்லோகத்தைக் கேட்டும் பேரருளாளன் உமக்குக் கண்தந்தருளாதிருக்கமாட்டான்; கண்ணைக்காட்டும் பார்ப்போம்' என்றருளிச்செய்ய, ஆழ்வானும் அப்ராக்ருத திவ்யநேத்ரம் அருளினதாகக்கண்ட ஸ்வப்ந ஸமாசாரத்தை விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் "அப்படியன்று; நேரில் பெருமாள்கோயிலுக்குப் போய் பேரருளாளனை ஸேவித்துப் பிரார்த்தித்து வருவோம் வாரும்" என்று சொல்லி ஆழ்வானை அழைத்துக்கொண்டு கச்சிக்குப் புறப்பட்டார்.

ஆழ்வானுடைய அற்புதமான ஆத்மகுணம் கச்சியில் வெளிப்படுதல்.

ஆழ்வானும் எம்பெருமானாரும் [illegible] கச்சித் திருப்பதி சேர்ந்து திருவத்திமாமலைக்கெழுந்தருளினபின், உடையவர் நியமனப்படியே ஆழ்வான் வரதராஜஸ்தவத்தைப் பேரருளாளர் திருமுன்பே விண்ணப்பஞ்செய்து முடிக்கிறபோது உடையவர் ப்ரதக்ஷிணமெழுந்தரு

* திருவாய்மொழியில் (4—7—5) "[illegible] கழியேன் சோர்குவனே" என்ற விடத்து ஈடு முப்பத்தாறாயிரப்படியில் இது காணத்தகும்.

ளிப் பராக்காயிருக்க, பெருமாளும் ஸ்வயம் திருக்கைத்தி ப்ரஸன்னராய் 'உமக்குவேண்டி யதேதிருந்ததை வேண்டிக்கொள்ளும்' என்ன; ஆழ்வான் உடையவர் திருவுள்ளப்படி தமக் வேண்டிக்கொள்ளாமல் "நான் பெறும்பேறு நாலூரானும் பெறவேணும்" என்று வேண்டிக் கொண்டார். (இவ்வினை வேண்டிக்கொள்ளவேண்டிய ப்ரஸக்தி யாதெனில்;) சோழராஜனை அடுத்திருந்த நாலூரானுடைய முயற்சியே ஆழ்வான் திருக்கண்களையிழப்பதற்கும், பெரிய நம்பி திருநாடலங்கரிப்பதற்கும், எம்பெருமானார் கமுகதேசம் எழுந்தருளுவதற்கும் காரண மென்பது கீழ் விவரித்த வரலாற்றினால் விளங்குமே; ஆகவே அப்படி அனைவரையும் பரித்தவிப் பித்த அந்த நாலூரானுக்குக் கொடிய நரகம் நேருமென்று நிச்சயித்த ஆழ்வான் 'தம்மைத் [illegible] குலத்திலே பிறந்தவொருவன் இவ்வினை பகுதியில் விழலாகாது' என்றதிருக்கருணை [illegible] அல்லது அவன் உய்வுபெற வழியில்லை என்றறிந்திட்டு, பரமதீர்கதரிசியான ஆழ்வாந் [illegible] நச்சறி வேண்டினார். [illegible] திறத்திலும் அன்புடைமை யென்னும் இச்சிறந்த திருக்குணம் ஆழ்வானொருவர்க்கே அஸாதாரணமென்பது விவாதமற்ற விஷயம்.

உடையவரும் ஆழ்வானும் திருவரங்கம் மீளுதல்.

பெருமாளன் திருமுன்பே "நான் பெறும்பேறு நாலூரானும் பெறவேணும்" என்று ஆழ்வான் ப்ரார்த்திக்கவும், பெருமாளன் அங்கீகரித்தருளி 'அப்படியே பெறக்கடவன்' என்று சொல்லியருளின [illegible] இதைக் கேட்டு எம்பெருமானார் [illegible] வந்து திருவுள்ளம் [illegible] 'ஐயோ! இப்பொழுது [illegible] [illegible] தீக்கட்டியதுன விக்கிலியே' என்றார். ஆழ்வானே [illegible] என் [illegible] [illegible] [illegible] இருவரையும் [illegible] 'இனி என்செய்வது!' என்று [illegible] [illegible] எம்பெரு மானார் [illegible] பரிதபித்திருக்கையை உணர்ந்த பெருமாள் [illegible] இராமாநுச! ஆழ்வான் [illegible] என்று [illegible] [illegible] இருந்த திருவரங்க [illegible] திருப்பிவிட்டருளும் [illegible] [illegible] இவையெல்லாம் [illegible] உடையவர் திருமேனியையும் [illegible] [illegible] எம்பெருமானார் [illegible], திருவுள்ளமுவந்து ஆழ்வானுடன் மீண்டு [illegible] எழுந்தருளினார்.

திருவரங்கத்திலுள்ளார் ஆழ்வானது திருக்குணத்தை நோக்கி வியத்தல்.

ஒருநாள் ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் ஆழ்வானருகே வந்து "நாலூரான் [illegible] வந்திருந்த நம் தர்சநத்துக்கே மஹாபராதியாயிருக்க, அவனை 'அபராதி—க்ஷமாபி' என் னும் படியான கொடிய தண்டனைக்கு ஆளாக்கவேண்டியது அவசியமாயிருக்க, அப்படியில்லா மற்ப [illegible] மோக்ஷமளிக்கவேணுமென்று பெருமாளைப் பெருமாள் ஸந்நிதியில் வேண்டிக் கொண்டீரே, இஃது என்ன அபசாரம்!" என்று முறையிட, "அந்தோ! அப்படிப்பட்ட பாவிகளுக்கன்றோ இரக்கவேண்டியது; பிறருக்குக் கண்ணீர் வார்த்தல் பயனென்?" என்று

[illegible] எம்பெருமானாருடைய திருவம் [illegible] தமக்கு [illegible] [illegible] [illegible] திருக்குசேல்க.

ஆழ்வான் பணிக்க, அது கேட்டவர்கள் இவருடைய பூததயாகுணத்துக்கு மிகவும் வியந்தனர். எம்பெருமானாரிடத்திலும் அவகாசம் பெறாத ஸத்குணங்கள் ஆழ்வானிடத்தே அழகாக அமைந்திருந்தனவென்று ப்ரஸித்தமாயிற்று.

ஆழ்வான் பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்குப் பணித்த வார்த்தை.

ஆழ்வானுடைய சிஷ்யர்கள் பலரிலே 'பிள்ளைப்பிள்ளையாழ்வான்' என்பரொருவரிருந்தார்; அவர் நற்குல நற்செல்வம் முதலியவற்றாலே மேன்மைபெற்றிருந்ததால் சிறிது அஹங்காரங்கொண்டு பாகவதர்கள் திறத்திலே விநயமின்றிக்கே அபசாரப்பட்டுக்கொண்டேயிருக்கிறபடியை ஆழ்வான்கண்டு 'இவர்க்கு இந்த பாகவதாபசாரமும் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தித் தானே மேலாகி விநாசபர்யந்தமாக்கிவிடும்; அதுக்கு வேலியிட்டுவைக்கவேணும்' என்று திருவுள்ளம்பற்றி ஒரு புண்யதினத்திலே நீராடின பின்பு இவரைப்பார்த்து, 'பிள்ளைப்பிள்ளாய்! புண்யகாலமென்று எல்லாரும் பூமிதானம், ஸ்வர்ணதானம், அந்நதானம், வஸ்த்ரதானம் என்றாற்போலே தானங்கள் பண்ணுகிறார்களன்றோ; இக்காலத்திலே நீரும் நமக்கொரு தானம் பண்ணமாட்டீரோ?' என்று கேட்க; 'அடியேன் எத்தை தானம் பண்ணுவது? எல்லாம் ஏற்கனவே ஸ்வாமியினுடையதேயன்றோ' என்று அவர் சொல்ல; 'அவ்வளவு போராது; மனமொழிமெய்களென்கிற முக்கரணங்களாலும் பாகவதாபசாரப்படாமல் இருக்கக்கடவேன்' என்று நம் கையிலே தாரைவார்த்து தத்தம் பண்ணித் தரவேணும்' என்று ஆழ்வானருளிச்செய்ய; அப்படியே அவரும் உதகம் பண்ணிக்கொடுத்த பின்பு ஒருநாள் பூர்வவாஸனையாலே ஒரு பாகவதர் திறத்திலே மாநஸிகமாக அபசாரப்படநேர்ந்துவிடவே, 'நாம் இனி முடிந்தோம்' என்று பயப்பட்டு அன்று ஆழ்வான் ஸந்நிதிக்கு விடைகொள்ள மாட்டாமல் தம் திருமாளிகையிலேயே மறைந்து வருந்திக்கிடக்க, இவர் வழக்கப்படி வருகிற காலத்தில் வரக் காணாமையாலே ஆழ்வான் இவர் திருமாளிகையிலே யெழுந்தருளி விசாரிக்கும்போது தாம் நெஞ்சினால் பாகவதாபசாரப்பட்டமையைக் கண்ணுங் கண்ணீருமாய் விண்ணப்பஞ்செய்து "மனமொழி மெய்களிலொன்றிலும் அபசாரம் விளையாதபடி இப்பொல்லாவழுக்குடம்புடனே யிருப்பது அரிதாயிருக்கின்றதே, என் செய்யக்கடவேன்?" என்று திருவடிகளைக் கட்டிக்கொண்டு கிடந்து க்லேசப்பட, 'இத்தனை அநுதாபம் இவர்க்கு உண்டாயிற்றே!' என்று ஆழ்வான் உகந்தருளி, "பிள்ளைப்பிள்ளாய்! நெஞ்சினால் நினைத்ததற்கு அநுதாபமுண்டாகவே எம்பெருமான் பொறுத்தருள்வன்; ப்ரத்யக்ஷத்தில் ராஜதண்டம் நேருமென்கிற அச்சத்தினால் சரீரமூலமாக ஒருவரையும் நலியமாட்டீர்; ஆனபின்பு, மாநஸிகமும் காயிகமுமான அபசாரங்களிரண்டையும் உமக்குக் கழித்துத் தந்தோம்; இனி, வாக்கை மாத்திரம் நன்றாகக் குறிக்கொண்டு ஸாவதாநராய் வர்த்திக்கக் கடவீர்" என்றருளிச் செய்தார்.

ஆழ்வான், பட்டருக்கு ஆசாரியருமானது.

எம்பெருமானின்னருளாலே ஆழ்வானுக்கு இரண்டு திருக்குமாரர்களவதரித்தமை மேலே சொல்லப்பட்டது. அத்திருக்குமாரர்களின் அவதாரத்தைக் கேள்விப்பட்ட ஸ்ரீபாஷ்யகாரர் பெருமகிழ்ச்சிகொண்டு பதினோராநாளிலே சிஷ்யவர்க்கத்துடன் ஆழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளி, தமது ப்ரதான சிஷ்யர்களில் ஒருவரான எம்பாரை நோக்கி 'குழந்தைகளை எடுத்துக் கொண்டு வாரும்' என்ன; அவர் அங்ஙனமே ப்ரபந்நகுலக் கொழுந்தான அக்குழந்தைகளை எடுத்து வரும்போது த்ருஷ்டி தோஷாதிகள் தாக்காதபடி ரக்ஷையாக த்வய மென்னும் மந்த்ர

ரத்தத்தை அநுஸந்தித்து வாழ்த்திக்கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானாருக்குக் காட்டினார்; அவர் மிக்க களிப்புடனே ஆதரத்துடனே அவர்க்கும் தம் திருக்கண்களால் நோக்கிக் கடாக்ஷிக்கும் போது அந்தெய்வீக சிசுக்களின் தேஜோவிசேஷத்தைக்கண்டு விஸ்மயங்கொண்டு எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே! இங்ஙனம் ஆகும்படி என் செய்தீர்?' என்று வினவ, எம்பார், 'குழந்தைகட்குக் காப்பாக த்வயாநுஸந்தானம் செய்து கொண்டு வந்தேன்' என்று சொல்ல, உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரைப் பார்த்து 'இக்குழந்தைகள் உஜ்ஜீவிக்கும் வகையை காடிச்செய்ததற்கு ஏற்பட்டவராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக்கடவீர்' என்று நியமித்தருளினரென்றும், அப்படியே ஆழ்வான் திருக்குமாரர்கட்கு எம்பாரே ஆசார்ய க்ருத்யங்கள் செய்தருளினரென்றும், இதனாலேயே எம்பெருமானார், எம்பார், பட்டர், நஞ்சீயர் என்றிப்படி ஆசார்ய பரம்பரை வருகிறதென்றும் ப்ரஸித்தமாயிருக்கும். இங்ஙனேயிருக்கச் செய்தேயும் ஆழ்வானுக்கும் ஆசார்யபரம்பரையிலே அந்வயப்ரவேசம் உண்டாயிற்று. எங்ஙனேயெனில்; ஆழ்வான் திருக்குமாரர்கட்குத் திருவாய்மொழிப் பொருள் கற்பித்து வரும்போது, * "எண்பெருக்கந்நலத்தொண்பொருளீறில, வண்புகழ் நாரணன் திண்கழல்சேரே" என்கிற பாசுரத்தளவிலே வந்தவாறே அது திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கிற பாசுரமாகையாலும், மந்த்ரார்த்தம் ஆசார்யரிடத்திலேயே கேட்கவேண்டியதாதலாலும் அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசார்யர் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்ல; அதனை விரைவில் அறிந்து கொள்ளவேணுமென்னும் அவாவினால் உடனே அவர்கள் எழுந்து தம் ஆசார்யரான எம்பார் எழுந்தருளியிருக்குமிடத்தைக் குறித்துப் போகப்புக்கவளவில், ஆழ்வான் "மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்" என்கிறபடியே யாக்கை நிலையாமையைத் திருவுள்ளத்திற் கொண்டு அவர்களை மறித்து 'இன்னபோது இன்னாரிருப்பார் இன்னார் போவரென்பது தெரியாது; ஆகையால் இருந்து கேளுங்கள்' என்று, திருமந்திரத்தைச் சொல்லி இப்பாட்டின் பொருளையும் விவரித்து 'இப்பாசுரத்தைத் திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்' என்று பணித்தருளினமையால் திருக்குமாரர்க்கு ஆழ்வானும் ஒரு ஆசார்யராக அமைந்தருளினார். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவம் அருளிச் செய்யும்போது ஆசார்ய வந்தனம் செய்கிற முதல் ச்லோகத்திலே "வந்தே கோவிந்த தாதௌ—எம்பாரையும் திருத்தகப்பனாரையும் தொழுகின்றேன்" என்றருளிச் செய்தது உபயஸம்பந்தமும் தமக்கு உண்டானது பற்றியேயாம்.

"சிறுமானிசர்" என்னுமருளிச்செயற்கு ஆழ்வான் பொருள் விவரித்தது.

பட்டர், சிறு பிராயத்திலே ஒரு நாள் ஆழ்வான் திருவாய்மொழி அநுஸந்திக்கும் போது "உறுமோ பாவியேனுக்கு" (8-10-3) என்ற பாசுரத்தில் "சிறுமா மனிசராய் என்னை யாண்டார் இங்கே திரியவே" என்றதைக் கேட்டு அதில் சிறுமாமனிசர் என்றதைக் குறித்து ஆக்ஷேபங்கொண்டு 'ஒன்றுக்கொன்று எதிர்த்தட்டான சிறுமை பெருமை என்கிற குணங்களிரண்டும் ஒரு பொருளினிடத்து ஒன்று சேர்ந்திருக்குமோ? ஆழ்வார் "சிறுமாமனிசர்" என்று இரண்டையும் ஒருவரிடத்தே சேர அருளிச்செய்தது பொருந்துவது எங்ஙனே?' என்று திருத்தந்தையாரை வினவினர். அதற்கு ஆழ்வான் ஆலோசித்து 'பிள்ளாய்! நன்று வினவினாய்; உனக்கு உபநயனமாகாமையால் இப்போது வேதசாஸ்திரங்களைக்கொண்டு விடை சொல்லலாகாது; ஆயினும் ப்ரத்யக்ஷத்திற் காட்டுகிறேன் காண்' என்று சொல்லிச் சில பெரியோர்களைக் காட்டி "திருமேனி சிறுத்து ஞானம் பெருத்திருக்கிற முதலியாண்டான் அருளாளப்

பெருமாளெம்பெருமானார் போல்வாரைச் சிறுமாமனிசர் என்னக் கட்டிலேயே; முதலியாண்டான், எம்பார் முதலிய பெரியோர்கள் உலகத்தாரோடொக்க அந்நபானாதிகள் கொள்வதோடு எம்பெருமான் பக்கல் ஈடுபடுவதிற் பரமபதத்து நித்ய ஸூரிகளைப்போல் ஆதலால், இப்படிப் பட்டவர்கள் சிறுமாமனிசர் என்னத் தக்கவரன்றோ? இங்ஙனமே வடிவு சிறுத்து மஹிமை பெருத்தவர்களும், மனிதரென்று பார்க்கும்போது சிறுமை தோன்றினும், பகவத்பக்தி ஞானம் அநுஷ்டானம் முதலிய நற்குணங்களாலே நோக்குமளவில் நித்ய முக்தர்களினும் மேன்மைபெற்று விளங்குகிறவர்களுமான மஹாபுருஷர்களையே ஆழ்வார் சிறுமாமனிசரென்று குறித்தருளினர்' என்றருளிச்செய்ய அதனைக்கேட்ட பட்டர் 'நன்று, நன்று' என்று இசைவு கொண்டார்.

ஆழ்வானுடைய குடும்பகாரியத்தை எம்பெருமானே நிர்வஹித்தது.

திருக்குமாரர்களான பட்டரும் ஸ்ரீராமப்பிள்ளையும் ஸாங்கோபாங்கமாக வேதவேதாந்தங்களைப் பயின்று ஸகல வித்யாபாரங்கதர்களாகி விவாஹத்துக்கு உரிய பருவத்தை யடைந்தவளவிலே திருத்தாயாரான ஆண்டாள் ஆழ்வானைப் பார்த்து 'இவர்கட்கு விவாஹம் செய்விக்க வேண்டாமோ?' என்று விண்ணப்பம் செய்தாள். அதுகேட்ட ஆழ்வான் அஹங்கார மமகாரங்கள் சிறிதுமில்லாத ஆசார்ய பரதந்த்ரராதலால், உடையவர் திருமுன்பே சென்று 'இவர்களுக்கு மணஞ் செய்விக்க வேண்டுமாமே' என்று விஜ்ஞாபிக்க, உடையவரும் தமது ஆசார்யரான பெரியநம்பியின் உறவினர்களைக் குறிப்பிட்டு அவர்களிடத்து இவர்களுக்குப் பெண்கொண்டால் உசிதமாயிருக்குமென்று தெரிவிக்க, அக்கருத்தை மேற்கொண்டு ஆழ்வான் அவர்களிடத்திலே சென்று பெண் கேட்க, அவர்கள் கொடுப்பதாக முதலிற் சொல்லிப் பின்பு அநுசித ஸம்பந்தமென்று இசையாதிருந்தார்கள். இப்படி சிலகாலம் கழிந்தவளவிலே, பிள்ளைகளின் விவாஹத்தைக் குறித்து ஆண்டாள் ஆழ்வானை மீண்டும் தூண்ட, அவர் 'ஈச்வர குடும்பத்துக்கு என்னை இருந்து கரையச் சொல்லுகிறீரோ? எனக்கு நம்பெருமான் ஸந்நிதியிலே போனவாறே பிள்ளைகளை வாக்காட்டு' என்று சொல்லி, மற்றை நாள் பெருமாளைத் திருவடிதொழப் போனபோது பிள்ளைகளும் வந்து நிற்க, பெருமாள் அருள்பாடிட்டு "ஆழ்வான்! ஒன்று சொல்லுவாப்போலே யிருந்தாயே, சொல்லிக்காண்" என்று நியமிக்க, "இப்புத்ரர்க்கு மணம்புரிவிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களே!" என்று ஆழ்வான் விண்ணப்பம் செய்தனர். பெருமாள் அதனை ஏற்றுக்கொண்டு 'அதற்கு உமக்கென்ன கவலை? நாமே கருவியாகச் செய்விக்கிறோம்' என்று திருவுள்ளமாயருளி, பெண்கொடுக்கும்படி பெரியநம்பி புறத்தவர்க்கு ஸ்வப்னம் காட்டியருளினர். அங்ஙனம் பெருமாள் ஸ்வப்னத்தில் எழுந்தருளி ஆழ்வான் குமாரர்களுக்குக் கன்னிகைகளைக் கொடுக்கும்படி கட்டளையிட்டதைக் குறித்து அவர்கள் மிக அஞ்சி அப்படியே இசைந்து மற்றைநாள் காலையிலேயே ஆழ்வான் பக்கல் வந்து பெண்கொடுக்கிறோமென்று சொல்லித் தங்கள் குமாரிகளைப் பட்டர்க்கும் ஸ்ரீராமப்பிள்ளைக்கும் கன்னிகாதானஞ்செய்து வெகு சிறப்பாக விவாஹம் நடத்தினர். §இதனால் ஆழ்வானுடைய குடும்பகாரியமும் எம்பெருமான் தலையிலே கிடந்ததென்பது விளங்கும்.

அருளிச்செயல்களில் ஆழ்வானுடைய நிர்வாஹம்.

நம் ஆசார்யர்களெல்லாரும் ஸகல சாஸ்த்ரங்களிலும் வல்லவர்களாயிருக்கச்செய்தேயும் ஆழ்வார்களுடைய ஈரச் சொற்களையே கொண்டு போதுபோக்குவர்கள். ஸகல சாஸ்த்-

§ திருவாய்மொழி (5-5-7) "போதற்கவன் பழி ஒக்குடிக்கு" என்ற பாட்டின் ஈடு முப்பத்தாறு ஆயிரத்தில் இதன் கருத்துக் காண்க.

சார்த்தங்களையும் அருளிச்செயல்களிலே காண்பித்து அநுபவிப்பர்கள். இப்படிப்பட்ட அநுபவம் ஆழ்வானுக்கு அதிகமாயிருக்கும். திவ்ய ப்ரபந்தங்களிற் பல பாசுரங்களிலே ஆழ்வானுடைய நிர்வாஹமென்று அருமையாகக் கொண்டாடப்படும் நிர்வாஹங்களுண்டு. விரிப்பிற் பெருகுமாதலால் ஒன்றிரண்டு காட்டுவோமிங்கு.

திருவாய்மொழியில் ஆழ்வார் நாயகிபாவனையுடன் பேசுகிற திருப்பதிகங்களில் "மாசறு சோதி" (5-3.) என்பது மொன்று. அத்திருவாய்மொழியை ஆழ்வான் ஒருநாள் ராஜேந்த்ர சோழனென்னுமிடத்திலே அற்புதமாக உபந்யஸிக்க நேர்ந்தபோது; அதில் ஏழாம் பாசுரத்தை உபந்யஸிக்குங்காலத்து "தலையில் வணங்கவுமாங்கொலோ தையலார் முன்பே" என்ற சந்தடியின் பொருளை விவரிக்குமளவில் 'ஆமருவி நிரைமேய்த்தான் நம்பியார்' என்னும் பெயரையுடையராய் நூறுபிராயம் போந்திருப்பாரொரு பெரியவர் நடுங்க நடுங்க எழுந்திருந்து நின்று "ஸ்வாமின்! நாயகி பாசுரமாகச் சொல்லுகிற இத்திருவாய்மொழியில் 'தலையில் வணங்கவுமாங்கொலோ' என்னக்கூடுமோ? தலைவி தலைவனைத் தலையால் வணங்குவதென்பதுண்டோ?" என்று கேட்க, "பிராட்டி திருவடியிடத்தில் ஸந்தேசம் சொல்லியனுப்பும்போது, "கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவே யம் மனஸ்விநீ—தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச சிரஸா சாபிவாதய." என்று சொன்ன ஸ்ரீராமாயண ச்லோகத்தை யெடுத்து மிகவு மழகாக உபந்யஸித்து "—மமார்த்தே...சிரஸா அபிவாதய" [எனக்காக அவரைத் தலையால் வணங்கு] என்று பிராட்டி சொன்னது காண்மின்" என்றருளிச்செய்ய, அப்பெரியவர் பெருமகிழ்ச்சி கொண்டார். நாலாயிர திவ்ய ப்ரபந்த வியாக்கியானங்களில் இங்ஙனே பல விஷயங்கள் காண்க.

ஆழ்வானுடைய திவ்ய க்ரந்தங்கள்.

திருமாலிருஞ்சோலை யாத்திரையில் அருளிச்செய்த மூன்று ஸ்தவங்களும், பிறகு எம்பெருமானார் நியமனத்தினாலருளிச்செய்த வரதராஜஸ்தவமும், அதன்பிறகு அருளிச்செய்த ஸ்ரீ ஸ்தவமும் ஆக "பஞ்ச ஸ்தவங்கள்" ஆழ்வானுடைய திவ்ய ஸூக்தியாக ப்ரஸித்தமாயிருக்கும். பட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் "அவிஜ்ஞாதா" என்னும் திருநாமத்தை வியாக்யானிக்குமிடத்து, "ஸர்வஜ்ஞதாம் ஏவமுபாலபாமஹே த்வம் த்வஜ்ஞ ஏவாச்ரித தோஷ தோஷண:" என்கிற ச்லோகத்தை உதாஹரித்து, இது நம் திருத்தகப்பனாருளிச் செய்ததாகவும் ப்ரஸாதித்திருப்பதை நோக்குங்கால் இந்த ச்லோகம் பஞ்சஸ்தவங்களுள் இல்லாமையாலே வேறு சில ஸ்தோத்ரங்களும் ஆழ்வானருளிச் செய்துள்ளார் என்றறியலாகிறது.

ஸ்ரீ தேசிகனருளிச்செய்த ரஹஸ்யத்ரய ஸாரத்தில் சரமச் லோகாதிகாரத்திலே "பட்டரும் ஆழ்வானும் தந்தாங்களருளிச்செய்த நித்யங்களிலே" என்றிருக்கக் காண்கையாலே ஆழ்வான் நித்யக்ரந்தமு மொன்றருளிச்செய்திருப்பதாக விளங்குகின்றது. ஆனால் அது கிடைக்கப்பெற்றிலோம். இன்னமும் அவ்விடத்திலேயே "ஆழ்வானுடைய சரம ச்லோக வ்யாக்யானத்திலும் இவ்வாறே வியவஸ்திதமானமையால் ஒரு விரோதமுமில்லை" என்கிற பங்க்தியும் காண்கிறது. இதனால் ஆழ்வான் சரம ச்லோக வ்யாக்யானரூபமாக ஒரு க்ரந்த மருளிச்செய்தமை விளங்குகின்றது; இதுவும் கிடைக்கப் பெறுகின்றிலோம்.

யமகரத்னாகரம் என்கிற அற்புதமான ஒரு க்ரந்தம் ப்ரஸித்தமாகவுள்ளது. இது ஸ்ரீ க்ருஷ்ணாவதார சரித்திரங்களைப் பரக்கப்பேசுவதொரு யமகமயமான ஸம்ஸ்க்ருத காவ்யம். பதினாறு ஆச்வாஸங்களையுடையது; இது சிறந்த வியாக்கியானத்துடன் ஆந்த்ரலிபியில்

முத்தணரும் செய்யப் பெற்றிருக்கின்றது. இந்நூலின் அருமை பெருமைகளைப் பேசுதல் யார்க்கும் நிலமன்று. மூலமும் வியாக்யானமும் ஆகவிரண்டும் ஆழ்வான் தாமே அருளிச் செய்ததாக அச்சிடப்பட்டிருக்கக் காண்கிறோம். "ப்ரணிபத்ய பரம புருஷம் ஸ்ரீவத்ஸாங்க: பராசரார்யநாமா, ஸ்வயமேவ யமகரத்நாகர வ்யாக்ருதிம் கர்த்துமாரபதே." என்கிற ஒரு ச்லோகமும் வியாக்யானத் தொடக்கத்தில் காண்கிறது. பராசரரென்னும் மறுபெயருடைய ஸ்ரீவத்ஸாங்கர் இக்காவ்யத்திற்கும் வ்யாக்யானத்திற்கும் கர்த்தா என்று நன்கு விளங்குகின்றது. 'ஸ்ரீவத்ஸாங்கர்' என்கிற திருநாமம் ஆழ்வானுக்குத் தவிர மற்று யார்க்கேனும் இருந்ததாகக் கேள்வியில்லை; 'பராசரர்' என்கிற மறுபெயர் ஆழ்வானுக்கு இருந்ததாக ப்ரஸித்தி இல்லை. இக்காவ்யத்தில் இரண்டாவது ஆச்வாஸத்தில் பதினெட்டாம் ச்லோகத்தின் வியாக்யானத்தில்—எம்பெருமானாருளிச் செய்த ஸ்ரீபாஷ்யத்தில் தமாராதிகரணத்திலுள்ள தொரு வாக்யத்தை அநுவதித்தெடுத்து 'அதில் சொன்னபொருள் எம்பார் சரிதத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது: கண்டனயுக்திகள் முதலியவற்றின் விரிவை அங்கே கண்டுகொள்வது' என்று கருத்துப்படச் சில வாக்யங்கள் காண்கின்றன. அவற்றை நோக்குங்கால் இந்த க்ரந்தம் ஆழ்வானருளிச்செய்ததன்றென்று நிர்ணயிக்க நேருகின்றது. ஆனால், மேற்குறித்த வாக்யங்களில் ப்ரபலமான அச்சுப்பிழைகளிருப்பதாகவே நாம் கொள்ளவேணும்; மேற்குறித்த வாக்யங்கள் உண்மையாயின் இந்த க்ரந்தம் எம்பெருமானார்க்கு ப்ரதிபக்ஷியான வொருவரால் இயற்றப்பட்டதாகவேணும்; அது சொல்லவொண்ணாது; க்ரந்தத் தொடக்கத்தில், ஆசார்ய நமஸ்கார ப்ரகரணத்தில், நம்மாழ்வார், ஆளவந்தார், எம்பெருமானார் ஆகிய மூவரையும் மூன்று ச்லோகங்களாலே ஆச்சரியமாகப் புகழ்ந்து பேசி வணங்கியிருப்பதால் எம்பெருமானார் திருவடிகளை ஆச்ரயித்து உஜ்ஜீவித்தவொருவரே இந்த க்ரந்தகர்த்தாவாக இருக்க வுரியவர். எம்பெருமானார்க்குப் பிறகு வேறொரு ஆசார்யரைப் பற்றின ச்லோக மில்லாமையால் உடையவர்க்கு ஸாக்ஷாத் சிஷ்யரான ஒருவரே இயற்றியிருக்க வேணுமென்பது திண்ணம். க்ரந்தத்தின் சொற்சுவையையும் பொருட்சுவையையும் நோக்குங்கால் ஆழ்வான் தவிர வேறு யாரையும் நினைக்கவும் ப்ரஸக்தியில்லை. ஆகவே, யமகரத்நாகரமும் அதன் வியாக்யானமும் ஆழ்வான் ஸ்ரீஸூக்திகளே யென்று கொள்ளக் குறையில்லை யென்னலாம்.

கூரேச விஜயம் என்கிற ஒரு க்ரந்தம் ஆழ்வானருளிச்செய்ததாகச் சிலர் சொல்லுவதுண்டு; சோழராஜ ஸபையில் ஆழ்வான் உபந்யஸித்த பூர்வபக்ஷஸித்தாந்த கோடிக்ரமங்களைப் பின்புள்ளார் எடுத்தெடுத்துக் கூரேச விஜயமென்று திருநாமம் சாத்தினவர்களேயன்றி இது ஆழ்வானருளிச்செயலன்று. இதைப்பற்றின விரிவை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

ஆழ்வான் திருநாட்டுக்கு நியமனம் பெறுதல்.

இங்ஙனே ஆழ்வான் லோகோஜ்ஜீவநங்களான ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்துகொண்டு ஸ்ரீரங்கராஜஸ்தவாதிகளாலே ஒப்புயர்வற்று விளங்கிவருங்காலில், எம்பெருமானார் ஸந்நிதியிலே திருவாய்மொழி காலக்ஷேபம் நடந்துவருகிற அடைவில், (10–9) "சூழ்விசும் பணிமுகில் திருவாய்மொழியளவிலே வந்தவாறே, "முடியுடைவானவர் முறை முறை எதிர் கொள்ள" என்கிற பாசுரத்தில் 'பரமபதத்திலே முற்பட்டிருக்குமவர்கள் பிற்பட்டு வருமவர்களை எதிர்கொண்டு உபசரிப்பார்கள்' என்று பரக்க அருளிச் செய்ததை உடனிருந்து கேட்ட ஆழ்வான், 'நாம் பரமபதம்போக உடையவர்க்குப் பிற்பட்டோமாகில் அவ்விடத்திலே உடையவர் நம்மை எதிர்கொண்டு உபசரிக்கவேண்டும்படி நமக்கு மஹாபசாரம் விளைவதாகையால் பரமபதத்துக்கு நாம் முற்படவேணும்' என்று துணிவுகொண்டு எம்பெருமானார் பக்கலிலே விண்ணப்பம் செய்யாமல் நம்பெருமாள்முன்பே போய் நிற்க, பெருமாளும்

ஆழ்வானை நோக்கி “நம் கூரத்தாழ்வான்! நம்மை சொல்லிக்கொள்ள வந்தாற்போலே இருக்கின்றீர்” என்ன; ஆழ்வாரும் ஒரு ச்லோகத்தை விண்ணப்பஞ்செய்து மிக உருக்கமாக உபந்யஸிக்க, பெருமாள் திருவுள்ளமுவந்து ‘உமக்கு வேண்டிற்றெல்லாம் தருகிறோம், வேண்டிக்கொள்ளும்’ என்ன; ஆழ்வாரும் ‘அடியேனுக்குப் பண்டே எல்லாம் தந்தருளிற்று’ என்ன; பெருமாளும் ‘அப்படியன்று, இப்போதும் வேண்டிக்கொள்ளும்; நம்மிடம் ... நம் இராமாநுசனுக்காக; தருகிறோம்’ என்று நிர்ப்பந்திக்க, ஆழ்வாரும் ‘இந்த அழுக்குடம்பை விடுவித்து திருவடிகளில் நித்ய கைங்கர்யத்தைத் தந்தருளவேணும்’ என்று ப்ரார்த்திக்க, பெருமாளும் அதைக்கேட்டு ‘அந்தோ! ஆழ்வானைப் பிரியவேண்டிற்றே!’ என்று மிகவும் வருந்தி ‘இதை ஒழிய வேறு வரம் வேண்டிக்கொள்ளும்’ என்ன; ஆழ்வானும் ‘ஒரு சொல்லே சொல்லுமவனுடைய பெருமையைப் பொய்யாக்கலாமோ? வேண்டினதைத் தருகிறோ மென்றருளிச்செய்து வைத்து மீண்டு இப்படி மறுக்கலாமோ? அடியேன் வேண்டினதையே தந்தருளவேணும்” என்று ஆழ்வான் ப்ரார்த்திக்க, பெருமாள் ‘இனிச் செய்வதொன்றில்லை’ என்று துணிந்து “உமக்கும் உம்முடைய திருநாமம் சொல்லுமவர்கட்கும் உம்முடைய ஸம்பந்தம் பெற்றவர்கட்கும் மோக்ஷம் தந்தோம்” என்று திருவாய்மலர்ந்தருளி, திருப்பரியட்டமும் தளிகை ப்ரஸாதமும் பூர்ணமாலைத் தண்டுமாலையும் திருக்கைச் சிறப்பும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார்.

ஆழ்வான் திருநாட்டுக்கு நியமனம் பெற்றதை எம்பெருமானார் உணர்ந்து மகிழ்தலும் வருந்துதலும்.

ஆழ்வான் இங்ஙனே திருநாட்டுக்கு வரம் பெற்றபடியை எம்பெருமானார் கேட்டருளி “முன்பு நாம் திருக்கோட்டியூர் நம்பி ஸந்நிதியிலே மறைவாகத்தை உபதேசம் பெற்றபோது ‘இவ்வர்த்தத்தைப் பரமரஹஸ்யமாகப் பேணிக்கொண்டிரும்’ என்று நம்பிகள் நியமித்தருளியிருக்க மாறாக அத்திருக்கோட்டியூரிலேயே தெற்காழ்வார் திருவோலக்கத்திலே அப்பொருளைப் பலருமறிய வெளியிட்டபடியால் ஆசார்ய நியமனத்தை அதிக்ரமித்த தற்குப் பலனாகிய நரகமே நமக்கு ப்ராப்தமாயுள்ளது; மோக்ஷம் பெற நமக்கு வழியில்லை என்றிருந்தேன்; இப்போது ‘ஆழ்வானோடு ஸம்பந்தமுடையார்க்கும் மோக்ஷம் தந்தோம்’ என்று நம்பெருமாள் நியமித்தருளினபடியால் இனி நமக்கு ஒரு குறையுமில்லை; நமக்கு ஆழ்வானோடே ஸம்பந்தமுண்டே” என்று களித்துக் காஷாயத்தை ஆகாசத்திலே வீசி பெரிது மகிழ்ந்திருக்கப் போந்துவிட்டார். இதனை அடியொற்றியே,

அச்லாகநீய படலஸ்ய ஹி த்யக்த்வ்யமக்ரிம் பூர்வே
ஸூக்த்யா ஸமஸ்த ஜகதாம் நிஜ முக்திமாப்ய:
யோ ராமாநுஜமுநேரபி முக்திம் ஆஸ்த
யத்ஸம்பந்தாத் அமநுத கதம் வர்ண்யதே கூரநாத:

என்னும் ச்லோகம் அவதரித்தது.

[இதனால் நற்கதி பெறுவதற்கு ஆசார்ய ஸம்பந்தம்போலே ஸத்விஷய ஸம்பந்தமும் உபாயமென்பது தெரிகிறது.]

இங்ஙனே நற்பேற்றை நினைத்துக் களித்த எம்பெருமானார் உடனே வருந்தி “ஐயோ! ஆழ்வானை இழந்து நாம் இங்ஙனே உயிர் வாழ்ந்திருப்பதோ?” என்று மிகவும் திருவுள்ளம் நொந்து ஸ்ரீபாதத்தின் முதலிகளெல்லாரையும் கூட்டிக்கொண்டு ஆழ்வானிருந்த இடத்தேறச்

சென்று 'என் செய்தீர்! என் செய்தீர்!! இப்படியும் எம்மைப் படுகொலையடிக்கலாமோ?' என்றுகேட்க; ஆழ்வானும் பரமபதத்துக்குத் தாம் முற்படவேண்டிய காரணத்தை விண்ணப்பஞ்செய்ய, உடையவர் அதைக்கேட்டு "சாஸ்த்ரம் சைவ க்ரம: என்று அடைவுகெட்டிருக்கும் நித்யவிபூதியிலே நீர் அடைவு தேடினீரே! இப்படியும் ஒரு சேதநர்க்கு ஸாம்யம் உண்டாவதே!" என்று மிகவும் வியாகுலராய்க் கண்ணுங்கண்ணீருமாய் ஆழ்வானை யணைத்துக்கொண்டு விடமாட்டாமல் பெருமலாய்த் திருவுள்ளமுடைகுலைப்பட்டு "ஐயோ ஆழ்வான்! உயிர் நிலையான உம்மைப்பிரிந்து எங்ஙனே தரிப்பேன்; என்னையும் உடன்கொண்டுபோகத் திருவுள்ளம் பற்றினீரில்லையே!, நம்மைவிட்டகன்றுபோக உமக்கு ருசிப்பதே; பரமபதநாதனும் அங்குள்ளாரும் என்ன நோன்பு நோற்றார்களோ!, இங்கு உறங்குகிற பெருமாளும் நாச்சியாரும் என்ன பாபம் பண்ணினோமோ; "இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே!" என்ற பாசுரத்தையும் மறந்திட்டீரே! ஐயோ என்செய்தீர்!, இனி உம் திருவுள்ளம் கலக்கும்படி பல சொல்லிப் பயனென்? உம்முடைய பேற்றுக்கு நாம் விலக்கடியாகலாமோ? சுகமாக நித்யவிபூதி பெற எழுந்தருளீர்" என்று சொல்லி செவியிலே த்வயத்தை அருளிச்செய்ய; அருகிருந்த முதலிகளெல்லாரும் 'இப்போதாக இதுவென்?' என்று கேட்க; நீங்கள் அறிகிலீர்களோ? ராஜகுமாரனுக்கு கற்பூர நிகாயில்லாவிடில் நாக்கு வறளுமாப்போலே இவர்க்கு த்வயமில்லாதபோது நெஞ்சு வறளும் என்றருளிச்செய்து ஆழ்வானுடைய திருமுதுகைத் தடவி அஞ்ஜலித்து விடைகொடுத்தருளினார்.

ஆழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளல்.

உடையவருடைய நியமனமும் பெற்ற ஆழ்வான் உடையவர் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்துகிடக்க, உடையவரும் இரண்டு திருக்கைகளாலும் வாரியெடுக்க, எழுந்திருந்து உடையவர் திருவடித் தாமரைகளைத் தம் திருக்கண்களிலும் திரு மார்பிலும் ஒற்றிக்கொண்டு ஸ்ரீபாததீர்த்தமும் கொண்டு கைகூப்பி 'இனி மடமே எழுந்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்து வடகாவிரிக்கரையளவாக உடையவர் பின்னே செல்ல 'ஆழ்வான்! இனி நில்லும்' என்ன; தெண்டன் ஸமர்ப்பித்து மீண்டு ஆழ்வார் திருமாளிகைக்கு அருகிலிட்ட திருக்காவணத்தின் நடுவே எழுந்தருளியிருந்து (தெளிவாசன) ஆண்டாளைப்பார்த்து 'என்ன நினைத்திருக்கிறாய்?' என்ன; ஆண்டாளும் 'தேவரீர் திருவுள்ளத்தைப் பின்செல்லுகை யொழிய அடியேனுக்கு வேறொரு நினைவுண்டோ?' என்று திருவடிகளிலே தெண்டனிட்டு அஞ்ஜலித்து நிற்க, ஆழ்வானும் பட்டரையும் சீராமப்பிள்ளையையும் அழைத்தருளி 'பெருமாளும் நாச்சியாரும் எழுந்தருளியிருக்க உங்களுக்கு ஒரு குறையுமில்லை; நம்பெருமாள் பெற்று வளர்த்தாரென்று இறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே சரணமென்றிருங்கள்; ஆண்டாள் முகம் கன்றாமல் நடவுங்கள்; பாகவத விஷயங்களிலே சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் அபசாரப் படாதே அவர்களை அநுவர்த்தித்துக்கொண்டு போருங்கள்' என்றருளிச்செய்து தம் திருவடிகளிலே விழுந்துகிடந்த பட்டரையும் சீராமப்பிள்ளையையுமெடுத்துத் திருக்கையாலே கண்ணநீரைத்துடைத்து 'நீங்கள் ப்ராக்ருத ஸம்பந்தத்தை நினைத்து வருந்தினீர்களாகில் உடையவர் திருவடிஸம்பந்தத்தை இழந்தீர்களாவீர்; ஆத்ம ஸம்பந்தத்தை நினைத்து வருந்தினீர்களாகில் நம்முடைய ஒழிக்க வொழியாத உறவை அழித்தீர்களாவீர்' என்று அவர்களைத் தேற்றி, கோயிலுக்கு நேரே பிள்ளைப்பிள்ளையாழ்வான் மடியிலே திருமுடியையும் ஆண்டாள் மடியிலே திருவடிகளையும் வைத்துக்கொண்டு ஆழ்வார் ஆளவந்தார் உடையவர் திருவடிகளைச் சிந்தனைசெய்து கொண்டு அன்றே திருநாட்டுக்கெழுந்தருளினார். பிறகு

எம்பெருமானார் எழுந்தருளி பட்டரைக் கொண்டு சகல கைங்கர்யங்களைப் பெருக்க நடத்தி வருகிறார்.

வைபவகீதம்.

இங்ஙனே ஆழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளினாரகிலும், மொழியைக் கடக்கும் பெரும் புகழான் திவ்யமேனியோடும் அர்ச்சாவதாரத் திருமேனியோடும் இவ்விபூதி யெங்கும் நிறைந்து விளங்குகின்றாராகையால் அவர் திருவுருவ நாமும் கண்கள் குளிரக் கண்டு களிக்கும் பாக்கியமுடையோம்.

பட்டர் வைபவச் சுருக்கம்.

நமது ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானாருடைய பதவியிலே அபிஷிக்தராய் அமர்ந்தும் விஞ்சிய ஞான வைபவத்தையுடையராகிய பட்டர் என்னும் ஆசிரியருடைய வைபவத்தை இங்கே ஒருவாறு சுருக்கமாக அநுஸந்திக்கின்றோம்.

இவ்வாசிரியர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர் என்றும் ஸ்ரீரங்கநாதனுடைய திருக்குமாரர் என்றும் வழங்கப்படுவர். ஆழ்வான் க்ருஹஸ்தாச்ரமத்திலெழுந்தருளியிருக்கச் செய்தேயும் "விஷய விஷய நிவ்ருத்தி தன் மேற்றம்" என்று ஸ்ரீ வசன பூஷணத்திலருளிச் செய்தபடியே விரக்தாக்ரேஸரராக எழுந்தருளியிருந்தவர். இவர் தமது செல்வத்தை முற்றும் துறந்து எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்தது முதல் கடைசிவரையும் உபாதான காலத்திலே ஸ்ரீரங்கத்தில் சில திருமாளிகைகளில் உஞ்சவ்ருத்தி செய்து, அது கொண்டு குடும்ப காரியத்தை நிர்வஹித்துக்கொண்டு ஒவ்வொருநாளும் கிடைக்கிற உணவுப்பொருள்களில் மறுநாளைக்கென்று சிறிதும் சேமப் படுத்தி வைத்துக்கொள்ளாமல் அன்றன்றைக்கே தேவையாக்கிக் கொண்டிருக்குங்கால் ஒருநாள் விடாப் பெருமழை பொழிந்ததனால் வெளியே போய் உபாதானம் செய்து வரக்கூடாமல் போக, அதனால் அன்றைக்கு வெறும் நீர்த்தண்ணீரையே உட்கொண்டு அருளிச்செயலனுஸந்தானமே தாரகமாகக்கொண்டு வேறு உணவின்றியே யிருந்திட, அவ்விரவு பெரிய பெருமாள் அமுது செய்தருளுகிறபோது உண்டான திருச்சின்ன வொலி கேட்டவளவில் இவரது தேவியாரான ஆண்டாள் பெருமாளை நினைந்து, "உம்முடைய அடியவர் பட்டினியிருக்க நீர் குறைவறத் திருவமுது செய்தருளுகிறீரோ?" என்று நினைப்பிட்டவளவிலே ஸர்வஜ்ஞனான ஸ்ரீரங்கநாதன் அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்ளம்பற்றி உடனே தேவரீர் காரிய நிர்வாஹகராகிய உத்தம நம்பிக்கு அர்ச்சகமுகேன கட்டளையிட்டு அப்பொழுது தாம் அமுது செய்த அக்காரவடிசிலை ஸகல பரிஜன பரிவாரங்களுடன் அனுப்பக் கொண்டு ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பியருள, ஆழ்வானும் இதனையறிந்து பரதி யெழுந்து எதிர்கொண்டு மஹாப்ரஸாதமென்று அதில் தமக்கும் தமது தேவிக்குமாக இரண்டு திரளைகளை யெடுத்துக்கொண்டு உத்தம நம்பியை அனுப்பிவிட்டு பகவத்பாகவதருடைய ... ப்ரஸாதத்தை உகந்து அந்த அடிசிலில் ஒரு பகுதியைத் தாம் அமுது செய்து மற்றதைத் தேவியாருக்குக் கொடுத்தருள, முன்பு தசரத சக்ரவர்த்திக்குப் புத்ர காமேஷ்டியில் கிடைத்த பாயஸத்தின் கூறுகளே ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் திருவவதாரத்துக்குக் காரணமானதுபோல இப்பொழுது இவர்க்கும் இத்திரளைப் ப்ரஸாதமே இரண்டு திருக்குமாரர்கள் திருவவதரிப்பதற்கு ஹேதுவாயின. முறையே இவர்களின் திருநாமம் ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீ வேதவ்யாஸபட்டர் என்பனவாம்.

பராசர பட்டர் என்று திருநாமமாயினும் நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலெல்லாம் பட்டர் என்றே இவ்வாசிரியர் வழங்கப்படுவர். பட்டர் என்னும் வடசொல் வேதசாஸ்திரங்களை நன்றாகக் கற்றுணர்ந்த வித்வானையும் ஸ்தோத்ரஞ் செய்யும் தொழிலுடையவனையும் சொல்லும்; ["பட்டாரக"] என்னும் சொல்லும் இத்திறத்ததே. 'விளையும் பயிர் முளையிலே' என்னுமா போலே சிசுவாயிருந்த தன்மையிலேயே இவருடைய திறமையை நன்றுணர்ந்த எம்பெருமானார் இவர்க்குப் பொருத்தமாக பட்டர் என்று திருநாமஞ் சாத்தினதும், அத்திருநாமத்திற்கு மிகப் பொருத்தமாகவே இவரும் ஸர்வஜ்ஞராய்விளங்கிப் புகழ் பெற்றதும் எம்பெருமானாருடைய ஸத்ய ஸங்கல்பத்வத்தை ஸத்யமாக்கினபோலும்.

இங்ஙனமே நாமகரணம் செய்தருள்வதற்காக உடையவர் எம்பாருடன் ஆழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளிக் குழந்தைகளை எடுத்துக் கொண்டு வாரும் என்று எம்பார்க்கு நியமிக்க அவர் அங்ஙனமே ப்ரஸவக்ருஹத்து எழுந்தருளி அக்குழந்தைகளை எடுத்துக் கொண்டு வரும்போது திருஷ்டி தோஷாதிகள் தட்டாதபடி ரக்ஷையாக த்வயமென்னும் மந்த்ர ரத்னத்தை அநுஸந்தித்து காத்துக் கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானார்க்குக் காட்டினார்; அவர் மிக்க களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களால் குளிரக் கடாக்ஷிக்கும்போது அந் தெய்வீக சிசுக்களின் தேஜோ விசேஷத்தைக் கண்டு வியப்புக் கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே, இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்?' என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்கு ரக்ஷாக த்வயாநுஸந்தானம் செய்து கொண்டு வந்தேன்' என்ன; உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரைப் பார்த்து 'இக்குழந்தைகள் உய்யும் வகையைக் காட்டிச் செய்தது நீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்" என்று நியமித்தருளினாரென்றும், அப்படியே அத்திருக் குமாரர்கட்கு எம்பாரே ஆசார்யக்ருத்யங்கள் செய்தருளினாரென்றும், இது பற்றியே, எம்பெருமானார் எம்பார் பட்டர் நஞ்சீயர் என்றிப்படி ஆசார்ய பரம்பரை வருகிறதென்றும் ப்ரஸித்தமாயிருக்கும். இங்ஙனேயிருக்கச் செய்தேயும் ஆழ்வானும் பட்டர்க்கு ஆசார்யராயினர். அது எங்ஙனேயெனில்; ஆழ்வான் திருக்குமாரர்கட்குத் திருவாய்மொழிப் பொருள் கற்பித்து வரும்போது "எண் பெருக்கந் நலத்தொண் பொருளீறில, வண்புகழ் நாரணன், திண்கழல் சேரே" என்கிற பாசுரத்தளவிலே வந்தவாறே, அது திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கிற பாசுரமாகையினாலும், மந்த்ரார்த்தம் ஆசார்யனிடத்திலேயே கேட்டறியவேண்டியதாதலாலும் அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசார்யர் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்ல, எழுந்து தம் ஆசாரியரான எம்பார் எழுந்தருளியிருக்குமிடத்தைக் குறித்துப் போகப் புக்கவளவில் ஆழ்வான் "மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்" என்கிறபடியே யாக்கை நிலையாமையைத் திருவுள்ளம் பற்றி அவர்களை அழைத்து 'இன்னபோது இன்னாரிருப்பார் இன்னார் போவாரென்று தெரியாது, ஆதலால் இருந்து கேளுங்கள்' என்று, திருமந்திரத்தைச் சொல்லி அப்பாசுரத்தின் பொருளையும் விவரித்து 'இப்பாசுரத்தைத் திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்' என்று பணித்தருளினமையால் திருக்குமாரர்க்கு ஆழ்வானும் ஒரு ஆசார்யராக அமைந்தருளினர் என்று ஸம்பிரதாயம் வல்ல பெரியோர் கூறுவர். பட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யம் அருளிச்செய்யும்போது ஆசார்ய வந்தனம் செய்கிற முதல் ச்லோகத்தில் "வந்தே கோவிந்ததாதௌ—எம்பாரையும் திருத்தகப்பனாரையும் தொழுகின்றேன்" என்றருளிச் செய்தது உபயஸம்பந்தமும் தமக்கு உண்டானது பற்றியேயாம். ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவத்திலும் இரண்டு ஆசிரியருக்கும் இரண்டு ச்லோகங்களைத் தனியாக இட்டருளினர்.

பட்டரை இளங்குழந்தைப் பருவத்திலேயே ஸ்ரீ ரங்கநாதன் தனது புத்திரனாக அங்கீகரித்துத் தன்னுடைய ஸந்நிதியிலே திருமணத்தூணினருகே தொட்டிலிடுவித்து ஸ்ரீ ரங்கநாச்சியாரும் தானுமாகச் சீராட்டி வளர்க்க, அங்ஙனம் வளர்கிற அக்குழந்தை தவழ்ந்து சென்று, பெருமாள் அமுதுசெய்வதற்கு முன்பே கொணர்ந்து ஸமர்ப்பிக்கப் படுகிற அடிசிலைக் கைகளால் அளம்பியளைத்து அழுக, பெருமாள் அதுகண்டு உகந்தருளி, "அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள், சிறுகையளாவிய கூழ்" (குறள்) என்றபடி இந்த இன்னடிசிலை மிகவும் பிரியமாக அங்கீகரித்தருள்வாராம். இப்படி ரங்கநாதன் தம்மை அபிமானித்துப் புத்ரஸ்வீகாரம் செய்தருளப் பெற்ற பாக்கியமுடைமையால் பட்டர் ஸ்ரீ ரங்கநாத புத்ரர் என்றும் வழங்கப்பட்டு வந்தார். "வானிட்ட கீர்த்தி வளர் கூரத்தாழ்வான் மகிழ்வுற்ற, தேனிட்ட தார் நம்பெருமாள் குமாரர்....பட்டர்" என்று இவரது சிஷ்யரான பிள்ளைப்பெருமாளையங்கார் (திருவரங்கக் கலம்பகக் காப்புச் செய்யுட்களுள் ஒன்றில்) கூறினர். பட்டர் தாமும் ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்தில் பதினோராம் ச்லோகத்தில் "ஸ்ரீ ரங்கராஜ கமலாபதலாலிதத்வம்" என்றபதத்தினால் இதனை வ்யக்தமாக்கியருளினதும் உணர்க.

இப்பேராசிரியர் ஸகலசாஸ்திரங்களிலும் அபாரமான பாண்டித்யம் பெற்றவர் என்பது இவர் அருளிச்செய்த க்ரந்தங்களுள் ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஒன்றுகொண்டே உணரத் தக்கதாகும். இவர் கவித்திறமையில் ஒத்தாரும் மிக்காருமில்லாதவர் என்பது இவர் அருளிய ஸ்ரீ ரங்கராஜஸ்தவ ஸ்ரீ குணரத்நகோசாதிகளால் நன்கு விளங்கும்.

அருளிச்செயல்களில் அற்புதமான விசேஷார்த்தங்களை அருளிச்செய்வதற்கு இவ்வாசிரியரே அஸாதாரணமான வல்லமைபெற்றவர் என்பது இவ்வப்ரபந்த வியாக்கியானங்களில் பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் அடிக்கடி அருளிச்செய்யுமாற்றால் தெரிகின்றது. வியாக்கியானங்களில், 'என்று பட்டர் அருளிச்செய்வர்' எனவருமிடங்களிலெல்லாம் ஒரு விலக்ஷணமான ரஸாநுபவம் கல்நெஞ்சினர்க்கும் உண்டாவது வழக்கம். இவரது நிர்வாஹங்களில் ஒன்றை ஈண்டெடுத்துக் காட்டுவோம்.—

திருநெடுந்தாண்டகத்தில் 'அறுகால சிறுவண்டே தொழுதேனுன்னை' என்ற பாசுரத்தில் வண்டுக்கு ஸ்வாபாவிகமான ஆறுகால்களுள்ளமையை எதற்காகச் சொல்லிற்று? என்று விமர்சிக்கப் புகுந்த சிலர், இரண்டு காலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக்குறுப்பாக ஆறு கால்கள் இருக்கப் பெற்ற பாக்கியம் என்னே! என்று வியந்து கூறுவதாக நிர்வஹித்தார்கள். இந்த நிர்வாஹத்தில் ஸ்வாரஸ்யமில்லை; வண்டு செல்லுதற்கு ஸாதனம் சிறகேயன்றிக் கால்கள் அல்லவே; ஆகலால் 'அறுகால' என்னும் அடைமொழிக்கு அங்ஙனே கருத்துரைத்தல் பொருந்தாதென்று பட்டர் அருளிச்செய்வதாவது—தொழுதேனுன்னை என்று பேசியிருக்கையாலே என் தலையிலே வைப்பதற்கு ஆறுகால்கள் உண்டாகப் பெற்றதே! என்று வியந்து சொல்லுகிறபடி என்பதாம். (இதனை விவரிப்போம்.) தூது சென்று மீண்டுவந்தால் வண்டின் கால்களைத் தலையிலே வைத்துக்கொண்டு கூத்தாடக் கருதியிருப்பதனால் அதற்குச் சேர இவ்வண்ணம் கருத்துரைத்தபடி. ஸ்வாபதேசத்தில் வண்டாகச் சொல்லுவது ஆசார்யர்களை. ஆசாரியனும் ஆசாரியனுடைய தேவியாரும் அவருடைய திருக்குமாரருமாக மூவரும் உத்தேச்யர் என்பது ஆபஸ்தம்ப ஸூத்ரஸித்தம். மூவர்க்கும் சேர்ந்து ஆறு திருவடிகளாதலால் அதுதோன்றவே அறுகால சிறுவண்டே! என்றது—என்பது பட்டர் திருவுள்ளம். "சொக்கர் பூந்துழாய் முடி எங்குடக் கூத்தர்க்கென் தூதாய், நுங்கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நும்மோடே" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் ஸ்வாபதேசார்த்தத்திற்கு மிகவுமிணங்கியதாமிது.

த்ரிபுவன வீரதேவராயன் என்ற அரசன் பட்டர் வைபவத்தைக் கண்டும் கேட்டும் அவரிடத்து மதிப்புக்கொண்டு ஒரு நாள் 'பட்டரே! நீர் நமது அரண்மனைக்கு ஒருவிசையாவது வரவேணும்' என்று சொல்ல, அதற்கு பட்டர் சிறிதும் இணங்காமல் "நம்பெருமாள் அஞ்சலென்ற கையைவிட்டாலும் அவர் வாசலொழிய வேறொரு போக்கிடமுண்டோ எமக்கு?" என்று சொல்லி மறுத்துவிட்டனர் என்பது ப்ரஸித்தம். தன்னைச் சரணமடைந்தவர்கட்கு ஆனை வெல்லாது செய்து அவர்களைப் பாதுகாத்தலையே விரதமாகக் கொண்டு அவர்களுக்கு அபயமளிப்பவனான பரம புருஷனுக்கு அடிமைப்பட்ட நாம் சில க்ஷுத்ரர்களின் வாசலிலே சென்று துவளக்கடவோ மல்லோம் என்கிற திண்ணிய அத்யவஸாயத்தை வெளியிட்டவாறு.

இன்னமும் பட்டருடைய வைபவங்கள் அபரிமிதமாகவுண்டு; வல்லார்வாய்க் கேட்டு உணர்க. அடுத்த நஞ்சீயர் வைபவத்திலும் இவரது வைபவமே மிகுதியிருக்கும்.

பட்டர் திருவடிகளே சரணம்.

நஞ்சீயர் வைபவம்

இப்பெரியார் அத்வைத ஸம்ப்ரதாயத்தில் அவதரித்திருந்தவர். மாதவாசார்யர் என்பது இவருடைய திருநாமமாக இருந்தது. வேதாந்தி என்பது இவர்க்குச் சிறப்புத் திருநாமம். ஷட்தர்சனங்களுக்கும் உபாஸனமிட்டு சிறந்த வித்வானாக மேல்நாட்டில் எழுந்தருளியிருந்தவர் இவர். மதாந்தரஸ்தர்களான வித்வான்கள் பலரையும் திருத்திப் பணிகொண்டருளின எம்பெருமானார் இவரையும் திருத்திப்பணிகொள்ள விரும்பியிருந்தார். ஆனால் அவருடைய வாழ்நாளில் இந்த மனோரதம் நிறைவேறாதொழியவே தமது சரம ஸமயத்தில் ஆழ்வான் திருக்குமாரரான பட்டரை விசேஷேண கடாக்ஷித்தருளி தர்சனஸ்தாபகராக நியமித்தருளின காலத்து "மேல் நாட்டிலுள்ள வேதாந்தியைத் திருத்திப்பணிகொண்டு வாழ்விக்கக் கடவீர்" என்று நியமனம் தந்தருளலாயிற்று. பட்டரும் அதனை நிறைவேற்றுதற்கு உரிய ஸமயத்தை எதிர்பார்த்திருந்தார்.

இந்நிலைமையில் மேல் நாட்டில் நின்றும் ஒரு அந்தணர் யாத்திரை படையிலே நம்பெருமாள் ஸந்நிதிக்கு விடைகொண்டு பட்டரையும் திருவடி தொழுதார். அப்போது வேதாந்தியின் ப்ரபாவங்களை வார்த்தை படையிலே எடுத்துரைத்தார். "மேல் நாட்டில் வேதாந்தியென்று ஒருபெரிய வித்வான் இருக்கிறார்; அவருடைய வித்வத்தையும் கோஷ்டியும் போலே உமக்குமிருக்கக்கண்டு களிக்கின்றேன்" என்று பட்டரை நோக்கிக் கூறினர். அவர் திரும்பி ஸ்வதேசத்திற்குச் சென்று வேதாந்தியை நோக்கி "ஸ்வாமின்! ஸ்ரீரங்கத்தில் பட்டரென்று ஒருவர் எழுந்தருளியிருக்கிறார்; அவர் அத்விதீய வித்வான்; அவருடைய சிஷ்ய கோஷ்டிகளின் பெருமையும் வாசாமகோசரம்" என்று சொல்ல, வேதாந்தியும், "அவர் நமக்கு ஒத்த வித்வானோ? அவர்க்கு என்ன சாஸ்த்ரம் வரும்?" என்று கேட்க; அதற்கு அவ்வந்தணர் "பட்டர் உம்மிலும் சிறந்த வித்வானே யாவர்; தர்க்க வியாகரண மீமாம்ஸைகள் முதலிய ஸகல சாஸ்திரங்களும் அவர்க்கு வசோ விதேயங்கள்" என்று கூறினர். வேதாந்தியும் அது கேட்டு "இவ்விபூதியிலே நமக்கு ஒருவரும் எதிரில்லை; ஷட்தர்சனத்திற்கும் உபாஸனையிட்டு அதன்மேலே உபரமிருந்தோம்; பட்டரென்பவர் நம்மிலும் அதிகரென்று இவர் சொல்லுகிறாரே!" என்று அன்றுதொடங்கித் திடுக்கிட்டிருந்தார்.

அவ்வந்தணர் மீண்டும் ஒருநாள் அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக்கு வந்து பட்டரைத் திருவடித்தொழுது "தேவரீருடைய வைபவங்களை யெல்லாம் வேதாந்திக்குச் சொன்னேன்; தர்க்க வியாகரண மீமாம்ஸாதி ஸகல சாஸ்த்ரங்களும் தேவரீர்க்கு வாய்கேள் விதேயங்களென்று சொன்னேன்; அவரும் அது கேட்டு விஸ்மயப்பட்டிருக்கிறார்" என்று விண்ணப்பஞ் செய்ய, அதற்கு பட்டர் 'திருநெடுந்தாண்டக சாஸ்திரம் நமக்குத் தெரியும் என்று வேதாந்தியிடம் சொல்லித்திரீரோ!' என்றருளிச் செய்ய, அந்தணரும், அப்படியே சொல்லுகிறேனென்று சொல்லிச் சென்று வேதாந்தியிடம் "பட்டர்க்குத் திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம் அஸாதாரணம்" என்று கூற, அது கேட்ட வேதாந்தி அந்த சாஸ்த்ரம் இன்னதென்று அறியப் பெறாதவராகையாலே அது என்னோ? வென்று வியப்புக் கொண்டிருந்தார்.

இங்ஙனே சில காலஞ் சென்றபின், எம்பெருமானாருடைய நியமனப்படி வேதாந்தியைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றிய பட்டர் நம்பெருமாள் ஸந்நிதியிலே நியமனம் பெற்றுப் புறப்பட்டு மேல்நாட்டுக்கெழுந்தருளிக் காவேரிக் கரையில் திருப்புத்துறையண்டையில் நின்றருள, அப்போது அங்கு எழுந்தருளியிருந்த திருமலை அனந்தாழ்வான், பட்டர் எழுந்தருளின செய்தியறிந்து சடக்கென வந்து சேவித்து 'ஐயோ! ஸுகுமாரரான நீர் காடும்மலையுங் கடந்து இத்தனை தூரம் எழுந்தருளலாமோ?" என்ன, பட்டரும், அனந்தாழ்வான் திருவடியிலே விழுந்து சேவித்து "மேல்நாட்டிலே போய் வேதாந்தியைத் திருத்தி நம் தர்சனப்ரவர்த்தகராகும்படி பண்ணென்று நம் உடையவர் நியமித்தருளினாரே; அப்படியே நம்பெருமாளும் விடை ஸாதித்து நியமித்தருளினார்" என்று சொல்ல; அனந்தாழ்வானும் 'எங்கள் குடிக்கரசே! வாரும்' என்று பட்டரை மிகவுமுகந்து அழைத்துக் கொண்டுபோய்த் திருநாராயண புரத்திலே மஹாவைபவமாக மங்களாசாஸனம் செய்வித்து வேதாந்தியின் விஜயஞ்செய்திருக்கிற வரைக்கும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்றார்.

இவ்வாறாகப் பல ஸ்ரீவைஷ்ணவர்கள் கூடத் திருப்பல்லக்கிலே பட்டர் எழுந்தருளக் கண்டு அங்குள்ள அந்தணர் சிலர் பட்டரை நோக்கி "நீர் ஆர்? எங்கே எழுந்தருளுகிறீர்?" என்று கேட்க; அதற்கு பட்டர் "நாம் இராமானுசனடிகள்; வேதாந்தியுடனே தர்க்கிக்கப் போகிறோம்" என்று கூற, அதுகேட்ட அவர்கள் "தேவரீர் இப்படி ஸம்ப்ரமத்துடனே எழுந்தருளினால் வேதாந்தியைக் காண்பதும் அருமைப்படும்; அவருடைய சிஷ்யர்கள் தலைவாசலிலே இருந்து, பண்டிதர்களுடனே காலக்ஷேபம் தர்க்கித்து அவர்களை உள்ளே புகவொட்டாதே புறம்பே தள்ளிவிடுகிறார்கள்; ஆகையினாலே அவரைச் சேவித்துக்கொண்டு தர்க்கிக்க ஒருபாயம் கூறுகிறோம் கேளும்;

"வேதாந்தியின் மிக்க செல்வச் சிறப்புடையவராதலால் இடைவிடாமல் ப்ராஹ்மண ஸந்தர்ப்பணை பெருவிசேஷமாக நடத்திவருகிறார். புஜிக்கவருகிற ப்ராமணர்களுடனே கலந்து தேவரீரும் போஜனசாலையிற் சென்று சேர்தல் நன்று; அங்கு வேதாந்தியின் அவசியம் வீக்ஷிக்க வருவர், அப்போது காணலாம்: ஆகையாலே பரிஜன பரிச்சதங்களை யெல்லாம் இங்கே நிறுத்தித் தனியே யெழுந்தருளத்தக்கது" என்று உபாயம் சொல்லிப் போனார்கள்.

பட்டரும், அவ்விதமாகவே போஜனசாலையிற் சென்று சேர்ந்து, பங்க்தியில் எழுந்தருளி யிராமல் வேதாந்தியின் பக்கத்திலேயே நிற்க, அவரும் 'பிள்ளாய்! இங்கு ஏன் நிற்கிறீர்?' என்ன, 'பிக்ஷைக்காக' என்று பட்டர் சொல்ல, 'எல்லோரும் புஜிக்கிற இடத்திலே போய் உட்காரும்' என்று வேதாந்தியின் சொல்ல, "நான் அன்ன பிக்ஷைக்கு வந்தேனல்லேன்" என்று பட்டர் சொல்ல, அது கேட்ட வேதாந்தியின் இவர் வித்வானாயிருக்கக்கூடும் என்றெண்ணி "நா

பிக்ஷா?" என்று கேட்க, பட்டரும், "தர்க்க பிக்ஷா" என்ன, வேதாந்திகள் இதைக்கேட்டுத் திகைத்திட்டு "முன்னே நாம் கேள்விப்பட்டிருந்த பட்டரல்லது வேறொருவர் நம் முன்னே வந்து கூசாமல் நின்று இங்ஙனே சொல்லப் பெறார்; இவர் அந்த பட்டரேயாயிருக்கக்கூடும்" என்று நிச்சயித்து "நம்மைத் தர்க்க பிக்ஷை கேட்டீர்; நீர் பட்டரோ?" என்ன; அவரும் ஆம் என்ன; அவ்வளவிலே வேதாந்திகள், இவருடைய வித்வத்வைபவம் காண்போமென்று குதூஹலித்துத் தர்க்கிக்கத் தொடங்கினார். ஒருவர்க்கொருவர் மத்தவாரணம் பிணங்குமாபோலே தர்க்கிக்க, இங்ஙனே ஒன்பது நாள் சென்ற பின்பு பத்தாநாளில் பட்டர் அத்வைதத்தை ஸஹஸ்ரமுகமாகக் கண்டித்து விசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபித்துத் திருநெடுந்தாண்டகத்தின் விழுமிய பொருள்களையும் அழகாக உபந்யஸித்தருள, வேதாந்திகள் விஸ்மய ஸந்தோஷ விவசராய் எழுந்திருந்து அஞ்சலி ஹஸ்தராய் நின்று "உம்மை மநுஷ்யமாத்ரமே யென்றிருந்தேன்; உம்மோடு நம் பெருமாளோடு வாசியில்லை; உறங்கும் பெருமாள் அவர், உலாவும் பெருமாள் நீர்" என்று பலவாறு துதித்துத் திருவடிகளிலே விழுந்து தொழுது அடியேனை அங்கீகரித்தருள வேணுமென்று விஜ்ஞாபிக்க, பட்டரும் நம்பெருமாளருளின காரியம் மிக விரைவாகப் பலித்தமைக்குத் திருவுள்ளமுவந்து வேதாந்திகளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் ப்ரஸாதித்தருளி மஹாபாகவதோத்தமராக்கி விசேஷகடாக்ஷமுஞ் செய்தருளி 'வேதாந்தியே! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர்; நாம் உமக்குப் பாக்கச் சொல்லலாவ தொன்றுமில்லை; வேதாந்தார்த்தங்களிலே தெளிவு பெற்ற நீர் இனி மாயாவாதரீதியை ஸமூலமாகத் த்யஜித்து அருளிச் செயல்களை ஓதி, நம் எம்பெருமானார் தர்சநத்தை நிர்வஹித்துப் போரீர்—என்று நியமித்து, அவ்வளவிலே நம்பெருமாள் ஸந்நிதியில் திருவத்யயநோத்ஸவம் அணித்தான படியை ஸ்மரித்தருளி விரைந்து கோயிலேற வெழுந்தருளப் புறப்பட்டு மார்கழிமாதம் அமாவாஸ்யையன்று திருவரங்கம் வந்து சேர்ந்து அன்றுமாலை நம்பெருமாள் திருமுன்பே விடை கொண்டு நிற்க; பெருமாளும் 'பட்டரே! நீர் புறப்பட்டுப் போன காரியம் என்னாயிற்று?' என்று கேட்டருள, பட்டரும் 'வேதாந்திகள் தேவரீருடைய திருவடிகட்கு அடிமையாயினர்' என்று விஜ்ஞாபிக்க, 'அவரைத் திருத்திப் பணிகொண்டபடி எங்ஙனே?' என்று பெருமாள் கேட்க, பட்டர் உடனே இங்ஙனே காணும்' என்று சொல்லித் திருநெடுந்தாண்டகத்தைத் திருவோலக்கத்திலே உபந்யஸித்தார். இந்த இதிஹாஸத்தை அடியொற்றியே நாளைக்கும் நம்பெருமாள் ஸந்நிதியில் திருவத்யயநோத்ஸவத் தொடக்கத்திற்கு முன்னாள் திருநெடுந்தாண்டகத் திருநாளென்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றதென்று பெரியோர் கூறுவர்.

இது இங்ஙனமிருக்க, வேதாந்திகள் ஸ்வதேசத்திலே திருமாலடியார்களைப் பூஜித்து வரும் நாளில், ஸம்ஸாரத்தில் விரக்திபெற்று உத்தமாச்ரமத்தை ஸ்வீகரித்து இனி, பட்டர் திருவடிவாரத்திலேயே நிறுத்த அடிமையாக நித்யவாஸஞ் செய்யவேணுமென்று அறுதியிட்டுக் கோயிலை நோக்கி யெழுந்தருளா நிற்கையில், சிறுபுத்தூரிலே அனந்தாழ்வானைக் கண்டு ஸேவித்துநிற்க, அவரும் 'வாரீர் வேதாந்தியே! ஸ்ரீகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுதுசெய்து பட்டர் திருவடிகளே சரணமென்றிருந்தால் உம்மைப் பரமபதத்தினின்றும் தள்ளி விடுவாருண்டோ? இனி என்? திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்டராவீர்' என்று ஆசீர்வதித்துப் போகவிட்டார். வேதாந்திகளும் பயணகதியிலே போய்க் கோயிலேற எழுந்தருளி பட்டர் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்துகிடக்க, பட்டரும் மிகவுமுகந்தருளி 'நம்முடைய சீயர்வந்தார்' என்று வாரியெடுத்தணைக் கட்டிக்கொண்டருளி ஒரு க்ஷணமும் பிரியாமல் தம்முடைய ஸந்நிதியிலேயே வைத்துக்கொண்டு ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள, ஜீயரும்

பட்டரை யன்றிக்கே யுமற்றறியேன் என்றிருந்தார். [பட்டர் 'நம்முடைய ஜீயர்' என்று சொல்லி அபிமானித்துக்கொண்ட அன்று தொடங்கி வேதாந்திகளுக்கு நஞ்சீயர் என்று திருநாமம் வழங்கலாயிற்று.] உபதேச ரத்தினமாலையில் "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை யென்பர், அவரவர்தம் ஏற்றத்தால்-அன்புடையோர், சாற்று திருநாமங்கள் தாமென்று நன்னெஞ்சே, ஏத்ததனைச் சொல்லிநீயின்று" என்ற பாசுரம் இங்கு அநுஸந்திக்கவுரியது.

நஞ்சீயருடைய ஆசார்ய ப்ரேமம் பரம விலக்ஷணமானது. ஒரு கைசிக த்வாதசியன்று பட்டர் ப்ரம்மரதத்திலெழுந்தருளித் திருவீதி யலங்கரிக்கப் புறப்பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங்கப்புக "உத்தமாச்ரமியாய் த்ரிதண்ட தாரியான வுமக்கு இக்காரியம் தகாது" என்று பட்டர் முதலானோர் மறுத்துக் கூற, அப்போது நஞ்சீயர் 'எனக்கு நீ துணையாகி என்னை ரக்ஷிக்கவேணுமென்னும் பொருளுடையதான "ஸகா மா கோபாய" என்கிற மந்திரத்தைச் சொல்லி ஸ்வீகரிக்கப்பட்ட இந்த முக்கோல் தானே இன்று எனக்கு விரோதி யாகிறதோ? இக்கோல் எனக்குத் துணையல்லவோ? ஸ்வரூபரக்ஷணத்திற்கு இக்கோல் இடையூறாயின், இது எனக்கு வேண்டா என்று சொல்லி த்ரிதண்டத்தை விட்டெறியப் போனாராம். அப்போது அவருடைய பக்திவிசேஷத்தைக்கண்டு அனைவரும் வியந்தனர்.

பட்டர் திருவணையாட எழுந்தருளுகிறபோது, பகலெல்லாம் வழிநடந்தருளின ஆயாஸத்தாலே ஒரு ஆற்றடியிலே நஞ்சீயர்மடியிலே திருமுடியை வைத்துக் கண்வளர்ந்தருள, இரவெல்லாம் இடைமாறுதல் அசைத்தல் செய்யாதே நஞ்சீயர் இருந்தார் என்பதும் இவருடைய ஆசார்ய ப்ரேமத்தின் கனத்தை விளக்கும்.

நஞ்சீயர் நெடுநாள் வரையில் அருளிச் செயல்களின் வாஸனையும் அறியாதவரா யிருந்து வைத்தும், பட்டரை ஆச்ரயிக்கப் பெற்றபின்பு ஆசார்யகடாக்ஷ விசேஷத்தினால் சிறிது காலத்திலேயே திவ்யப்ரபந்தங்க ளெல்லாவற்றையும் ஓதித்தரித்து, அவற்றில் விசேஷார்த்தங்கள் நிர்வஹிப்பதில் நல்ல விரகராய் விளங்கினர்.

சிறிய திருமடலில் "அவட்கு மூத்தோனை வெந்நரகம் சேராவகையே சிலை குனித்தான்" என்றவிதற்கு ஸாமாந்யமாகப் பலரும் பொருள் சொல்லக்கூடிய விதம் என்னென்னில்; கரனை நரகத்திற்குப் போகவொட்டாமல் வீர ஸ்வர்க்கத்திற்குப் போகச் செய்தார் பெருமாள் என்று. இதற்கு இங்ஙனல்ல பொருள், வளைத்தவில்லும் கையுமாய் நின்ற பெருமானைக் கண்ட கரன் 'நாம் மேலேபோய் வேறொரு நரகயாதனை அநுபவிக்கவேண்டா; எல்லா நரக வேதனையும் நமக்கு இங்கே அநுபவித்தாயிற்று' என்று குடல் மறுகும்படி போர்க்களத்திலே அவனைப் படாத பாடும் படுத்தினான் என்று பட்டர் அருளிச் செய்யும் பொருள். நஞ்சீயர் பட்டரை ஆச்ரயிப்பதற்கு முன்னே ஸ்வதேசத்தில் வாழுங்காலத்து பட்டருடைய சிஷ்யரொருவர், நஞ்சீயரைச் சந்தித்து வார்த்தை யாடும்போது 'எங்களுடைய திவ்யப் ப்ரபந்தத்தில் "அவட்கு மூத்தோனை வெந்நரகஞ் சேராவகையே சிலை குனித்தான் என்றிருக்கிறது; வேதாந்தியரே! இதற்கு நீங்கள் என்ன பொருள் சொல்லுவீர்கள்?" என்று கேட்க; அவர் ஸாமாந்யமாக நெஞ்சிற்பட்ட பொருளைச் சொல்லிவிட்டு, 'உங்களுடைய பட்டர் எங்ஙனே சொல்லுவர்'? என்று கேட்க, மேலே விவரித்த பொருளை அவர் கூற, இப்பொருள் கூறவல்ல பட்டரை நாம் ஸேவிக்க வேணுமென்று அவருக்குக் காதல்விளைந்ததாகப் பெரியோர் கூறுவர்.

நஞ்சீயர் வைபவம் முற்றிற்று.

நம்பிள்ளை வைபவம்.

நஞ்சீயருடைய திருவடிகளிலே ஆச்ரயித்தவர்களில் தலைவர் நம்பிள்ளை. இவர்க்கு இயற்கையான திருநாமம் 'நம்பூர் வரதராஜர்' என்பது. ஸ்வாசார்யரான நஞ்சீயர் உகந்து சாத்தின திருநாமம் நம்பிள்ளையென்பது. அந்தத் திருநாமம் சாத்துகைக்கு அடியென்னென்னில்; நஞ்சீயர் பட்டருடைய நியமனப்படி திருவாய்மொழியின் திவ்யார்த்தங்களை ப்ரவசனஞ் செய்வதையே போது போக்காகக் கொண்டு வாழ்ந்துவந்தார் திருவரங்கம் பெரியகோயிலில். அவருடைய காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்திருந்தவர்களில் நம்பூர் வரதராஜாசார்யரும் ஒருவராயிருந்து வந்தார். இவர் நீறுபூத்த நெருப்புப்போல இருந்து வந்தபடியாலே இவருடைய ஞான வைபவம் முதலிய பெருமைகளை விசேஷித்து யாரும் அறியாதிருந்தனர்.

இப்படியிருக்கையில், நஞ்சீயர் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய ஆறாயிரப்படியிற் காட்டிலும் சற்று விரிவானதொரு வியாக்யானமிடும்படி பட்டருடைய நியமனம் பெற்றிருந்ததனால் ஒன்பதினாயிரப்படி யென்னுமொரு வியாக்யானம் இட்டருளியிருந்தார். அதைச் செவ்வையாகப் பட்டோலைகொள்ள வல்லாரிடம் கொடுத்து எழுதுவிக்க வேணுமென்று கருதி இதற்குத் தகுந்தவர்கள் யாரோ முன்னோவென்று அந்தரங்கரை விசாரிக்கையில் 'நம்பூர் வரதராஜாசார்யரென்றொருவர் ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டிக்குத் தவறாது வருகின்றாரே; அவர் நல்ல விரகர்: எழுத்திலும் வல்லவர்; அவரைக் கொண்டு இப்பணியை நிறைவேற்றிக் கொள்ளலாம்' என்று கூறினார்கள். பிறகு அவரை அருகே வரவழைத்து ஆச்சர்யா பார்க்கையில் அவருடைய யோக்யதை ஒப்புயர்வற்றதென்று தெரியவந்தது; அதனால் உள்ளம்பூரித்து அவர்பால் விசேஷ கடாக்ஷம் செய்தருளித் தம்முடைய ஒன்பதினாயிரப்படியை வரியடைவே அவர்க்கு ப்ரவசனமும் செய்து அதை யெழுதித் தரும்படி ஸ்ரீகோசத்தை அவரிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டவர் தம்மூருக்குச் சென்று எழுதிக்கொண்டு வருவதாகச் சொல்லிப் போகையில் திருக்காவேரியில் நீந்திச் செல்ல நேர்ந்தது; அப்போது திருமுடியில் கட்டிக்கொண்ட அந்த ஸ்ரீகோசம் நெகிழ்ந்து விழுந்து வெள்ளத்திற் போய்விடவே இப்படி அபசாரமாய்த் தலைக்கட்டிற்றே யென்று வருந்த நேர்ந்தது. ஆனாலும் இவர்தாம் அந்த வியாக்யானத்தை ஸ்வாசார்யர் திருவடிகளிலே வரியடைவே கற்றிருந்தபடியாலும் அவருடைய கருணாகடாக்ஷத்தை விசேஷித்துப் பெற்றிருந்தபடியாலும் அவருடைய திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டே பட்டோலை கொள்ளத் தொடங்கி விரைவில் எழுதி முடித்து ஸ்ரீகோசத்தை நஞ்சீயர் திருவடிகளிலே கொண்டு வைத்தார். 'நாம் கொடுத்த ஏடு எங்கே?' என்று அவர் கேட்கையில், நடந்தது நடந்தபடியே விண்ணப்பஞ் செய்ய வேண்டியதாயிற்று. பிறகு நஞ்சீயர் ஸ்ரீகோசத்தை அவிழ்த்துக் கடாக்ஷிக்கையில், தாமருளிச் செய்த ஸ்ரீஸூக்திகள் விடாமலும் தம்மிடம் அவர் கேட்டிருந்த சில அர்த்த விசேஷங்களும் பொருத்தமாக அமைந்தும் விரிவு மில்லாமல் இருந்த அழகுக்கு மிகவுகந்து 'வாரீர் நம்முடைய பிள்ளையே!' என்று எடுத்தணைத்துக் கொண்டார். அது முதலாக நம்பிள்ளை யென்றே இவர் வழங்கப் பெற்று வந்தார். திருக்கலிகன்றி தாஸர் என்பதும் இவர்க்கு நஞ்சீயர் சாத்தின திருநாமம்.

இவருடைய ஞானவைபவத்தைப் பற்றி நாம் விரிவாக எழுத வேண்டுமோ? பெரிய திருமொழி வியாக்யானத்தில் (5-8-7) "துவளப்பையை முலையிப் பிறப்பு மூனக்கு முன்

தர்த அர்த்தனென்றுவன்” என்ற விடத்து “முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்துப் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாயமீமாம்ஸைகளுமதிகரித்து, போதுபோக்கும் அருளிச் செயலிலேயாம் நம்பிள்ளையைப் போலே” என்று பெரியவாச்சான் பிள்ளை யருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தி யொன்றே இவருடைய ஞானப் பெருமையை விளக்கக் கூடியது. திவ்யப்ரபந்தங்களுக்கும் இதிஹாஸ புராணாதிகளுக்கும் ஆழ்ந்த இன்சுவையே வடிவெடுத்த அர்த்தங்களை யருளிச் செய்வதில் இவர்க்கு ஒத்தாரும் மிக்காருமில்லை.

லோகாசார்யரென்கிற திருநாமமும் இவர்க்கு உண்டு. அது நிகழ்ந்த வரலாறு கேண்மின்: இவர் கோயிலில் வாழ்ந்த காலத்தில் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் இவர் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸகலார்த்தங்களும் கேட்டு வந்தார்கள். ‘நம்பெருமாள் கோஷ்டியோ நம்பிள்ளை கோஷ்டியோ’ என்னும்படி மிகப்பெரிய சிஷ்ய கோஷ்டி ஸம்பத்துடன் வாழ்ந்து வந்தார். அப்போது, முதலியாண்டான் திருப்பேரனாரான கந்தாடைத் தோழப்பரும் அங்கு வாழ்ந்து வந்தார். அவரும் வித்வானாயிருக்கச் செய்தேயும் அவரிடத்தில் ஒருவரும் ஆச்ரயியாதிருக்கவே அவர்க்குப் பொறாமை யுண்டாகி ஒருநாள் நம்பிள்ளையைப் பெருமாள்கோஷ்டியிலே திரஸ்காரமான வார்த்தைகளைச் சொல்லிப் பரிபவித்துவிட்டுத் திருமாளிகைக்கெழுந்தருளினர். அவருடைய தேவிகள் இந்த அஸஹ்யாபசாரத்தைக் கேட்டு கண்ணும் கண்ணீருமாக வந்து ‘அந்தோ! இப்படியும் பரமாசார்யர் திருவடிகளிலே அபசாரப்படுவீரோ? உமக்கு உய்யும் விரகுண்டோ?’ என் செய்தீர்! என் செய்தீர்! ஐயோ’ என்று பலவுஞ் சொல்லி அநுதாபத்தை யுண்டாக்க, தோழப்பரும் அநுதபித்து நம்பிள்ளை திருவடிகளிலே சென்று க்ஷமைவேண்டவேணுமென்று பாரித்திருந்தார். அதற்குள்ளே நம்பிள்ளை தாமே தோழப்பர் திருமாளிகையேற வந்து வேரற்ற மரம்போலே விழுந்து தெண்டனிட்டு, தேவரீருடைய திருவுள்ளம் கலங்கும்படி வர்த்தித்த அடியேனுக்கு தேவரீருடைய க்ஷமையல்லது புகலில்லை யென்று பலவுமருளிச் செய்து தாம் க்ஷாமணம் பண்ணிக்கொண்டார். அப்போது தோழப்பர் அந்த மஹா குணத்திற்கு வியந்து “ஸ்வாமிந்! தேவரீரை இத்தனை நாளும் சிறிது பேர்களுக்கு ஆசார்யராக எண்ணியிருந்தேன்; இப்போது லோகத்துக்கெல்லாம் ஆசார்யர் தேவரீர் என்று திண்ணமாகக் கொண்டேன்” என்றார். அது முதலாக நம்பிள்ளைக்கு லோகாசார்யரென்று திருநாமம் வழங்கி வந்தது; “துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம்முகப்பால் என்னவுலகாரியனோவென்றுரைக்க, பின்னை யுலகாரிய னென்னும் பேர் நம்பிள்ளைக்கோங்கி, விலகாமல் நின்ற தென்றும் மேல்!” என்ற உபதேசரத்தின மாலைப் பாசுரம் இங்கே அநுஸந்திக்கத்தகும்.

நம்பிள்ளை திருவடிகளில் பலர் ஆச்ரயித்திருந்தாலும் பின்பழகிய பெருமாள் ஜீயர்க்கு இருந்த ஆசார்ய பக்தி ஒப்பற்றதென்று தெரிகிறது; உபதேசரத்தின மாலையில் “பின்பழகராம் பெருமாள் சீயர் பெருந்திவத்திலன்பதுவுமற்று மிக்க வாசையினால் நம்பிள்ளைக்கான வடிமைகள் செய் அந்நிலையை நன்னெஞ்சே! ஊனமற வெப்பொழுதுமோர்” என்று விசேஷித்து அருளிச் செய்கையாலே.

இப்பேராசிரியரின் திருவடிகளில் பணிந்து அல்லும் பகலும் ஸகலார்த்தங்களையுங் கேட்டுத் தரித்தவர்களுக்குள் திருவீதிப் பிள்ளையும் பெரியவாச்சான் பிள்ளையும் உலகுக்குச் செய்திருக்குமுபகாரம் அளவற்றது.

பட்டருடைய ஸந்ததியில் தோன்றி மஹா வித்வானாயிருந்த நடுவில்திருவீதிப் பிள்ளை பட்டரும் கந்தாடைத் தோழப்பர் போலவே நம்பிள்ளை யிடத்தில் பொறாமை கொண்டிருந்

தவர். அவர் ஒருநாள் ராஜஸபைக்குச் சென்றிருந்தார். அந்த ராஜா மஹா விவேகியுமாய், தன்னிடம் வருகிற பண்டிதர்களையெல்லாம் ஸ்ரீ ராமாயணாதி க்ரந்தங்களில் கேள்வி கேட்பவனுமாயிருந்தபடியால் இந்த பட்டரையும் ஸ்ரீ ராமாயணத்தில் ஒரு கேள்வி கேட்டான். அதாவது: ஸ்ரீ ராமபிரான் நாராயணத்வ ப்ரயுக்தமான பரத்வத்தை மறைத்துக் கொண்டு அர்ஜுனனைப் போலவும் அசக்தனைப்போலவும் அவதரித்திருக்கையில் “மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாந் அநுத்தமாந்” என்று ஜடாயுவுக்கு முக்தியளித்தது எங்ஙனே பொருந்தும்?—என்று. இக்கேள்விக்கு த்ருப்திகரமான விடையளிக்க பட்டருக்கு ஸ்புரியாமையாலே ஆலோசிக்க வேண்டியதாயிற்று. அப்போது ராஜாவும் அங்கபாரனுமிருக்க, இவருடைய பாக்ய வசத்தாலே அங்கு ஒரு ஸ்வாமி தென்பட்டார். அவர் நம்பிள்ளை திருவடிகளில் அர்த்த விசேஷங்கள் கேட்டவர்; இந்த பட்டர் அவரை நோக்கி ‘இவ்வரசன் கேட்ட கேள்விக்கு நம்பிள்ளை எப்படி நிர்வஹிப்பது?’ என்று கேட்டார். அவர் “ஸத்யேந லோகாந் ஜயதி” என்கிற ச்லோகத்தைக்கொண்டு நிர்வஹிப்பர் என்றுசொல்ல, அதை இவர் தமது மனதில் நன்றாக வாங்கிக்கொண்டு பிறகு ராஜாவிடம் உபந்யஸித்தார். அரசனும் பிறகு உகந்து விசேஷஸத்காரங்கள் செய்தான். அந்த ஸத்காரங்களை ப்ராமாணிகரான இவர் நம்பிள்ளை திருவடிகளிலே கொண்டு ஸமர்ப்பித்து தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளில் சிந்திப்போனவொரு சொல்லுக்குப் பெற்ற ஸத்காரமிது: இனி அடியேனை அங்கீகரித்தருளி வாழ்விக்க வேணுமென்று வேரற்ற மரம்போலே விழுந்து ப்ரார்த்திக்க அவரையும் சேர்த்துக்கொண்டு உய்வித்தார். நம்பிள்ளையின் பகவத் விஷயோபந்யாஸங்களை அவரும் ஏற்படுத்தி ஸபாத லக்ஷம் க்ரந்தமாக்கியிருந்தார். அதை நம்பிள்ளை ப்ரசாரத்திற்கு நியமித்தருளவில்லை.

நம்பிள்ளையின் வைபவம் அர்த்த விசேஷங்களைப் பொறுத்ததேயாதலால் அவ்வர்த்த விசேஷங்கள் திவ்யப்ரபந்த வியாக்யானங்களிலும் வார்த்தாமாலை முதலியவற்றிலும் பாக்யசாலிகளால் உய்த்து உணரத்தக்கன.

நம்பிள்ளை வைபவம் முற்றிற்று.

வடக்குத் திருவீதிப்பிள்ளை வைபவம்.

ஆனிமாதத்தில் பெரியாழ்வாருடைய திருவவதார நன்னாளாகிய ஸ்வாதி நக்ஷத்திரத்தில் இவ்வாசிரியர் திருவவதரித்தருளினர். ஸ்ரீவசனபூஷணம் முமுக்ஷுப்படி முதலிய அஷ்டாதச ரஹஸ்யங்களையருளிச் செய்த பிள்ளைலோகாசாரியர்க்கும், ஆசார்யஹ்ருதயமருளிச் செய்த அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்க்கும் திருத்தந்தையார் இவர். இவருடைய நிஜநாமதேயம் ஸ்ரீக்ருஷ்ணமஹாகுரு வென்பதாம். இந்தத் திருநாமமே பெரியவாச்சான்பிள்ளை யென்கிற மற்றோராசிரியர்க்கும் இருந்ததனால் நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்திருந்த வியர்களுக்கு வாசி தெரிவதற்காக இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளையென வழங்கப்பட்டு வந்தார். திருவரங்கம் பெரியகோயிலில் வடக்குத் திருவீதியில் இவர் வாழ்ந்து வந்ததலே இத்திருநாமத்திற்குக் காரணம். “ஸ்ரீக்ருஷ்ண பாத பாதாப்ஜே நமாமி சிரஸா ஸதா, யத்ப்ரஸாத ப்ரபாவேந ஸர்வஸித்திரபூந் மம” என்பது இவருடைய தனியன்.

இவ்வாசிரியருடைய திவ்யசரித்திரங்களைப் பற்றி முன்னோர்கள் விசேஷமாக எழுதிவைக்கவில்லை யாதலால் இவருடைய ஞானப்பெருமைகளை இங்கு விசேஷமாக எடுத்துப்

பேரம். பகவத்விஷயமென வழங்கப்படுகிற [திருவாய்மொழி வியாக்யானமான] ஈடுமுப்பத் தாறாயிரப்படியை இவ்வாசிரியரே பட்டோலை கொண்டவர். உபதேசரத்தினமாலையில் *தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறி தன்னை, வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளை, இந்த நாடறிய மாறன் மறைப் பொருளை நன்குரைத்தது, ஈடுமுப்பத்தாறாயிரம்* என்றருளிய பாசுரத்தின்படி, நம்பிள்ளையின் பகவத் விஷயோபந்யாஸங்களைக் கேட்டுத் திருவுள்ளத்தில் தரித்துக்கொண்டிருந்து அற்புதமாகப் பட்டோலை கொண்ட பெருமை இவ்வாசிரியர்க்கு அஸாதாரணமானது. சிலர் கூறுவதாவது, நம்பிள்ளை சோதிவாய் திறந்து அருளிய பங்க்திகள் எப்படியோ அப்படியே அப்பங்க்திகளே ஈட்டில் அமைக்கப்பட்டன வென்று. இதில் ஔசித்யம் சிறிதுமில்லை. வாசிகவ்யவஹார நடை வேறு; க்ரந்திகசைலி வேறு. கங்காப்ரவாஹம் போல் நம்பிள்ளையருளிச் செய்தவையாய், கரைகட்டாக்காவேரி யென்னும் படியாயமைந்த ஸ்ரீஸூக்திகள் அப்படியே எடுபடுத்தப்பட முடியாதவை. மஹோபந்யாஸங்களில் குறிப் பெடுத்துக் கொள்ளும் முறையில் அமைந்தது ஈடு. ஈட்டின் பங்க்திஸந்நிவேசம் வேறு எந்த க்ரந்தத்திலும் கண்டறியாததும் காண முடியாததுமான அத்விதீய விலக்ஷண ஸந்தர்ப்பம். ஸம்ஸ்க்ருத வித்வான்களும் தமிழ்வித்வான்களும் தனித்தனியே உள்குழையத்தக்க உயர்ந்த ரசநாவிசேஷம்.* ககநம் ககநாகாரம் ஸாகரஸ் ஸாகரோபம:* என்றாற் போலே "ஈட்டுக்குவமை ஈடே" என்னவேண்டுமத்தனை. மணிப்ரவாள நடையில் மற்றும் பல வாசிரியர்களுமெழுதி யுள்ளார்களெனினும், இவருடைய ரசநாவைகரி தேனும்பாலும் செய்யும் கன்னலு மமுது மொத்து விளங்குமழகு அநுபவரஸிகர்களுக்கே அறிய வெளிது. அர்த்தம் தெரியாமற்போனாலும் பங்க்திஸந்நிவேசத்தை ஸேவித்தமாத்திரத்திலே இரும்புபோல் வலிய நெஞ்சம் இறை யிறையுருகும். பெரிய புலவர்கள் பத்தெட்டு வரிகளில் எழுதவேண்டிய பொருள்களை ஒரு வரியில் வெகு கம்பீரமாக அடக்கி யெழுதுந்திறன் இவ்வாசிரியர்க்கே அமைந்தது.

மணவாளமாமுனிகள் இவ்வாசிரியர்க்கு வள்ளல் என்று விசேஷணமிட்டருளினர். [உதாரா என்றபடி.] ஔதார்யம் மிக்கவர்கள் உலகில் பலர் புகழ் பெற்றிருந்தாலும் இவரொருவருடைய ஔதார்யமே உண்மையில் கொண்டாடத்தக்கதும் ஒப்புயர்வற்றதுமாம். எற்கெனவே திருக்குருகைப் பிரான் பிள்ளானருளிச் செய்த ஆறாயிரப்படி வியாக்யானமும், நஞ்சீயரருளிச் செய்த ஒன்பதினாயிரப்படி வியாக்யானமும் இருந்தாலும் அவை மிகவும் ஸங்க்ஷிப்தங்களாகையாலே அநுபவரஸிகர்களுக்குப் பரிபூர்ணத்ருப்தியை விளைக்கப் போதாதவை. *நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிடப் பெரியவாச்சான்பிள்ளையருளிச் செய்த இருபத்தி நாலாயிரப்படி வியாக்யானம் அவைபோலே ஸங்க்ஷிப்தமன்றிக்கே சிறிது விரிவாகவே யிருந்தாலும், ஈடுமுப்பத்தாறாயிரப்படி திருவவதரித்த பின்பு அதுவும் ஸங்க்ஷிப்தமே யென்னும்படியாயிற்று. அனேகஸ்தலங்களில் இருபத்திநாலாயிரப்படி பங்க்திகளும் ஈட்டுப்பங்க்திகளும் ஒற்றுமைப் பட்டிருக்கையாலே முன்னமவதரித்ததான அந்த வியாக்யானத்தைத் துணை கொண்டே ஈடு எழுதியருளப்பட்டதெனத் தெரிகின்றது. ஆயினும், ஸ்ரீஸூக்தி காம்பீர்யமும் அர்த்த பௌஷ்கல்யமும் ஈட்டுக்கு அஸாதாரணமாயிருப்பது பற்றியே இதுவே யென்றும் காலக்ஷேபக்ரந்தமாகக் கொள்ளப்பட்டுக் குலாவப் பெறுகின்றது. ஸ்ரீராமாயணம் முதலிய இதிஹாஸபுராணங்களிலிருந்து மேற்கோளாக ஆங்காங்குப் பலபல ச்லோகங்களை யெடுத்து இனிமையே வடிவெடுத்ததாக வியாக்யானஞ் செய்தருளும்முறை ஈட்டுக்குச் சிறந்த அணிகலன்.

திருவிருத்தத்திற்கும் இங்ஙனே ஈடுவியாக்யானம் அமைந்ததுண்டு. அஷ்டச்லோகி பெரியபடி வியாக்யானத்திலே "வடக்குத் திருவீதிப் பிள்ளை அஷ்டாக்ஷரதீபிகையிலே அருளிச் செய்தருளினர்" என்று காண்கையாலே அஷ்டாக்ஷரதீபிகை யென்

கிறக்ஷ்ரம் இவ்வாசிரியரது சக்தியென்று தெரியவருகின்றது. (அது ஐப்தம்.) இவ்வாசிரியருடைய பெருமைகளில் ஒன்றே நாம் உள்ளுறைந்து போற்றத்தக்கது; அது யாதெனின்; உலகுக் கெல்லாம் பிரானான பிள்ளை லோகாசார்யரையும் அழகியமணவாளப் பெருமாள் நாயனாரையும் பெற்றுக் கொடுத்தருளியதே.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை வைபவம்.

ஆவணிமாதத்து ரோஹிணி நக்ஷத்ரத்தில் பூர்வசிகைவர்த்தியில் திருவவதரித்தவர் பெரியவாச்சான் பிள்ளை. இவ்வாசிரியருடைய சரித்திரவரலாறுகளைப் பற்றி விசேஷமாக அறியப் பெறுகின்றிலேம்; இவர் நம்மாம் உலகுக்குச் செய்த மஹோபகாரம் அபரிமிதமானதால் அதைப்பற்றியே சிறிது பேசுவோம். ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கெல்லாம் மிகச்சிறந்த வியாக்யானமும், ஸ்ரீ ராமாயணத்தில் பலபல ச்லோகங்களுக்கு இன்சுவையே வடிவெடுத்த வியாக்யானமும் ஸ்தோத்ரரத்நாதி வியாக்யானங்களும் இவரருளிச் செய்தவை இவருடைய அப்ரதிமமான பாண்டித்யத்தையும் அப்ரமேயமான மேதாப்ரதிபா விலாஸத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன. வடக்குத் திருவீதிப் பிள்ளையுமிவரும் நம்பிள்ளை திருவடிகளில் ஸப்ரஹ்மசாரிகளாக வாழ்ந்து ஸகலார்த்தங்களையும் ஸம்சயவிபர்யயமறக் கற்றவர்கள். நம்பிள்ளை ஸகலசாஸ்த்ரங்களையும் வரிசையடைவே அதிகரித்து அர்த்தப் பாண்டித்யம் முழுவதையும் அருளிச்செயற்பொருளுபந்யாஸங்களிலே உபயோகப்படுத்தியவர் என்பது ப்ரஸித்தம். அவ்வண்ணமாகவே இவ்வாசிரியரும் ஸகலசாஸ்த்ரஞானத் தமது ஞானவிளக்கத்தை வியாக்யானங்களருளிச் செய்வதில் வெகு அழகாகச் செலுத்தி இவ்வுலகுக்கு மஹோபகாரகர்களில் தலைமைஸ்தானம் பெற்றருளினர்.

மதாந்தரஸ்தர்களில் பட்டபாஸ்கரரும் வித்யாரண்யரும் வேதபாஷ்யங்களை விபுலமாக வெழுதிப் புகழ் பெற்றவர்களே. ஆனாலும் அந்த பாஷ்யங்களனைவும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானங்களின் முன்னிலையில் பகல்விளக்கும் மின்மினியுமாயிருக்கும். அந்த வேத பாஷ்யங்கள் சுவை சுவையாக இருந்தாலும் இன்னது சொல்லிற்றென்று ஒருவர்க்கு மறியப் போகாது. மூலத்தில் ரஸமிருந்தாலன்றோ பாஷ்யத்தில் ரஸங்காண முடியும். கர்மகாண்டங்கள் கர்மநிஷ்டர்களுக்கும் உபயோகமற்றவையாயுள்ளன. பகவத்குணப்ரசம்ஸை யென்பது ஓரிடத்திலும் அணுமாத்திரமும் காணமுடியாதது. பகவத்குணரஸிகர்களுக்கு அவைகொண்டு பயனொன்று மில்லையே. அப்படியன்றித் த்ராவிடவேத பாஷ்யகாரரான பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தி ஒவ்வொன்றும் பகவத்குணானுபவத்தாலல்லது போது போக்கவறியாத முமுக்ஷுக்களுக்கு ரஸாயனமாயிருக்கும். பகவத்விஷயத்தில் சேராமல் பாஹ்யவிஷயங்களைப் பற்றிப் பேசினாலும் கூட பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்யானம் மிகமிக அதிசயிக்கத்தக்கதாயிருக்கும். ஒன்றே இங்கெடுத்துக் காட்டுவோம்.

பெரிய திருமொழியில் திருநறையூர் விஷயமான பாசுரங்களுள் (6-7-4) * மென்மலர்மேல் களிவண்டு கள்ளுண்ணக் காமர் தென்றல் அலர் தூற்ற, நளிர்வாய்முல்லை முறுவலிக்கும் நறையூர் * என்பது ஒரு பாசுரம். இது ஸாதாரணமாகச் சோலைகளில் நடக்குஞ் செய்தியைச் சொல்லுவது. வண்டுகள் மதுபானம் பண்ணுவதும் தென்றற்காற்று தூற்றுவதும் முல்லை வாய்திறப்பதுமான ஸம்பவம் சொல்லியிருக்கிறவிது ஸ்வபாவோக்தி. ஆனாலும் இங்குச் சொற்சேர்க்கையமைந்த அழகை நோக்கிப் பெரியவாச்சான் பிள்ளை தமது வியாக்யானத்தில் அருளிச் செய்திருப்பதாவது,

"[மென் மலர் மேலிதியாதி.] கண்டவிடமெங்கும் [illegible] பூத்துக் கிடக்குமிறே; அதிலே மதுபானார்த்தமாகக் கிட்டின வண்டுகள் அத்தைக் கிட்டப்பெற்ற ஹர்ஷத்தாலே களித்து நிஷித்த வேலை பண்ணுவாரைப் போலே மதுபானத்தைப் பண்ணிற்றின. அத்தைக் கண்ட தென்றல் காட்டிலே பழியைத் தூற்றிற்று. அத்தைக் கண்ட முல்லை, புகுந்த ப்ரமாதத் தையுதாஸீத்து 'அதுதான் அப்படி செய்கிறது, இதுதான் இப்படி செய்யக் கடவதோ' வென்று வாய்விட்டுச் சிரிக்க மாட்டாமை ஸ்மிதம் பண்ணிற்று." என்று. — இதனை நாமே விவரிப்போம். வண்டு கள்ளுண்ணதாகவும் தென்றல் அலர் தூற்றினதாகவும் முல்லை மூரல் வலித்ததாகவும் மூலத்திலுள்ளது. 'அலர் தூற்றுதல்' என்னுஞ் சொல்லுக்குப் புஷ்பங்களைத் தூற்றுதலென்கிற பொருளேயல்லாமல் பழி தூற்றுதலென்கிற பொருளுமுண்டாதலால் அதைக் கொண்டு ரஸோக்தியாக இங்கு வியாக்யானம் செய்தருளுகிறபடி. வண்டு என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவனைச் சொன்னபடியாய், அவன் ஏதோ விதிவசத்தால் கள்ளுண்ண நேர்ந்து விட்டதாம்; அதைக் கண்டவொருவன், கள்ளுண்டான் கள்ளுண்டானென்று நாட்டிலே பழி தூற்றப்புறப்பட்டானும்; இவ்விரண்டையும் கண்டவொரு சுத்த ஸாத்விகன் 'ஏதோ விதிவசத்தால் ஒருவன் ஒருகால் மதுபானம் பண்ண நேர்ந்து விட்டால் அதைப்பற்றி இப்படியும் ஒருவன் பழி தூற்றவேணுமோ? இவ்விருள் தருமா ஞாலத்தில் இது ஸஹஜந்தானே யென்று வாளாவிருக்கலாகாதோ' வென்று வாய்விட்டுச் சிரிக்கமாட்டாமல், இவையென்ன வுலகியற்கை! என்று புன்சிரிப்புச் செய்கிறானும். எப்படிப்பட்ட அதிகாரிக்கும் ஒரு நிஷித்த காரியஞ் செய்ய நேர்ந்து விடுவது ஸஹஜமென்றும், அதைப்பற்றி யொருவன் பழி தூற்ற நேருவதும் ஸஹஜமென்றும், 'இது வொரு ப்ரஸக்தமோ? இதைப் பழி தூற்ற வேணுமோ?' என்று சில மஹான்கள் நினைப்பது முண்டென்றும் லௌகிக ஸந்நிவேச முணர்த்தியதாக வியாக்யானங் கண்டது விலக்ஷண மேதாவிலாஸம். இஃது ஒரெடுத்துக் காட்டாக அமைக்கப்பட்டது. அத்யாத்ம சாஸ்த்ரார்த்தங்கள் அபரிமிதமாகக் காண்பதோடு இத்தகைய லௌகிக வாக்விந்யாஸங்களும் விபுலமாகக் காணப்படும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானங்களில்.

திவ்யப் பிரபந்தங்களுக்கு வியாக்யான மிட்டருளுந் திருப்பணியில் மற்றுஞ் சில ஆசாரியர்களும் [illegible]ததுண்டு. ஆனால் பூர்த்தியாக நாலாயிரத்திற்கும் வியாக்யானமிட்டருளினவரென்னும் பெருமை இவ்வாசிரியரொருவர்க்கே அஸாதாரணமாக அமைந்ததாகும். இவ்விஷயம் உபதேசரத்தினமாலையில்— "பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாள யோகி திருவாய் மொழியைக் காத்த குணவாளரென்று நெஞ்சே கூறு." "நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு எஞ்சாமை யாவைக்கும் இல்லையே, தஞ்சீரால் வையகுருவின் தம்பி மன்னு மணவாள முனி, செய்யுமவை தாமுஞ்சில." "பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்குத் தெரிய, வியாக்கியைகள் செய்வால், அரிய அருளிச் செயல் பொருளை ஆரியர்கட்கிப்போது, அருளிச் செயலாய்த்தறிந்து." என்ற பாசுரங்களிலும் காணத்தக்கது. பெரியாழ்வார் திருமொழியில் நானூறு பாசுரங்களுக்கு மாத்திரம் இவ்வாசிரியருடைய வியாக்கியானம் லுப்தமாயிருந்ததென்றும், மணவாள மாமுனிகள் பின் [illegible]ருடைய ப்ரார்த்தனைக் கிணங்கி அக்குறையைத் தாம் நீக்கியருளினரென்றும் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர் கூறுவர்.

கடல் ரத்நாகர மென்று பெயர் பெற்றிருத்தல்போல இவ்வாசிரியரது வியாக்யானக் கடல் எண்ணிறந்த விசேஷார்த்த ரத்ன நிதியாகப் புகழ் பெற்றுள்ளதாதலால் அதனையநுபவிப்பதே இவ்வாசார்யருடைய பெருமையநுபவமாகும்.

அர்த்தாத் இங்கொரு முக்கியமான விஷயம் விளக்க வேண்டியதாகிறது. நமது ஸம்ப்ரதாயக்ரந்தங்களில் பெரியவாச்சான் பிள்ளை யென்றும் ஆச்சான்பிள்ளை யென்றும் வ்யப

தேச பேதம் காண்பதுண்டு. பெரியவாச்சான் பிள்ளையின் ஸமகாலத்தவர்கள் சிலர் இவரை ஆச்சான் பிள்ளை யென்றும் வழங்கியிருந்தாலும் பிற்பட்டவர்களான மணவாளமாமுனிகள் போல்வார் இவரை ஆச்சான்பிள்ளை யென்ற சொல்லால் குறித்திடும் வழக்கமில்லை. மணவாளமாமுனிகள் தமது ரஹஸ்யவ்யாக்யானங்களில் ஆச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தியாகப் பலவிடங்களிலும் எடுத்துக் காட்டியுள்ளவை பெரியவாச்சான் பிள்ளையுடையவையே யென்று காணும்படியிருந்தும் பன்னிருதிங்களநுபவம் முதலான நூல்களிலே ஆச்சான் பிள்ளையருளிச் செயலான பரந்த ரஹஸ்யாதிகளையும் பெரியவாச்சான் பிள்ளையருளிச் செயலாக வெழுதியிருக்கிறோம். பிறகு நிகழ்ந்த விபுலமான ஆராய்ச்சிகளினால் தேறின தெளிவுகளை ஆச்சான்பிள்ளை ஷஷ்டாப்தபூர்த்தி முதலான விமர்சக்ரந்தங்களே உலகுக்கு விளக்கியிருக்கின்றன. அவற்றில் நிரூபித்த பலவுண்மைகளில் இரண்டு மூன்றை மாத்திரம் இங்கெடுத்துக்காட்டுகிறோம். பரந்த ரஹஸ்யம் முதலிய ரஹஸ்ய க்ரந்தங்களையும் பெரியவாச்சான் பிள்ளையே விரிவாக அருளிச் செய்திருந்தால், உபதேசரத்தினமாலையில் திவ்யப்ரபந்த வியாக்யான விஷயத்தில் பெரியவாச்சான் பிள்ளைக்கு நிறைந்தான கௌரவத்தைக் காட்டிவிட்டு ரஹஸ்யார்த்த ப்ரகாசன விஷயத்தில் பிள்ளை லோகாசாரியர்க்கு நிறைந்தான பெருமையை விளக்கியிருப்பது விரஸமாகும். ரஹஸ்யார்த்தங்களையும் பெரியவாச்சான் பிள்ளையே ப்ரபந்தனம் செய்தருளின ரென்று ஒரு பாசுரமாவது அவசியம் அருளிச் செய்திருக்க வேண்டும். மாமுனிகள் இதை உபேக்ஷிக்க ப்ரஸக்தியே கிடையாது. ரஹஸ்யார்த்தத்திற்காகப் பெரியவாச்சான் பிள்ளையைப்பற்றி ஒரு பாசுரங்கூட அருளாமையாலும் அதுபற்றிப் பிள்ளை லோகாசாரியர்க்கே ஏழு பாசுரங்கள் அருளிச் செய்திருக்கையாலும் அவ்வுபகாரசிரேஷ்டர்க்குப் பிற்பட்டவரே பரந்தரஹஸ்யாதிக்ரந்தகர்த்தா வென்பது தெளிவாகும். நம்பிள்ளை திருவடிகளில் நேராகக் கேட்டவரும் பலவிதங்களிற் பெருமை பெற்றவருமான பெரியவாச்சான் பிள்ளையே பரந்த ரஹஸ்யாதிகளையருளிச் செய்திருந்தால் அவருடைய க்ரந்தங்களை விட்டுப் பிள்ளைலோகாசாரியருடைய மும்முக்ஷுப்படி முதலான க்ரந்தங்களையே எங்கும் யாவரும் காலக்ஷேபக்ரந்தமாகக் கொள்ள ப்ரஸக்தியே யிராது. ஆச்சான் பிள்ளை ஸந்ததியாரென்று சொல்லிக் கொள்பவர்களுங்கூட இற்றைக்கும் நாளைக்கும் பரந்தரஹஸ்யாதிகளின் பேரையும் கேட்டறியாதவர்களாக வன்றோ உண்மையுள்ளது. அன்றியும், பரந்தரஹஸ்யத்தில் வேதாந்த தேசிகனுடைய ஸித்தாந்தங்களுக்கு மறுப்பு உரைக்கப்பட்டுமிருக்கிறது. பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீ ஸூக்திகளை மேற்கோள் காட்டும் வேதாந்த தேசிகன் பெரியவாச்சான் பிள்ளைக்குப் பிற்பட்டவரென்பது நிர்விவாதம். அவருடைய உக்திகளுக்கு விடை கூறுகின்ற பரந்தரஹஸ்யகாரர் பெரியவாச்சான் பிள்ளையாயிருக்கத் தகுதியில்லை. ஆகவே, வேறோராசிரியருடைய க்ரந்தங்களைப் பெரியவாச்சான் பிள்ளையின் க்ரந்தங்களாகக் கொள்வது அநுசிதமென்று பெரியார்களின் துணிவு.

பெரியவாச்சான் பிள்ளையின் கம்பீரமான ஸ்ரீ ஸூக்திகள் அமுதினுமாற்ற வினியவை. இவ்வாசிரியர் அவதரியாதிருந்தால் ஸ்ரீ வைஷ்ணவவுலகுக்குப் பேரின்பவநுபவம் மிகவும் குன்றியேயிருக்கும். இவரது திருவடிகளே நமக்குத் தஞ்சம்....................................

பெரியவாச்சான் பிள்ளை வைபவம் முற்றிற்று.

பிள்ளை லோகாசார்யர் வைபவம்.

வடக்குத் திருவீதிப்பிள்ளைக்குத் திருக்குமாரர்கள் இருவர். மூத்தவர் பிள்ளை லோகாசார்யர்; இளையவர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். இவ்விருவரும் நைஷ்டிகப்ரஹ்மசாரிகள். ஐப்பசியில் திருவோணத்தன்று அவதரித்த பரமகாருணிகரான பிள்ளைலோகாசார்யருடைய பெருமையைச் சிறிது பேசி மகிழ்வோம். இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானப் பெருமைகள் ஒரு புறமிருக்க, பரமகருணையின் திறத்தை என்னென்று பகர்வது ?

ஆசாரியர்கள் பொதுவாக இருவகைப்படுவார்கள். அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யரென்றும் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யரென்றும். சிஷ்யர்கள் பலகாலநுவர்த்து வேண்ட அதனாலே அநுக்ரஹிப்பவர்கள் அநுவ்ருத்திப்ரஸந்நாசார்யர்களாவார்கள். சிஷ்யனுடைய ப்ரார்த்தனையைச் சிறிதும் எதிர்பாராமல் தம்முடைய இயற்கையின்னருளால் தாமாகக் கனிந்து* பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணி கொள்வதையே விரதமாகக் கொண்டு தம் பேறாக அநுக்ரஹித்தருள்பவர்கள் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யர்கள். நமது ஆசார்ய கோஷ்டியில் எம்பெருமானார் நம் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யரென்ற பட்டத்தை முதன்மையாகப் பெற்றவர். ஆயினும் அவர் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு க்ரந்தமும் அருளிச்செய்திலர். ப்ரஹ்மஸூத்ரங்களின் அர்த்தங்களை விவரிக்க மூன்று நூல்களையருளிச் செய்தவர் ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு சிறுநூலாவது அருளிச்செய்திருக்கலாம். இன்னுமொரு திருக்கோலம் பூண்டு [அதாவது, மணவாள மாமுனிகளாக அவதரித்து] அப்போது அருளிச் செய்யவேணுமென்று திருவுள்ளம் பற்றியிருந்தமையாலே, ஸ்ரீராமாநுஜரான அந்த அவதாரத்திலே ரஹஸ்யார்த்தங்களை வெளிப்படுத்தாமே சென்றனர். ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலிய திவ்யக்ரந்தங்களில் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களும் ஆங்காங்குச் சேமிக்கப் பட்டேயிருந்தாலும் அவற்றைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டித்தாராத குறை குறையே. அக்குறைதீரவே ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான பிள்ளை லோகாசாரியர் திருவவதரித்து, இவர் தாமே முதன் முதலாக ஸ்ரீவைஷ்ணவ மண்டலிக்கு மஹோபகாரஞ் செய்தருளினார்.

லோகாசார்ய னென்கிற திருநாமம் முதலில் நம்பிள்ளைக்கு வழங்கிவந்தது. ஆசாரியர் திருநாமத்தையே புதல்வர்க்கு இடவேணுமென்று விருப்பங்கொண்ட இவரது திருத்தந்தையார் நம்பிள்ளையின் திருநாமத்தையே இவர்க்குச் சாத்தினார். வாசி தெரிவதற்காகப் பிள்ளை லோகாசார்யரென்று வழங்குதல் சிறந்தது. உபதேச ரத்தினமாலையில்—"பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை, அன்பாலன்ன திருநாமத்தை யாதரித்து, மன்னுபுகழ் மைந்தருக்குச் சாத்துகையால் வந்துபரந்ததெங்கும், இந்தத் திருநாமமிங்கு" என்னுமிப் பாசுரத்திலும் இஃதறியத்தக்கது. உண்மையில் லோகாசார்ய னென்னுந் திருநாமம் இவர்க்கே தகும்.

இவ்விருள் தருமாஞாலத்தின் அகவிருளை அறவே யொழிக்கவல்ல திவ்ய ஸ்ரீஸூக்திகளைத் தேனும் பாலும் நெய்யும் கன்னலுமாக அளித்தருளினவர் இம்மஹாசார்யர். இவருடைய ஸர்வஜ்ஞத்வமும் பரமகாருணிகத்வமும் பரமப்ராமாணிகத்வமும் ஒவ்வொன்றுஞ் சொல்லால் நினைப்பரிதே. ஒரு அர்த்தத்திலும் ஆக்ஷேபமின்றிக்கே ஆசார்யபரம்பராப்ராப்தமான அர்த்தங்களையே அற்புதமாக அமைத்திருக்குமது இவருடைய திவ்யக்ரந்தங்களுக்கே அஸாதாரணச் செல்வமாயிருக்கும்.

இவரருளிச் செய்த நூல்கள் அஷ்டாதசரஹஸ்யங்களென்று ப்ரஸித்தமாயிருக்கும். அவற்றுள் ஸ்ரீவசநபூஷணம் தத்வத்ரயம் முமுக்ஷுப்படி என்னும் மூன்று க்ரந்தங்கள் ஸூத்ர சைலியில் திருவவதரித்தவை. இவற்றிலுள்ளும் ஸ்ரீவசன பூஷணத்தின் பெருமை அப்ர

மேயமென்று மணவாளமாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் ஏழு பாசுரங்களினால் மிக மிகக் கொண்டாடியருளுகிறார். "ஸர்வஜ்ஞ லோககுருநிர்மிதமப்யபேக்ஷ்யம் [illegible] ஸதா வசநபூஷண திவ்யசாஸ்த்ரம்" என்று இந்த திவ்யப்ரபந்தத்தை ஒரு திவ்யசாஸ்திரமென்றே வழங்குவர் பெரியோர். இதற்கு மணவாளமாமுனிகளருளிச் செய்த வியாக்யானத்தின் அவதாரிகையிலுள்ள சில ஸ்ரீஸூக்திகளை இங்கெடுத்துக்காட்ட வேண்டியது அவச்யமாகிறது,—

"ஸம்ஸாரி சேதநருடைய ஸஹிக்கமாட்டாத பரமக்ருபையாலே தத்வஜ்ஞாநார்த்தமாகத்தாமும் பலப்ரபந்தங்களருளிச்செய்த பிள்ளை லோகாசார்யர், ஆசார்ய பரம்பராப்ராப்தங்களான அர்த்தங்களில், அவர்கள் தாங்கள் கௌரவாதிசயத்தாலே ரஹஸ்யமாக உபதேசித்துப் போந்தவையாய், அருமைபெருமைகளையுடைத்தாய் இதுக்கு முன்பொருவரும் ப்ரகாசிப்பியாமல் அடக்கிக்கொண்டு போந்தவையான அர்த்த விசேஷங்களெல்லாவற்றையும் பின்புள்ளாருமிழக்க வொண்ணாதென்கிற தம்முடைய க்ருபாதிசயத்துக்கு மேலே பெருமாளும் ஸ்வப்நத்திலே திருவுள்ளமாயருளுகையாலே ஸ்ரீவசநபூஷணமாகிய இப்ப்ரபந்த முகேந வெளியிட்டருளுகிறார். முன்பே பேரருளாளப் பெருமாள் தம்முடைய நிர்ஹேதுகக்ருபையாலே மணற்பாக்கத்திலேயிருப்பாரொரு நம்பியாரை விசேஷகடாக்ஷம் பண்ணியருளி தந்நாமமாயிருப்பன சில அர்த்த விசேஷங்களைத் தாமே அவர்க்கு ஸ்வப்நமுகேந அருளிச்செய்து 'நீர் போய் இரண்டாற்றுக்கு நடுவே வர்த்தியும்; இன்னமுமக்கு இவ்வர்த்தங்களை யெல்லாம் விசதமாக நாம் அங்கே சொல்லுகிறோம்' என்று திருவுள்ளமாயருளுகையாலே அவரிங்கே வந்து (பெரிய) பெருமாளை ஸேவித்துக் கொண்டு, தமக்கு முன்பு அங்கருளிச் செய்த அர்த்தங்களையும் அசலறியாதபடி அநுஸந்தித்துக் கொண்டு ஏகாந்தமானதொரு கோயிலிலே வர்த்தியா நிற்கச் செய்தே, தம்முடைய ஸ்ரீபாதத்துக்கு அந்தரங்கரான முதலிகளும் தாமுமாக பிள்ளை ஒரு நாள் அந்தக் கோயிலிலே யாத்ருச்சிகமாக வெழுந்தருளி, அவ்விடம் ஏகாந்தமாயிருக்கையாலே ரஹஸ்யார்த்தங்களை அவர்களுக்கருளிச் செய்து கொண்டு எழுந்தருளியிரா நிற்க, அவை தமக்குப் பேரருளாளப் பெருமாளருளிச் செய்த அர்த்த விசேஷங்களாயிருக்கையாலே அவர் போர வித்தராய் உள்ளில் நின்றும் புறப்பட்டு வந்து பிள்ளை ஸ்ரீபாதத்திலே விழுந்து 'அவரோ நீர்?' என்ன, 'அவரேது?' என்று பிள்ளை கேட்டருள, பேரருளாளப் பெருமாள் தமக்கு இவ்வர்த்தங்களை ப்ரஸாதித்தருளின படியையும் இத்தேசத்திலே போக விட்டருளின படியையும் இன்னமும் உமக்கங்கே விசதமாகச் சொல்லுகிறோமென்றருளிச் செய்தபடியையும் விண்ணப்பஞ் செய்ய, கேட்டு மிகவும் ஸந்துஷ்டராய் அவரையும் அபிமானித்தருள, அவரும் அங்குத்தைக்கு அந்தரங்கராய் வர்த்திக்கிற காலத்திலே, பெருமாள் அவர்க்கு ஸ்வப்நத்திலே 'இவ்வர்த்தங்கள் மறைந்து போகாதபடி இவற்றை யொருப்ரபந்தமாக்கச் சொன்னோமென்று நீர் பிள்ளைக்குச் சொல்லும்' என்று திருவுள்ளமாக, அவர் 'இப்படி பெருமாள் திருவுள்ளமாயருளினார்' என்று விண்ணப்பஞ் செய்ய, 'ஆனால் அப்படி செய்வோம்' என்று திருவுள்ளம் பற்றி அனந்தரம் இப்ப்ரபந்தமிட்டருளினாரென்று ப்ரஸித்தமிறே." என்பவை வியாக்யான ஸூக்திகள்.

மணவாள மாமுனிகள் ஆழ்வார் திருநகரியிலிருந்து திருவரங்கம் பெரிய கோயிலுக் கெழுந்தருளின போது அங்கே பிள்ளை லோகாசார்ய ரெழுந்தருளியிருந்த விடத்திற்கு நித்திய மெழுந்தருளி "ரஹஸ்யம் விளைந்த மண்" என்று அவ்விடத்தே போர ப்ரதிபத்தி பண்ணி உகந்திருப்பர் என்று ப்ரஸித்தம்.

பிள்ளை லோகாசார்யர் வைபவம் முற்றிற்று.

வேதாந்த தேசிகர் வைபவம்.

இவ்வாசிரியர் திருவவதரித்தவிடம் "காசிமுதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனி யருளாளர் கச்சிக்கு ஒவ்வா" என்றும் "முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சி" என்றும் இவர்தம்மாலே புகழப்பட்ட காஞ்சீக்ஷேத்ரத்தில் திருத்தண்கா என வழங்கப்பெறும் விளக்கொளி யெம்பெருமான் ஸந்நிதியின் பரிஸரமாகிய 'தூப்புல்' என்னும் திவ்யஸ்தலம். தூப்புல் என்பது பரிசுத்தமான புல் என்றபடி. தர்ப்பத்தைச் சொன்னவாறு. வைதிகர்கள் தர்ப்பத்தை விச்வாமித்ரமென்று வழங்குவர்களாதலால், விச்வாமித்ர கோத்ரத்தவர்களான மஹரிஷிகள் வாழ்ந்து வந்த இடம் என்பதுபற்றி அந்தஸ்தலம் தூப்புல் என வழங்கப்பட்டு வந்ததெனப் பெரியோர் பகர்வர். தூப்பில் என்பதும் பொருந்தும்; தூய்து இல்—தூய்மை வாய்ந்த இடம்.

இவர்க்குத் திருத்தகப்பனார் அனந்த ஸோமயாஜிகள். திருத்தாயார் தோதாரம்பம்மை. ஆசிரியர் (மாதுலரான) கிடாம்பி அப்புள்ளார். இராமானுசப் பிள்ளான் என்பவரும் அவரே.

திருவேங்கடமுடையானுடைய திருமணியே இவ்வாசிரியராய்த் தோன்றினதாகப் பல ப்ரமாணங்களினால் விளங்குகின்றது. ஸ்வாமிதாமே ஸங்கல்பஸூர்யோதய நாடக ப்ரஸ்தாவனையில் தம்மைப்பற்றி அருளிச்செய்யுமிடத்து "விஷ்ராணிதே விபுதவர்கஸ்ருதிகோசம் பத்மாலயே பரிசராவிதேன ப்ரயுக்தா, உத்ப்ரேக்ஷ்யதே புதஜனைருபபத்தி பூம்னா கண்டா ஹரேஸ் ஸமஜநிஷ்ட யதாத்மனேதி" என்றருளிய ச்லோகமும், இவரது திருக்குமாரர் பணித்த தேசிகமங்களத்தில் "வேங்கடேசாவதாரோயம் தத்கண்டாம்சோதவா பவேத், யதீந்த்ராம்சோதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம்" என்றுள்ள ச்லோகமும் முக்கியமாக இங்கு அநுஸந்திக்கவுரியன.

இவ்வாசிரியர் திருவேங்கடமுடையானுடைய ப்ரஹ்மோத்ஸவத்தின் அவப்ருத தினமாகிய புரட்டாசித் திருவோணத்தன்று திருவவதரித்தமைபற்றி ஸ்ரீவேங்கடநாத சர்மா என்று திருநாமம் சாத்தப்பெற்றார். வேதாந்தாசார்யர் என்கிற திருநாமம் பிறகு பட்டப்பெயராகக் கிடைத்ததிவர்க்கு. [கலி ௵ 4370, சாலிவாஹநசக௵ 1191, கி. பி. 1268—விபவ வருஷத்தில் இவரது திருவவதாரமென்று பெரியோர் நிரூபிக்கின்றனர்.] நூறு ஸம்வத்ஸரம் இவ்விபூதியில் எழுந்தருளியிருந்து திருநாட்டுக்கெழுந்தருளினாராதலால் இற்றைக்கு ஏறக்குறைய 582 ஆண்டுகட்குமுன் இவ்வாசிரியரது ஜீவிதகாலம் என விளங்குகின்றது.

இவ்வாசிரியர் தமது மாதுலராகிய அப்புள்ளாருடைய அதியந்த ப்ரீதிக்குப் பாத்ரபூதராயிருந்து வந்தார். நடாதூரம்மாள் ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்துகொண்டிருந்த அவ்வாசிரியர், ஐந்து வயதுள்ள இவ்வாசிரியக் குழந்தையையும் உடனழைத்துக்கொண்டு காலக்ஷேப கோஷ்டிக்குச் செல்ல, அம்மாள் இக்குழந்தையின் தேஜோவிசேஷத்தையும் ப்ரதிபாப்ரபாவத்தையும் நோக்கிவியந்து "ஆம் முதல்வனிவன்" என்று விசேஷ கடாக்ஷம் செய்தருளினார். இவ்விஷயம் இவ்வாசிரியர் தம்மாலேயே அதிகரணஸாராவளியின் தொடக்கத்தில் "ஸ்ரீமத்ப்யாம் ஸ்யாதஸாவித்யநுபதி வரதாசார்ய ராமாநுஜார்யாம் ஸம்யக்த்ருஷ்டே ஸர்வஸம்ஹநநிசிததியா வேங்கடேசே" என்று பணிக்கப்பட்டது.

உரிய காலத்தில் சௌலோபநயநாதி ஸகலஸம்ஸ்காரங்களும் அடைவே செய்யப்பெற்ற இவர் வேதத்தினை ஓதத் தொடங்கினர். வேதமோதின திறமையைப்பற்றிப் பூருவர்கள் கூறியுள்ள ஒரு ச்லோகம் மிக அற்புதமானது. "அஷ்டாய வேதாநகிலாந் ஆசார்யாதக்ரஹீ

நலேஸா, புநருச்சாரணாகாங்க்ஷீ பதாநாம் வேஷ்டநே பரம்* என்பதாம். வேதத்தில் வேஷ்டந பதங்கள் என்று சிலவுண்டு. [ப்ரஜாபதிரிதிப்ரஜா—பதி:, பாகதேயேநேதிபாக—தேயேந; அக்நிஷ்டோமஸாம மித்யக்நிஷ்டோம—ஸாமம்] என்பவைபோன்ற பதங்கள் வேஷ்டநபதங்களாகும். அவை இரட்டித் திரட்டிச் சேர்ந்தே ஓதவேண்டியவையாதலால், அத்தகைய வேஷ்டநபதங்களில் மாத்திரம் ஸ்வாமிக்குப் புநருச்சாரணம் ப்ராப்தமாயிற்றே யல்லது மற்றைப்படியுள்ள பதங்களையெல்லாம் ஸக்ருதுச்சாரண மாத்ரத்திலேயே க்ரஹித்தருளினரென்று இவருடைய அதிசயமான க்ரஹணதாரண பரிக்ஷம் கூறியவாறு. இவ்வண்ணமாகவே வேதாங்கமாகவுள்ள ஸகலசாஸ்த்ரங்களையும் மாதுல ஸகாசத்திலேயே இருபது திருநக்ஷத்ரத்திற்குள் அதிகரித்து உபயவேதாந்த ஸாரார்த்த ஸம்ப்ரதாயங்களையும் கேட்டு, வைநதேயமந்த்ர உபதேசமும் பெற்று தோற்ற நிபுணராக விளங்கிவருகையில், ப்ராப்தகாலத்திலே க்ருஹஸ்தாச்ரமத்தையும் ஸ்வீகரித்து ஆஸ்திகாக்ரேஸரராய் ஸ்ரீ காஞ்சியிலேயே ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரப்ரவசநங்கள் செய்தருளாநின்றார்.

இங்ஙனே நிகழ்ந்துவருகையில் ஒருநாள் தென்திசைத் திருப்பதிகளை மங்களாசாஸனஞ் செய்யத் திருவுள்ளங்கொண்டு பேரருளாளனது நியமனம்பெற்றுப் புறப்பட்டெழுந்தருளுகையில், பரமபாவநமான கருடநதியின் கரையில் தெய்வநாயகனுடைய ஸந்நிதான ஸாந்நித்யத்தையும் ஔஷதாத்ரியின் வாய்ப்பையும் நோக்கி அவ்விடத்திலே சிலகாலம் வஸிக்கத் திருவுள்ளமாய், அத்திருமலையின்கண் வீற்றிருந்து முன்பு ஸ்வாசார்யர் ஸந்நிதியிலே பெற்றிருந்த வைநதேய மந்திரத்தை நியதராய் ஆவ்ருத்திபண்ணிக்கொண்டிருக்க, ஒருநாள் ஸுப்ரஸந்நராய் ஸாக்ஷாத்காரம் தந்தருளிய பெரியதிருவடி ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரத்தை உபதேசித்துச் செல்ல, பிறகு ஆங்கு அழகியசிங்கர் திருமுன்பே ஹயக்ரீவ மஹாமந்த்ரத்தை ஜெபித்துக் கொண்டெழுந்தருளியிருக்க, வெள்ளைப் பரிமுகரும் ஸுப்ரஸந்நராய்க் காட்சிதந்து தம்முடைய வாக்கின் அம்ருதத்தை யூட்டி அநுக்ரஹித்து மறைந்தருள, இவரும் பரமைகாந்த பாரஸ்வாரஸ்யக்ஞராய்க் க்ருதார்த்தராய் எழுந்து ஹயக்ரீவ ஸ்தோத்ரம், கருடபஞ்சாசத் என்ற இரண்டு ஸ்தோத்ரங்களை விண்ணப்பஞ்செய்து, தெய்வநாயகனையும் திருவடி தொழுது, தேவநாயக பஞ்சாசத், அச்யுதசதகம் (ப்ராக்ருத பாஷாமயஸ்தோத்திரம்), கோபாலவிம்சதி, (ரகுவீரகத்ய மென வழங்கப்படுகிற) மஹாவீரவைபவம் என்ற ஸ்தோத்ரங்களையும், மும்மணிக்கோவை, நவரத்தின மாலை, பந்துப்பா, கழற்பா, ஊசற்பா, ஏசற்பா, அம்மானைப்பா என்கிற தமிழ்ப் ப்ரபந்தங்களையும் பணித்தருளினார்.

பிறகு தெய்வநாயகப் பெருமானிடம் நியமனம் பெற்றுக்கொண்டு, "பாவருந்தமிழால் பேர்பெறு பனுவற்பாவலர் பாதிநாளிரவில், மூவருநெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு" என்கிறபடியே பொய்கை பூதம் பேயாழ்வார்கள் கூடிக்குலாவி அநுபவித்து மகிழ்ந்த திருப்பதியாகிய திருக்கோவலூரில் ஆயனாரைத் திருவடி தொழவிரும்பி அங்கெழுந்தருளிச் சிலகாலம் வாழ்ந்து அப்பெருமான் விஷயமாக "தேஹளீசஸ்துதி" என்கிற ஸ்தோத்ரமுமருளிச் செய்தார். அதில் 6, 7, ச்லோகங்களில் முதலாழ்வார்கட்கும் எம்பெருமானுக்கும் நேர்ந்த பரிமாற்றம் வெகு அழகாகப் பேசப்பட்டுள்ளது.

[தீபேந கேநசித் அசக்ருதா கிரீதே ஸ்நேஹோபபந்நமபி சுத்த குணப்ரதீதம், தம்ஸ்ராவகாசநிபிடம் தத்ருசுர் பவந்தம் ஸ்வாத்யாயயோகநயநாச் சுசய: கவீந்த்ரா:] யோகிகளில் தலைவராகிய முதலாழ்வார்களென்னும் செந்தமிழ்க் கவிச்ரேஷ்டர்கள் ஒரு நாள் நள்ளிரவில் விலக்ஷணமான சொல்விளக்கேற்றி ஹ்ருதயத்தினுள்ளே ஆயனாரைக் கண்டு கொண்டனர் என்பது கருத்து.

[காஸார பூர்வ கவிமுக்ய விமர்த்த ஜந்மா பண்ணாதடேக்ஷு ஸுபகஸ்ய ரஸோ பலீயாந்தே, த்வத்பாத பத்ம மதுநி த்வதநந்ய போக்யே நூநம் ஸமாச்ரயதி நூதந - சர்க்கராத்வம்]

பெண்ணையாற்றங்கரையில் கரும்புபோல் வளர்ந்திராநின்ற ஆயனூர், பொய்கையாழ்வார் முதலான மூவரோடும் நெருக்குண்டு பிழியப்பட்டதனால் உண்டான ரஸமானது [விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:] என்ற சுருதியின்படி அவரது திருவடித்தாமரைகளி லுண்டான தேன்பெருக்கில் சர்க்கரையாகக் கலக்கதுபோலும் என்றவாறு. இந்த இரண்டு ச்லோக ரத்னங்களும் பக்தர்களுக்கு விசேஷித்து அநுஸந்தேயங்கள்.

இங்ஙனம் திருக்கோவலூரில் சிலகாலம் எழுந்தருளியிருந்து அங்குள்ளாருக்கு வேதாந்தார்த்த ப்ரவசநமும் செய்தருளி, பிறகு யாத்திரையடைவே ஸ்வாவதாரஸ்தலமான பெருமாள்கோயிலுக்கு மீண்டெழுந்தருளி அங்கு விசேஷத: க்ரந்தப்ரவசநம் செய்தருளுங் காலத்தில், பெருந்தேவித் தாயார் விஷயமாக ஸ்ரீஸ்துதியையும், பேரருளாளன் விஷயமாக வரதராஜ பஞ்சாசத் என்னும் ஸ்தோத்ரத்தையும், அடைக்கலப்பத்து, அர்த்த பஞ்சகம், ஸ்ரீவைஷ்ணவதினசரி, பன்னிருநாமம், திருச்சின்னமாலை, ஹஸ்திகிரிமாஹாத்மியம் முதலான தமிழ்ப் ப்ரபந்தங்களையும், ஸ்ரீயதோக்தகாரி யெம்பெருமான் விஷயமான வேகாஸேது ஸ்தோத்ரத்தையும், அட்டபுயகரத்தெம்பெருமான் விஷயமான அஷ்டபுஜாஷ்டகத்தையும், விளக்கொளி யெம்பெருமான் விஷயமான சரணாகதி தீபிகை யென்கிற தீபப்ரகாசஸ்தோத்ரத்தையும், வேளுக்கையெம்பெருமான் விஷயமான காமாஸிகாஷ்டகத்தையும், திருப்புட்குழிப்போரேற்றுப்பெருமாள் விஷயமான பரமார்த்தஸ்துதியையும் அருளிச் செய்தார்.

ஸ்வாமி, பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருக்குங் காலத்தில் பேரருளாளனுக்கு வையங்கண்ட வைகாசித்திருநாள் தொடக்கமாயிற்று. நாடோறும் மேற்கே யெழுந்தருளிக் கச்சபேச்வராலய வாசலில் இயல்தொடங்கி ஸேவிப்பது வழக்கமாதலால் அப்படியே தொடக்கமாருங்காலத்தில் அங்குள்ள சைவர்கள் திரண்டுவந்து "ஆழ்வார்களின் தமிழ்ப் ப்ரபந்தங்களைப் பெருமாள் திருமுன்பே அநுஸந்திப்பதற்கு சாஸ்த்ரப்ரமாணங்கள் இருக்குமாகில் அவற்றை யெடுத்துரைத்தல்லது இங்கு இயல்தொடங்கலாகாது" என்று தடைசெய்ய, அப்போது அங்கெழுந்தருளியிருந்த தேசிகன், திவ்ய ப்ரபந்தங்களின் பெருமைகளையும், எம்பெருமான் திருமுன்பே இவற்றை ஸேவிக்கவேண்டியது மிக அவசியம் என்பதையும் பஹுசாஸ்த்ரப்ரமாணயுக்திகளுடன் எடுத்துரைக்க, சைவர்கள் வாய்மாண்டு மீண்டுபோயினர். [இந்த வரலாறு ஸ்வாமியின் வைபவநூல்களிற் காணப்படவில்லை. இது கூரத்தாழ்வானுடைய சரிதையிற் சேர்ந்தது என்பாருமுளர். உண்மையை ஸம்ப்ரதாயம் வல்ல பெரியார்வாய்க் கேட்டுத் தெளிக.]

* திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தருளின நம் வேதாந்த தேசிகன் ஸர்வதோமுகமான ஞானம் படைத்தது போலவே விரக்தியையும் லோகவிலக்ஷணமாகப் பெற்றவராதலால் கூரத்தாழ்வானைப் போலவே தாமும் உஞ்சவ்ருத்தியையே கொண்டு பெருமாள் திருவாராதனத்தைக் குறையற நடத்திக்கொண்டு செந்தமிழும் வடமொழியும் திகழ்ந்த நாவர்க்கு உபய வேதாந்த க்ரந்தப்ரவசநம் செய்தருளாநின்றுகொண்டு *கார்மேனி யருளாளர் கச்சிப்பதியிலே பேரருளாளனை மங்களாசாஸநஞ்செய்து கொண்டெழுந்தருளி யிருந்தார். இவருக்குப் பரம மித்ரரான ஸ்ரீவித்யாரண்ய ஸ்வாமிகள் விஜயநகர மஹாராஜனிடத்தில் மிகுந்த வால்லப்யம் பெற்றுப் பலபல வித்வான்களை ஆதரிப்பதற்குரிய ஸௌகர்யங்களை யுடையரா யிருந்தபோது இந்த "ஸ்ரீதேசிக" சிகாமணியை ஸ்மரித்து இவருடைய ஏழைமையைப் போக்கிச் செல்வச் சிறப்பை யுண்டாக்கக் கருதி அந்த விஜயநகராதீசனிடத்திற்கு எழுந்தருளுமாறு ப்ரார்த்தநா பத்ரிகையை அனுப்பியதனைக் கடாக்ஷித்தருளின ஸ்வாமிதேசிகன் தம்முடைய நிஷ்டா விசேஷத்தையும் அந்த வித்யாரண்ய ஸ்வாமி அறிந்திருந்தும் வீணாக இப்படி ஆஹ்வாநம் பண்ணினாரே! என்று திருவுள்ளம் நொந்து, அவருடைய பத்திரிகைக்கு உத்தரமாக,

ந மே பித்ரார்ஜிதம் கிஞ்சித் ந மயா கிஞ்சிதார்ஜிதம் ।
அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம்.

என்கிற ச்லோகத்தை யெழுதியனுப்ப, அவரும் அதைக் கண்டு, ஸ்வாமி தேசிகனிடத்தில் அவர்தாம் வைத்திருந்த ப்ரீதிவிசேஷத்தினால் எப்படியாவது இவர்க்கு அபரிமித த்ரவ்ய லாபம் பண்ணிவைக்க வேணுமென்கிற ஆசையினால் மீண்டும் மிக சிரப்பர்தித்துப் பத்ரிகை விடுக்க, [மஹாராஜன் மூலமாகவும் சிறந்த மரியாதையுடன் ஆஹ்வாநம் பெறுமிக்க] அப்போது ஸ்வாமி அநுக்ரஹித்தருளியனுப்பிய ச்லோக ரத்னங்கள் வைராக்ய பஞ்சகமென்று ப்ரஸித்தி பெற்றிருக்கும். [இது அடியேனது விரிவுரையுடன் உள்ளது.]

ஒரு மாயாவாதிஸந்ந்யாஸி கச்சியில் வந்து ஸ்வாமியோடு தர்க்கித்துத் தோல்வி பெற்றதனால் வருந்தி இவர்க்கு ஏதேனும் இன்னல் விளைக்கவேணுமென்றெண்ணித் தனக்குள் ஆபிசாரமந்த்ரவாத சக்தியினால் ஸ்வாமிதிருமாளிகைக்கு அருகிலுள்ளதொரு குளத்தில் தண்ணீருண்டு அது ஸ்வாமியின் திருவுதரத்திலே புகுந்து மஹோதர மாகும்படி செய்ய, இந்த மாயச்செய்கையை அறிந்த ஸ்வாமி தம் திருமாளிகைவாசல் தூணை நகத்தினால் கீறியருள, அதில் நின்றும் தண்ணீர் பெருக, ஸ்வாமியின் திருவுதரம் பழையபடியாயிற்று. இது கண்ட அந்த மாயாவாதி, ஸ்வாமியின் சக்திவிசேஷத்திற்கு மிக வியந்து திருவடியில் தொழுது சென்றான்.

ஒரு நாள் ஒரு ப்ரஹ்மசாரி, ஸ்வாமி ஸந்நிதியில் வந்து தெண்டனிட்டு "அடியேன் மிகவும் அகிஞ்சநன்; விவாஹம் செய்துகொள்ள விருப்பமுடையேன்; ஸ்வாமி த்ரவ்ய ஸஹாயம் செய்தருளவேணும்" என்று ப்ரார்த்தித்தான். அது கேட்டு ஸ்வாமி புன்முறுவல் செய்து "பிள்ளாய்! நானோ உஞ்சவ்ருத்தி பண்ணிப் பெருமாள் திருவாராதனம் நடத்துகிற வன் என்பது உனக்கு நேரில் தெரியும்; இப்படியிருக்க விசேஷதனிகர்களை விட்டு என்னிடம் வந்து பொருள் யாசிப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவ, "ஸ்வாமி திருவுள்ளம் பற்றினால் அல்பமானதொன்று மில்லையென்றும் வேண்டிய பொருள் கிடைக்குமென்றும் பல பெரியார்சொல்லக் கேட்டதனாலே ஸ்வாமியை ப்ரார்த்திக்கலானேன்" என்று அவன் விடைகூற, ஸ்வாமியும் அது கேட்டு 'அப்படியா? பாகவதர்கள் அவ்வளவு அருளிய படிக்கு நீ வேண்டிய பொருள் கிடைத்தே தீரும்; இனி விசாரப்படாதே; ஸ்ரீ ஸ்துதியை அநுஸந்தானம் செய்துகொண்டு பெருந்தேவித் தாயாரை ப்ரதக்ஷிணம் செய்துவா; அநுக்ரஹமுண்டாகும்' என்று கூறி, எற்கெனவே பெருந்தேவித்தாயார் விஷயமாக அருளிச்செய்திருந்த ஸ்ரீஸ்துதி என்னும் ஸ்தோத்திரத்தை அவனுக்குக் கண்டபாடம் செய்வித்தருளினர். அவனும் அற்றைநாள் முழுதும் அந்த ஸ்துதியையே ஆவ்ருத்தி செய்துகொண்டிருந்து மற்றைநாள் காலை ஸ்வாமி ஆஹ்நிகங்களை முடித்துக்கொண்டு பேரருளாளன் ஸந்நிதிக்கு மங்களாசாஸனார்த்தமாக எழுந்தருளும்போது அந்த ப்ரஹ்மசாரியும் ஸ்வாமியைப் பின் சென்று ஸ்ரீஸ்துதியைச் செவிக்கினிதாக அநுஸந்தித்துக்கொண்டே பெருந்தேவித்தாயாரை வலம்வர,

"ஆர்த்தத்ராணவ்ரதிபி ரம்ருதாஸாரநீலாம்புவாஹை: அம்போஜாநாமுஷஸி மிஷதா மந்தரங்கைரபாங்கை:, யஸ்யாம் யஸ்யாம் திசி விஹரதே தேவி! த்ருஷ்டிஸ் த்வதீயா தஸ்யாம் தஸ்யா மஹமஹமிகாம் தந்வதே ஸம்பதோகா:. யோகாரம்பத்வரிதமநஸோ யுஷ்மதைகாந்த்ய யுக்தம் தர்மம் ப்ராப்தும் ப்ரதமமிஹ யே தாரயந்தே தனாயாம்! தேஷாம் பூமேர தனபதிக்ருஹாதம்பராத் அம்புதேர் வா தாரா நிர்யாந்த்யதிகமதிகம் வாஞ்சிதாநாம் வஸூநாம்" என்கிற ச்லோகங்கள் அநு ஸந்திக்கப்படுமளவில் தாயார் ஸந்நிதியில் திருமுன்பே ஸ்வர்ணதாரைகளின் வர்ஷம் வாய்த்

நிட அனைவரும்கண்டு அதிசயித்தனர். பிரமசாரியும் கிருதார்த்தனாய் விடைபெற்றுச் சென்றனன்.

ஸகல வகைகளாலும் ஸ்வாமியை நிகர்த்தவரான ஒரு திருக்குமாரர் நளஸம்வத்ஸரம் ஆவணிமாதத்து ரோஹிணி நக்ஷத்ரத்தில் திருவவதரிக்க, அவர்க்கு வரதாசார்யர் என்று திருநாமமிடப்பட்டது. இவரும் ப்ராப்த காலங்களில் உபநயனாதி ஸம்ஸ்காரங்களைப் பெற்று "யஸ்மாதேவ மயா ஸர்வம் சாஸ்த்ரமக்ராஹி நாந்யத:" என்று இவர் தாமே பேசியுள்ளபடி ஸ்வாமி ஸந்நிதியிலே ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அதிகரித்து விலக்ஷண கொளுத்தின தீவட்டி போலே விளங்கி வந்தார்.

ஸ்வாமிதேசிகனுக்கு வேதாந்தாசார்யர் என்றும், கவிதார்க்கிக கேஸரீ என்றும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்றும், ஸமஸ்யா ஸஹஸ்ரீ என்றும் இங்ஙனே பல பிருதுகள் ப்ரஸித்தமாய் நிகழ்ந்தன. இவற்றுள் வேதாந்தாசார்யர் என்கிற பிருது ஸ்ரீரங்கநாதனால் அளிக்கப்பட்டதென்னுமிடம் ஸ்வாமியின் திவ்ய ஸூக்திகளினாலேயே தெரியவருகின்றது; ஸங்கல்பஸூர்யோதய ப்ரஸ்தாவனையில்—[ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞாலப்த வேதாந்தாசார்யபத:] என்றும், அதிகரணஸாராவளியின் தொடக்கத்தில் [ஸ்வஸ்தி ஸ்ரீரங்கபர்த்து:] என்னும் ச்லோகத்தில் [தேந தேவேந தத்தாம் வேதாந்தாசார்ய ஸம்ஜ்ஞாம்] என்றும் அருளிச் செய்யப்பட்டுள்ளமை காண்க. ஸ்தோத்ர பாஷ்யத்தின் முடிவில் [ஸ்வகபித ஹரிதந்தம் யாமுநஸ்தோத்ரவ்ருத்த்யா வ்யவ்ருணுத நிகமாந்தாசார்யகம் வேங்கடேச:] என்ற ச்லோகத்தில் நிகமாந்த பதத்தினாலும், தயாசதகத்தின் முடிவில் [வேதாந்த தேசிகபதே விநிவேச்ய பாலம் தேவோ தயாசதகமேதத வாதயந்மாம்] என்ற ச்லோகத்தில் தேவபதத்தினாலும் ஸ்ரீரங்கநாதனே குறிக்கப்படுகிறானென்றும் கொள்ளக் கடவது. தர்மிகைக்யத்தால் ஸமன்வயம் காண்க.

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் முதலிய மற்ற பிருதுகள் வித்வான்களால் அளிக்கப்பட்டன. இதுவும் ஸ்ரீதேசிகதிவ்ய ஸூக்திகளினாலேயே தெரிகின்றது; ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் மேலெடுத்தவிடத்தில் [கவிதார்க்கிகஸிம்ஹ இதி ப்ரக்யாத குணஸமாக்ய:] என்றும், ஸ்தோத்ர பாஷ்ய ஸமாப்தியில் [அகணிஸதஸி ஸத்பிர் யஸ் ஸமஸ்யாஸஹஸ்ரீ கவிகதகம்ருகேந்த்ரஸ் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர:] என்றுமுள்ள ஸ்ரீஸூக்திகள் காண்க. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்கிற பிருது ஸ்ரீரங்க நாச்சியாரால் அளிக்கப்பட்டதென்றும் சொல்லுவதுண்டு.

ஸமஸ்யா ஸஹஸ்ரீ என்கிற பிருது மற்ற பிருதுகளைப்போலே ப்ரஸித்தமாக ஸ்வாமிக்கு வழங்குவதில்லையாயினும், அக்காலத்தில் ஸதஸ்ஸுகளில் வித்வான்களால் வழங்கப்பட்டதென்று விளங்குகின்றது. ஒரு ச்லோகத்தின் ஏகதேசத்திற்கு "ஸமஸ்யா" என்று பெயர். ஸமஸ்யா பூரணம் என்பது மதுர கவிகளின் கோஷ்டிகளில் ப்ரஸித்தம். ஒருவர் ஒரு பாதத்தையோ சில பதங்களையோ கவனஞ்செய்து வெளியிட்டால், மற்றொருவர் அப்போதே பூர்ண ச்லோகம்படி அதனைப் பூர்த்திசெய்து வெளியிடுதல் ஸமஸ்யா பூரணமெனப்படும். கவிகளுக்கு இதுவொரு விநோதமான போது போக்கு.

தேசிகன் ஸமஸ்யைகள் கொடுப்பதிலும், பிறர் கொடுக்கும் ஸமஸ்யைகளைப் பூரணம் செய்வதிலும் மிகவும் வல்லவர் என்பது விளங்க இவர்க்கு "ஸமஸ்யா ஸஹஸ்ரீ" என்ற பிருது தோன்றியதென்பர். அங்ஙனே ஸ்வாமி அருளிச்செய்த ஸமஸ்யைகளோ பூரணங்களோ இப்போது ஒன்றும் கிடைக்காததனால் அப்ரகாசமாயினவென்று சொல்லக் கேள்வி.

ஸ்வாமி ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரென்று பிருது வஹித்து விளங்குவதில் பொறாமை கொண்ட ஒரு கொத்தன் ஸ்வாமி திருவயிந்திரபுரத்தில் எழுந்தருளியிருக்கும்போது ஒரு நாள் அருகேவந்து, தேவரீர் எல்லாக்காரியங்களும் செய்ய வல்லமை பெற்றிருந்தாலன்றோ ஸர்வத

ந்த்ர ஸ்வதந்த்ரரென்று விருதூதிப் புறப்படலாம்; நான் கிணறு கட்டுவேன்; அது கட்ட உமக்குத் தெரியாதல்லவோ? அப்படியிருக்க அந்த விருதை நீர் எங்ஙனே வஹிக்கலாம்? என்று சோதிக்க, ஸ்வாமியும் புன்முறுவல் செய்துகொண்டே அவன் முன்னிலையிலேயே ஒரு கிணறு நிர்மாணஞ் செய்து அவனது செருக்கை யடக்கினர். இந்தக் கிணறு நாளைக்கும் பக்தர்கள் சேவிக்கத்தக்க நிலைமையிலுள்ளது.

மற்றொருநாள் ஒரு பாம்பாட்டி, ஸ்வாமிஸந்நிதானத்தில் விடைகொண்டு 'நீர் ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரராகில் கொடிய பாம்புகளை ஆணையிட்டுக் கட்டுந்திறனும் உமக்குத் தெரிந்திருக்கவேண்டுமே; அந்த வல்லமையைக் காட்டுவீராகில் நீர் மெய்யே ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரே' என்று சொல்லிக்கொண்டே தான் ஜீவனார்த்தமாக வைத்திருந்த சில பாம்புகளைப் பெட்டியில் நின்றும் திறந்துவிட, அவையும் சீறிக்கிளம்ப, அப்போது ஸ்வாமி, இனி நாம் வெறுமனிருக்கலாகாதென்று கருதி வைநதேய மந்த்ர ஜபத்துடனே தம்மைச் சுற்றிச் சில கோடுகள் போட, மிகக்கொடிய ஒரு ஸர்ப்பம் மாத்திரம் கோடுகளைக் கடந்து ஸ்வாமியை நெருங்கினவளவிலே, ஸ்வாமி உடனே திருநயனத்தினால் பக்ஷிராஜனை ஆஹ்வானம் செய்தருள, அவனும் சடக்கெனவந்து தோன்றி அந்த அரவங்களைக் கவ்விக்கொண்டு அகலவே பாம்பாட்டி தான் பயப்பட்டது மல்லாமல் தனது ஜீவனார்த்தமாக வைத்திருந்த பாம்புகளும் தொலைந்ததனால் பரிதாபம் மிக்கு ஸ்வாமி திருவடிகளிலே விழுந்து வேண்டிக்கொள்ள, ஸ்வாமியும் திருவுள்ளமிரங்கி மீண்டும் அந்தப் பாம்புகள் அவனுக்குக் கிடைக்குமாறு அநுக்ரஹஞ் செய்தருளினர்.

உலகில் கவனம் செய்வதில் மிகவும் குசலர்களான மஹாகவிகள் பலர் இருந்தாலும் ஸ்வாமியினுடைய கவித்வஸாமர்த்தியம் பரம விலக்ஷணமாயிருக்கும். 1. ஆசுகவி, 2. மதுரகவி, 3. சித்ரகவி, 4. விஸ்தாரகவி—என நான்கு வகையாக வகுக்கப்பட்டுள்ள கவிகளிலும் ஸ்வாமி நிகரற்றவர். "ஜடாதாக்ருஷ்டாநாம் கதிபயபதாநாம் ரசயிதா" என்கிற கணக்கிலே மிகவும் சிரமப்பட்டுப் பதங்களைக் கூட்டிக் கவிபண்ணுவாராக வன்றிக்கே சொற்களானவை "என்னைக்கொள் என்னைக்கொள்" என்று அஹமஹமிகயா வந்து நெருக்குண்டு கங்காப்ரவாஹம்போலே பெருக்கெடுத்து ப்ரவஹிக்கும்படியான ஆற்றல் அஸாதாரணமாக இருக்கக் காணத்தக்கது.

ஒரு க்ஷண மாத்திரத்திலே அநேக ச்லோகங்களை அவதரிப்பிக்கும் சக்தியும் அந்த ச்லோகங்களெல்லாம் அர்த்த புஷ்டியோடும் சப்த புஷ்டியோடும் கூடியிருக்கப் பெறுமையும், பத்மபந்தம், சக்ரபந்தம், முரஜபந்தம் என்றாற்போலே பலவகைப் பட்ட பந்தங்களிலே யமைத்து ச்லோகங்களை அவதரிப்பிக்க ஸங்கல்பித்த மாத்திரத்திலே அவை அழகாக அமையும் அதிசயமும், அவைதாமும் எண்ணிலா திருக்கப் பெற்ற ஆச்சரியமும் நோக்குமிடத்து, கவிதாவதார பூமியாக ஸ்வாமியை அறுதியிடலாம்.

ஸ்வாமியின் பெருமையைக் கண்டு பொறாத சிலர் தங்கள் பொறாமைக்குப் போக்கு வீடாக, ஸ்வாமி திருமாளிகைக்குள்ளே எழுந்தருளியிருக்கும்போது வெளிவாசற் பட்டையில் பழைய பாதரக்ஷைகளைக் கட்டித் தொங்க விட்டு வைத்து வேடிக்கை பார்ப்பதற்காக மறைந்து நின்றார்களாம். ஸ்வாமியும் காரியவசாத் வெளியே எழுந்தருளும்போது அந்தப் பாதரக்ஷைகள் தலையில் இடிக்க உடனே நிமிர்ந்து பார்த்து விஷயமறிந்து, * கர்மாவலம்பகா: கேசித் கேசித் ஜ்ஞாநாவலம்பகா:, வயம் து ஹரிதாஸாநாம் பாதரக்ஷாவலம்பகா:* என்று அநுஸந்தித்துக் கொண்டே யெழுந்தருள, இந்த அத்யவஸாய விசேஷத்தைக் கண்டு ஸ்வரூப

இசைந்து பெற்ற அந்த பொறாமைக்காரர்கள் சடக்கெனத் திருவடிகளிலே விழுந்து பொறுப்பித்துக்கொண்டு போனார்கள். என்பதாக ஒரு ஐதிஹ்யம் சொல்லி வருகிறார்கள். *கர்மாவலம்புகா: இத்யாதி ச்லோகத்தை ஸ்வாமி ஸாதித்திருப்பதுண்டு; அதற்குச் சார்பாக இந்த ஐதிஹ்யம் கல்பிதமாயிருக்கக்கூடும் என்று சில மஹான்கள் திருவுள்ளம் பற்றுகிறார்கள். வேதாந்த தேசிக வைபவ ப்ரகாசிகா ஸ்தோத்திரத்தில் இவ்வைதிஹ்யம் காண்கையாலே விப்ரதிபத்திக்கு இடமில்லையென்றும் சொல்லுகிறார்கள்.

ஸ்வாமியினுடைய திருத்தகப்பனாருக்குத் திருவத்யயனம் ப்ராப்தமாக, வழக்கப்படி மூன்று ஸ்வாமிகளை முன்னமே நிமந்த்ரணம் செய்துவைக்க, அவர்களும் இசைந்திருந்து சில பொறாமையாளர்களின் துர்ப்போதனைக்கு வசப்பட்டுத் தம்தம் க்ருஹங்களிலேயே போஜனம் செய்து விட்டு, ஸமயத்தில் சில வ்யாஜோக்திகளைச் சொல்லியனுப்பி ச்ராத்தத்தைக் கெடுக்கப் பார்த்தவளவிலே ஸ்வாமியும் அந்த அகாலத்திலே வேறொருவரையும் நிமந்த்ரணம் செய்ய முடியாமல் மூசித்திருந்து, பிறகு ஒருவாறு உள்ளம் தேறி ஸ்ரீஹயக்ரீவனையே ஆவாஹநம் செய்தருளி ஹோமம் முதலியவற்றையும் ஸக்ரமமாக நடத்தி, வரணம் முதலியவற்றையும் செய்து மூன்று இலைத்தளிகைகளைச் சேர்த்து ப்ரஸாதவ்யஞ்ஜநாதிகளைப் பரிமாறிப் பரிஷேசநாதிகளையும் பண்ணிவைத்துத் திருத்திரை சேர்த்து, திரைக்கு வெளியே தாம் நின்றுகொண்டு 'யதாஸ்வாதம் ஜுஷத்வம்' என்று ப்ரார்த்தித்து அபிச்ரவணம் ஓதிக்கொண்டிருக்க, ஸ்வாமியின் திருவுள்ளத் தூய்மைக்கு உகந்தருளின ஹயக்ரீவன் தாமே மூன்று இலைகளிலும் எழுந்தருளியிருந்து அமுதுசெய்யும் ஓசை அடங்கினவுடனே திரையைவிழ்த்து மேற்காரியங்களையும் யதாக்ரமமாக நடத்தி இப்படிப் பங்க்தி போஜனத்தில் அமர்ந்தருளினார். அப்போது ச்ராத்தத்தைக் கெடுத்துவிட்டதாக எண்ணி ஸந்தோஷிக்க அவ்விடம் வந்து சேர்ந்து மறைந்து பார்த்துக்கொண்டிருந்த பாதகர்கள், ஸ்ரீ ஸ்வாமியின் திருமாளிகைவாசல் திண்ணையில் மஹா-தேஜஸ்விகளாக மூன்று ஸ்வாமிகள் அமுது செய்த திருக்கோலத்துடனே ஸேவை ஸாதிக்கக்கண்டு மிகவும் அதிசயித்து ஸ்வாமி திருவடிகளிலே விழுந்து க்ஷாமணம் செய்துகொண்டு சென்றார்கள்.

ஸ்வாமி உஞ்சவ்ருத்தியினாலேயே (கூரத்தாழ்வான் போல்) தேஹயாத்ரையை நடத்திக்கொண்டு வந்தாராதலால் அதை இழிவாக நினைத்த சிஷ்யர்கள் அந்த உஞ்சவ்ருத்தியை நிவர்த்திப்பிக்க வேணுமென்றெண்ணி ஒரு நாள் தண்டுலத்துடன் ஸ்வர்ண த்ரவ்யங்களையும் சேர்த்து ஸமர்ப்பித்தார்கள். திருமாளிகைக்கு எழுந்தருளினபின் தேவிகள் அவற்றைக் காண்பிக்க, ஸ்வாமி கடாக்ஷித்து அதைக் காஷ்டலோஷ்ட கீடவிசேஷமாக எண்ணி வீதியிலே இறைத்துவிட்டார்.

ஸ்வாமி ஒருகால் திருவரங்கம் பெரிய கோயிலுக்கு எழுந்தருளாநிற்கையில் வழியிடையே ஒருநாள் பகவதாராதனத்திற்கு ஸௌகரியமில்லாமற்போக, அன்று வெறும் தீர்த்தத்தையே பெருமாளுக்குக் கண்டருளப்பண்ணித் தாமும் ஸ்வீகரித்து மேலே வழி நடந்து இரவில் ஒரு த்ரைவர்ணிகனுடைய மனையருகில் விச்ரமித்திருக்க, அப்போது ஸ்ரீஹயக்ரீவன் நிஜரூபத்துடன் வெளியேறி அந்த த்ரைவர்ணிகனுடைய கொல்லையில் தானியங்களை யதேஷ்டமாக புஜித்துக்கொண்டிருக்க, அதனையறிந்து சென்று அவன் தன்னாலான மட்டும் துரத்திப்பார்த்தும் முடியாமல் இது ஸ்வாமியினுடைய குதிரையாயிருக்குமென்று ஊஹித்து உடனே ஸ்வாமியைத் தட்டி எழுப்பிக் குதிரையைப் பிடித்துக் கட்டவேணுமென்று வேண்ட, ஸ்வாமியும் திடுக்கிட்டு இது வெள்ளைப்பரிமுகருடைய விளையாடல் போலுமென்று அத்யவஸித்து, பால்வரவழைத்து நிவேதனம் செய்தருளினவாறே குதிரை[illegible]ரான் அந்தர் ஹிதரானார்.

ஸ்வாமி ஒரு ஏகாதசி நாளில் ஸ்ரீ ரங்கநாதனை மங்களாசாஸனம் செய்து நிற்கையில் பொறாமைக்காரர்களின் ப்ரேரணையால் அர்ச்சகர் ஸ்வாமி திருக்கையில் பொங்கல் ப்ரஸாதத்தைக் கொணர்ந்து கொடுக்க, ஸ்வாமியும் அதைத் தமது திருக்கைகளில் வாங்கி வைத்துக்கொண்டு பெரிய பெருமாளை நோக்கி 'ஸ்வாமின்! அடியேனை இங்ஙனே சோதிக்கத் திருவுள்ளம் பற்றலாமோ? உபவாஸதினமான இன்று இவ்வன்னத்தைப் பாவியேன் என் செய்வேன்? ஓலைப்புறத்து நியமனம் பெரிதோ? இப்போதைய நியமனம் பெரிதோ? நியமித்தருள வேணும்' என்று விண்ணப்பம் செய்ய; ஸ்ரீ ரங்கநாதன் மற்றோர் அர்ச்சகர்முகேன 'பிள்ளாய்! இது நமது ஆஜ்ஞையன்று; ஏகாதசியன்று ஒரு நாளும் அன்னம் ஸ்வீகரிக்கத்தக்கதன்று காண்' என்று நியமிக்க, ஸ்வாமியின் ப்ரபாவாதிசயத்தைக் கண்டு அர்ச்சகாதிகள் திருவடி வணங்கி அபசாரக்ஷாமணம் செய்து கொண்டார்கள்.

ஸ்வாமி நம்பெருமாள் ஸந்நிதியில் உபயவேதார்த்த ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்த காலத்தில் ஒருநாள் தமது திருமாளிகைவாசல் திண்ணையில் வீற்றிருந்து மிகப் பெரிய விஷய விசார மௌனத்தில் ஆழ்ந்திருக்கையில் 'கந்தாடை லக்ஷ்மணாசார்யர்' என்கிற ஆசார்ய பீடஸ்தரொருவர் தம்முடைய சிஷ்யர்களுடன் அந்த வீதி வழியே சென்று கொண்டிருந்தார். அதை தேசிகன் கவனியாமல் எழுந்தருளியிருந்ததற்காக அந்த சிஷ்யர்களிலொருவர் மிகச் சினந்து தேசிகனிடம் ஓடிவந்து 'நமது மஹாசார்யர் எழுந்தருளா நிற்க நீர் இங்ஙனே அவமரியாதை காட்டி உட்கார்ந்திருப்பது என்ன பேதைமை!" என்று ஆவேசித்து ஸ்வாமியின் திருவடிகளைப் பிடித்து இழுத்து விட்டுச் சென்றார். ஸ்வாமியும் திடுக்கிட்டெழுந்து இப்படி வீணுக பாகவதாபசாரம் நேர்ந்து விட்டதே! என்று சாலவும் திருவுள்ள முடைகுலைப்பட்டு ஏகாந்த ஸமயத்திலே திருவுள்ளம் சென்று கோயிலைவிட்டுப் புறப்பட்டு, ஸத்ய மங்கலத்திற் கெழுந்தருளி அங்கே வெகுகாலம் வாழ்ந்து வந்தார். "சிஷ்யபாபம் குரோரபி" என்பது சாஸ்த்ர மாகையாலே அந்த சிஷ்யன் செய்த பாபம் அவனது குருவான லக்ஷ்மணாசார்யர் செய்ததாகத் தீர்ந்து அவருடைய மேனியில் ஒரு வைவர்ணியம் உண்டாயிற்று. பல சிகித்ஸைகள் செய்தும் "பிணியுமொழிகின்றதில்லை பெருகுமிது வல்லால்" என்றாற்போலே அந்த வியாதி மென்மேலும் அதிகரித்து வருகிறபடியைக் கண்ட அவர் 'இது தேசிகன் திருவடிகளில்பட்ட அபசாரத்தின் பலனே' என்று ஆப்த வசனங்களாலே அறுதியிட்டு ஸபரிவாரராய் ஸ்வாமி தேசிகனிடத்தேறச் சென்று பொறுமை வேண்டிக் கொண்டும் ஸ்வாமி திருவடிவாரத்திலேயே வஸித்திருந்து நித்யம் ஸ்ரீபாததீர்த்தம் ஸ்வீகரித்துப் போந்தார். அதன் பலனாக அவர் தீராத நோய் தீரப்பெற்றதுமன்றி ஒரு மகப்பேறும் உண்டாகப் பெற்றார். தீர்த்த மஹிமையினாலேயே பிறந்த அந்த மகனுக்கு தீர்த்தப் பிள்ளையென்றே பெயரிட்டார். அந்தப் பிள்ளை தேசிகன் விஷயமாக ஒரு ஸ்தோத்ரத்தை பணித்திருப்பதாகவும் ப்ரஸித்தி. பிறகு அந்த லக்ஷ்மணாசார்யருடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி தேசிகன் திருவரங்கம் பெரியகோயிலேற மீண்டெழுந்தருளினார்.

இங்ஙனம் கோயிலில் வாழ்ந்தருளுங் காலத்தில் ஒரு நாள் துலுக்கர்கள் ஸஹஸா படையெடுத்து வருகையில் அப்போது கோயிலில் இருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பலரும் ஸதுபாயமாகப் பெருமாளுக்குச் சேமக்காப்புச் செய்து பல திசைகளிலும் பாறியோட நேர்ந்தது. அப்போது ஸ்வாமி தேசிகனும் மேற்கே எழுந்தருளும்படியாயிற்று. அப்போது கோயிலில் ச்ருதப்ரகாசிகா பட்டர் துருஷ்கயவனர்களின் கலவு பொறுக்க மாட்டாமல் உயிர் துறக்குமவராக ஏற்கெனவே தாமருளிச் செய்திருந்த ச்ருதப்ரகாசிகா ஸ்ரீகோசத்தை ஸ்வாமி திருக்கையிலே கொடுத்து "இதை ஸத்பாத்ர விநியோகம் செய்து போரீர்" என்று நியமித்து, தம்முடைய இரண்டு குமாரர்களையும் ஸ்வாமியிடமே

[illegible] திருநாட்டுக் கெழுந்தருளினர். அப்போது ஸத்யமங்கலம் முதலான மேல் நாட்டு ஊர்களிலே வாழ்ந்து திருநாராயணபுரம் சென்று சேர்ந்த தேசிகன் திருவரங்கம் பெரியகோயில் நிஷ்கண்டகமாக வேணுமென்றும், பழையபடியே தாம் கோயிலிலே வாழப் பெறவேணு மென்றும் கொண்ட மநோரதங்களைப் பெய்து அபீதிஸ்தவ மென்னும் அரிய பெரிய ஸ்தோத்ர மொன்றை யருளிச்செய்து சிஷ்யர்களுடனே நித்யாநுஸந்தானம் செய்து வந்தார்.

அபீதிஸ்தவாநுஸந்தானத்தின் பயனாக அடியார்களும் அரங்கநகரும் அவத்யம் நீங்கி அமரிக்கை யடைந்ததாகக் கேள்வியுற்ற ஸ்வாமி தாமும் போரவுமுகந்தருளி நம்பெருமாள் ஸந்நிதிக்கே மீண்டும் வந்து சேர்ந்தார். அப்போது கோப்பணார்யன் என்னும் பரமபாகவதோத்தமனான செஞ்சி சிற்றரச னொருவன் துருஷ்கர்களை யெல்லாம் வலியொழித்து ஆபத்துக்களை அறவேயொழித்து நம்பெருமாளையும் யதாவத்தாகத் திருப்ரதிஷ்டை செய்வித்து நித்யோத்ஸவாதிகளை யெல்லாம் நிலைபெறுத்தியிருந்த சிறப்புக்களைக் கடாக்ஷித்துத் திருவுள்ளம் மகிழ்ந்திருந்தார்.

* வேள்வும் விழவும் வீதியிலென்றுமறாத ஊர்களிலே தலையான அந்தத் தென்னரங்கத்திலே மார்கழித் திருநாளான திருவத்யயந மஹோத்ஸவம் ப்ராப்தமான ஸமயத்திலே புறச்சமயிகள் திரண்டுவந்து "தமிழ்ப் பாஷையிலமைந்த ப்ரபந்தங்களை இங்கே ஓதுவதற்கும் அந்தப் ப்ரபந்தங்களைப் பகர்ந்த ஆழ்வார்களை இங்கே போற்றுவதற்கும் ப்ரமாணம் காட்டினாலல்லது இத்திருநாள் செய்ய வொட்டோம்" என்று தடைசெய்து நிற்க, அப்போது ஸ்வாமி தேசிகன் * தாழாதே சார்ங்கமுதைத்த சரமழை போல் ப்ரமாணோபந்யாஸ பூர்வகமாக அவர்களுடைய துர்வாதங்களை நிரஸித்தருளி ஒரு விபவமும் குன்றாமே அவ்வுத்ஸவம் முன்னினும் சிறந்த நடை பெறுமாறு க்ஷேமம் செய்தருளினர்.

இங்ஙனம் ஸ்வாமி கோயிலில் சீரும் சிறப்பும் பொலிய வாழ்ந்தருளா நிற்குங்காலத்திலே, அத்வைத மத ப்ரவர்த்தகரா யிருந்த வித்யாரண்யருக்கும் த்வைத மத நிர்வாஹகரா யிருந்த அக்ஷோப்ய முனிவர்க்கும் வேதாந்த வாக்யார்த்தம் நடந்து வருகையில் அதில் ஜயாபஜயங்களை நிஷ்கர்ஷிக்கத் தகுதியான மத்யஸ்தர் நேர்படாமல் அவர்கள் தங்களுடைய வாத விவாதங்களை யெழுதி ஸ்வாமி தேசிகனிடம் அனுப்ப, ஸ்வாமி அவற்றைப் பராமர்சித்து அக்ஷோப்ய முநிபக்ஷத்தில் வெற்றியைத் திருவுள்ளம் பற்றி * அஸிநா தத்த்வமஸிநா பரஜீவப்ரபேதிநா, வித்யாரண்ய மஹாரண்யம் அக்ஷோப்ய முநிரச்சிநத் * என்கிற ச்லோகஸம்வலிதமான காரிகாரத்நத்தை அநுக்ரஹித்து அனுப்பியருளினர்.

க்ருஷ்ணமிச்ரன் என்கிற ஒரு அத்வைத வித்வான் இயற்றியிருந்த ப்ரபோத சந்த்ரோதய மென்கிற வொருநாடகரத்நத்தை அவனுடைய அநுபக்திகள் ஸ்ரீரங்கத்திலே கொண்டுவந்து ப்ரசாரம் செய்து கொக்கரித்துக் கொண்டிருந்த அளவில் அதை ஸ்வாமி தேசிகன் திருச்செவிசாத்தி 'இதற்கெதிராக ஸங்கல்ப ஸூர்யோதய நாடகம் காணலாகாதோ?' என்று புன்முறுவலோடே பணித்தாராம்; 'அப்படியும் ஒரு நாடகமுண்டோ?' என்று ப்ரஸ்தாவமாக, "நாளையுதயத்திலே காட்டுகிறேன் காணீர்" என்று ஸாதித்து உடனே அந்த திவ்ய நாடகத்தைத் திருவாய்மலர்ந்தருளி ஸூர்யோதயத்திலே தோன்றுவித்தருளினர். அவ்வதிசயத்தைக் கண்டு அனைவரும் அகங்குழைந்தார்கள்.

ஸ்வாமி பணித்த ஸ்தோத்ரங்களுக்குள் அற்புதமான பாதுகாஸஹஸ்ரம், இது, அழகிய மணவாளனுடைய திருவடிநிலையை ஆயிரம் ச்லோகங்களால் ஆச்சரியமாக பாட இதனை யருளிச் செய்ததற்குக் காரணம் இன்னதென்பதை 'ஆசாரிய சம்பூ' என்று ப்ரஸித்தமான வேதாந்தாசார்ய விஜய காவ்யம் ஆறாவது ஸ்தபகத்தில் கூறியுள்ளது; ஸ்வாமியின் பெருமையைப் பொறுக்கவொண்ணாது, 'ராமே ஆநகவி' என்று செருக்குற்றவனுமான ஒரு இதர ஸம்ப்ரதாயக் கவியோடு ஸ்பர்த்தை யுண்டாகி அதனால் ஸ்வாமி இந்த க்ரந்தம் அருளிச்செய்ய லாயிற்றென்கிறார் சம்பூகாரர். வைபவப்ரகாசிகா ஸ்தோத்ரத்திலோ வென்னில் (ச்லோ. 114.) "ஸம்ப்ரார்த்திதஸ் ஸம்ஸதி ஸஜ்ஜனைர்ய: பாதாவநீம் ரங்கபதேர் நிநாயாம்" என்கிற ச்லோகத்தினால், திருவோலக்கத்தில் சில மஹான்கள் ஸ்வாமியைப் ப்ரார்த்திக்க அதனால் இந்த ஸ்தோத்ர மருளிச் செய்ததாகச் சொல்லிற்று.

ஒரு நாள் சில பொறாமையாளர்களால் தூண்டப்பட்ட சில்பி யொருவன் ஸ்வாமியின் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர பிருதை ஆக்ஷேபித்து சில்பத்திலும் ஸ்வாமியினுடைய அப்ரதிம சாதுர்யத்தை உலகமறிய ப்ரகாசிப்பிக்கவேண்டிக் கொக்கரித்து நிற்க, அப்போது ஸ்வாமியும் தம்முடைய சில்பசாஸ்த்ர பாண்டித்யத்தை நன்கு புலப்படுத்தித் தம்மைப்போல ஒரு விக்ரஹம் எழுந்தருளப்பண்ணிக்காட்ட, ஸர்வாங்கஸுந்தரமான அதன் பொருத்தத்தைக் கண்டு வியந்த அந்த சில்பி தோற்றேனென்று திருவடிகளிலே விழுந்து க்ஷாமணம் வேண்டிச் சென்றான். அந்த திவ்யமங்கள விக்ரஹத்தை ஸ்வாமி தாம் ஆரத் தழுவியருளித் திருக்குமாரர்பாடே கொடுத்தருளினாரென்று ப்ரஸித்தம்.

இங்ஙனேயான அதிமாநுஷ திவ்யப்ரபாவங்களைப் பண்ணியுரைக்குங்கால் பாரதமாம். கடலளவாய்த் திசை யெட்டினுள்ளும் மிடைதந்த கலிதோஷ உபதேசங்களாலும் அனுஷ்டானங்களாலும் பலபல திவ்யக்ரந்த ரசனைகளாலும் போக்கியருளி "பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம் நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கியாதொன்றுமில்லை" என்ற ஆழ்வாரருளிச் செயலை அர்த்தவத்தாக்கி யருளினவர்.

எப்படிப்பட்ட அதிசயித ப்ரபாவர்களையும் எம்பெருமான் ஒருகால் தன்னடிச் சோதிக்கு வரவழைத்துக் கொள்வதென்பது ஒரு நியமமாகக் காணுதலால், ஸ்வாமியையும், * சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதிபேற வரவழைத்துக் கொண்டு ஒழிவில் காலமெல்லாம் வழுவிலா வடிமைகொண்டருளத் திருவுள்ளம்பற்றின வளவிலே, ஸ்வாமியும் ஸௌம்ய ஸம்வத்ஸரத்துக் கார்த்திகைப் பௌர்ணமி நன்னாளில் இருள் தருமா ஞாலத்தை விட்டு தெளிவிசும்பு திருநாட்டேற வெழுந்தருளினார்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் வைபவம் முற்றிற்று.

ஸ்ரீ

மணவாளமாமுனிகள் வைபவம்.

" மன்னுயிர்காள் இங்கே மணவாளமாமுனிவன்
பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை—உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக்
கரத்தாலே தீண்டல் கடன்."

ப்ரவேசம்.

உபய விபூதி நாதனான எம்பெருமானுடைய லீலா விபூதியாகிய இவ்வுலகம் ஞானிகளால் இருள் தருமாஞாலமெனப்பட்டது. இருளைப் போக்குதற்குரிய அக்நி ஸூர்யன் சந்திரன் முதலிய தேஜஸ் பதார்த்தங்கள் பல பல இருந்தும் அவற்றால் போக்கவொண்ணாத அஜ்ஞாநாந்தகாரமே இங்கு இருள் எனப்பட்டது. அந்தவிருளைப் போக்குவதற்கு * புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர:" என்றபடி எம்பெருமானாராகிற விலக்ஷண ஸூர்யன் இவ்வுலகில் திருவவதரித்து "கடலளவாய திசையெட்டினுள்ளும் கலியிருளே, மிடைதரு காலத்திராமானுசன் - மிக்க நான்மறையின் சுடரொளியால் அவ்விருளைத் துரந்திலனேல் உயிரை யுடையவன் நாரணனென்று அறியாரில்லை யுற்றுணர்ந்தே." என்ற அமுதனாருளிச் செயலின்படியே மஹோபகாரம் செய்தருளும் படியாயிற்று. "நற்றவச்சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன், சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும், நான்மறையும் நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனர் நீணிலத்தே, பொற்கற்பகம் எம்மிராமானுசமுனி போந்த பின்னே." என்கிற படியே [illegible] பாஹ்யகுத்ருஷ்டிகளை யெல்லாம் தம் ஸூக்தி சஸ்த்ரங்களாலே நிரஸித்தருளி, "வான்திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ் மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும், ஈன்ற முதல்தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" என்னும்படியாக ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும் ப்ரவர்த்திப்பித் தருளி, இவ்வ தேசங்களையும் உத்தரிப்பித்து ஒருவாறு அவதார க்ருத்யத்தைத் தலைக்கட்டிக் கொண்டு சுடரொளிச் சோதிக்கு எழுந்தருளினபின், சிலகாலம் கடந்த பிறகு, அவ்வவதாரத்தில் [illegible] வேத பாஹ்யகுத்ருஷ்டிகள் தாமே மீண்டும் த்ராவிட வேத பாஹ்யகுத்ருஷ்டிகளாக ஜனித்து இவ்வுலகை நலிய, அந்த எம்பெருமானார் தாமே மீண்டும் வைகுந்தநாதனுடைய திருவாணையினால் இந்நிலவுலகில் திருவவதரித்து மணவாளமாமுனிகளென்கிற திருநாமத்துடனே விளங்கி, முன்னவதாரத்திற் செய்தருளின மஹோபகாரங்களிற் காட்டிலும் பன்மடங்கு அதிசயித்த சேமங்களைச் செய்தருளி இவ்விருள் தருமா ஞாலத்தைத் தெருள் தருமா ஞாலமாகத் திருத்திப் பணிகொண்டார். அவ்வாசார்ய சிகாமணியின் எண்ணில் பல் குணங்களைக் கூறுதற்கு அவர் தம்முடைய நிஜரூபமான ஆதிசேஷனும் அசக்தன் என்கிற விது அதிசயோக்தியன்று.

'பூர்வாசார்யர்' என்று இற்றைக்கும் நாம் வழங்கி வருமாறு பலபல மஹாசார்யர்களின் திருவவதாரத்தினால் புனிதமாய இவ்வுலகில், அவ்வாசாரிய பரம்பரை மணவாள மாமுனிகளோடு முடிவு பெற்றிருக்கின்றது. மாமுனிகளுக்குப் பிறகும் பல பல மஹான்கள் திருவவதரித்தாலும் 'பூர்வாசார்யர்கள்' என்கிற வ்யபதேசம் மாமுனிகளளவிலே விச்ராந்தமாயிருக்குமத்தனை. * மதுரேண ஸமாபயேத்* என்பது நியாய மாதலால் மாதுர்யமே வடிவெடுத்த

மாமுனிகளோடு பூர்வாசார்ய பரம்பரையை எம்பெருமான் ஸமாபநம் செய்தது மிகப் பொருத்தம். மதுரம் என்கிற வடசொல்லானது, 'மகாரத்தை முன்னே யுடையது' என்னும் பொருளையு முடைத்தாதலால் மகாராதியான திருநாமமணிந்த மணவாள மாமுனிகளோடே ஸமாபநம் செய்தருளின பகவான் ஸௌஸமர்த்தனே.

எம்பெருமான் லோக ஸம்ரக்ஷணார்த்தமாகச் செய்தருளின விபவாவதாரங்களுள் இராமபிரானாகத் திருவவதரித்த காலத்தில் பல பேர்களிடத்திலே தான் பணிவுகாட்டிப் போர்ந்தான். விச்வாமித்ர முனிவன், ஸுக்ரீவ மஹாராஜர், ஸமுத்ரராஜன் என்றிப்படிப் பல வ்யக்திகள் பக்கலிலே வணங்கி நின்றான். முதலில் விச்வாமித்ரருடைய சரித்திரங்களையுணராமல் 'இவர் ஒரு மஹர்ஷி' என்கிற ப்ரதிபத்திமாத்ரமே கொண்டு *இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம்* என்று அவர்க்குச் சேவகனாய் நின்றான். பிறகு அஹல்யாசாபவிமோசனம் செய்தபின் சதாநந்தர் வாயிலாக அம்முனிவருடைய சரிதைகளை விரிவாகக் கேட்டபின் இங்ஙனே ராஜஸரும் தாமஸருமான இவரையோ நாம் ஆசார்யனாகக் கொள்ளப்பெற்றது! என்று திருவுள்ளக் குறைபட்டிருந்தான் போலும். பிறகு ஒரு கால் *ஸுக்ரீவம் சரணம் கத:* என்னும்படியாக ஒரு குரங்கினைத் தாசன் காலிலே விழும்படியாயிற்று. அவன் திறத்து ப்ரீதியும் திடமாகின்றிருந்ததில்லை; இளையோனை யனுப்பி *மா வாலிபதமந்வகா:* இத்யாதிகளாலே க்ரோத ப்ரகாசம் செய்ய வேண்டியதாயிற்று. பிறகு *ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி* என்ற விபீஷண வசனத்தின் படியே கடலரசன் பாடே சரணம்புகுந்து கிடந்தான். அங்கும் அப்ரீதியோடே தலைக்கட்டிற்று; *கோபமாஹாரயத் தீவ்ரம்—ஸாகரம் சோஷயிஷ்யாமி* இத்யாதிகள் காண்க.

பிறகு க்ருஷ்ணாவதாரத்தில் ஸாந்தீபனி பக்கலிலே சரணம் புகுந்து வித்யாக்ரஹணம் பண்ணினான்; அங்கு குருதக்ஷிணை ஸமர்ப்பிக்க விரும்பி 'என்ன அபேக்ஷிதம்?' என்று அவரைக் கேட்டபோது *ஓதுவாய்மையும் உவனியப் பிறப்பும் உனக்கு முன்தந்த அந்தணனொருவன், காதலென் மகன் புகலிடம் காணேன் கண்டு நீ தருவாய் எனக்கென்று, ஓதில் வாய்மையினான் உயிர் வேண்டிய குறை முடித்து அவன் சிறுவனைக் கொடுத்தாய்* என்னும்படியாக அந்த ஸாந்தீபனி என்றைக்கோ மறிகடலிலாய் மாண்டு போன தன் புதல்வனைக் கொணர்ந்து கொடுக்குமாறு வேண்டினார். இங்ஙனம் லௌகிகமான பலனை விரும்புகின்றவரை ஆசாரியனாகக் கொள்ளப் பெற்றோமே! யென்று அவ்விடத்திலும் எம்பெருமானது நெஞ்சம் அப்ரீதி கொண்டிருந்தது போலும்.

ஆக, விபவாவதாரங்களில் தான் தலைப்படுத்த விடமெல்லாம் தடுமாறிப் போகவே, பெருங் குறையாளனான பகவான் அர்ச்சாவதாரத்திலாவது குறை தீர ஒரு ஸதாசார்ய ஸமாச்ரயணம் பெற்று வாழ்வோமென விரும்பி, *மாமுனி வேள்வியைக் காத்து அவப்ருதமாட்டிய வடிவிலை போத்தி யெம்பராசாயும்* கோவலனாய் வெண்ணெயுண்டவாயனுமுள்ள அழகிய மணவாளனான திருக்கோலத்தில், ஆசார்யத்வ பூர்த்தியுள்ள மணவாள மாமுனிகள் பக்கலிலே சிஷ்யவ்ருத்தியை வஹித்து க்ருதார்த்தனானான். இத்தகைய நப்புயர்வற்ற பெருமை வாய்ந்த மாமுனிகளின் வைபவம் ஸ்ரீவைஷ்ணவ வுலகுக்கெல்லாம் ஜீவாதுவாகையாலே ஸாரஸங்க்ஷேபமாக இங்கு விஜ்ஞாபிக்கப்படுகிறது.

ப்ரவேசம் முற்றிற்று

மாமுனிகளின் திருவவதாரம்

எம்பெருமானாருடைய திருவடிகளில் ஆற்றுக்கணக்கான முதலிகள் ஆச்ரயித்திருந்தாலும் நம்முடைய ஓரான் வழியான குருபரம்பரையிலே எம்பெருமானார்க்கு அடுத்தபடியாக எம்பார் ஆசார்ய பதம் வஹித்தார். அவருடைய சிஷ்யர் (கூரத்தாழ்வான் திருக்குமாரரான) ஸ்ரீ பராசரபட்டர். அவருடைய சிஷ்யர் நஞ்சீயர். அவருடைய சிஷ்யர் நம்பிள்ளை. அவருடைய சிஷ்யர் வடக்குத் திருவீதிப்பிள்ளை. அவருடைய சிஷ்யர் பிள்ளைலோகாசாரியர். அவருடைய சிஷ்யர் திருவாய்மொழிப்பிள்ளை. அவருடைய சிஷ்யர் மணவாள மாமுனிகள்—என்றிப்படி நம்முடைய குருபரம்பரையின் அடைவு உள்ளது.

தொல்லை வாதியர்களின் வாழ்வு அறவும், மறையவர் தம் தாழ்வு அறவும், தாரணி தவம் பெறவும், தத்துவ நூல்கள் கூழறவும், இந்நிலவுலகத்திலே திருவவதரிக்கத் திருவுள்ளம்பற்றிய திருவனந்தாழ்வான் நல்லார் நவில் குருகூரென்கிற ஆழ்வார் திருநகரியில் திருநாவீறுடைய பிரான் தாஸரண்ணர் என்கிற மஹாசார்யனை *பிதரம் ரோசயாமாஸ* என்கிற கணக்கிலே தந்தையாகவுகந்து அவருடைய திருக்குமாரராய் (கலியுகாதி நாலாயிரத்து நானூற்றெழுபத்திரண்டாவதான) ஸாதாரண வருடத்தில் ஐப்பசி மாதத்தில் திருமூல நக்ஷத்திரத்தில் அந்தத் திருநகரியில் திருவவதரித்தருளினான். அந்த நன்னாளின் சிறப்பை.

“ செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீருலகாரியர்செய்தருள்நற்கலை தேசுபொலிந்திடுநாள்
மந்தமதிப்புவிமானிடர்தங்களை வானிலுயர்த்திடுநாள்
மாசறுஞானியர்சேரெதிராசர் தம் வாழ்வு முளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில் சூழ்குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்
காரமர்மேனியரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர்மணவாள முனிப்பரனவதாரம் செய்திடுநாள்
அழகுதிகழ்ந்திடுமைப்பசியில் திருமூலமதெனு நாளே.”

என்று பாசுரமாகவும்.

யந்மூலமாச்வயுஜமாஸி யதவதரண மூலம்•

இத்யாதி ச்லோகங்களாகவும் பின்புள்ள முதலிகள் அநுஸந்தித்தார்கள்.

இங்ஙனே உலகுக்கெல்லாம் ஒருபிரானாகத் திருவவதரித்தருளின திவ்ய மூர்த்திக்கு ஸ்ரீரங்கநாதனுடைய திருநாமத்தைச் சாத்த விரும்பிய பெரியார் ‘அழகியமணவாளன்’ என்று திருப்பெயரிட்டனர். அழகிய மணவாள நாயனார் என்று சிறப்புத் திருநாமமாக வழங்கி வந்தது.

அந்நப்ராசந சௌளோபநயநாதிகளான வர்ணோசித ஸம்ஸ்காரங்களும் அடைவே நடைபெற்றன.

வித்யாப்யாஸம்.

துக்தோதக்வத்தவள மதுரம் சுத்த ஸத்வைகரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம் (வரவரமுநிசதகம்) என்கிறபடியே ஸாக்ஷாத் திருவனந்தாழ்வானுடைய திருவவதாரமாகிய இவர் *ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி* என்று ஆளவந்தாரருளிச் செய்தபடியே ஞானக்கடலாயிருக்கச் செய்தேயும், ஸ்ரீ ராமக்ருஷ்ணாதிகளும் வஸிஷ்ட விச்வாமித்ர ஸாந்தீபநிப்ரப்ருதிகள் பக்கலிலே வித்யைகளை அதிகரித்தவராக லௌகிகப்ரக்ரியைக்கு

இணங்க வேதங்களையும் வேதாந்தங்களையும் மற்றுமுள்ள ஸகல சாஸ்த்ரங்களையும் திருத்தாப்பனார் முதலானோர் திருவடி வாரத்திலே பணிந்திருந்து அதிகரித்து "சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்தவன்" என்னும்படியாகவே விளங்கினார்.

உசித காலத்தில் க்ருஹஸ்தாச்ரமத்தையும் ஸ்வீகரித்தருளி "மறந்திகழும் மனமொழித்து வஞ்சமாற்றி ஐம்புலன்களடக்கி இடர்ப்பாரத் துன்பம் துறந்து, இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டர்" என்ற ஸ்ரீ குலசேகரப் பெருமாளருளிச் செய்தபடியே ஸ்ரீ வைஷ்ணவ சிகாமணியாய் வாழ்ந்து போருகிறகாலத்திலே ;

ஆசார்ய ஆச்ரயணம்.

பின்பு லோகாசார்யர் திருவடிகளிலே நெடுநாள் பணிந்திருந்து ஸகல சாஸ்த்ர ஸாரஸ்ய ஸாரார்த்தங்களனைத்தையும் அதிகரித்தவராயும், ஆழ்வார்களுடைய ஈரச் சொற்களிலே அப்ரதிமமான அபிநிவேசம் காரணமாகத் திருவாய்மொழிப்பிள்ளை யென்று திருநாமத்தைப் பெற்றவராயும் "நம: ஸ்ரீ சைலநாதாய குந்தீநகர ஜந்மநே, ப்ரஸாத லப்த பரமப்ராப்ய கைங்கர்ய சாலிநே" என்று நிச்சலும் நூவலரும் தொழுதேத்த நிற்பவராயிருக்கின்ற திருமலையாழ்வார் என்கிற மஹாசார்யர் இனி இந்த ஸ்ரீ வைஷ்ணவ தர்சநத்தை நிர்வஹிக்க வல்லவர் யாவர்? என்று சிந்தித்திருப்பாராய் அதிகாரியைத் தேடியிருக்கையில் யாத்ருச்சிகமாக இவர் அவர் திருவடிகளிலே சென்று தெண்டன் ஸமர்ப்பித்து, 'பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யடிமை கொள்ளவேணும்' என்று ப்ரார்த்தித்து நிற்க, அவரும் இவருடைய அற்புதமான ஜ்ஞான பக்தி விரக்தி ஸம்பத் ஸம்ருத்தியைக் கண்டறிந்து அலப்ய லாபம் பெற்றதாக நினைத்து ஆனந்தக் கடலில் அமிழ்ந்து வாரியணைத்து, இவரைத் தமக்கு மிகவும் அணுக்கராக அங்கீகரித்தருளி ஸதாசார்ய பரம்பராப்ராப்தமான ஸகல விசேஷார்த்த நிதியையும் பரமக்ருபையுடனே இவர்க்கு அநுக்ரஹித்தருளி, ஒருநாள் இங்ஙனே நியமிக்கலானார் ;

ஆசார்ய நியமநம்.

வாரீர்! அழகிய மணவாளப் பெருமாளே! நீர் ஸர்வதோமுகமான ஜ்ஞானம் பெற்றிரா நின்றீர் ; எம்பெருமானாரை அவதார புருஷரென்று சிக்கென அறிந்திருந்தும் பெரிய நம்பி, திருமாலையாண்டான் முதலானோர் அவர்க்கு ஆசார்யராக அமைய நேர்ந்தாற்போலே ஏதோ விதிவசமாக நானும் உமக்கு ஆசார்யனாக நின்றேன். என்னுடைய ஆஜ்ஞாநுவர்த்தநம் உமக்கு அவர்ஜநீயம் என்பதை நான் விரித்துரைக்கவேண்டாவே ; ஆழ்வான் பட்டர் நம்பிள்ளை முதலான நம் பூருவர்கள் ஸகல சாஸ்த்ர ப்ரவீணர்களாயிருக்கச் செய்தேயும் ஆழ்வார்களின் ஈரச் சொற்களின் அநுபவத்திலேயே பெரும்பாலும் ஊன்றியிருந்து அவற்றைப் ப்ரவசநஞ் செய்வதையே முக்ய கைங்கரியமாகக் கொண்டு வாழ்ந்தாரென்பது உமக்குத் தெரியாமையில்லை. "முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்து, பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக் குடலாக ந்யாய மீமாம்ஸைகளும் அதிகரித்து, போது போக்கும் அருளிச் செயலிலே யாம் நம்பிள்ளையைப் போலே" $ என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்திருப்பது அறிவீரே. நீரும் அப்படியே நம் பூருவாசாரியர்களை அடியொற்றி அருளிச் செயல்களின் ப்ரவசனங்களிலே அதிமாத்ரம் நிஷ்ணாதராயிருக்கக்கடவீர். இந்த என்னுடைய கோரிக்கையை நீர் ஸஹ்ருதய பூர்வமாக அங்கீகரித்தீரென்பதை நானறிந்து கவலை தீர்ந்திருக்கும் படி செய்ய வேணும்" என்று நியமிக்க, உடனே அழகிய மணவாள நயனார் (மாமுனிகள்)

$ இந்த வாக்கியம் பெரிய திருமொழியில் 6-3-7 'துறவாய்மையுமென்கிற பாசுரத்தின் வியாக்யானத்திலுள்ளது.

“சரப்ரபத்யமானது நமோ வைஷ்ணவரும் கடுகப் பரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்குமிறே” என்கிற பிள்ளை லோகாசார்யருடைய திவ்யஸூக்தியை ஸ்மரித்துப் பரமார்த்தங்கொண்டு பால் குடிக்கக் கால் பிடிக்குமாபோலே இப்படியும் ஒரு சிஷ்யத்வம் வேணுமோ? ஸ்வாமி திருவடிகள் ஸாக்ஷியாக இக் கைங்கர்யத்துக்கு அடியேன் சிரமேற்கொள்ளக் காத்திருக்கிறேன்; இதற்கு ஸர்வாத்மனா யோக்யதையற்ற அடியேனை யோக்யனாம்படி திருத்திப் பணிகொண்டருள வேணும்” என்று விண்ணப்பித்துத் திருவடிகளிலே வேரற்ற மரம்போல் விழுந்து கிடக்க; திருமலையாழ்வாரும் வாரிப் பிடித்தெடுத்துத் தழுவி “ஆமுதல்வனிவன்” என்று குளிரக் கடாக்ஷித்தருளி அன்று முதலாகத் தம் திருவடிக்காக்ஷத்திலே இருத்தும் ஆஜ்ஞாதனம் போலே இவரை வைத்துக் கொண்டிருந்து தம்முடைய சேமவைப்பான வைலக்ஷண்ய விசேஷங்களையும் க்ரமேண அநுக்ரஹித்தருளினார். நாயனாரும் க்ருதார்த்தராய்

“அன்னையுமத்தனுமாசாரியனுமாரேத் துறவும்
மன்னியபேறுமுபாயமுந் தெய்வமும் மற்றுமெல்லாம்
என்னையளித்த திருவாய்மொழிப்பிள்ளை யென்றுநெஞ்சே!
உன்னியுவந்துதிகழ்ந்து சதிர்த்திளிப்புய்ந்திடவே”

என்று அநுஸந்தித்து அவரையன்றி வேறொரு தெய்வமறியாதே அவருடைய திருவடிகளில் அந்தரங்கச் சேவையும் அவருடைய ஆஜ்ஞாபரிபாலனமுமே பொழுது போக்காக இருந்துவந்தார்.

நாயனார் யதீந்த்ரப்ரவணரென்கிற திருநாமம் பெறுதல்

திருவாய்மொழிப்பிள்ளை ஒருநாள் எம்பெருமானாருடைய குணானுபவம் பண்ணிக்கொண்டிருக்கையில் “மாறனடிபணிந்துய்ந்தவன் இராமானுசன்” என்றும், “உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும் உயர் குருவும் வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கியசீர் நெறிதரும் செந்தமிழாரணமேயென்று இந்நீணிலத்தோர் அறிதர நின்ற இராமானுசன்” என்றும் “பண்டருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட எங்களிராமானுச முனிவேழம்” என்றுமுள்ள பாசுரங்களைச் சிந்தைசெய்து, ஆழ்வார் திருவடிகளிலும் அருளிச்செயல் திறத்திலும் எம்பெருமானார்க்கு ப்ரஸித்தமாயிருந்த அதிமாத்ர ப்ராவண்யத்திற்குத் தகுதியாக இத்திருநகரியிலே அவர்க்கொரு தனிக்கோயில் அமைக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி சிஷ்யர்களுக்கு நியமித்து உடையவர் ஸந்நிதியையும் அதைச்சுற்றி ஸ்ரீராமாநுஜ சதுர்வேதி மங்கலம் என்கிற திருவீதியையும் ப்ரதிஷ்டிப்பித்து $ இராமாநுசனைத் தொழும் பெரியோரையும் அங்கே நித்யவாஸம் செய்ய நியமித்தருளி அந்த ஸந்நிதியின் தலைமையும் நாயனார்க்கு அதீனமாக்கியருளினார். நாயனாரும் அந்த உடையவர் திருவடிகளிலே மிகவும் ப்ரவணராயிருந்து அங்குத்தைக்கு உரிய கைங்கர்யங்களை யெல்லாம் குறைவற நடத்திக்கொண்டு போருமதுகண்டு திருவுள்ளமுவந்த திருவாய்மொழிப்பிள்ளை “யதீந்த்ரப்ரவணர்” என்று நாயனாரை அழைக்கத் தொடங்கினார். இந்தத் திருநாமமே அப்போது எங்கும் ப்ரஸித்தமாயிற்று.

யதிராஜவிம்சதி அருளிச்செய்தல்.

அந்த உடையவர் திருவடிகளிலே ஒரு ஸ்தோத்ரம் விஜ்ஞாபிக்க வேணுமென்று ஆசார்ய நியமனமாக, யதிராஜ விம்சதி யென்னும் ஸ்தோத்ரத்தை யதீந்த்ரப்ரவணர் விஜ்ஞாபித்து, அதில் [ஸ்ரீமத் யதீந்த்ர தவ திவ்ய பதாப்ஜ ஸேவாம்] என்கிற ச்லோகத்தினால் ஸ்வாசார்ய

$ அந்தாதி - பாதரேகை.

விஷயத்தில் உபகார ஸ்ம்ருதியையும் ப்ரகாசிப்பித்தருளினர். அப்போது அருகேயிருந்த முதலிகள்,

"வல்லார்கள்வாழ்த்துங்குருகேசர் தம்மை மனத்துவைத்துச்
சொல்லாரவாழ்த்தும் மணவாளநாயனர் தொண்டர்குழாம்
எல்லாந்தழைக்க எதிராசவிம்சதியின்றளித்தோன்
புல்லாரவிந்தத்திருத்தாளிரண்டையும் போற்றுநெஞ்சே"

என்கிற பாசுரத்தை விஜ்ஞாபித்தனர்.

இந்த யதிராஜவிம்சதியின் மாதுர்யம் முதலிய குண விசேஷங்களைப் பற்றி அண்ணாவரமுனிசதகத்தில் அருளிச்செய்துள்ள ச்லோகங்கள் இங்கே அநுஸந்தேயம். எம்பெருமானுடைய அபராவதாரபூதரான மாமுனிகள் தம்மைத்தாமே துதிப்பதுபோலே இந்த ஸ்தோத்ரம் அருளிச் செய்பவரோ? அதிலும் அஜ்ஞராகத் தம்முடைய நைச்யத்தைப் பேசியிருக்கிறாரே, இது கூடுமோ? என்று சிலர் சங்கிப்பர்கள். "வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே" என்கிறபடியே ஸ்ரீராமபிரான் ஸாக்ஷாத் நாராயணனுடைய அவதாரமாயிருக்கச்செய்தேயும் "ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்" இத்யாதிப்படியே நாராயணனைத் தொழுததை, ஸ்ரீரங்கநாதனைத் திருவாராதனஞ் செய்துகொண்டிருந்தது முதலியனபோல் இவையும் அவதாரங்களுக்குப் பொருந்தியவைகளே என்று பெரியோர் கூறுவர்.

நாயனார்க்குத் திருக்குமாரர் திருவவதரித்தல்.

அழகிய மணவாள நாயனர் இங்ஙனே ஆசார்ய பாரதந்த்ரராய் வாழ்ந்தருளாநிற்க, க்ஷீரார்ணவத்தில் சந்திரன் போலே ஒரு திருக்குமாரர் திருவவதரித்தார். அவர்க்கு இராமானுசப்பிள்ளை என்று திருநாமமிடும்படி ஆசார்ய நியமனத்தை யடியொற்றி நாயனர் நியமித்தருளினர்.

திருவாய்மொழிப்பிள்ளை திருநாடலங்கரித்தல்.

அப்ரதிமஸிஷ்ய ஸம்பத்தோடே வாழ்ந்தருளா நின்ற திருவாய்மொழிப்பிள்ளை திருமேனி தளர்ந்து திருநாட்டுக்கெழுந்தருளுகையிலே விருப்பமுடையராய்,

"உத்தமனேயுலகாரியனே! மற்றொப்பாரையில்லா
வித்தகனே நல்லவேதியனே! வண்முடும்பைமன்னு
சுத்தகன்ஞானியர் நற்றுணையே சுத்தசத்துவனே!
எத்தனைகாலமிருந்துழல்வே னிவ்வுடம்புகொண்டே."

என்று அநுஸந்தித்துக் கொண்டிருக்க, ஒருநாள் கனவிலே பிள்ளைலோகாசாரியர் ஸேவை ஸாதித்தருளி "ஸமயக்தமிலம்மதரான் காடுபுகுவீர்" என்று பணிக்க, பிள்ளையும் தேறி யெழுந்து நித்ய கர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிக்கொண்டு முதலிகளெல்லாரையும் வரவழைத்து "இன்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதிவகையே" "வானேற வழிதந்த வாட்டாற்றான் பணிவகையே, நானேறப் பெறுகின்றேன் நரகத்தை நகுநெஞ்சே!" என்ற பாசுரங்களைப் பலகால் அநுஸந்தித்தருளி, "முதலிகாள்! இன்று எம்பெருமான் நம்மை ஆசார்யன் திருவடிவாரத்திற்கு அழைத்துக் கொள்வதாகத் திருவுள்ளம் பற்றியிரா நின்றான்; இனி நீங்களெல்லாரும் நம் அழகிய மணவாள நாயனாரை (மாமுனிகளை) ஸாமாந்யமாக ப்ரதிபத்தி பண்ணியிராமல் நம்பெருமாளுடைய அபராவதாரமே யிவர் என்று ப்ரதிபத்தி பண்ணி இவருடைய

அபிமானத்திலே பொருந்தி வாழுமிராக" என்று நியமித்தருளி, நாயனாரையும் ஆசார்யபீடத்திலே எழுந்தருளச்செய்து, "வாரீர் குலக்கொழுந்தே! 'ஜ்ஞாநாநாம் குலே கீர்த்திம் ஆரோபியதி மே ஸுதா, ஸீதா பர்த்தார மாஸாத்ய ராமம் தசரதாத்மஜம்' என்று ஜநக சக்ரவர்த்தி பாரித்தாப் போலே நானும் உம்மை அன்றைகொண்டு வைக்கப் பாரிக்கின்றேன். நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸத்தாகம் [illegible] பெருமையையும் [illegible]; * [illegible] திருக்குமையம் தே * என்றபடியே நம் [illegible] இனி நாம் [illegible] [illegible] பேசி நின்றோம்; அத்துறையில் [illegible] போலே [illegible] ஆழ்வார்களும் ஆசார்யர்களும் [illegible] திருவாய்மொழி [illegible] ஆசைப்பட்ட [illegible] செடியுதவ [illegible] முற்றும் திருத்திவைத்து மறைபுகளின் பொருளனைத்தும் வாய்மொழிந்து மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்து இந்த லீலாவிபூதியை திவ்ய விபூதியாகவே ஆக்கிக்கொண்டு போரக்கடவீர்" என்று நாயனாரை நோக்கி நியமித்தருளி, ஆசீர்வதித்தருளிப் பெரிய நின்ற பிரானையும் ஆழ்வாரையும் மங்களாசாஸனம் செய்தருளி முதலிகளெல்லாரையும் நாயனார் திருக்கையிலே காட்டிக்கொடுத்துத் திருமாளிகை சேர எழுந்தருளிப் பின்பு [illegible] திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே திருநாட்டுக்கெழுந்தருளினார். நாயனார் தொடக்கமான முதலிகளெல்லாரும் அவர்க்குத் திருவத்யயனமான சரம கைங்கர்யங்களைப்பெருக்க நடத்தினார்கள்.

ஸ்ரீ வானமாமலைஸ்வாமி ஆச்ரயித்தல்.

பிறகு நாயனார் ஸ்வாசார்ய நியமனத்தை சிரமேற்கொண்டு பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளையெல்லாம் கண்ட பாடஞ் செய்து காலக்ஷேபம்பண்ணிக்கொண்டு ப்ரஸித்த ப்ரபாவராய்த் திருநகரியில் எழுந்தருளியிருந்து [illegible] பல முமுக்ஷுக்கள் வந்து நாயனார் திருவடிகளிலே ஆச்ரயிக்கப்புகுந்தார்கள். முந்துற முன்னம், வானமாமலையிலே மடமாக எழுந்தருளியிருந்த அழகிய வரதர் பரம விரக்தியினாலே ஆச்ரமஸ்வீகாரஞ் செய்து ஸ்ரீராமாநுஜஜீயர் என்று திருநாமம் பெற்று நாயனார் திருவடிகட்கு [illegible] போலே [illegible] வந்து சேர்ந்து வாழ்ந்தார். இவர்க்குப் பொன்னடிக்கால் ஜீயர் என்றும் திருநாமம் வழங்குகின்றது.

நாயனார் நம்பெருமாள் ஸந்நிதிக்கெழுந்தருள நியமனம் பெறுதல்.

நாயனார் இவ்வண்ணமே பற்பல சிஷ்யர்களோடே கூட வாழ்ந்தருளாநின்றவளவில், ஒரு திருவாதிரைத் திருநாளில் தத்வத்ரயம் அருளிச்செய்யப் பெறுமளவில் 'யாவச்சரீர பாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ' என்கிற ஸ்ரீ ஸூக்தி ப்ரகாரத்தினாலே ஸ்வாசார்யரான திருவாய்மொழிப்பிள்ளையின் நியமனத்தை ஸ்மரித்தருளி "ஆரமருளும் அரங்கத்திலே நித்யவாஸஞ் செய்துகொண்டு பெரிய பெருமாளுடைய மங்களாசாஸனம் [illegible] போருகைக்காக [illegible] வழியிலே திருவுள்ளம் சென்று, ஆழ்வார் திருமுன்பே விடைகொண்டு தொழுது '[illegible]', நம்பெருமாள் ஸந்நிதிக்கு விடைகொண்டு அங்கே வர்த்திக்க ஆசார்யபரமஸ்வாமியான [illegible], "வான் திகழுஞ்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ்மறைகளாயிரமும்" என்கிற

படியே தேவரீருடைய அருளிச்செயல்களுக்குப் ப்ரதாநப்ரமேயபூதரான பெரியபெருமாளுடைய திருவடிவாரத்திலே வாழ்வது அடியேனுக்கும் குறிக்கொண்டிருக்கையாலும் அங்கே சென்று வர்த்திக்க நியமநம் தந்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, ஆழ்வாரும் 'செங்கயல்பாய் நீர்த்திருவரங்கத்தே சென்று முகில்வண்ணனடியை யடைந்து அருள்சூடியுய்யக் கடவீர்' என்று அநுக்ரஹித்து நியமநம் தந்தருளினார்.

நாயனார் ஸ்ரீரங்கயாத்திரை புறப்படுதல்.

ஆழ்வாருடைய அருள்பொலிந்த நியமநம் பெற்ற நாயனார் 'தென்னரங்கர் சீருக்கு இலக்காகப் பெற்றோம்' என்று திருவுள்ளம் பூரித்து முதலிகளும் ஸபரிவாரமாகப் புறப்பட்டருளி * பொன்னடைப்பள்ளம் பாய்ந்து விளையாடும் வில்லிபுத்தூர் * குறையலன் தன் பொன்னடி காண்பதோராசையினும் அங்கே எழுந்தருளி வடபெருங்கோயிலுடையானையும் பெரியாழ்வாரையும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியையும் ஸேவித்து, அங்குள்ளாருடைய வேண்டுகோளுக்கிரங்கிச் சிலகாலம் அங்கே எழுந்தருளியிருந்து, அடியவர்க்கு அன்பர்கட்கு நல்வார்த்தைகள் பலவுமருளிச்செய்து அங்கு நின்றும் புறப்பட்டு * மாலிருஞ்சோலை மேயமைந்தனை வணங்கத் திருவுள்ளமாய் அங்கே எழுந்தருளி * சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடும் சீர்ச்சிலம்பாற்றிலே நீராடி அழகரை மங்களாசாஸனஞ் செய்து அங்கு ஆழ்வான் எழுந்தருளியிருந்த இடத்திலேயிருந்து ஸ்ரீஸாரஸ்ய பாஹுஸ்தலத்தின் ஆழ்பொருள்களை அடியார்க்கு உபதேசித்தருளி, அங்கு நின்றும் புறப்பட்டு "வண்பெருவானகமுய்ய அமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய, துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழுந் தொண்டர்வாழ, அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளி கொள்ளுமணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள், இன்பமிகு பெருங்குழுவுகண்டு யானுமிசைந்துடனே யென்று கொலோ இருக்கு நாளே" என்று இது முதலான பல பாசுரங்களையும், * கநாலும் காவேரி நடையிலே * என்பது முதலான ஸ்ரீஸூக்திகளையும் இனிமையாக அநுஸந்தித்துக் கொண்டே எழுந்தருளிப் பயணமதியிலே, * எல்லியுமாக் கணக்குறு மிடைந்தியாடு தீர்த்த நீர் வண்டு வரைந்த சோலை மேவிமன்னு சீரரங்கத்தன்னில் * கங்கையிற் புனிதமாய காவிரியையும் * வண்டினமுரலுஞ்சோலை மயிலினமாலுஞ்சோலை கொண்டல் மீதணவுஞ்சோலை குயிலினங் கூவுஞ்சோலை அண்டர்கோனமருஞ்சோலையையும் அணுகி * தென் திருவரங்கம் கோயில் கொண்ட தெய்வ சிகாமணியின் திருநகரம் சேரப்பெற்றோமென்று திருவுள்ளமுவந்து நித்ய கர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிக்கொண்டு,

" மாடமாளிகைசூழ் திருவீதியும்
மன்னுசேர் திரிவிக்கிரமன் வீதியும்
ஆடல்மாற னகளங்கன் வீதியும்
ஆலிநாடனமர்ந்துறை வீதியும்
கூடல்வாழ் குலசேகரன் வீதியும்
குலவுராசமகேந்திரன் வீதியும்
தேடுதன்மவன்மாவவன் வீதியும்
தென்னரங்கர் திருவாவரணமே "

என்று சொல்லப்படுகிற திருவீதிகளையெல்லாம் கண்ணாரக் கண்டு களித்துக்கொண்டு உள்ளே எழுந்தருளினார்.

அக்காலத்தில் அழகு அண்ணர் என்கிற ஒரு மஹான் ஸேவித்தபடி எழுந்தருளியிருந்தார்; நாயனார் அவருடைய திருமாளிகையிலே எழுந்தருளி நிற்க, அவரும் இவருடைய வைபவங்களைப் பண்டே கேட்டிருந்தமையாலே இவரை நிதியைக் கண்டாற்போலே கண்டு பல்வகை உபசாரங்களும் செய்து இவர் வார்த்தைப்படியாலேயே இவருடைய வைலக்ஷண்யத்தை உணர்ந்து விரக்த அவதார விசேஷமென்று ப்ரதிபத்தி பண்ணி இவர்க்குப் பெருமாள் ஸந்நிதியிலே பல சிறப்புகளும் செய்வித்தருளி, அப்போது ஸந்நிதிக்கு விநியோகமாயிருந்த திருமாலிருஞ்சோலை பெருமாள் பட்டர் என்கிற மஹாபுருஷர் வைபவங்களை, அவரும் திருவடிகளிலே வந்து ஸேவித்துக் கொண்டிருந்து கேட்டுப் பெற்றமையாலே,

"ஸ்ரீமான் ஸ்ரீபாஷ்யகாரோऽஸௌ பூதலே புநருத்தித:
இதி நிச்சித்ய ஸந்துஷ்ய ப்ராவண்ய மதுலம் ததௌ."

என்கிறபடியே நாயனாரை எம்பெருமானாருடைய புநரவதாரமாகவே அறுதியிட்டு மிகுந்த பரிபர்த்தனத்துடன் ப்ரபந்ந விசேஷங்களுடனே ஸந்நிதியில் மங்களாசாஸனம் நடைபெறுமாறு ஸம்விதானம் செய்து வைத்தார்.

கோயில் மங்களாசாஸனம்.

பலபல பரிவாரங்களுடன் ஸந்நிதி மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளின நாயனார் முந்துறமுன்னம் எம்பெருமானார் ஸந்நிதியிலே விடைகொண்டு ஸேவித்து உடையவர் திருக்கோலத்திலே மிகவும் ஈடுபட்டு,

இவ்வுலகில் நல்லெதிராசர் கொண்டருளும்
எவ்வுருவும் யான்சென்றிறைஞ்சினக்கால்—அவ்வுருவம்
எல்லா மினிதேனு மிவ்வழகுத்திற்போல
இல்லாதென் னெஞ்சில் நிறைந்து.

என்கிற பாசுரத்தை அருளி விண்ணப்பஞ்செய்து, பிறகு ஆசார்யனான பெரிய பெருமாளை அடைவே மங்களாசாஸனஞ்செய்து திருமாலை, அமலனாதிபிரான் முதலான திவ்யப்ரபந்தங்களையும் ஸ்ரீரங்கராஜஸ்தவம் முதலான ஸ்தோத்ரங்களையும் அநுஸந்தித்துக்கொண்டு நம்பெருமாள் திருமுன்பே நிற்க, பெருமாளும் நாயனாரைக் குளிரக் கடாக்ஷித்தருளி 'நமக்காவாரை நாமே தேடிக் கொண்டோம்; நம்முடைய அவஸர ஸம்ருத்தியும் இன்றே குறைவற்றதாயிற்று' என்றருளிச் செய்து வேண்டிய ஸம்மானங்களும் ப்ரஸாதித்தருள, நாயனாரும் பெற்றுக் க்ருதார்த்தராய், "பெரியகோயில் கட்டினார் பெருமாள் பெருமை" என்று அன்பர் விஷயத்திலும் பட்டர் விஷயத்திலும் க்ருதஜ்ஞதாநுஸந்தானம் பண்ணிப் பெருமையோடே திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

பின்பு பிள்ளைலோகாசாரியர் திருமாளிகையை நோக்கி எழுந்தருளி வாசலிலே தம்முடன் வந்திருந்த "தேவாதிராஜன் ஸ்ரீநிவாஸன்" என்ற ... பத்துப் பேரைப் பார்த்து, நாமேதும் அங்கே எழுந்தருளி ஸநந்யப்ரயோஜனரான ஆசார்யனை ஸேவித்து பேர்ந்து போய் வந்தார்.

நாயனார் திவ்யதேச யாத்திரை யெழுந்தருளல்.

இங்ஙனே சிலநாள் சென்றவாறே, சோழநாடு நடுநாடு தொண்டைநாடுகளிலுள்ள திருப்பதிகளெல்லாவற்றையும் ஸேவிக்கத் திருவுள்ளம்பற்றின நாயனார் பெரியபெருமாள் பாடே சென்று நியமனம் பெற்றுக்கொண்டு சிஷ்யவர்க்கங்களுடனே புறப்பட்டருளினார். வழியிடையிலே ஸகல திவ்ய தேசங்களையும் ஸேவித்துக்கொண்டு வருமளவிலே திருமலையில் திருவேங்கடமுடையானுக்குப் புரட்டாசித் திருநாள் அணித்தென்றறிந்து அங்கே யெழுந்தருளித் திருமலையப்பனுடைய ஐச்வர்யமற்ற ஸத்காரங்களையும் லபித்து அங்கு நின்றும் புறப்பட்டுப் பெருமாள் கோயிலுக்கெழுந்தருளினார்.

பேரருளாளன் மங்களாசாஸநம்.

பிறகு பெருமாள் கோயிலிலுள்ள ஸகல திவ்யதேசங்களையும் அடைவே ஸேவித்து, பெருந்தேவி மணவாளனான பேரருளாளனது வடிவழகில் மிகவு மீடுபட்டு ஸ்ரீ தேவராஜ மங்களம் என்கிற மங்கள ஸ்துதியை அடியவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி அருளிச் செய்தார். அன்றியும், பெருமாள் கோயிலிலுள்ள ஸகல திவ்யதேசத் தெம்பெருமான்களையும் சேர அநுஸந்தித்து இரண்டு ச்லோகமருளிச் செய்ததாகவும் பெரியோர் வழங்குவர்.

நாயனார் ஸ்ரீபாஷ்யமதிகரித்தல்.

ஸ்வாமி தாம் அவதார விசேஷ ப்ரயுக்தமான ஸர்வஜ்ஞத்வ பூர்த்தியை யுடையவரா யிருக்கச் செய்தேயும், இந் நிலவுலகின் கட்டளைக் கிணங்கவும், ஸ்வாசார்யரான திருவாய்மொழிப்பிள்ளையின் நியமனத்திற்குச் சேரவும் நல் ஆசார்ய முகத்திலே ஸ்ரீபாஷ்யத்தை அதிகரிக்கத் திருவுள்ளம் பற்றி, அப்போது பெருமாள் கோயிலில் எழுந்தருளி யிருந்தவரும் ஸத்ஸம்ப்ரதாய சுத்தி வாய்ந்தவருமான கிடாம்பி நாயனார் என்கிற ஸ்வாமியின் ஸந்நிதியிலே [முற்றின அவஸரத்திலே நாலுமுறை அருளிச் செய்ததனை] ஸ்ரீ பாஷ்யத்தை ஸேவிக்க எம்பெருமானுடைய நியமனம் பெற விரும்பி, முன்பு திருநன்னாளில் ஸ்ரீபெரும்பூதூர்க்கு எழுந்தருளினார். அங்கே விடுதியாகப் பல பாசுரங்கள் அருளிச் செய்ததுமுண்டு; அவற்றுள் சில வருமாறு:—

"இதுவோ பெரும்பூதூர் இங்கே பிறந்தோ
எதிராச ரெம்மிடரைத் தீர்த்தார்—இதுவோதான்
தேங்கும் பொருநல் திருநகரிக் கொப்பான
ஓங்கு புகழுடைய வூர்."
"எந்தை யெதிராசர் எம்மை யெடுத்தளிக்க
வந்த பெரும்பூதூரில் வந்தோமோ—சிந்தை
மருளோ தெருளோ மகிழ்மாலை மார்வ
னருளோ விப்பேற்றுக் கடி."

இத்தியாதிகள்.

அங்கே எம்பெருமானாரைத் திருவடி தொழுது விடைபெற்று மீண்டும் கச்சிப்பதியிலே யெழுந்தருளிக் கிடாம்பி நாயனார் பக்கல் ஸ்ரீ பாஷ்யம் ஸேவித்துத் தலைக்கட்டின வளவிலே, சில மஹான்கள் ஸ்வாமி திருவடிகளிலே ஸ்ரீ பாஷ்யம் ஸேவிக்க விருப்பங்கொண்டு மிகவும் ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் திருவுள்ளமுகந்தருளி ஸ்ரீயதோக்தகாரி யெம்பெருமான் ஸந்நிதி

யிலே ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து ஸ்ரீ பாஷ்ய ப்ரவசனம் செய்தருளினர். [இது பற்றியே திருவெள்ளறையில் மணவாள மாமுனிகள் ஸிம்ஹாஸனம் ஜீயரோடு சேவை ஸாதித்தருளுகிறதென்று பெரியோர் பணிப்பர்.]

நாயனாருடைய ஸகல சாஸ்த்ர பாரங்கதத்வம்.

ஸ்வாமி தாம் ஸ்ரீ பாஷ்யம் அதிகரிக்கிற காலத்திலும் சிஷ்யர்களுக்கு அதை ப்ரவசனம் செய்தருளும் காலத்திலும் தம்முடைய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர பாண்டித்யம் ஸகல சாஸ்த்ர பாரம்யம் பரிசயத்தைப் பல முகமாக ப்ரகாசிப்பித்தருளினர். தர்க்க வ்யாகரணாதிகளில் பாண்டித்யம் பெற்ற மற்றும் பல அறிஞர்கள் ஸ்வாமியின் விசேஷமான பாண்டித்யத்தை அனுபவித்திருந்தனர். ஸ்வாமியின் பாண்டித்ய ப்ரகர்ஷம் பரம விலக்ஷணமென்பது ஸ்வாமி இட்டருளிய வ்யாக்யானங்களில் அழகாகத் தோன்றும் அறிவுடையோர் விளங்கும். ஆசார்யஹ்ருதயம் ஸ்ரீவசனபூஷணத்திற்கு ஸ்வாமி வ்யாக்யானமெடுத்த தென்னைப்படியும், "அர்ச்சாவதாரம் தவிர சேதநருக்கு கதியும்" என்கிற இடத்திற்கு வ்யாக்யானஞ் செய்தருளுகிற காலத்தில் 'இதில் ஒன்றுபோல இவர் கற்றது; இதில் ஒன்றுபோல இவர் கற்றது!' என்று வியக்கும்படியும் அமைந்திருக்கையாலே இவருடைய ஸர்வதோமுகமான பாண்டித்யம் வெளிப்படுகிறது காணத்தக்கதென்க. "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்" என்கிற திருமங்கையாழ்வாருடைய திருமொழிக்கு முக்கிய இலக்காக விளங்கினவர் கடல் சூழ்ந்த இம்மண்ணுலகில் இந்த ஸ்வாமி விசேஷ சொல்லவேண்டுவதில்லை.

நாயனார் கோயில் சென்று சேர்தல்.

இங்ஙனம் கச்சிப்பதியிலே ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து அடியார்களை வாழ்வித்தருளி மீண்டும் திருவரங்கம் பெரிய கோயிலில் சென்று சேர்ந்த நாயனார், அவ்விடத்திலே "பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற எம் பெருமானை செங்கோலுடைய திருவரங்கச்செல்வனுடைய விசேஷ கடாக்ஷத்திற்கு இலக்காகி "வம்பவிழ் வானவரேத்த அமரும் மன்னும் மண்ணுலகில் மனிசரும் தம்பிரான் துயரகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகமகிழுந் தொண்டர் வாழ அர்த்த விசேஷங்களை அடியவர்களுக்கு அநுக்ரஹித்தருளா நின்று "இருப்பொழுதும் உருத்தந்து பெருமையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டர்." என்கிற ப்ரபந்த விபூதிநாதராய் லீலா விபூதியை நித்ய விபூதியாக்கிக்கொண்டு விளங்கி வந்தனர்.

நாயனார் ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளல்.

அக்காலத்தில், ஸ்வாமியின் திருத்தமப்பனார் பரமபதித்தமையால் அடிக்கடி அசௌச ப்ராப்தம் சேர்ந்து கைங்கர்ய காலக்ஷேபத்திற்கும் பெருமாளுடைய மங்களாசாஸனத்திற்கும் இடையூறு விளைந்தமை கண்டு க்ருஹஸ்தாச்ரமத்திலே வெறுப்புண்டாகி உத்தமாச்ரமஸ்வீகாரம் செய்தருளத் திருவுள்ளமாய், அப்போது கோயிலிலே ஸ்ரீ சடகோப ஜீயரென்று ப்ரஸித்தராய் ஞானவைராக்யங்களால் நிறைந்தவராயிருந்த மஹநீயர் பக்கலிலே துரீயாச்ரமம் ஸ்வீகரித்து நம்பெருமாளை மங்களாசாஸனம் செய்யச் சென்று நின்றவளவிலே, பெருமாளும் இவரை ஆதரித்தருளித் தம்முடைய திருநாமத்தையே இவர்க்கு ப்ரஸாதித்தருளி [அழகிய மணவாளமாமுனிகள் என்றிட்டு] ஸகல மரியாதைகளையும் செய்வித்து "யாவச்சரீர பாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்று எம்பெருமானாருக்குப் போலே நியமனம் தந்தருளி, பல்லவராயன் மடத்தையும் ஸ்வாமிக்குப் பரிசாக ப்ரஸாதித்து அதனைத் திருத்தப் பரிகரங்களுடனே போகவிட்டருள, அழகிய மணவாள மாமுனிகளான நாயனார் பெரு

மாமுனிகளுடைய திருவருள் நிரம்பிய பிரபாவத்தைச் சிரஸா வஹித்து மடமேற எழுந்தருளி அழகிய மணவாளனுடைய அருட்பெருக்குக்கு அதிமாத்ரம் உகந்து போந்தார். அக்காலத்திலே மாமுனிகளின் அப்ரதிமவைபவம் தேசமெல்லாம் பரந்து நிகழ, உலகம் நிறைந்த புகழாளரான மாமுனிகளின் திருவடிவாரத்திலே பலதிசைகளில் நின்றும் பலர் வந்து ஆச்ரயித்து, ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் முதலான பூருவாசாரியர்களை ஸேவிக்கப்பெறாத குறைதீர அவ்வாசிரியர்களனைவரும் இங்ஙனே ஒரு திருக்கோலமாக வடிவெடுத்து ஸேவை ஸாதித்தருள்வதாக அறுதியிட்டு க்ருதார்த்தர்களாய் வாழ்ந்து வந்தார்கள்.

திருமலையாழ்வார் திருமண்டபம் அமைத்தல்.

மாமுனிகள், தம்முடைய மடத்தில் ஒரு பகுதியை ஸ்வாசார்யரான திருவாய்மொழிப் பிள்ளையின் திருநாமத்தினால் காலக்ஷேப கூடமாக அமைத்தருளி, அதில், "முன்னவராம் நம் குரவர் மொழிகள் உள்ளப்பெற்றோம்" என்று (ஆர்த்தியில்) தாமே அருளிச்செய்தபடி பூர்வாசார்ய திவ்ய ஸ்ரீஸூக்திகளை சிஷ்யவர்க்கங்களுக்கு ப்ரவசனம் செய்தருளி வந்தார். "அத ஸ்ரீசைலநாதார்ய நாம்நி ஸ்ரீமதி மண்டபே" என்று தொடங்கி எறும்பியப்பாவாலும் திநசர்யையில் இது அநுஸந்திக்கப்பட்டது.

இங்ஙனம் திருவாய்மொழிப் பிள்ளையின் திருநாமத்தாலே திருமலையாழ்வார் என்று அமைந்த திருமண்டபத்திலே, பின்னை ஆசார்யர் திருமாளிகையில் நின்றும் "ராஜஸ்யம் விளைந்த மண்" என்று விலக்ஷணமான சிறப்புப் பெற்ற திருமண்ணைக் கொணர்ந்து காலக்ஷேப ஸ்தலத்திற்குச் சாப்பிடுவித்து அவ்விடத்தையே குருகுல வாஸமாகவே எண்ணி எழுந்தருளி யிருந்து முமுக்ஷுக்களுக்கு அநுபவம் [illegible] அடிபணிந்தவர்களுக்கு அருளிச் செய்யா நின்று கொண்டு எண்டிசையும் புகழ்பெற வாழ்ந்து வந்தார்.

பட்டர்பிரான் ஜீயர் வந்து ஆச்ரயித்தல்.

இப்படி நடந்து போருங்காலத்திலே 'கோவிந்த தாஸரப்பன்' என்று திருநாமமுடைய பட்டர்பிரான் ஜீயர் வந்து மாமுனிகளின் திருவடிகளிலே ஆச்ரயித்து எம்பெருமானார் திறத்தில் எம்பார்போலே இறையுமகலகில்லாதே பாதச் சாயை போலே யிருந்து பிரியாவடிமை செய்து வந்தார். அடியார்கட்குச் சேமவைப்பாக மாமுனிகள் அருளிச் செய்யும் அர்த்த விசேஷங்கள் அனைத்துலகும் பரவ, [illegible] பலபல மஹான்கள் வந்து திருவடி ஸம்பந்தம் பெற்று, உபய விபூதியிலும் ஒத்தாரும் மிக்காருமில்லாத மஹாசார்யர் இவரொருவரே யென்று அறுதியிட்டு அநுஸந்தித்துப் போந்தார்கள்.

கோவில் கந்தாடையண்ணன் ஆச்ரயித்தல்.

கோயிலில் ஆசார்ய புருஷர்களில் ஒருவராக விளங்கி நின்ற கந்தாடையப்பண்ணனும் மாமுனிகளின் திருவடி ஸம்பந்தமே நமக்கு ஸர்வஸ்வம் என்று நிச்சயித்துப் பெரிய பெருமாளுடைய நியமனத்தையும் பெற்று பரிகரராய் வந்து "நாதம்பலவும் [illegible] அங்கோர் நிழலில்லை நீருமில்லை, உன்பாத நிழலல்லால் மற்றோருயிர்ப்பிடம் நானொன்றும் காண்கின்றிலேன்" என்று அநுஸந்தித்துத் திருவடிகளிலே வேரற்ற மரம் போலே விழுந்து மாமுனிகளின் பரிபூர்ணமான திருவருளைப் பெற்று, அந்நாள் தொடங்கி அவரது திருவடிகளையே பழுக்க ஸேவித்துக் கொண்டு அந்தரங்கராயிருந்தார்.

வேடல் அப்பையை வரவழைத்தல்.

இப்படியிருக்கையில், மாயாவாதியான ஒரு பண்டிதன் படவேட்டிலே நின்றும் அங்கு வந்து, அவ்விடத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியையும் மாமுனிகளின் மஹிமையையுங்கண்டு பொறுக்க மாட்டாத அஸூயையினாலே நெருக்குற்றிருந்து அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களை அதிக்ஷேபித்துக் கொண்டு 'வல்லீராகில் என்னை வென்று ஸித்தாந்தத்தை நிலை நிறுத்திக் கொள்வீர்' என்று சொல்லி ஒரு நாளவன் மாமுனிகள் பக்கலில் வாதிட்டான். அந்த மாயாவாதியானவன் முன்பு 'வேடல் அப்பை' என்னும் ஸந்யாஸியின் சிஷ்யனும் [illegible] ஆயிருந்து அவனையே [illegible] ஆருடைய [illegible] னை அவன் முன்னே போய் நிற்கவும், நிர்ப்பந்தித்து [illegible] விட்டுக் கருதியே இருக்கிற அவனோடே வாது செய்யவும் விரும்பாத மாமுனிகள் வாதுக்கு வந்தவனை அந்த வேடலப்பையைக் கொண்டே அவன் செருக்கை யடக்கத் திருவுள்ளம்பற்றி வேடலில் நின்றும் அவரை வரவழைத்து வாதயுத்தத்திற்குப் போகவிட, இவ்வளவே நாளு ஆசாரியரை வாதம் நிகழ்த்த வந்து விட்டவென்றறிந்த அந்த மாயாவாதி [illegible] அந்தி ஸந்த்யா வணங்கி அடிபட்டுப் போயினன்.

பிறகு மாமுனிகள் வேடலப்பையை அங்கீகரித்து 'இங்கே நமக்கு [illegible] இரும்' என்று நியமித்தருளினர். அருளிச் செயலைக்குறித்து ... பாலத்திலே அவ்வாதம் அற்று * தேவுமற்றறியேன் குருகூர் நம்பி பாவின்னிசை பாடித் திரிவனே * என்ற மதுரகவிகளின் நிலையிலே நின்று * மன்னியசீர் மாறன்கலை உணவாகப் பெற்றிருமென்றிருக்கும் மாமுனிகளுக்கு அம்ருதமான விசேஷ நிகாரக [illegible] மாசமகுடிமைத்திலே அவற்றையும் போன மேலும் தர்சன நிர்வாஹமும் செய்து கொண்டு போகவும் வல்லவரான ஒருவரைத் தம்முடைய ஸந்நிதியிலே வைத்துக்கொண்டு பழக்க வேணுமென்னும் அவா அதிகரித்திருந்தமையாலே அப்பையைக் கடாக்ஷித்து இங்ஙனே நியமிக்கலாயிற்று. அவர் வ்யக்ராமலையைத் தாண்டி விட்டுக் கோயில் வாஸத்திலே ருசிபெறவொட்டாத ப்ரக்ருதிபக்தத்தாலே மந்தராய் 'அடியேனுக்கு விடை தந்தருள வேணும்' என்று நியமனம் பெற்றுக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தார்.

பிரதிவாதிபயங்கரம் * அண்ணனைத் திருவுள்ளம் பற்றுதல்.

மாமுனிகள் தம்முடைய மனோரதம் நிறைவேறப் பெறாமையாலே 'இனி இதற்கு ஆவாரார்?' என்று விசாரியா நிற்கையில், பிரதிவாதிபயங்கரம் அண்ணனைப்பற்றிக் கேள்விப்பட்டு, அவர் மஹாஸமர்த்தராய் ஆசார்ய ஸம்பந்தராய்த் திருமலையில் திருவேங்கடமுடையானுக்கு வழுவிலாவடிமை செய்துகொண்டு ஸேவிப்பராக எழுந்தருளியிருக்கிறதென்னும் உணர்ந்தருளி 'ஆம் முதல்வனிவன்' என்று திருவுள்ளத்திலே வைக்கக் கடாக்ஷித்து அவரைக் கோயிலுக்கு அழைத்து வருமாறு இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களை ஸ்ரீமுகத்துடன் திருமலைக்குப் போகவிட்டார்.

பிரதிவாதிபயங்கரம் அண்ணனுடைய செய்தி.

ஸ்ரீ காஞ்சீபுரியில் ஸ்வாமி மணவாளநாயனார் [illegible] பக்கலிலே ஆச்ரயித்து வேதாந்த ச்ரவணம் பண்ணி 'ப்ரதிவாதி பயங்கரர்' என்கிற விருதையும் பெற்று விக்யாதராய் விளங்கி நின்ற அண்ணன், பின்பு திருவேங்கடமலையில் வாழ்ந்து அப்பனுக்குத் தொண்டுபூண்டு

---

* இவர்க்கு அண்ணன் என்கிற திருநாமமிருந்தும் ஏற்கெனவே ஆச்ரயித்திருந்த கோயிலண்ணனையிட்டு இவர்க்குத் திருநாமமாகிய 'அண்ணன்' என்று வ்யவஹரித்து வந்தார்கள். அது பற்றியே 'ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன்' என்கிற வழக்கும் உண்டாயிற்று.

அமுதருள வேணுமென்று கருதி அங்கே சென்று நாடோறும் ஆகாச கங்கையிலிருந்து திருவாராதனத்துக்கும் திருமஞ்சனத்துக்கும் தீர்த்தம் கொணர்ந்து ஸமர்ப்பிக்கிற கைங்கர்யத்தில் ஊன்றியிருந்தார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் கோயிலில் நின்றும் மணவாள மாமுனிகளின் திருவடி ஸம்பந்தியானவொரு பரமபாகவதர் திருமலைக்கு எழுந்தருள அண்ணன் அவரை மிகவும் உபசரித்துப் பெருமாள் ஸேவை முதலானதுகளைப் பண்ணி வைத்துத் தமது திருமாளிகையிலே விருந்தி வார்த்தைகள் சொல்லிக் கொண்டிருக்கையில், அவர் மணவாள மாமுனிகளின் வைபவ விசேஷங்களை எடுத்துரைக்க அவற்றைச் செவிமடுத்த அண்ணன் பரம பக்தியுக்தராய், 'இன்னுஞ் சொல்லாய் ஸ்வாமீ!' என்று மேன் மேலும் அந்த திவ்ய வைபவங்களைச் சொல்லுமாறு வேண்டி அவருடனே ஸல்லாபங்கள் செய்து கொண்டே மறுநாள் காலையில் ஆகாச கங்கைக்கு நித்யம் போல் எழுந்தருளி நித்யாநுஷ்டானங்களை நிறைவேற்றித் திருவேங்கடமுடையான் திருவாராதனத்துக்காகத் தீர்த்தத்தைக் கும்பத்தில் பூரித்தெடுத்துக்கொண்டு திருமாளிகைக் கெழுந்தருளி மணவாள மாமுனிகளின் வைபவச்ரவணத்தில் பரவச ஹ்ருதயராய்த் திருமஞ்சன கைங்கர்யத்தில் த்வரையின்றிக்கே ஸாவகாசராய் இருந்து கொண்டு பரிமள த்ரவ்யங்களால் தீர்த்தத்தை ஸம்ஸ்கரிக்க யத்னித்துக் கொண்டிருக்கையில் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் கைங்கர்யம் செய்யும் அர்ச்சகர் தாமே விரைந்தோடி வந்து "திருவாராதன காலம் கடந்ததும் தெரியாமே இப்படி அபசாரப் விளம்பித்திருப்பது நன்றாயிருக்கிறது! தீர்த்தக் குடத்தை இப்படி கொடும்" என்று நிஷ்டுரமாகப் பேசி அந்தத் தீர்த்த கும்பத்தைப் பரிமள ஸம்ஸ்காரமின்றியே பலாத்காரமாக வாங்கி யெடுத்துக் கொண்டு சடக்கெனக் கோயிலுக்குப் போய்விட்டார்.

அநவதாநத்தால் இன்று இப்படி அபசாரப்பட நேர்ந்ததே! என்று அண்ணன் அநுதபித்துக் கொண்டே பரிமளத்ரவ்யங்களை யெடுத்துக் கொண்டு மிகவும் விரைந்து ஸந்நிதிக்கு எழுந்தருள்வதற்குள்ளே திருவாராதனம் உபக்ரமித்து நடந்து கொண்டிருப்பதறிந்து அஞ்சி நடுங்கி விசனத்துடனே உள்ளே சென்று அந்தப் பரிமள த்ரவ்யங்களை அர்ச்சகரிடத்தில் கொடுத்துவிட்டு வெள்கி வெளியே நிற்கையில், அநுதப்தராயிருக்கும் அவரைத் தேற்றுவிக்கத் திருவுள்ளங்கொண்ட திருவேங்கடமுடையான் 'வாரீர் அண்ணனே! இன்று நீர் கொணர்ந்த தீர்த்தம் பரம போக்யமாயிரா நின்றது; இத்தனை நாளும் போலன்றிக்கே இன்றைத் தீர்த்தத்தில் குளிர்ச்சியும் பரிமளமும் விலக்ஷணமாயிரா நின்றது காணும்; உம்முடைய சிறந்த பக்திக்கு நாம் உகந்திருக்க, இங்ஙனே நீர் வருந்தக் கடவீரல்லீர்' என்று அர்ச்சகமுகேந அருளிச் செய்ய, அந்த திவ்ய ஸூக்தியைக் கேட்டவாறே அண்ணன் பரம விஸ்மிதராய், 'பரிமளத்ரவ்ய மொன்றும் சேராதிருக்கவும் இன்று திருமலையப்பன் இங்ஙனே திருவுள்ளமுகந்து அருளிச் செய்யக் காரணமென்னோ!' என்று விமர்சித்து மணவாள மாமுனிகளுடைய வைபவங்களைச் செவியேற்றுக்கொண்டே இன்று இந்தத் தீர்த்தம் பூரித்ததாகையால் அந்த ஆசார்யவைபவச்ரவணமே இத்தனை அதிசயத்துக்கு அடியாக வேணுமென்று அறுதியிட்டு அது முதலாகவே மாமுனிகளை விரைவில் ஸேவிக்கப்பெற வேணுமென்று குதூஹலம் அதிகரிக்கப் பெற்று இரவும் பகலும் அதுவே சிந்தையாயிருந்து வந்தார். இந்த மநோரதத்துடனே சிலநாள் சென்றவாறே திருமலையப்பனிடத்தில் நியமனம் பெற்றுக்கொண்டு, மணவாள மாமுனிகளின் திருவடிகளிலே ஆச்ரயித்து உய்வதாக அங்கு நின்றும் புறப்பட்டு மார்க்க க்ரமத்திலே பெருமாள் கோயிலிலே வந்து சேர்ந்து பேரருளாளனைத் திருவடி தொழுது ஒன்றிரண்டு நாள் அங்கே தங்கிக் களித்திருந்தார்.

ஏற்கெனவே மாமுனிகளின் திருமுகத்துடன் புறப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் பயணகதியிலே பெருமாள் கோயிலைச் சென்று சேர்ந்தார்கள். யாத்ருச்சிகமாக அண்ணன் அவ்விடத்

நிலே எழுந்தருளி யிருக்கிற செய்தியறிந்து பெருமகிழ்ச்சி கொண்டு அவரைக்கண்டு ஸேவித்து மாமுனிகளின் திருமுகத்தைத் தந்தார்கள். அண்ணனும் அதனை ஆதரவுடன் பெற்று வாசித்துப் பரம ஸந்தோஷ பரவசராய் அந்த ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி "வாரீர்காள்! இது அடியேனுடைய பாக்ய பரிபாகம் அன்றோ!; மாமுனிகளை ஸேவிக்க நெடுநாளாக விரும்பித் திருமலையில் நின்றும் கோயிலுக்குப் புறப்பட்டு இங்கே விடைகொண்ட அடியேனுக்கு இன்று இந்தத் திருவருளுடன் திருமுகம் கிடைத்ததானது 'கோமாறவஞ் செய்தேன் கொடியேன்' 'விதிவாய்க்கின்று காப்பாரார்' 'யானே தவமுடையேன்' இத்யாதி அருளிச்செயல்களின் [illegible]; மாமுனிகளின் திருமுகமாக விருப்பமாகத்திருந்து இதைக்காணப் பெற்ற அடியேனுக்கு அரும் [illegible]; [illegible] பெற்றுப் புறப்பட்டோம்" என்று [illegible] விசுவசிக்கச் செய்தனர்.

அண்ணன் மதுரகவி [illegible] அந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடன் [illegible] திருமுகம் பெற்றுக்கொண்டு அங்கே [illegible] புறப்பட்டுப் [illegible] திருவரங்கம் பெரியகோயிலுக்குச் சென்று [illegible] மாமுனிகளின் திருவடிகளிற் சென்று சேர்ந்தார். [illegible] பெருக [illegible] சேர்ந்து வேரற்ற மரம்போலே விழுந்து [illegible] [illegible] வெளிக்கொணர்ந்து [illegible] [illegible].

அப்போது திருவாய்மொழி [illegible] மாமுனிகள் [illegible] [illegible] அண்ணன் "[illegible] ஸ்ரீவைஷ்ணவ [illegible] இருக்கிற திவ்யம் [illegible] இது!" என்று அருளிச்செய்து "[illegible] [illegible]: " என்கிற [illegible] "அடியேனையும் ஆட்கொண்டருளவேணும்" என்று [illegible] பிரார்த்திக்க, [illegible] மாமுனிகள் [illegible] "நீர் ப்ரதிவாதிபயங்கரர்; [illegible]; [illegible]" என்று [illegible] அருளிச்செய்ய, உடனே அண்ணன் [illegible] "ப்ரவித்த: ப்ரதோஷமஹோ பரவாதி பயங்கர:, ஸ்ரீவைஷ்ணவதாஸோ(அ)ஹம் தோஷமஹோ தத்துவ இதி ஸித்தது:" என்று விண்ணப்பம் செய்து, 'இத் திருவடி [illegible] அடியேனுக்கு [illegible] பாபம் மற்றொன்றில்லை' என்று கண்ணீர் பெருக நின்று ப்ரார்த்திக்க, மாமுனிகளும் இவருடைய ஆர்த்தியை [illegible] இவருடைய ப்ரார்த்தனைக்குத் திருவுள்ளமுகந்து [illegible] இவர்க்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களை ப்ரஸாதித்தருளி, ஸ்ரீவைஷ்ணவ தாஸன் என்று [illegible] தாஸ்ய [illegible] ப்ரகாசப்படுத்தினார். அண்ணன் [illegible],

"போதச் சிலந்து பரிமளம் வீசிப் புறக்கணித்த
சீதக் கமலத்தைச் சீறுவெள்ளோட்டிச் சிறந்தடியேன்
ஏதத்தை மாற்று மணவாள யோகி யிணைமைதரும்
பாதக் கமலங்கள் கண்டேனெனக்குப் பயமில்லையே"

என்று விண்ணப்பஞ்செய்து இப்பாசுரத்தைப் [illegible] 'அண்ணன்' [illegible] [illegible] மாமுனிகளின் திருவடி [illegible]

வர்த்தித்து ஸகல திவ்யப்ரபந்த ஸாரஸ்ய வ்யாக்யானங்களையும் அதிகரித்துக்கொண்டு க்ருதார்த்தராயிருந்தார்.

மாமுனிகளின் திவ்ய தேசயாத்திரை.

ஆழ்வார் திருநகரி முதலான திவ்ய தேசங்களேற எழுந்தருளி மங்களாசாஸனம் செய்து வரவேணுமென்று அபிநிவேசங்கொண்ட மணவாள மாமுனிகள் நம்பெருமாள் திருவடிகளிலே விடைபெற்றுப் புறப்பட்டுப் பயணகதியிலே ஆழ்வார் திருநகரியிற் சென்று சேர்ந்து அங்கே சிலகாலம் எழுந்தருளியிருந்து அடிபணிந்தார்க்கு அரும்பெரும் பொருள்களை அருளிச்செய்து கொண்டு வாழ்ந்திருக்கையிலே, ஆசார்ய ஹ்ருதயத்தில் "அஜ்ஞர் சதுர்த்திகளிப் பேசியிறே ஆகந்த வதஞ்சுகளுக்கு உதாம்" என்கிற சூர்ணிகைக்கு ஸ்வாரஸ்யமான பொருள் தெளியப் பெறவேணுமென்று ஆசைப்பட்டுக்கொண்டிருக்க, திருநாராயணபுரத்திலே 'ஜநந்யாசார்யர்' என்று ப்ரஸித்தரான ஆய் என்னும் ஸ்வாமி ஸந்நிதியிலே கேட்டால் நன்கு தெளியலாம் என்று சில பெரியார் சொல்லக்கேட்டு அவ்விடத்திற்கு எழுந்தருள்வதாக ஸங்கல்பித்திருந்தார்.

திருநாராயணபுரத்து ஆய்பக்கலிலே அர்த்தம் கேட்டது.

அவ்வளவிலே அந்த ஜநந்யாசார்யர் மாமுனிகளின் ப்ரபாவ விசேஷங்களைப் பலர் சொல்லக் கேட்டிருக்கையாலே கோயிலிலே சென்று மாமுனிகளை ஸேவித்து வருவோமென்று புறப்பட்டு ஆழ்வார் திருநகரியிலே மாமுனிகள் எழுந்தருளியிருக்கிறாரென்பதறிந்து அங்கே எழுந்தருள, அப்போதே இவரை ஸேவிப்பதற்காக மாமுனிகளும் திருநாராயணபுரம் நோக்கிப் புறப்பட்டு ஸ்வல்பதூரம் எழுந்தருளியிருக்க, இடையிலே இருவர்க்கும் யாத்ருச்சிக ஸங்கதியுண்டாக, மாமுனிகளும் ஆய்பக்கலிலே தம்முடைய மநோரதத்தை விண்ணப்பஞ்செய்து ஆசார்ய ஹ்ருதயத்தின் அர்த்த விசேஷங்களைக் கேட்டு உகந்தார். அப்போது மாமுனிகளின் ஸர்வதோமுகமான வைலக்ஷண்ய விசேஷத்தைக் கண்டு விஸ்மயஸ்திமிதரான ஜநந்யாசார்யர்

"பூதூரில் வந்துதித்த புண்ணியனோ? : பூங்கமழும்
தாதாரும் மகிழ்மார்பன் தானிவனோ?—தூதூர
வந்தநெடுமாலோ மணவாள மாமுனிவன்
எந்தையிவர் மூவரிலும் யார்?"

என்கிற வெண்பாவையருளிச்செய்து மாமுனிகளை விலக்ஷணவ்யக்தி விசேஷமாக எங்கும் ப்ரஸித்தப்படுத்திப்போந்தார்.

மாமுனிகளின் மடத்தில் தீக்கொளுவுதலும் மாமுனிகளின் ப்ரபாவ ப்ரகாசமும்.

மாமுனிகள் இங்ஙனம் திருக்குருகூரில் அகமகிழும் தொண்டர்வாழ அற்புதமாக ப்ரவசநம் செய்து போருகின்று கொண்டு அபரிமித சிஷ்யஸம்ருத்தியுடனே வாழ்ந்தருளுங்காலத்தில் இப்பெருமையைச் சிறிதும் பொறுக்கவில்லாத அநாசார்ய புருஷர்கள் சிலர் ஆஸுரமான துராலோசனையைச் செய்து மாமுனிகளெழுந்தருளியிருக்கிற ஓலைமச்சான மடத்திலே நடுநிசியில் தீக்கொளுவினார்கள். அப்போது மாமுனிகள் தம்முடைய ப்ரபாவத்தாலே அவ்வழல் தட்டாதபடி திருவனந்தாழ்வான் வடிவெடுத்து வெளியேறி மடம் வேகிறபடியைக் கண்டு சேர்ந்திருக்கும் முதலிகள் திரளிலே வந்து புகுந்து நிற்க அந்த அற்புத சர்யையை முதலிகளெல்லாரும் அறிந்து வியந்து உகந்திருந்தார்கள்.

இங்ஙனே சில த்ரோஹிகள் மடத்திலே தீக்கொளுவினார்களென்கிற செய்தியை அரசன் கேள்விப்பட்டு விசாரணை செய்து அவர்களையெல்லாம் தண்டிக்க நினைத்திருக்கிற வள

யிலே, "மாதர் மைதிலி ராக்ஷஸீஸ் த்வயி ததைவார்த்ராபராதாஸ் த்வயா ரக்ஷந்த்யா பவநாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா" இத்யாதி ஸ்ரீஸூக்திகளை அநவரதம் அநுஸந்தித்துக் கொண்டும் கேட்பார் மனங் கரையவுரைத்துக்கொண்டும் போருகிற நாம் இந்த ஸ்ரீவைஷ்ணவர்களை நன்றாகக் கண்டோமில்லையே! அவர்க்குவந்தது! என்று அருளிச்செய்த மாமுனிகள் அவர்கள் குற்றவாளிகளென்றும் தண்டிக்கத் தகாதவர்களென்றும் அருளிச்செய்து அவர்களைக் காத்தருளினதுமன்றியில் அவர்கள் திறத்திலும் விசேஷ கடாக்ஷம் செய்தருளி அவர்களும் தம் திருவடி பணிந்து உய்ந்து போமாறு திருவுள்ளம்பற்றியருளினார். கூரத்தாழ்வானிலும் விஞ்சின இம்மஹா குணத்தைக் கண்டு அனைவரும் சகலவிசித்தார்கள்.

திருக்குருகூர் முதலானவிடங்களில் திருப்பணிகள் செய்வித்தல்.

அந்த நாட்டுக்கு அதிபதியாயிருப்பானொரு மஹாப்ரபு மாமுனிகளின் வைபவாதிசயங்களையெல்லாம் கேட்டும் கண்டும் மிகவும் ஈடுபாடுற்றுத் திருவடிகளிலே வந்து ஸமாச்ரயணம் ஆச்ரயித்திருந்து, 'ஸ்ரீ சடகோபதாஸன்' என்று நாமமிடப் பெற்று, அருளிச் செய்யும் நல்வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்து, 'அடியேனுக்கு ஸ்வரூபாநுரூபமான கைங்கரியங்களை நியமித்தருளவேணும்' என்று பிரார்த்தித்து, அங்ஙனமே நியமனம் பெற்றுப் போயிருந்து நின்றபிரான் திருவுள்ளத்துக்கும் நம்மாழ்வார் திருவுள்ளத்துக்கும் உகப்பாகப் பல திருமண்டபத் திருப்பணிகளை நடத்தி வைத்தானாம். தாம்போதல் திருமண்டபம், அழகிய மணவாளன் திருமண்டபம் என வழங்கப் பெற்றுவரும் திருமண்டபங்களெல்லாம் அவ்வரசனுடைய திருப்பணியென்பர். இங்ஙனமே திருக்கணங்குடியிலும் திருவேங்கடமுடையானென்றொரு ப்ரபுவின் விசேஷ கடாக்ஷத்திற்கு இலக்காக்கியருளி அவனைக் கொண்டு அங்கே பல திருப்பணிகள் செய்வித்து மூன்றுமாதம் பாண்டிநாட்டுத் திருப்பதிகளிலும் இப்படியே எழுந்தருளியிருந்து ஆங்காங்கு அர்ச்சாவிக்ரஹங்களுக்குத் திருப்பணிகளும் நித்ய மங்களாசாஸனமும் குறைவற நடக்குமாறு செய்தருளினார்.

மாமுனிகள் திருவரங்கம் சென்று சேர்தல்.

இங்ஙனம் பாண்டிநாட்டுத் திருப்பதிகள் தோறும் வாழ்ந்து ஆங்காங்கு அடிபணிந்தார்க்கு அர்த்த விசேஷங்களை ப்ரஸாதித்தருளி, கைங்கரியத்திலிழிந்த அடியார்களையும் கடாக்ஷித்தருளி அத்தலத்தெம்பெருமான்களுக்குச் சிறப்பும் குறைவற்றிருக்கும்படி செய்தருளி "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்" என்கிற மங்களா சாஸனத்தை அநுஸந்தித்து "அரங்கத் தரவினணையான் கோலமாமணியாரமும் முத்துத் தாமமும் முடிவில்லதோரெழில் நீலமேனியின் ஸேவையை நெடுங்காலம் விட்டுப் பிரிந்திருக்கவில்லாமையினாலே விரைந்து திருவரங்கம் பெரிய கோயிலேற வந்து சேர்ந்தாராயிற்று.

எறும்பியப்பா வந்து பணிதல்.

திருக்கடிகைக்கு அருகிலுள்ள எறும்பியென்னும் அக்ரஹாரத்திலே தோன்றி எறும்பியப்பா என்று ப்ரஸித்தராய் விரக்தராயிருந்த தேவராஜாசார்யர் கோயிலில் நம்பெருமாளை ஸேவிக்க விடைகொண்டு அங்கே அண்ணன் திருமாளிகையில் தங்கியிருக்கையில் அவ்வண்ணனோடுகூட மாமுனிகளின் காலக்ஷேப கோஷ்டியிலும் அந்வயிக்க பாக்யம் பெற்றார். அப்போது மாமுனிகளின் ஸர்வதோமுகமான ப்ரஜ்ஞாவிசேஷத்தைக் கண்டுகளித்தும் அவர் திருவடிகளில் ஆச்ரயிக்க பாக்யபரிபாகம் இல்லாமையாலே மாமுனிகள் பாடே நிற்க ப்ரணாமங்களும் பொருமலே தம்முடைய ஊருக்குத் திரும்பினார்.

அங்கே நித்யகர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிக் கொண்டு பெருமாளுக்குத் திருவாராதனம் கண்டருளப் பண்ணப் புகுந்து தம் திருவாராதனப் பெருமாள் சக்ரவர்த்தி திருமகன் ஸந்நிதியிலே தெண்டன் ஸமர்ப்பித்து "கௌஸல்யாஸுப்ரஜா ராம!" என்று அநுஸந்தித்துக் கொண்டே கோயிலாழ்வார் திருக்காப்பு நீக்கப் புகத் திருக்காப்பு திறக்கப் பெறாதொழியவே, பலவாறு உபாயங்கள் செய்து பார்த்தும் ஒரு படியாலும் திறக்கப்போகாமையாலே பரம் துக்கபர்யாகுலராய் அமுது செய்யாமலே 'இது என்ன அபசாரமோ!' என்று மனம்வருந்திக் கிடந்தார். அன்றிரவில் அவருடைய கனவில் சக்ரவர்த்தி திருமகன் சேவைதந்தருளி "நமக்கு அருமைமிக்க ஆசார்யரான மணவாளமாமுனிகளின் திருவடிகளிலே ஆச்ரயியாதே மீண்டுவந்தீராகையாலே உமக்கு நாம் கதவு திறந்திலோம்; திருவனந்தாழ்வானன்றோ அவராக வந்து அவதரித்தமை அறியீராக: அவர் திருவடிகளில் சென்று ஆச்ரயித்துத் தூய்மை பெற்றுவந்தாலன்றி உமது கையில் நாம் திருவாராதனம் கொள்ளக்கடவோமல்லோம்; கடக்கெனப் போமின்" என்று நியமித்தருள, அப்பாலும் துயிலெழுந்து விஸ்மிதராய் இவ்விஷயத்தை அன்பர்களுக்கு அறிவித்து அப்போதே புறப்பட்டுப் பயணகதியிலே நம்பெருமாள் ஸந்நிதி சென்று சேர்ந்தார்.

அப்போது மணவாளமாமுனிகள், ஸந்நிதியில் மங்களாசாஸனம் செய்தருளப் புறப்படும் அவஸரமாயிருந்தது. அப்பாலும் அவ்விடத்திலே மாமுனிகளைத் திருவடிதொழுது அவருடைய விசேஷகடாக்ஷத்திற்குப் பாத்ரபூதராகி, க்ரமேண தம்முடைய இல்லத்தில் நடந்த செய்திகளையெல்லாம் விண்ணப்பஞ்செய்து, வேரற்றமரம்போலே திருவடிகளிலே விழுந்து அபராத க்ஷாமணம் செய்து கொண்டு 'இனி அடியேனுக்கு இத்திருவடி நிழலொழிய புகலிடம் வேறொன்றில்லை; நெறிகாட்டி நீக்கப் பாராதே அந்தரங்கச் சேவகத்திற்கு ஆட்படுத்திக் கொண்டருளவேணும்' என்று மிகவும் ப்ரார்த்தித்து மாமுனிகளின் நிரவக்ரஹமான அநுக்ரஹத்தைப்பெற்றுத் திருவிலச்சினையும்பெற்று, அன்று தொடங்கி ஸகலார்த்தங்களும் கேட்கப்பெற்றுக் கிருதார்த்தரானார்.

இவர் பரமபக்தி பரிவாஹரூபமாக மணவாளமாமுனிகள் விஷயமான காவ்யநாடக சம்பூ ஸ்தோத்ரங்கள் முதலியன பலவும் பணித்தார். காலடைவில் இங்ஙனே பலபல மஹான்கள் அடிபணிந்து அநியாதனை வழிகாட்டப் பெற்று க்ருதார்த்தராய் உஜ்ஜீவித்துப் போருவார்களாயிருந்தனர்.

அரங்கேசன் திருமுன்பே ஈடு அருளிச்செய்தல்

மணவாளமாமுனிகள் இங்ஙனம் அப்ரதிமவைபவம் பொலிய சிஷ்ய ஸம்பத்துடனே வாழ்ந்தருளுங் காலத்திலே ஒருநாள் ஸ்ரீ ரங்கநாதன் மாமுனிகளுக்கு அருளப்பாடிட்டு 'ஜீயரே! நாளை முதலாக நம்முடைய பெரிய திருமண்டபத்திலே நம்மாழ்வாருடைய திருவாய்மொழியை ஈடு முப்பத்தாறாயிரம் முதலான வியாக்கியானங்களுடனே ப்ரவசனம் செய்து போரீர்' என்று நியமனம் ஸாதிக்க, மாமுனிகள் மஹாப்ரஸாதமென்று உகந்து அப்படியே மறுநாள் தொடங்கி, 'கங்காப்ரவாஹமோ? அல்லது கங்கையிற் புனிதமாய தனிச்சிறப்பெருக்கோ?' என்னலாம்படியாக மிக அற்புதமாய்த் தம்முடைய விசதவாக்சிகாமணித்
வத்தை நன்கு விளக்கிக் காட்டிக்கொண்டு ப்ரவசனம் செய்தருளத் தொடங்கினர்.

அப்போது பெருமாளும் நாச்சிமாருடனே கூட திவ்ய ஸிம்ஹாஸனத்திலமர்ந்து, அச்சேர்த்தியை அநுபவிக்கிற அநன்யப்ரயோஜனரான திருவனந்தாழ்வான், பெரிய திருவடி, ஸ்ரீ ஸேனாபதி யாழ்வானுகிற விஷ்வக்ஸேனரோடும், மதுரகவிகளான முனிவரான நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்கள் பதின்மரோடும் அனைவர்க்கும் திருமுற்றத்தடியாரோடும் கூட,

பேரோலக்கமாக இருந்து "ரங்கே வத்ஸரமேகமேவம் அச்ருணோத்" என்னும்படியே ஒரு ஸம்வத்ஸரமளவும் திருச்செவி சாற்றும்படியாயிற்று.

இங்ஙனம் ஒரு ஸம்வத்ஸரகாலம் இடையூறொன்றுமின்றி இனிதாக நடைபெற்று வந்த காலக்ஷேபம் தலைக்கட்டியருளும் நாளொன்று நேர்ந்தது. அன்று அழகியமணவாளன் திருவுள்ளத்திலே ஒரு தோற்றம் பிறந்தது. அதாவது—'நாம் விபவாவதாரங்களிலே சில பெரியோர்களிடத்தில் பணிந்திருக்கப்பெற்றும் அங்கே ஆசார்ய ஸம்பூர்த்தி யில்லாமையாலே கொஞ்சம் குறையுற்றுத் தளும்பியபடி கிடக்க நேர்ந்தது; அக்குறையெல்லாம் தீர இப்போது இந்த ஸதாசார்யப் பேறு நமக்கு வாய்த்தது மஹத்தான விசேஷமே. இங்ஙனம் நமக்கு நேர்ந்த மஹாபாக்யம் நீடூழிகாலம் இந்நில வுலகத்தில் நிலவும்படி இந்த ஸதாசார்ய விஷயத்திலே ஒரு கிஞ்சித்காரம் செய்யப்பெற்றோமாக வேணும்; இந்த ஆசார்ய சிகாமணிக்கு ஒரு சிறந்த தனியனிட்டு அதைத் திருவோலக்கத்திலே விண்ணப்பஞ் செய்து அது தனக்கு உலகம் நிறைந்த புகழுண்டாம்படி செய்வோம்' என்கிற திருவுள்ளம் உண்டாயிற்று.

வஸ்துத: "பத்யம் அங்குளிவிச்சேத:" இத்யாதி ப்ரமாண கதியின்படி தனியன் அநுஸந்திக்கை சிஷ்ய க்ருத்யங்களில் தலையானதாகையாலும், ஸ்ரீரங்கநாதன் மாமுனிகள் பாட்டில் தான் வரித்த சிஷ்யபாவத்தைப் பூர்த்திசெய்ய விரும்பினபடியாலும் இங்ஙனே திருவுள்ளம் தோன்றியது காணப்பொருந்தும்.

ஸ்ரீசைலேசத் தனியன் அவதரித்தது.

அன்றைக் காலக்ஷேப கோஷ்டியில் "[illegible]" என்றபடியாக [illegible] நடைபெற வேண்டிய அவ்வளவும் [illegible]

அழகிய மணவாளன் நாலைந்து பிராயம் வாய்ந்த அர்ச்சக
குமாரனை கோலம் பூண்டு ஸ்வேச்சையாகக் கோஷ்டி
நடுவிலே வந்து, அவரவர்கள் விலக்கினவளவும் லக்ஷியம்
பண்ணாமே புகுந்து கைகூப்பி நின்று

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம், யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் என்கிற தனியனை விண்ணப்பஞ்செய்து மறைய இவ்வதிசயத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

இங்ஙனம் தெய்வவாக்காகத் திருவவதரித்தமையால் சிறந்த மந்த்ரமென்று போற்றப்படுவதான இத்தனியனை பகவதாஜ்ஞையின்படி சிஷ்யவர்க்கங்கள் பட்டோலை கொண்டு மஞ்சட்காப்பு சாத்தி "அரவணைத் துயிலும் கடல் நிறக்கடவுளெந்தையின் திருவடி வாரத்திலே ஸமர்ப்பித்தெடுத்துத் தட்டிலே வைத்துச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். வேதத்திற்கு ப்ரணவம்போலே த்ராவிடவேதாநுஸந்தானத்திற்கு இத்திருமந்த்ரமே முதலும் முடிவுமாகக் கடவதென்னும் பெருமாளுடைய நியமனமும் பரக்க வாய்த்தது.

பின்பு சிஷ்யர்களால் "வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால் வாழும்" என்று தொடங்கி வாழித்திருநாமம் அரங்கநாதனாணையின்படி பணிக்கப்பட்டு, அதனை யநுஸந்தித்தே எங்கும் அருளிச்செயல் ஸேவை தலைக்கட்டுக வென்று நியமனமும் அவதரித்ததாயிற்று.

பிறகு மாமுனிகளை அழகிய மணவாளன் அருகிலழைத்து அநவதிகமான சிறப்புகளைத் தந்தருளி, கோயிலினின்றும் கொத்தும் ஸகல வரிசைகளுடனும் திருவீதிவலமாக (மாமுனிகளை)

மடத்திலே எழுந்தருளப் பண்ணுவித்து "க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ" என்கிற கணக்கிலே உள்ளம் பூரித்துக் க்ருதார்த்தராய் விளங்கினன்.

மாமுனிகள் திவ்யஸூக்திகளருளிச் செய்தல்.

முற்கொனவே அவதரித்தருளின பூர்வாசார்ய திவ்யஸூக்திகளை ப்ரவசனம் செய்தருளுவதிலேயே யிருந்த அபிநிவேசமுடையரான மாமுனிகள் ஸ்வதந்த்ரமாகச் சில க்ரந்தங்கள் இட்டருளத் திருவுள்ளமுடையரல்லரேயானாலும், இவ்வுலகின் பாக்யபரிபாக மடியாக சிஷ்யர்களின் ப்ரார்த்தனைக் கிணங்கியும் பகவந்நியமனத்தை முன்னிட்டுமே தேனே பாலே கன்னலே யமுதேயான பல திவ்யக்ரந்தங்களையும் அருளிச் செய்தருளும்படியாயிற்று.

அவற்றின் விவரணம் வருமாறு:—பிள்ளை லோகாசார்ய ரருளிச்செய்த ரஹஸ்யங்களில் ஸ்ரீ வசநபூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி என்கிற மூன்று ரஹஸ்யக்ரந்தங்கள் மிகச் சிறந்தவைகளும் ப்ரதானங்களுமானவையாதலால் அம்மூன்றுக்கும் வியாக்யான மிட்டருளினார்.

பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த ஆசார்ய ஹ்ருதயமென்னும் ரஹஸ்ய ரத்னத்திற்கு வியாக்யான மிட்டருளினார்.

பெரியவாச்சான் பிள்ளை ஸகலப்ரபந்தங்களுக்கும் பூர்த்தியாக வியாக்யானமருளிச் செய்திருந்தும் அதில் பெரியாழ்வார் திருமொழி நாற்பத்தாறு பாசுரம் தொடங்கி "வாக்குத் தூய்மையிலாமையினாலே மாதவா வுன்னை" (5—1—1) என்கிற வரையும் வியாக்யானம் கரையானுக்கு இரையாகி நஷ்டமாய் விட்டபடியாலே அவ்வளவுக்குத் தாம் வியாக்யான மிட்டருளினார். அந்த வியாக்யானத்தை மஹான்கள் ஸேவித்து "அந்தோ! நாலாயிர வியாக்யானமும் கரையானுக்கு இரையாகியிருந்தால் நலமாயிருக்குமே; இங்ஙனே தேனும் பாலுமமுதுமன்ன வியாக்யானத்தை மாமுனிகள் பூர்த்தியாக இட்டருளும்படியான பாக்யம் நேர்ந்திருக்குமே' என்று பரஸ்பரம் வியந்து உவந்து பேசிக்கொண்டார்கள்.

இராமானுச நூற்றந்தாதிக்கும், அருளாளப் பெருமாளெம்பெருமானாருளிச் செய்த ஞானஸாரப் பிரமேயஸாரங்களுக்கும் வியாக்யானம் செய்தருளினார். இதற்குத் $ தாத்பர்ய தீபமென்றொரு வியாக்யானம் இட்டருளினார். ஈடு முப்பத்தாறாயிரப்படிக்கும் தாமருளிச் செய்த ரஹஸ்ய வ்யாக்யானங்களுக்கும் பிரமாணத்திரட்டுகள் ஸங்க்ரஹித் தருளினார். திருவாராதன ப்ரயோகமொன்று திருவாய் மலர்ந்தருளினார். உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி என மூன்று தமிழ்ப் பிரபந்தங்களருளிச் செய்தார். [தேவராஜமங்களமும் யதிராஜ விம்சதியு மருளிச்செய்ததாக கீழே நிரூபிக்கப்பட்டது.] மற்றும் ஸ்ரீஸூக்தி விசேஷங்களுண்டாகில் கண்டு கொள்வது.

$ யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்தில் "இதற்குத் தாத்பர்ய தீப மென்றொரு வியாக்யான மிட்டருளி" என்றுள்ளது. சில ஆண்டுகட்கு முன் காஞ்சி ஸுதர்சன அச்சுக்கூடத்தில் தேவநாகர லிபியில் மாமுனிகளருளிச் செய்ததாக ஒரு வியாக்யானம் அச்சிடப் பட்டிருக்கிறது. இந்த வியாக்யானம் மாமுனிகளருளிச் செய்ததுதானென்று அதில் விரிவான பூமிகையும் (அண்ணங்கராசார்ய பாதரால்) வெளியிடப்பட்டிருக்கின்றது. இருந்தாலும், அதைப்பற்றி ஆராய்ச்சி செய்த காலத்தில் அது மாமுனிகளருளிச் செய்ததன்றென்றும் மாமுனிகளுக்குப் பிற்பட்டவரான அபிராமவராசார்ய ரென்கிற வொருவரால் பணிக்கப்பட்டதென்றும் தேறிற்று. அதீந்த்ரியமான விஷயத்தில் சிறியேனுக்கு அடியேன் நிர்ணயித்துக் கூற அநதிகாரி. மாமுனிகளருளிச் செய்த தாத்பர்யதீபம் இப்போது கிடைக்கவில்லையென்றே அடியேனுடைய கொள்கை.

மாமுனிகளின் ஸ்ரீஸூக்திப்பெருமை.

உலகில் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர்கள் பல ஆசார்யர்களுமுண்டு. எனினும், மணவாளமாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளின் மாதுர்யமும் காம்பீர்யமும் அர்த்த புஷ்டியும் ஸௌலப்யமும் அஸாதாரணமாகவேயிருக்கும். "நாமூலம் லிக்யதே கிஞ்சித் நாநபேக்ஷித முச்யதே" என்னும்படி யமைந்த வியாக்யானம் மாமுனிகளுடையதேயாம். வேறு எந்த ஆசிரியரும் இங்ஙனே வியாக்யானம் அமைக்கக் கற்றிலர் என்றால் இது அதிசயோக்தியேயாகாது. பல மதாந்தரங்களைக் கண்டித்து எழுதினாலுங்கூட ஒருவருடைய மனமும் நோகாதபடிக்கும், வ்யர்த்தமான பரிஹாஸங்களைச் சிறிதும் புகவிடாதபடிக்கும், எந்த இடத்தை யெடுத்தாலும் சாஸ்த்ரார்த்தமே கைகொள் கனியாம்படிக்கும் 'ஸகல சாஸ்த்ர ஸாகர பாரங்கதர் இவரொருவரே' என்று திண்ணமாக என்னும்படிக்கும், ஆடம்பரம் க்லிஷ்டார்த்தம், மயங்கவைத்தல் முதலிய தோஷங்களுக்குச் சிறிதும் இடமில்லாத படிக்கும் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர் மாமுனிகளொருவரே. ஸூத்ரம் போன்ற பின்னை யோர்களோய திவ்யஸூக்திகளுக்கு அவதாரிகையிடுகிற அழகும் மூலத்திற்கு அர்த்த மருளிச்செய்கிற வைகரியும், ஆங்காங்கு அர்த்தங்களைப் பின்மனத்து ஸங்க்ரஹித்தருளுகிற அற்புதமும் *உள்ளுந்தோறு மென்னெஞ்சு எரிவாய் மெழுகொக்கும்.

ஸங்க்ரஹ : இவ்வாசிரியருடைய ஸ்ரீஸூக்திகளை ஸேவித்த பின்பு இன்னொரு வாக்கில் பேச்செடுத்தால் *ஸ்ஞ்சோஸிந்தே மகரந்த நிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே" என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்திக்கு விருத்தமாகச் செய்ததாகுமென்கிற எண்ண முண்டாகிறதேயன்றி வேறில்லை. பல சொல்லி யென்? மற்றையோருடைய நூல்களைக் காணும்போது அவரவர்களுடைய ஞானத்தை அளவிட்டு அறியமுடியாமலுள்ளது; மணவாள மாமுனிகளின் வியாக்யானங்களை ஸேவிக்குமளவில், திருவடியைப்பற்றிப் பெருமாளருளிச்செய்த திருவாக்கே நினைவுக்கு வருகின்றது. "நாந்ருக்வேதவிநீதஸ்ய நாயஜுர்வேததாரிண:, நாஸாமவேதவிதுஷ: சக்யமேவம் ப்ரபாஷிதும். நூனம் வ்யாகரணம் க்ருத்ஸ்நம் அநேன பஹுதா ச்ருதம், பஹு வ்யாஹரதாநேந ந கிஞ்சிதபசப்திதம்" இவ்வாறே வால்மீகி வாக்கும், "இல்லாத வுலகத்தெங்கு மிங்கிவனிசைகள் கூரக், கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி, சொல்லாலே தோன்றிற்றன்றே யார்கொலிச் சொல்லின் செல்வன்? வில்லார்தோளிளைய வீர! விரிஞ்சனோ விடைவலானோ?" என்ற கம்பர் வாக்கும் உண்மையில் மாமுனிகள் விஷயத்திலேதான் பொருத்தமாயமையுமென்பது அநுபவிப்பவர்களின் அநுபவஸித்தமாகும்.

அஷ்டதிக்கஜ சிஷ்யவர்க்கம்.

மாமுனிகளின் திருவடிகளிலே பல்லாயிரவர் ஆச்ரயித்து உய்ந்தார்களெனினும் ப்ரதான பரிகணிதர்களான சிஷ்யர்கள் அஷ்டதிக்கஜங்களென்று ப்ரஸித்தர்.

வானமாமலைஜீயர்
பட்டர்பிரான்ஜீயர்
திருவேங்கடராமாநுஜஜீயர்
கோயிலண்ணன் ;

பிரதிவாதிபயங்கர மண்ணன்
எறும்பியப்பா
அப்பிள்ளை
அப்பிள்ளார்.

என மூன்று ஜீயர்களும், ஐந்து க்ருஹஸ்தர்களும்.

வைபவ நிகமநம்

எம்பெருமானார் வைபவம் போலே மாமுனிகளின் வைபவமும் மாகடல் போன்றதே; பக்தர்கள் அநுஸந்திக்க இவ்வளவே போதுமென்று ஸங்க்ஷேபித்தபடி. "அடியார்கள் வாழ

அரங்கநகர் வாழச் சடகோபன் தண்டமிழ் நூல் வாழக் கடல் சூழ்ந்த மன்னுலகம் வாழ மணவாளமாமுனியே! இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்று அர்ச்சகர் தொட்டிலிற் கிறுவனவும் கடல் நீருள்ளனவும் வேதமுள்ளனவும் வேதசிகரமுள்ளனவும் சூச்சந்தியும் மூவர்களும் வாழ்த்தியே நிற்கும்படியான வாய்ப்பு வினைத்திருக்கையினால் இவ்வாசிரியரின் பரமபத யாத்ராவ்ருத்தாந்தம் முதலியவற்றை எழுதாது நிறுத்திக் கொண்டோமுக்கு, இவ்வூழியிலேயே மாமுனிகள் நித்ய ஸ்ரீநித்ய மங்களமாக ஸேவை ஸாதிப்பதான அதிசயமும் இன்னமும் பெற்றுள்ளது.

நம்மாழ்வார் தம்முடைய பெருமையை "தவளில் மாமணி மாடம்" "உண்ணுஞ் சோறு பருகுநீர்" முதலான திருவாய்மொழிகளில் தாமே வெளியிட்டுக் கொண்டாற் போல, மாமுனிகளும் ஆர்த்திப்ரபந்தத்தில் ஒரு பாசுரத்தினால் தமது பெருமைகளைத் தாமே அருளிச்செய்யும்படியாயிற்று நம்போல்வார் அதனின் அநுஸந்தித்து உய்வதற்காக. நிதப்ரஸங்கமிதே பக்தர்களுக்கு நித்யாநுஸந்தேயமாகக் கடவது: அதாவது:—

"தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்
தேவனுறை திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்
மன்னியசீர் மாறன் கலையுணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்
முன்னவராம் நம் குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்
முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்
பின்னையொன்று தனில் நெஞ்சு போராமற் பெற்றோம்
பிறர் மினுக்கம் பொறாமையிலாப் பெருமையும் பெற்றோமே"

என்பதாம்.

மணவாளமாமுனிகளின் முக்கியமான வைபவங்களெல்லாம் இப்பாசுரத்தில் அடங்கியுள்ளன வென்று கண்டு கொள்வது.."

ஜீயர் திருவடிகளே சரணம்.

மணவாள மாமுனிகள் வைபவம் முற்றிற்று.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்
தொகுத்தெழுதிய
பூர்வா சார்ய வைபவம்
முற்றுப் பெற்றது.